# ஸ்ரீகலா SRIKALA



# நீயின்றி நானேதடி

NEEYINDRI NAANETHADI

ஸ்ரீகலா SRIKALA

# நீயின்றி நானேதடி



NEEYINDRI NAANETHADI


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS

Download

# ஸ்ரீகலாவின் "நீயின்றி நானேதடி"

Contents

நான் : 1
நான் : 2
நான் : 3
நான் - 4
நான் : 5
நான் : 6
நான் : 7
நான் : 8
நான் : 9
நான் - 10
நான் : 11
நான் : 12
நான் : 13
நான் : 14
நான் : 15
நான் : 16
நான் : 17
நான் : 18
நான் : 19
நான் : 20
நான் : 21

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

## நான் : 1

காலையில் இருந்து ஆயிரம் தடவையாவது தனது கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்து இருப்பான் சித்தார்த் ராம்... கொஞ்ச நாட்களாகவே வேலை வேலை என்று அவனது மூளை சூடேறி இருந்தது... இன்று எப்படியாவது அதன் சூட்டை தணிக்க வேண்டும் என்று உறுதி எடுத்து கொண்டவன் மாலை ஆறானதும் அதைச் செயலாற்ற எண்ணி தனது நாற்காலியை விட்டு எழுந்தான்...

அந்நேரம் பார்த்து அவனது மேலாளர் வேதாந்தம் கை நிறையக் கோப்புகளை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தவர் அதை மேசையில் வைத்தார்... அதைக் கண்டதும் மனதில் மூண்ட எரிச்சலை அடக்கியபடி மீண்டும் நாற்காலியில் அமர்ந்தவன்,

"என்ன அங்கிள் இது...? கிளம்பற நேரத்தில் இத்தனை ஃபைலை தூக்கிட்டு வந்தா எப்படி அங்கிள்...?" என்று சலித்தபடி கோப்புகளைக் கையில் எடுத்தான் அவன்...

எப்போதும் போல் கையெழுத்து போடும் முன் அவனின் கை ஒரு நொடி தயங்கி தேங்கி நின்றது... மறுநொடி மளமளவென்று அவனின் கை கையெழுத்தை போட துவங்கியது...

"தம்பி... எதுக்கும் படிச்சு பார்த்துட்டு சைன் போடுறது நல்லது தம்பி..." என்றவரை பார்த்து,

"உங்க மேல எனக்கு நம்பிக்கை இருக்கு அங்கிள்..." என்றவனைப் பார்த்து அவரது மனதில் யோசனையும், துயரமும் ஒருங்கே எழுந்தது...

"இந்தக் காலத்தில் யாரையுமே நம்பக் கூடாது தம்பி... என்னையும் உட்பட..." என்றவர் மேலே ஒன்றும் பேசாது கோப்புகளை எடுத்துக் கொண்டு அவனின் அறையை விட்டு வெளியேற...

"ஓ... ஃசில்லி அங்கிள்..." அவர் சொன்னதை நினைத்து தனக்குள் சிரித்தவன் வீட்டிற்குக் கிளம்பினான்...

PDF தமிழ் .com

அரண்மனை போன்று இருந்த அந்த வீட்டின் முன் காரை நிறுத்தியவன், 'மாம் வீட்டில் இருக்கக் கூடாது...' என்று மனதில் வேண்டியபடி வீட்டிற்குள் நுழைந்தான்...

தொழிலை கவனிக்காமல் அவன் வீட்டிற்கு வந்தது தெரிந்தால் அவனது அன்னை அமராவதிக்கு அப்படி ஒரு கோபம் வந்துவிடும்... கணவர் உருவாக்கிய 'ராம் இண்டஸ்ட்ரீஸ்' தொழில் சாம்ராஜ்யத்தை மகன் திறம்பட நடத்த வேண்டும் என்பதில் அவர் சற்று கண்டிப்புடன் இருப்பவர்...

மேலும் அவனிடத்தில் கண்டிப்புக் காட்டாவிட்டாலும் சரிவராது... ஏனெனில் அவன் குறும்பு செய்வதில் அந்தக் கோகுலத்துக் கண்ணனை மிஞ்சிவிடுபவன்...

நல்லவேளையாக அன்னை வீட்டில் இல்லை... உற்சாகமாகத் தனது அறைக்குச் சென்று விரைவாகக் கிளம்பி வந்தவன் அதே வேகத்தில் காரை கிளப்பிக் கொண்டு வெளியில் சென்றான்...

நேரே அவன் சென்ற இடம் இரவு விடுதி... உள்ளே நுழைந்தவன் மனதில் அத்தனை பரவசம், மகிழ்ச்சி... கிட்டத்தட்ட இதை எல்லாம் அனுபவித்து ஒரு மாத காலமாகிறது... ஒரு மாத காலமாகச் சிறை வாசம் போல் அம்மாவிடம் வசமாக மாட்டி கொண்டு முழிக்கிறான்...

இப்போது தான் ஒரு முடிவுக்கு வந்து இருக்கிறான்... அதாவது இனி யாருக்காகவும் தனது சந்தோசத்தை விட்டு தர கூடாது என்று...

அன்னைக்கு என்ன தொழில் நன்றாக நடக்க வேண்டும் அவ்வளவு தானே... அதை விட்டு விட்டு தன்னுடைய சுதந்திரத்தில் அவர் தலையிட இனி அனுமதிக்கக் கூடாது என்ற உறுதி அந்த நொடி அவனுள் பிறந்தது...

சொர்க்கத்தின் நடுவில் நின்று கொண்டிருப்பவனுக்கு அன்னையின் அறிவுரை அபத்தமாகத் தோன்றியது...

நள்ளிரவு வரை போதையில் மூழ்கி உற்சாகமாய் நடனமாடி கொண்டு இருந்தவன் அருகில் நெருங்கி வந்தாள் அந்தப் பெண்... அஞ்சலி என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டவள் அவனிடம் பழகிய தாராளத்தில் அவனது மனம் வேகமாய் அவளைக் கணக்கிட்டுக் கொண்டது...

"ஹேய் பேபி... என்னுடன் வருகிறாயா...?" அவன் கேட்ட கேள்விக்கு உடனே,

"வொய் நாட்..." என்றபடி கிளம்பியவளை கண்டு அவனது விழிகள் வியப்பில் விரிந்தது...

"ஒரு தமிழ் பெண்ணிடம்... சென்னை பெண்ணிடம் இதை நான் எதிர்பார்க்கவில்லை..." என்றான் ஆச்சிரியம் மாறாமல்...

"நீ எந்தக் காலத்தில் இருக்கே சித்து... இப்போ தமிழ் பெண்கள் இந்தக் கலாச்சாரத்துக்கு மாறி ரொம்ப நாளாகுது..." என்று கேலியாய் சொன்னவள், "ஆமாம் நீ சென்னைக்குப் புதுசா...?"

"இல்லையே நான் இங்கேயே பிறந்து வளர்ந்த பையன் தான்..."

"நீ பேசுறதை பார்த்தா அப்படித் தெரியலையே..." என்றவளின் இடையில் கை போட்டு,

"நான் பேசுறது பத்தி உனக்கு என்ன கவலை...? பேச்சா நமக்கு முக்கியம்...?" என்றவனின் விரல்கள் அவளின் மேனியில் உணர்த்திய செய்தியில் அவள் கலகலகவென்று சிரித்தாள்...

மறுநாள் காலையில் பதுங்கி பதுங்கி அவன் வீட்டிற்குள் நுழையும் போதே, "கண்ணா நில்லு..." என்ற கணீர் குரலில் அவன் அப்படியே நின்றான்...

எதற்கும் கட்டுப்படாதவன் அவன்... இவ்வளவு ஏன் தந்தைக்குக் கூட அடங்காதவன்... அப்படிப்பட்டவன் அடங்குகிற ஒரே இடம் அவனது அன்னையிடம் மட்டுமே...

PDF தமிழ் .com

"நேத்து நைட் எங்கே போயிருந்த...?"

அவரது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தலையைக் குனிந்தான் அவன்... பதில் சொல்லும் படியான செயலை அவன் செய்யவில்லையே...

"இனியும் உன்னை இப்படி விட்டு வச்சா சரி வராது... சீக்கிரம் உனக்கும் தீபிக்கும் மேரேஜ் பண்ணிட வேண்டியது தான்..." என்றவரை பார்த்து,

"மேரேஜா...? நோ மாம்..." அவனின் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போலாயிற்று...

"ஏன் வேண்டாம்...? இப்படியே நீ தறி கெட்டு ஊரை சுத்தினா நம்ம குடும்ப மானம் காற்றில் பறக்கும்... நீ அடிக்கடி இந்த மாதிரி நடந்துக்கிட்டா நியூஸ் பேப்பருல முதல் பக்கத்துல உன் லீலைகளைப் போட்டு கிழிகிழின்னு கிழிப்பான்... உன்னோட இந்தப் பழக்கத்தால நம்ம குடும்பத்துக்கோ இல்லை தொழிலுக்கோ சின்ன அவமானம், சறுக்கல் வந்தா கூட அதைப் பார்த்துட்டு என்னால் சும்மா இருக்க முடியாது..." கடுமையுடன் அவர் பேசியதை கேட்டு அவனுக்கும் கோபம் வந்தது...

"இதுக்குத் தான் நான் தொழிலை பார்க்கலைன்னு சொன்னேன்... என்னை என் போக்குல விட்டுடுங்க... ப்ளீஸ்..."

"இங்கே ஒன்ஸ் உள்ளே வந்தாச்சுன்னா திரும்பப் போக முடியாது கண்ணா... இது ஒரு சக்கரவியூகம் மாதிரி... நீயே நினைச்சாலும் உன்னால திரும்பி போக முடியாது... போகவும் நான் அனுமதிக்க மாட்டேன்..." அவரது இறுக்கமான குரலில் அவனின் உறுதி உடைபட ஆரம்பித்தது...

"ஓகே மாம்... உங்க இஷ்டம்..." என்று தன் சம்மதத்தை முணுமுணுப்பாய்ச் சொன்னான்... அன்னை பேசியது எரிச்சலை அளித்தாலும் வேறுவழியின்றி அதற்குத் தலையசைத்தான்...

அந்நேரம் பலத்த காற்று வீச கதவுகள் படபடவென அடித்தது... கதவு நிலையில் கை வைத்துக் கொண்டு நின்றவன் கையில் கதவு வேகமாய் வந்து மோத அவன், "ஐயோ..." என்றபடி கையை உதறிக் கொண்டு துடித்தான்...

மகனின் அலறலில் அவன் அருகே வேகமாய் வந்தவர் அவனது விரல் நசுங்கி இரத்தம் வருவதைக் கண்டு அங்குச் சுத்தம் செய்து கொண்டிருந்த வேலைக்காரியிடம், "சீக்கிரம் பர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் எடுத்துட்டு வா..." என்று உத்தரவிட... அவளும் வேகமாய்ப் போய் அதை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்...

சித்தார்த்தின் விரலில் மருந்து போட்டு கட்டியவர், "நீ ரூமுக்கு போ கண்ணா..." என்று அவனை அனுப்பி வைத்தார்...

அவன் சென்றதும் சோபாவில் தொப்பென்று சரிந்தவர் மனதில் எதேதோ நினைவுகள்... அவரது உடல் பயத்தில் குபுக்கென்று வியர்த்து வழிந்தது... பதற்றத்தில் அவரது மேனி நடுங்கியது... ஆனால் அத்தனையும் மீறி அவரது விழியோரம் கண்ணீர் துளிகள் கசிந்தது...

சித்தார்த் அலுவலகத்துக்குக் கிளம்பி வரும் வரை அவர் அப்படியே அமர்ந்திருந்தார்...

"மாம்..." அவன் அவர் அருகில் வந்து கூப்பிட...

"கண்ணா... நீ அம்மா சொன்ன பேச்சு கேட்ப தானே...?" கண்ணீர் மல்க கேட்ட அன்னை அவனுக்குப் புதிது...

எதையும் ராணியின் கம்பீரத்தோடு செய்து பழக்கப்பட்டவர் அமராவதி... அவரே கண் கலங்குகிறார் என்றால்...???

"நிச்சயம் மாம்..."

"உனக்கும், தீபிக்கும் நாளைக்கே நிச்சயம் நடக்க ஏற்பாடு பண்ணவா...?"

அன்னையின் வார்த்தையில் கண்களை இறுக மூடி தன் உணர்வுகளை அடக்கியவன், "ஓகே மாம்... உங்க இஷ்டம்..."

PDF தமிழ் .com

அதை அவன் சொல்லும் போதே பெருஞ்சத்தத்துடன் அங்கிருந்த மீன் தொட்டி உடைந்து கீழே விழுந்து நொறுங்கியது...

அதில் அமராவதி மட்டும் அல்ல சித்தார்த்தும் சற்று அதிர்ந்து போனான்... அதில் இருந்த வண்ண மீன்கள் உயிருக்கு துள்ளி துடிப்பதை கண்டு அவனது மனமும் துடித்தது...

"யாராவது பக்கெட்ல தண்ணி கொண்டு வாங்க... கம் க்விக்..." என்றவன் வாளி நிறையத் தண்ணி வந்ததும் தானும் வேலை செய்பவர்களுடன் சேர்ந்து மீன்களை எடுத்து வாளியில் போட்டான்...

"கண்ணா..." அன்னையின் அதட்டலில் அவன் அவரைத் திரும்பி பார்க்க...

"இதைச் செய்ய வேலைக்காரங்க இருக்காங்க... நீ இங்கே வா..." கண்டிப்புடன் ஒலித்தது அவரது குரல்...

"மாம்... நம்ம கண் முன்னே உயிர் துடிக்குது... இப்ப போய்ப் பிரஸ்டிஜ் பார்த்துக்கிட்டு..." என்று அன்னையை எதிர்த்து பேசி அடக்கியவன் மீன்களுக்கு உயிர் கொடுத்துவிட்டே அங்கிருந்து அகன்றான்...

நேரே அன்னையிடம் வந்தவன், "உங்க வீணா போன வறட்டுக் கௌரவத்தை நான் வெறுக்கிறேன் மாம்..." வெறுப்புடன் சொல்லியவன் விறுவிறுவென வீட்டில் இருந்து வெளியேறினான்...

அவன் கூறியதை விட மீன் தொட்டி உடைந்ததை எண்ணி தான் அவர் மனதுக்குள் கலங்கி கொண்டிருந்தார்... இரு முறை திருமணம் பற்றிப் பேசும் போதும் நடந்த அசம்பாவிதங்களை நினைத்து அவரது மனம் அச்சம் கொண்டது...

இன்னும் தான் என்ன என்ன காண வேண்டியது உள்ளதோ என்று எண்ணியவர் வேதனையுடன் கண்களை மூடி கொண்டார்....

மறுநாள் மாலையில் அந்த நட்சத்திர விடுதியில் சித்தார்த் - தீபிகா நிச்சயம் ஆடம்பரமாக நடந்தது... அமராவதி தான் சொன்னது போல் நினைத்ததைச் சாதித்துக் காட்டிவிட்டார்... அதை எல்லாம் விடத் தங்கள் குடும்பத்துக்குப் பொருத்தமானவளை மகனுக்கு முடித்ததில் அவருக்கு அத்தனை பெருமையாக இருந்தது...

ஆராவமுதன், பிருந்தாராணி இவர்களின் ஒரே மகள் தான் தீபிகாராணி... பிருந்தா வேறு யாரும் இல்லை அமராவதியின் கணவர் ராஜாராமின் ஒரே தங்கை... தீபிகா வெளிநாடு சென்று பட்டப்படிப்பு படித்து முடித்து இருக்கிறாள்... ஆராவமுதன் ராஜாராமின் சில தொழில்களைக் கவனித்துக் கொள்கிறார்... அதும் போக அவர்களது பரம்பரை தொழிலையும் பார்த்து கொள்கிறார்...

மச்சினன் தொழிலிலை விடாமல் அவர் பார்த்துக் கொண்டிருப்பதற்கான காரணம் தன் மனைவிக்கும் அதில் பங்கு இருக்கிறது... உரிமை இருக்கிறது என்பதை அனைவருக்கும் காட்டத்தான்... நிலை நாட்ட தான்...

தனது அருகில் அலங்கார தேவதையாய் நின்றிருந்த தீபிகாவை கண்ட சித்தார்த்துக்கு அவளை மறுக்கப் பெரியதாய் காரணம் ஏதும் இல்லை...

தனிமையில் அவளைச் சந்தித்த போது தன்னைப் பற்றி எல்லாவற்றையும் சொல்லியவன், "நான் இப்படித்தான்... மேரேஜ்க்கு அப்புறம் மாறுவேனா இல்லை இப்படியே இருப்பேனான்னு என்னால உறுதியா சொல்ல முடியலை... இருந்தாலும் உன்னைப் பிடிச்சியிருக்கு..."

அதைக் கேட்டு லேசாகப் புன்னகைத்த தீபிகா, "உங்களை மாதிரி பசங்க தான் இந்தக் காலத்தில் அதிகம் சித்து... நீங்க பொய் பேசாமல் உண்மையைச் சொன்னது எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு... நீங்க மாறுவீங்கன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு..."

PDF தமிழ் .com

பெருந்தன்மையாய் பேசியவளை அவனுக்கும் பிடித்தது அந்தக் கணம்... அவளது கரத்தோடு அவன் தன் கரத்தை கோர்த்துக் கொள்ள அவளும் புன்னகையுடன் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்...

இருவரின் ஜோடி பொருத்தத்தை நிறைவான புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்த அமராவதி அருகே வந்து நின்றனர் ஆராவமுதன் தம்பதியினர்...

"அண்ணா... நான் சொன்னதை..." அமராவதி முடிக்கும் முன்,

"முயற்சி செய்துட்டு தான்ம்மா இருக்கேன்..."

"எனக்கு என்னமோ பயமாயிருக்கு அண்ணா... ஏதும் அசம்பாவிதம் நடந்து இருக்குமோன்னு...?"

அதில் முகம் மாறியது ஆராவமுதனுக்கு... "நான் இருக்கிறப்போ நீ ஏன்ம்மா கவலைப்படற... எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்...?"

அவரது ஆறுதல் வார்த்தையில் தெளிந்த அமராவதி சற்று நிம்மதியுற... ஆராவமுதன் பெரும் யோசனையில் ஆழ்ந்தார்...

அடுத்த நாள் செய்தித்தாளில் சித்தார்த் - தீபிகா நிச்சயவிழா முதன்மை செய்தியாய் வந்திருந்தது...

அவர்கள் மோதிரம் மாற்றுவது போல், கேக் வெட்டுவது போல், அதை ஒருவருக்கு ஒருவர் ஊட்டி கொள்வது போல், இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி என்று பலவிதமான வண்ணப் புகைப்படங்கள் அனைத்தும் பத்திரிக்கையை அலங்கரித்தது...

அந்தச் செய்தித்தாள்களில் இருந்த புகைப்படங்களை எல்லாம் பார்த்து ரசித்தபடி அலுவலகத்தில் அமர்ந்திருந்த சித்தார்த்தின் அலைப்பேசி அந்நேரம் அழைத்தது...

யாரென்று அதை எடுத்து பார்த்தவன், "ஹனி காலிங்..." என்று அதில் ஒளிர்ந்த எழுத்தை கண்டு குழம்பி

போனான்...

'யார் அந்த ஹனி...?' மூளையைக் கசக்கி பல முறை யோசித்துப் பார்த்தும் அது அவனுக்கு நியாபகம் வரவில்லை...

அவனே பார்த்திராத பெண்ணவள் முகம் அவனுக்கு எப்படி நியாபகம் வரும்...???

யோசனையுடன் அதை உயிர்ப்பித்து அவன் காதில் வைக்க,

"ராம்..." என்று விசும்பியது ஒரு பெண் குரல்...

"ஏன்னா என்னை ஏமாத்தினேள்... நேக்கு மனசு ரொம்ப வலிக்கறதுன்னா... கடைசி மூச்சு இருக்கிற வரை என் கூடவே இருப்பீங்கன்னு சொன்னீங்களேன்னா... இப்படிப் பாதியில் என்னைக் கழட்டி விட்டுட்டீங்களேன்னா... நேக்கு வாழவே பிடிக்கலை... செத்தரலாம் போலிருக்குன்னா..."

அப்போது திடீரென்று அவனுள் ஒரு மாற்றம்... அவனது நினைவில் ஒரு பெண்ணின் முகம் கலங்கலாகத் தோன்றி மறைந்தது...

அந்தக் கணம் அச்சம் நிரம்பிய அந்தப் பெண்ணின் மெல்லிய குரல் ஏனோ அவன் மனதை பிசைந்தது... இதயம் இரண்டாகப் பிளப்பது போல் அவனது உள்ளம் வலித்தது... அந்தப் பெண்ணின் கண்ணீரை துடைக்க அவனது கரங்கள் பரபரத்தது... அது ஏன் என்று அவனுக்கு விளங்கவில்லை...

அந்த நேரம் அவனது வாய் முணுமுணுத்தது அவனையும் அறியாமல்...

"ஹரிணி..."

நீயாவேன்...

PDF தமிழ் .com

## நான் : 2

சித்தார்த் தான் அவள் பெயரை உச்சரித்த மாத்திரத்தில் தனக்குள் அதிர்ந்து போனான்... யாரென்று தெரியாத ஒரு பெண்ணின் பெயரை தான் இந்தளவுக்குத் தெளிவாக உச்சரிப்பது என்றால் இதற்கு என்ன அர்த்தம்...??? அவனுக்கு உள்ளுக்குள் சிறிது திகிலாக இருந்தது... அதே சமயம் அந்தப் பெண் குரல் உணர்த்திய காதலையும் அவனால் மறக்க இயலவில்லை...

அவன் தான் பழகிய அத்தனை பெண்களின் பெயர்களையும் மனதிற்குள் கொண்டு வந்து தனது நியாபக அடுக்கில் 'ஹரிணி' என்ற பெயர் கொண்ட பெண்ணைத் தேடினான்... அந்தோ பரிதாபம் அப்படி ஒரு பெயரும் நியாபகம் இல்லை... பெண்ணும் நினைவில் இல்லை...

அப்படி என்றால் அவள் பெயரை தான் உச்சரித்தது... அவளது குரல் தனக்கு அளித்த உயிர் வேதனை இதெல்லாம் பொய்யா...?

'இல்லையே இப்போதும் அதை நினைக்கும் போதும் என் மனதை ஏதோ செய்கிறதே...' என்று தனக்குள் உழன்று கொண்டு இருந்தவனுக்கு அப்போது தான் நியாபகத்தில் வந்தது அந்தப் பெண் வெகுநேரமாக அலைப்பேசியில் காத்திருப்பது...

"ஹலோ..." என்று அவன் அழைத்த அழைப்பிற்கு மறுமுனையில் மௌனமே பதிலாக வர அலைப்பேசியை அவன் கையில் எடுத்து பார்த்த போது அழைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது...

பதட்டத்துடன் மீண்டும் அந்த எண்ணிற்கு அழைத்தான்... ம்ஹூம் அதற்கு எந்தப் பரியோஜனமும் இல்லை... ஏனெனில் அந்தப் புறம் அலைப்பேசி தன் உயிர்ப்பை இழந்து இருந்தது...

'அவள் சொன்னது போல் ஏதேனும் செய்து கொண்டால்...?' அதை நினைத்து பார்த்தவனுக்கு மனம் கலங்கி போனது...

அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் சிறிது நேரம் விழித்தவன் வேதாந்தை அழைத்தான்... அவரிடம் அந்த எண்ணை கொடுத்து,

"இன்னும் டென் மினிட்ஸ்ல இந்த ஃபோன் நம்பரோட புல் டீடெய்ல்சும் எனக்கு வேணும்... சீக்கிரம் அங்கிள்..." அவனது அந்தப் பதட்டம் அவருக்குப் புதிதாக இருந்தாலும் அவன் சொன்னதைச் செய்வதற்காக உடனே வெளியேறினார்...

அவன் சொன்ன நேரத்திற்கு முன்பாகவே அந்த எண்ணின் முழு விபரத்தையும் அவன் முன் கொண்டு வைத்தார் அவர்...

"தேங்க்ஸ் அங்கிள்..." என்றவன் அதை எடுத்துக் கொண்டு அவசரமாக வெளியேற போனவன் பின் நின்று,

"அங்கிள் இதை மாம் கிட்ட சொல்ல வேண்டாம்..."

"இல்லை தம்பி சொல்ல மாட்டேன்..." அவர் சொன்னதும் திருப்தியுடன் அவன் விரைவாக வெளியேற அவரது மனதில் சில விசயங்கள் ஊர்ஜிதமாகி கொண்டிருந்தது...

அவை எல்லாம் உண்மை என்றால்...??? யோசித்தவரின் முகம் எல்லையில்லா வேதனையைப் பிரதிபலித்தது...

'ரங்காச்சாரி' என்பவரின் பெயரில் தான் அந்த அலைப்பேசி எண்ணின் முகவரி இருந்தது... திருவல்லிக்கேணியில் இருந்த அந்த முகவரிக்கு போக்குவரத்து நெரிசலில் மிதந்து சென்று எப்படியோ அடுத்த அரை மணி நேரத்தில் போய்ச் சேர்ந்தான்...

அந்த வீடு இருந்த சந்தில் கார் நுழைய முடியாதபடியால் அங்கேயே காரை நிறுத்தி விட்டு அந்தச் சந்தில் இறங்கி வேகமாய் நடந்தவன் தாளில் இருந்த முகவரியை தேடி அதன் முன் போய் நின்றான்...

PDF தமிழ் .com

பழைய அக்ரஹார வீடு அது... வீட்டின் நிலையே அதன் ஏழ்மையைச் சொல்லாமல் சொன்னது... இதற்கு முன் இந்த வீட்டை அவன் பார்த்த நினைவு கூட அவனுக்கு இல்லை...

அப்படி இருக்கும் போது அந்த வீட்டின் பெண்ணுக்கும் தனக்கும் என்ன சம்பந்தம்...? என்று அவனுக்குச் சுத்தமாகப் புரியவில்லை... அதே சமயம் அந்தப் பெண்ணிற்காகத் தனது உயிர் துடிப்பதும் பொய்யல்ல... தன் நிலை குறித்து அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது...

'அவள் யார்...? என்னை ஏன் இப்படி அலைக்கழிக்கிறாள்...?' என்ற எண்ணங்கள் மனதில் விஸ்பரூபம் எடுக்க அவளைப் பார்த்தே ஆக வேண்டும் என்று மனம் உந்த அந்த வீட்டின் கதவை தட்டினான் அவன்...

நடுத்தர வயது பெண்ணொருத்தி கதவை லேசாகத் திறந்து, "அவர் ஆத்துல இல்ல... கோவில் பூஜை முடிஞ்சு அவர் வர்றதுக்கு எப்படியும் பதினோரு மணி ஆகும்..."

அவர் கூறியதை கேளாமல் புறம் தள்ளிவிட்டு, "இங்கே ஹனி..." என்றவன் தன் தொண்டையைச் செருமி கொண்டு, "ஹரிணின்னு..." அவன் கேட்டதும் அவரது முகத்தில் சந்தேகத்தின் சாயல்...

"எதுக்குக் கேட்கிறேள்...?" சந்தேகமும், பயமும் கலந்து அவசரமாய் வந்த அவரது கேள்வியிலேயே அவனுக்கு விடை கிடைத்துவிட்டது...

"அவங்க உங்க பொண்ணா...? நான் அவங்களை உடனே பார்க்கணும்ங்க... ப்ளீஸ்..." யாரிடத்திலும் கெஞ்சி பழக்கம் இல்லாதவன் முதன் முறையாய் அவரிடத்தில் கெஞ்சி நின்றான்...

"அவள்..." என்று இழுத்தவர், "எதுக்குப் பார்க்கணும்...?" மேலும் கேள்வி கேட்டவருக்குப் பதில் சொல்லும் பொறுமை இல்லாதவனாய் கதவை தள்ளி கொண்டு வீட்டினுள் நுழைய...

"பெருமாளே..." என்று பயத்தில் அலறியபடி அவன் தன் மேல் படாதவாறு தள்ளி நின்றார் அவர்...

அவரைப் பொருட்படுத்தாமல் உள்ளே சென்றவனுக்குத் திக்திக் என்று இருந்தது... தான் செய்வது சரி தானா என்று...!

நடுக் கூடத்தில் நின்று கொண்டு கண்களைச் சுழட்டியவன் கண்ணில் அங்கிருந்த ஒரே ஒரு அறையில் கட்டிலில் படுத்திருந்த பெண்ணின் பின்பக்க தோற்றம் கண்ணில் பட்டது...

அங்கே செல்ல முயன்றவன் முன்னால் வந்து தடுத்தபடி நின்றவர், "நீங்க யாரு...? எதுக்கு என் பொண்ணைப் பார்க்கணும்ன்னு சொல்றேள்...? வேத்து மனுசா இப்படி உள்ளாற வாரதே தப்பு... இதில் எங்காத்து பொண்ணு ரூமுக்குள்ள போறது அதை விடத் தப்பு... தயவு செஞ்சு வெளியில் போங்கோ..." அந்தத் தாய் கெஞ்ச...

"மாமி ப்ளீஸ்..." என்றவன், "சரி நீங்களே உங்க பொண்ணைக் கூப்பிடுங்க... நான் பேசிட்டு போறேன்..."

அவன் சொன்னதைக் கேட்டு அவர் மகளின் அறைக்கு ஓடினார்... "டீ ஹறிணி... இந்நேரம் என்னடி தூக்கம் வேண்டி கிடக்கு... எழுந்துருடி... உன் பேரை சொல்லிட்டு ஒருத்தன் தடிமாடு கணக்கா நடுக் கூடத்துல வந்து நிற்கிறான்... இதுக்குத் தான் சொன்னேன் உன்னை மேலே படிக்க அனுப்ப வேண்டாம்ன்னு... கேட்டாரோ உன் தோப்பனார்..." கடிந்து கொண்டே மகளை எழுப்பினார்...

அவரின் பேச்சு அவனுக்கு எரிச்சலை உண்டு பண்ணிய போதும் அவன் மனதில் ஒலித்த, 'நேக்கு செத்துப் போயிரலாம் போலிருக்குன்னா...' அந்தக் குரலுக்காகப் பொறுமை காத்தான்...

யாரோ, எவளோ முன்பின் தெரியாத ஒருத்திக்காகத் தான் காட்டுகின்ற பதட்டமும், பொறுமையும் அவனுக்கே அதிசயமாய் இருந்தது...

"ஹரிணி..." திடுமென அலறிய அந்த அன்னையின் அலறலில் அவன் திடுக்கிட்டவனாய் அங்கே விரைந்து சென்றான்...

அறையின் மங்கிய ஒளியில் அன்னையின் மடியில் படுத்திருந்த அந்த மதி முகத்தைக் கண்டு பிரமித்துப் போய் அப்படியே அசந்து நின்றான்... அவனும் எத்தனையோ பெண்களுடன் பழகி இருக்கிறான்... ஆனால் இது போல் குடும்பப்பாங்கான அழகான ஒரு பெண்ணை இதுவரை அவன் கண்டது இல்லை...

அழகு என்பதை விட அவள் முகத்தில் தெரிந்த சாந்தம் அவனின் ஆர்பரிக்கும் மனதை கண நேரத்தில் அப்படியே சுருட்டி அடக்கியது... பல பெண்களைத் தன் காலடியில் வீழ்த்தியவன் இதயம் அந்த நொடி அவளது காலடியில் வீழ்ந்தது...

"ஹரிணி... ஹரிணி..." அவரின் ஓலத்தில் தன்னுணர்வு பெற்றவன் அவளை உற்று நோக்கினான்...

கண்கள் மூடி பேச்சு மூச்சின்றி மயங்கி கிடந்தவளின் வாயோரம் வடிந்த நுரையைக் கண்டு நிலைமையின் விபரீதம் புரிய...

"இதுக்குத் தான் சொன்னேன் மாமி..." என்றவன் நொடி நேரம் கூடத் தாமதிக்காமல் ஹரிணியைத் தன் கையில் ஏந்தி கொள்ள,

"அய்யோ அவளை விடுப்பா..." என்று அலறியவரை கண்டு முறைத்தவன்,

"இப்ப உங்க பொண்ணைக் காப்பாத்தறது முக்கியமா... இல்லை நான் அவளைத் தொடுறது முக்கியமா...?" பல்லை கடித்து வார்த்தையைத் துப்பியவன்,

"நான் இவளை ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போறேன்... நீங்க வர்றதா இருந்தா என் கூட வாங்க..." என்றவன் அவரது பதிலை எதிர்பாராமல் அறையை விட்டு வெளியேறினான்...

"நானும் வாரேன் அம்பி..." அவசரமாக வீட்டின் கதவை மூடி சாவியைப் பக்கத்து வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த பாட்டியிடம் கொடுத்து,

"அவர் வந்தா கொடுத்துடுங்கோ..." என்றுவிட்டு பதிலை எதிர்பாராமல் சித்தார்த்தின் பின்னே ஓட...

அவன் ஹரிணியைக் கையில் ஏந்தி கொண்டு சென்ற அந்தக் காட்சியை அக்ரஹாரமே நின்று வேடிக்கை பார்க்க பத்மவிலாசினி அதான் ஹரிணியின் அன்னை மனதுக்குள் கூனி குறுகி போனார்... ஆனாலும் மகளின் உயிர் அதை விடப் பெரியதாய் தோன்ற அவர் அவனைப் பின் தொடர்ந்தார்...

சித்தார்த்தின் வெளிநாட்டு காரை கண்டு அவர் தயங்க, "மாமி... உங்க பொண்ணைக் காப்பாத்தணுமா... வேண்டாமா...?" அவனின் கேள்வியில் அடுத்த நொடி அவர் காரிலேறி அமர்ந்தார்...

மருத்துவமனையை நோக்கி காரை விரட்டி கொண்டிருந்தவன் மனம் ஏகத்துக்கும் கலக்கத்தைச் சுமந்து இருந்தது...

நேரே தனது நண்பனின் மருத்துவமனைக்கு வந்தவன் ஹரிணியை ஐசியூவில் சேர்த்த பின்னரே சற்று நிம்மதியாகி ஆசுவாசமானான்...

அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவன் மனதில் அவள் நல்லபடியாகப் பிழைத்து எழ வேண்டும் என்பதைத் தவிர வேறு பிரார்த்தனை ஏதுமில்லை...

அவனுக்குச் சற்று தள்ளி பத்மவிலாசினி அமர்ந்து இருந்தார்... அவருக்கு மனதில் பல கேள்விகள் எழுந்து வண்டாய் அவரின் தலையைக் குடைந்தது...

'யார் இவன்...? இவனுக்கு எப்படி ஹரிணியைத் தெரியும்...? அப்படியே தெரிந்தாலும் அவள் தற்கொலை பண்ண போகிறாள் என்று எப்படித் தெரியும்...' கேள்விகள் சரசரவென மனதில் எழ... எல்லாவற்றையும் சேர்த்து

கோர்த்து பார்த்தவர் அது தந்த விடையில் அதிர்ச்சியில் வாயடைத்து போய் அப்படியே அமர்ந்துவிட்டார்...

'பெருமாளே இது என்ன அபச்சாரம்...? ஹரிணி உனக்கு ஏன்டி இப்படிப் புத்தி போறது... நீ காதலிக்கப் போயும் போயும் இந்த வேத்தினத்து மனுசன் தான் கிடைச்சான்னா...?' மனதிற்குள் மருகியவர் சித்தார்த்தை திரும்பி பார்த்தார்...

பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது அவன் பெரிய இடத்து பையன் என்று... மகளின் காதல் அவரை அச்சுறுத்தியது என்றால்... அவனின் அந்தஸ்து இன்னமும் அவரை அச்சுறுத்தியது... இதில் இருந்து மகளை எப்படி விடுவிப்பது என்று அவருக்குத் தெரியவில்லை...

அடுத்த நான்கு மணி நேரம் பெரும் போராட்டமாய்க் கடந்தது சித்தார்த்துக்கும், பத்மவிலாசினிக்கும்...

நான்கு மணி நேரம் கழித்து அங்கு வந்த அவனது மருத்துவ நண்பன், "சித்து அவங்க பிழைச்சிட்டாங்க... டோன்ட் வொர்ரி..." என்று அவனது தோள் தட்டி ஆறுதல் படுத்தி விட்டு செல்ல அவன் அவளைக் காண உள்ளே விரைந்தான்...

அவனைத் தொடர்ந்து பத்மாவும் மகளைக் காண உள்ளே சென்றார்...

கண்களை மூடி படுத்திருந்தவள் அருகில் சென்று அமர்ந்தவனைக் கண்டு எதுவும் பேச இயலாதவராய் பத்மா சுவரோரமாய் ஒதுங்கி நின்றார்...

"ஹனி..." அவனது மென்மையான அழைப்பு அவனுக்கே புதிதாய் இருந்தது...

பார்த்தே அறியாத பெண்ணிடத்தில் எப்படி இந்தளவுக்குத் துடிப்பு, மென்மை காட்டுகிறோம் என்று அவனுக்கே புரியவில்லை...

மெல்ல கண்களைத் திறந்தவள் அவனைக் கண்டதும் முகம் மலர, "வந்துட்டேளா ராம்..." என்றபடி எழ முயற்சிக்க...

"இல்ல வேணாம் படுத்திரு..." என்று அவன் சொல்ல...

அவன் சொன்னதைக் கேட்காமல் எழுந்து அமர்ந்தவள் தன் கை கொண்டு அவனது முகம், தோள், கைகள் என வருடி கொடுத்தவள் அவனைத் தன் கண்களில் நிரப்பிக் கொண்டு, "ராம்..." என்று அழுதபடி அவனை அணைத்து கொண்டாள்...

எந்த ஒரு பெண்ணையும் தழுவ அவனது கைகள் இப்படித் தயங்கியதே இல்லை... ஆனால் முதன்முறையாக அவளைத் தழுவ அவனது கரங்கள் தயங்கியது...

"ஐ லவ் யூ ராம்... ஐ லவ் யூ ராம்... உங்களைப் பார்க்காம நான் தவிச்சது போதும்... இந்த அவஸ்தை நேக்கு இனி வேண்டாம்ன்னா..." என்று சொல்லியவளின் அணைப்பு மேலும் மேலும் இறுகியது...

அவள் காதல் சொன்ன அந்தக் கணத்தில் அவனது மனதில் இருந்த தயக்க தளைகள் அத்தனையும் உடைய நொடி நேரம் கூடத் தாமதிக்காமல் அவனது கரங்கள் அவளை ஆரத்தழுவி கொண்டது...

அந்தக் கணம் ஜன்னல் வழியாய் வீசிய தென்றல் காற்று அவர்களை ஆசிர்வாதம் செய்வது போல் அவர்களைத் தழுவி சென்றது...

"சாரி ராம்... நீங்க காதலை சொன்னப்போ நேக்கு தெரியலை... நானும் உங்களை இந்தளவுக்குக் காதலிக்கிறேன்னு... இந்த ரெண்டு மாசமா உங்களைப் பார்க்காம பிரிஞ்சி இருந்தப்போ தான் எனக்கே என் மனசு புரிஞ்சதுன்னா... நான் என் காதலை உங்க கிட்ட சொல்ல முடியாம தவிச்சிட்டு இருக்கறச்சே தான் உங்க நிச்சய ஃபோட்டோசை பேப்பருல பார்த்தேன்..." என்றவள் உடைந்து போய் அழ...

அவளது பேச்சில் இருந்த அந்த 'இரண்டு மாதம்' என்ற வார்த்தை உணர்த்திய அர்த்தம் புரிந்தவனாய் அவனது உடலும் மனமும் இறுகி போனது... அதற்கு நேர்மாறாய் அவனது கைகள் மெல்ல தளர ஆரம்பித்தது... அவன் மனதை அறியாத அவளோ பேசி கொண்டே போனாள்...

"அந்த ஃபோட்டோசை பார்த்ததும் ஒரு நிமிசம் என்னோட உயிரே போயிருச்சு... நீங்க நேக்கு இல்லைங்கிற நிதர்சனம் மண்டைல உறைக்கவும் நேக்கு வாழவே பிடிக்கலைன்னா... அதான் சாகலாம்ன்னு முடிவு பண்ணினேன்..." என்றவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து,

"எனக்கு வேற வழி தெரியலைன்னா... அதான் இப்படிப் பண்ணிட்டேன்... இப்போ நான் என்னை உணர்றேன்... நீங்க எனக்கு வேணும்ன்னா... வேணும்..." அவனது சட்டை காலரை பிடித்துக் கொண்டு கதறியவள் அப்படியே அவனது நெஞ்சில் சாய்ந்தாள்...

அவனுக்கோ உள்ளுக்குள் பெரும் போராட்டம்... தனது நிலையை எண்ணி அவன் தயங்கி நின்றான்...

அவனுக்கு அவளை ரொம்ப ரொம்பப் பிடித்திருந்தது... அதை விட அவளின் காதல் மிகவும் பிடித்திருந்தது... காதலிக்கப்படுவதும் ஒரு சுகம் என்பது அந்தக் கணம் அவன் உணரத்தான் செய்தான்... ஆனால் ஏதோ ஒன்று அவளை நெருங்க விடாமல் அவனைத் தடுத்து நிறுத்தியது... அந்த ஒன்று என்ன என்றும் அவனுக்குத் தெரியும்... அந்த ஒன்று உணர்த்திய செய்தியோ அவனுக்கு அவ்வளவு உவப்பானது அல்ல...

'வேண்டாம் இந்தக் காதல் எனக்கு நிரந்தரம் இல்லை... வேண்டாம்...' என்று அவனது மனம் கூக்குரலிட்டது...

சூழ்நிலைக் கைதியாய் இருக்கும் தன் நிலையை அறவே வெறுத்தவனாய் கண்களை இறுக மூடி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தன்னிடம் இருந்து அவளை விலக்கினான் அவன்...

அவனது விலகல் அவள் மனதை தாக்க அழுத தனது விழிகளைத் துடைத்துக் கொண்டே, "நீங்க வசதியானவான்னு நேக்கு தெரியாதுன்னா... அதனால தான் நான் உங்களைக் காதலிக்கிறேன்னு தப்பா நினைக்காதீங்கோ... இது நாள்வரை நீங்களும் சொன்னது இல்லை... நானும் கேட்டது இல்லை... இன்னைக்குப் பேப்பர் பார்த்து தான் நேக்கு உங்களைப் பத்தி தெரிஞ்சது... பெருமாள் மேல சத்தியமான்னா... நான் உங்களை மட்டும் தான் காதலிக்கிறேன்... உங்க வசதியை இல்லை..."

எங்கே தன்னைத் தவறாக எண்ணி விடுவானோ என்ற அச்சத்தில் அவசரமாய்த் தன்னை, தன் மனதை அவனுக்கு உணர்த்திடும் வேகத்தில் அவள் பேச அதில் அவனது முகம் தெளிந்தது...

இவ்வளவு நேரம் பற்றுக்கோல் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தவனுக்குக் கொழுக்கொம்பே கிடைத்தது போலிருந்தது...

"இதை என்னை நம்பச் சொல்றியா...?" கூர்மையாய் அவனது பார்வை அவளைத் துளைத்து எடுத்தது...

தனது வார்த்தை எனும் திராவகத்தை அவளை நோக்கி வீசினான் அது உயிரோடு அவளைக் கொல்லும் என்று தெரிந்து இருந்தும்... அது அவளைக் காயப்படுத்தும் என்று புரிந்து இருந்தும்...

அவனுக்கும் இதைத் தவிர வேறுவழியில்லை அவளைத் தன்னிடம் இருந்து விலக்கி வைப்பதற்கு... அவனை விட்டு விலகி இருப்பதே அவளுக்கு நல்லது என்பது மட்டும் அந்தக் கணம் அவனின் மனதுக்குப் புரிந்தது...

"ராம்..." கண்கள் கலங்க தன்னைப் பார்த்தவளின் பார்வையைத் தாங்க முடியாது முகத்தைத் திருப்பிக் கொண்டவன்,

"நீ என்ன சொன்னாலும் அதை என் மனம் ஏத்துக்காது... நான் உன் பின்னாடி வந்தப்போ எல்லாம் வராத லவ்...

தமிழ் நாவல்

பிரிஞ்சி இருந்த இந்த ரெண்டு மாசமா வராத லவ்... இப்போ வந்துச்சுன்னு சொன்னா அதை நம்ப நான் ஒண்ணும் முட்டாள் இல்லை... அந்தளவுக்கு நான் உன் கிட்ட மயங்கியும் கிடக்கலை... நீ வேண்டாம்ன்னு சொன்னதும் நான் விலகிட்டேன்... அதை மாதிரி இப்போ நீ எனக்கு வேண்டாம்... நீயும் என்னை விட்டு விலகிடு... அதை விட்டுட்டு இனிமேல் இந்த மாதிரி கோழைத்தனமான முடிவு எடுக்காதே..."

மனதை இரும்பாய் இறுக்கி கொண்டு பேசியவன் கட்டிலில் இருந்து எழுந்து அவளது அன்னையிடம் வந்தான்...

"உங்க பொண்ணைக் காப்பாத்தி உங்க பொண்ணாவே உங்க கிட்ட ஒப்படைச்சிட்டேன்... இதுக்கு மேல ஏதும் விபரீதம் நடந்தா அதுக்கு நான் பொறுப்பில்லை... ஏன்னா எனக்கு வேறு பொண்ணோட மேரேஜ் நடக்கப் போகுது... என்னை மறக்கறது தான் அவங்களுக்கு நல்லது..." என்றவன் அவளைத் திரும்பியும் பாராது அங்கிருந்து வெளியேறினான்...

அவனது பேச்சு கொடுத்த மரண வலி அவளை ரணமாக்க அவன் போன திசையைப் பார்த்து கொண்டிருந்தவள் அன்னை இருப்பதைக் கூட மறந்து கதறி அழுதாள்...

"ராம்... ராம்... ராம்..." இதைத் தவிர வேறு எதையும் அவளது உதடுகள் உச்சரிக்கவில்லை...

அந்நேரம் வீசிய தென்றல் காற்று அவளுக்கு ஆறுதல் கூறுவது போல் அவள் மேனியை தழுவி நின்றது... அவளோ அதை உணராது தனக்குள் கரைந்து கொண்டிருந்தாள்...

அவளை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் பரிதவித்து அசைவற்று நின்ற அந்தக் காற்றுப் பின் இயலாமையுடன் சுழன்றடித்து அங்கிருந்து வேகமாய் வெளியேறி வராந்தாவில் நடந்து கொண்டிருந்த சித்தார்த்தின் மீது ஆவேசமாய் மோதி அவனை நிலைக்குலைய செய்தது...

அதில் நிலை தடுமாறி சுவற்றில் மோதியவன் நெற்றியில் இருந்து இரத்தம் கோடாய் வழிய ஆரம்பித்தது...

"உனை கண்ட நாள் முதலாய்
என் உயிர் துடித்ததடி...
இன்று உன் விழிநீர் கண்டு
என் ஆவி துடிக்குதடி...
நாம் இணையும் தூரம்
கானல் நீரோ...
உனை சேரும் வரம்
ஊமை கண்ட கனவோ...!!!"

நீயாவேன்...

## நான் : 3

"ஷ்..." என்று வலித்த நெற்றியை பிடித்தபடி சமாளித்து நின்ற சித்தார்த்தை நோக்கி,

"ராம்..." என்றபடி ஓடி வந்தாள் ஹரிணி...

"ஐயோ ரத்தம் வாரதே..." அவனது நெற்றியில் வழிந்த இரத்தம் கண்டு பதறியவள் தனது புடவை முந்தானையைக் கிழித்து அதை அவனது நெற்றியில் சுற்றி கட்டினாள்...

'எனக்கு அடிப்பட்டது இவளுக்கு எப்படித் தெரியும்...? இந்த நேரத்தில் எப்படிச் சரியாக இங்கே ஓடி வந்தாள்...?' அவனது மனதில் தோன்றிய குழப்பங்களை அவனையும் அறியாது வாய்விட்டு கேட்டுவிட்டான்...

"உங்களுக்கு ஏதோ நடக்கப் போகுதுன்னு மனசு சொல்லுச்சுன்னா... அதான் வந்தேன்..." என்றவள் அவனின் முகத்தைக் கைகளில் தாங்கி, "ரொம்ப வலிக்கறதா...?"

'நான் இத்தனை தூரம் அலட்சியப்படுத்தியும் என் பின்னால் இப்படி நாய்க்குட்டி போல் சுத்தி வருகிறாளே... அவ்வளவு காதலா என் மீது...' அவளது காதல் கொடுத்த பிரமிப்பு அவனை விட்டு அகலவில்லை...

அவன் கண்ட பெண்களில் அதிசய பெண்ணாய், புதுமைப் பெண்ணாய் தன் முன் நின்றிருந்தவளை அப்போது தான் கவனித்துப் பார்த்தான்... அவளின் அறையில் பார்த்த போது கூட இவ்வளவு வெளிச்சத்தில் அவளைப் பார்க்கவில்லை...

எந்தவித அலங்காரமும் இல்லாமல் அந்த நலுங்கிய தோற்றத்தில் கூட அழகாய் அவள் இருந்ததைக் கண்டு கண்ணிமைக்க மறந்தவனாய் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்... ஒப்பனை செய்யாமலும் ஒரு பெண் அழகாய் இருக்க முடியும் என்பதை அவள் அவனுக்கு உணர்த்தினாள்...

"ராம் வலிக்கறதா...?" கலக்கத்துடன் மீண்டும் கேட்டவளை கண்டு அவனது கண்கள் அவனையும் அறியாது கலங்கியது... அவனது தலை மறுப்பாய் அசைந்தது அவனையும் அறியாமல்...

"ரூமுக்கு வந்து சித்த உட்கார்ந்திட்டு போங்களேன்னா..." தவிப்புடன் கேட்டவளை மறுக்க முடியாமல் அவளுடன் நடந்தவனுக்கு மனதுக்குள் பெரும் குழப்பம்...

'நான் என்ன நினைக்கிறேன்...? என்ன செய்து கொண்டு இருக்கிறேன்...?' ஆனாலும் அவள் சொல்வதைக் கேட்கும் கால்களை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை...

ஒரு மனம் அவளோடு செல்ல உந்தியது... மறுமனம் 'செல்லாதே... அது உனக்கும் நல்லது அல்ல... அவளுக்கும் நல்லது அல்ல...' என்று அவனை எச்சரித்து அறிவுறுத்தியது...

மீண்டும் அவனை அறைக்கு அழைத்து வந்த மகளைக் கோபத்துடன் பார்த்த பத்மா அவன் முன்னிலையில் எதுவும் பேசாமல் அமைதி காத்தார்... ஆனால் மனதுக்குள் அவர் குமுறிக் கொண்டிருந்தது அவருக்கு மட்டும் தான் தெரியும்...

அங்கிருந்த நாற்காலியில் அவனை அமர செய்து கண்ணாடி தம்ளரில் தண்ணீரை ஊற்றி அவன் அருந்த கொடுத்தவளை இமைக்க மறந்தவனாய் நோக்கியவனின் கைகள் தாமாய்த் தம்ளரை வாங்கிக் கொண்டது...

நோயாளியாய் இருக்கும் அவள் தன்னைப் பார்த்து பார்த்துக் கவனிப்பது அவனுக்கு உள்ளுக்குள் அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது...

அவனது அன்னை கூடக் கண்டிப்பு காட்டி வளர்த்தாலும் அவனை நெருங்க சற்று யோசிக்கத் தான் செய்வார்... ஏனெனில் அவன் எந்த நேரம் எப்படிப்பட்ட குணத்தோடு இருப்பான் என்று அவருக்குத் தெரியாது... அப்படிப்பட்டவனை அவள் தைரியமாக நெருங்கி வருகிறாள் என்றால் அது யார் கொடுத்த தைரியம்...?

நிச்சயம் காதல் கொடுத்த தைரியம் தான்... காதல்... காதல் என்று அவன் மனம் யோசிக்கும் போதே...

அவள் அந்த வழியாகச் சென்ற செவிலிப்பெண்ணைக் கூப்பிட்டு, "இவருக்கு நெத்தியில் அடிப்பட்டு ரத்தம் வர்றது... சீக்கிரம் வாங்கோ..." என்றழைத்து அவனுக்குக் கட்டு போட வைத்த பின்பே அவரைப் போக விட்டாள்...

"ஏன்னா... கேட்கிறேன்னு தப்பா நினைச்சுக்காதீங்கோ... இதுக்கு முன்னாடி உங்களுக்கு ஏதும் ஆபத்து வந்ததா... ஏன் சொல்றேன்னா... இப்போ பதறிய மாதிரியே ஒரு மாசத்துக்கு முன்னாடியும் ஒரு பதற்றம் வந்தது... உங்களுக்கு ஏதோ ஒரு பயங்கரம் நடந்த மாதிரி... எத்தனை தடவை உங்களுக்கு ஃபோன் பண்ணினேன் தெரியுமோ...? ஸ்விட்ச் ஃஆப்ன்னு வந்தது... அப்போ உங்களுக்காகத் துடிச்சப்போ தான் என் காதலை நான் உணர்ந்தேன்னா... இப்போ நீங்க நடந்துக்கிறதை பார்த்தா நேக்கு பயமாயிருக்குன்னா... என்ன நடந்துச்சு சொல்லுங்கோ...?" அவன் முன் மண்டியிட்டு அவனது கையைப் பற்றி உலுக்கியபடி கேட்டாள் அவள்...

அவளது செயல் அவனை உலுக்கியதை விட அவளது வார்த்தைகளும் அதன் அர்த்தங்களும் அவனை வெகுவாய் உலுக்கியது... நிதர்சனம் மூளையில் ஏற அவன் தன் மனதை கட்டுப்படுத்திக் கொண்டு,

"வீணா எதை எதையோ நினைச்சிட்டு உளறாதே... எனக்கு ஒண்ணும் ஆகலை... கல்லாட்டம் உன் கண் முன்னாடி தானே நிற்கிறேன்... அப்புறம் என்ன சந்தேகம்...? இந்த மாதிரி பேசினா நான் உன்னை நம்பிருவேன்னு நினைச்சியா...?"

அவனது பேச்சை கேட்டுக் கண்கள் கலங்க ஏறிட்டவளை கண்டு அவனது மனம் ஆறுதல் சொல்ல விழைந்தது...

அவளின் அன்பின் முன் மேலும் மேலும் தான் கோழையாகி கொண்டு போவதை கண்டு மனதுக்குள் நொந்தவன்

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளை ஒரு கணம் உற்று நோக்கி விட்டு,

"இந்தக் காதல் சரிவராது... என்னை மறக்கிறது தான் உனக்குச் சரி... இனி நான் அடிப்பட்டுச் செத்தாலும் என்னைப் பார்க்க வராதே... வராமல் இருக்கிறது தான் உனக்கு நல்லது..."

அவனின் பேச்சில் அவளது கண்ணில் அடிப்பட்ட வலி ஒன்று தோன்றியது...

"அப்படிச் சொல்லாதீங்கோ ராம்..." என்று அலறியவளை கண்டு கொள்ளாமல் வெளியேற போனவன் பின் நின்று அவளது அன்னையிடம்,

"நான் வீட்டில் கொண்டு போய் விடவா...?" மனம் தாங்காமல் கேட்டான்...

வேண்டாம் என்பது போல் தலையசைத்த பத்மா கண்கள் கலங்க அவனை நோக்கி கையெடுத்து கும்பிட... அதில் அவனது மனம் கனக்க அறையை விட்டு வெளியில் வந்தவன் நிலை கொள்ளாமல் தவித்தான்...

அவளுக்கான கட்டணத்தை மருத்துவமனையில் கட்டி விட்டு வெளியில் வந்தவனுக்கு மனதில் பல விடை தெரியா வினாக்கள்... அதற்கான விடையை யாரிடத்தில் கேட்பது...? இல்லை எங்கே சென்று தேடுவது...? அவனுக்குப் பெரும் குழப்பமாய் இருந்தது...

மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வரும் வரை ஒன்றும் பேசாது இருந்த பத்மா வீட்டிற்கு வந்ததும் மகளை அடித்துத் துவம்சம் செய்துவிட்டார்...

காலையில் இளைஞன் ஒருவன் ஹரிணியைத் தூக்கி கொண்டு சென்றதை ரங்காச்சாரி கோவிலில் பூஜையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே பக்கத்து வீட்டு கண்ணன் வந்து அவரிடம் சொல்லிவிட்டு சென்றுவிட்டான்...

மகளுக்கு என்னவானதோ என்று மனதுக்குள் பதறினாலும் பூஜையை முடித்துக் கொண்டு கோவில் நடையைச் சாத்திய பின்பே அவரால் வீட்டிற்கு வர முடிந்தது...

கண்ணனின் பாட்டி ஹரிணியைப் பற்றி ஒரு தனிக்கதை புனைந்து அவளைப் பெற்ற தகப்பன் அவரிடமே கதையளக்க அவருக்கு நாக்கை பிடுங்கி கொண்டு செத்துவிடலாம் போல் இருந்தது... இருந்தாலும் மகளின் நிலையை அறிய எண்ணி மனம் துடிக்க மனைவி, மகள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார்...

ஆனால் மனைவியோ வந்ததும் வராததுமாய் மகளைப் போட்டு ஆடு, மாடு அடிப்பதை போல் அடிப்பது கண்டு பதறிப் போனார்... அடிப்பட்ட புறாவாய் துடித்துக் கொண்டிருந்த மகளின் துன்பம் மட்டுமே மனதில் நிலைக்க மனைவியைத் தடுத்தார்...

"பத்து என்னடி இது... வயசு பொண்ணைப் போட்டு இப்படி அடிக்கற..." என்று மனைவியைக் கடிந்தபடி சுவரோரமாய் ஒடுங்கி நின்றிருந்த மகளின் அருகே சென்றார்...

"வயசு பொண்ணு என்ன செஞ்சிட்டு வந்து நிற்கறான்னு அவளையே கேளுங்கோ...?" என்றார் பத்மா மகளின் மீது கோபப் பார்வையை வீசியபடி...

"அவ என்னத்தான் செஞ்சாலும் நீ இப்படிக் கை நீட்டி அடிக்கிறது தப்பு பத்து..." மகளுக்குப் பரிந்து கொண்டு மனைவியை அடக்கினார் அவர்...

பின்பு மெதுவே மகளிடம், "அம்மா ஏதேதோ சொல்றா... பக்கத்தாத்து மாமி வேற ஏதோ சொல்றா... உண்மையில் என்ன தான்ம்மா நடந்தது...?"

"அப்பா..." என்று கேவியபடி அவரின் தோளில் தலை சாய்ந்தவளுக்குத் தந்தையிடத்தில் தான் ஒருவனை நேசிக்கும் விசயத்தைச் சொல்ல மனம் வரவில்லை... சிறிது பயமாகவும் இருந்தது...

சித்தார்த்தை இழக்க போகிறோம் என்ற தவிப்பில் அவனுக்காக உயிரையே விடத் தயாரானாள்... பின்பு அவனை நேரில் கண்ட போது தனது காதலை அவனிடம் கொட்டி தீர்த்தவள் அதன் விளைவுகளைப் பற்றிக் கொஞ்சமும் சிந்தித்துப் பார்க்கவில்லை...

அவள் மனதில் இருந்தது எல்லாம் அவன் மேலிருந்த காதல்... அந்தக் காதலை தக்க வைத்துக் கொள்ள வேண்டி போராட வேண்டிய கட்டாயம் மட்டுமே... அதில் அவள் தனது பெற்றோரை மறந்தாள்... தனது குடும்பக் கௌரவத்தை மறந்தாள்... இத்தனை நாள் இதற்காகத் தான் வாய் மூடி மௌனியாக மனம் நிறையக் காதல் இருந்தும் அவனிடம் அவள் தன் காதலை மறுத்து வந்ததையும் மறந்தாள்...

"அவ சொல்ல மாட்டான்னா... அந்தக் கர்மத்தை நானே சொல்றேன்..." என்ற பத்மவிலாசினி மகளின் காதல் கதையையும், அதற்காக வேண்டி அவள் தற்கொலை வரை சென்றதையும், சித்தார்த் அவளைக் காப்பாற்றி அவளது காதலை மறுத்து அவளை உதறிவிட்டு போனதையும் கூறியவர்,

"அந்தக் கடங்காரன் கால்ல விழுந்து கெஞ்சறான்னா... நேக்கு காதல் பிச்சை போடுங்கோன்னு... இந்த லட்சணத்துல அவன் கையால தொங்க தொங்க தாலி வாங்கிண்ட மாதிரி 'ஏன்னா... ஏன்னான்னு' உருகுறா... நேக்கு கேட்க சகிக்கல... நேக்கு அப்படியே நாண்டுட்டுச் சாகலாம் போல் இருந்தது... இவ நம்ம மானத்தை வாங்கன்னே பொறந்திருக்கான்னா... இவளுக்கு மூத்தது ரெண்டு பொண்ணைப் பெத்துக் கல்யாணம் பண்ணி கொடுத்தேன்... இது போல் காதல் அது இதுன்னு அவங்க உளறிட்டு வரலையே... ஏன்னா இவ மட்டும் இப்படி இருக்கிறா...?" என்றவர் ஆற்றாமையில் அப்படியே முடங்கிப் போய் அழ துவங்கினார்...

ரங்காச்சாரிக்குமே ஹரிணியின் காதல் விவகாரமும், அவளது தற்கொலை முயற்சியும் பலத்த அதிர்ச்சியைக் கொடுத்தது... காதல் என்ற ஒற்றை வார்த்தையில் அவரது

சப்தநாடியும் ஒடுங்கி போய்விட்டது... நெஞ்சை பிடித்துக் கொண்டு அவர் ஒரு பக்கம் அமர்ந்துவிட்டார்...

பெற்றோரின் நிலை கண்டு ஹரிணிக்குப் பெருத்தத் துயரமாக இருக்க அவளது கண்கள் அதை எண்ணி எண்ணி கண்ணீரை பெருக்கியது... அவளும் ஒரு மூலையில் முடங்கிவிட்டாள்...

"வேண்டாம்ன்னா இவ படிச்சது வரைக்கும் போதும்... பேசாம இவளுக்கு ஒரு கல்யாணத்தை முடிச்சுருவோம்... முதல்ல மாப்பிள்ளை பாருங்கோன்னா..." கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்ன பத்மாவின் குரல் தீர்மானத்துடன் ஒலித்தது...

"அம்மா... நேக்குக் கல்யாணம் வேண்டாம்..." ஆதங்கத்துடன் சொன்ன மகளை முறைத்து பார்த்தவர்,

"அப்போ காலம் பூரா கல்யாணமே பண்ணிக்காம கன்னி கழியாம இருக்கப் போறியா...? இல்லை அவனுக்கு வைப்பாட்டியா போகப் போறியா...?" கடூரத்துடன் வந்தது பத்மாவின் வார்த்தைகள்...

"அம்மா..." அலறிவிட்டாள் ஹரிணி...

"பத்து..." ரங்காச்சாரியுமே மனைவியின் வார்த்தையில் அதிர்ந்து போனார்...

"என்ன பேச்சு பேசற பத்து...?"

"பின்னே எப்படின்னா பேச சொல்றேள்...? இவ பேசறது அப்படித்தானே இருக்கு... இப்பவே அக்கம் பக்கத்துல இருக்கறவா எல்லாம் தப்பா பேசுறா... இனி இது காது மூக்கு வச்சு காத்துல பரவறதுக்குள்ள ஒரு மாப்பிள்ளையைக் கொண்டு வந்து நிறுத்துங்கோ... குருடோ, நொண்டியோ யாரா இருந்தாலும் பரவாயில்லை... நேக்கு இவ கல்யாணத்தை முடிச்சே ஆகணும்..." உறுதியுடன் அவர் குரல் ஒலித்தாலும் அதில் இருந்த அர்த்தத்தை உணர்ந்தவராய் அவரது மனம் பெரும் துன்பம் கொண்டது...

'என் மக அழகுக்கு அந்த ராஜகுமாரனே வந்து தூக்கிண்டு போகப் போறான்...' என்று கர்வமாய் எண்ணி மகிழ்ந்த மகளின் அழகே இன்று அவருக்குப் பயத்தைக் கொடுத்தது மட்டும் அல்லாது துக்கத்தையும் சேர்த்துக் கொடுத்தது...

மனைவியின் வார்த்தைகளை ஆமோதித்தவராய் அமைதி காத்தார் ரங்காச்சாரி... மானம் போகும் முன் மகளின் திருணத்தை நடத்த திட்டமிட்டார் அவர்...

"என்னால அவர மறக்க முடியாதும்மா... நான் இப்படியே இருந்துட்டு போறேன்... நேக்குக் கல்யாணம் வேண்டாம்..." என்று அழுதவளை தேற்றுவதற்கு அவளது பெற்றோருக்கு மனது இல்லை...

அவள் என்ன தான் அழுது கரைந்தாலும் அவர்களின் முடிவில் எந்த மாற்றமும் ஏற்படப் போவது இல்லை...

அந்த நேரம் அந்தக் காற்று மட்டுமே அவளை இதமாய் வருடி ஆறுதல் கூறியது அவளது அன்னையாய்...

**********************

வீட்டிற்கு வந்த சித்தார்த் மனம் மிகுந்த குழப்பத்தைச் சுமந்து இருந்தது... தான் செய்தது, பேசியது எல்லாம் சரி தானா என்று அவனுக்குள் சிறு தடுமாற்றம்... ஏதோ தவறு செய்துவிட்டது போல் மனதிற்குள் ஒரு குற்றவுணர்ச்சி குறுகுறுத்தது...

தனது அறைக்குச் செல்ல போனவனைத் தடுத்து நிறுத்தியது அமராவதியின் குரல்...

"வேலை நேரத்தில் வீட்டில் என்ன வேலை கண்ணா...?"

"மாம்... எனக்குக் கொஞ்சம் ரெஸ்ட் தேவைப்படுது... ப்ளீஸ்..."

அவனின் களைத்து ஓய்ந்து போயிருந்த தோற்றத்தை யோசனையாய் பார்த்துக் கொண்டு இருந்தவரின் விழியில் அவனது நெற்றியில் ஒட்டி இருந்த பிளாஸ்திரி விழ...

"என்னடா கண்ணா இது...? எங்கே அடிப்பட்டது...?" பதற்றத்துடன் கேட்டவர் அவன் அருகில் வேகமாய் வந்தார்...

அவரின் கேள்வியில் அன்னிச்சையாய் அவனது கை காயத்தை வருடியது... அவனது மனதிலோ அவளின் நினைவுகள் வருடி சென்றது...

"நத்திங் மாம்... சுவத்துல இடிச்சிட்டேன்..."

"எல்லாத்திலும் விளையாட்டு தானா... சின்னப் பிள்ளையா கண்ணா சுவத்தில் போய் இடிக்கிறதுக்கு..." அவனைக் கடிந்தவர்,

"சரி லன்ச் சாப்பிட்டுட்டு போய் ரெஸ்ட் எடு..." என்க...

அதை மறுக்க இயலாதவனாய் உணவு உண்ண சென்றான்...

"மாமா எப்போ கல்யாணத்தை வைக்கலாம்ன்னு கேட்கிறார்... என்ன பதில் சொல்றது கண்ணா...?"

அன்னை கேட்டதும் ஹரிணியின் முகம் அவனின் மனதில் மின்னி மறைந்தது... திருமணம் என்றதும் நிச்சயிக்கப்பட்ட பெண்ணின் முகம் வராமல் வேறு பெண்ணின் முகம் வருவது என்றால்... இதற்குப் பெயர் என்ன...? விடை தேடி திணறினான் அவன்...

ஆனால் கிடைத்த விடையோ அத்தனை உவப்பாக இல்லை அவனுக்கு... திடீரென்று நியாபகம் வந்தவனாய் அன்னையிடம்,

"மாம்... நீங்க லவ் பத்தி என்ன நினைக்கிறீங்க...?" உணவை அளந்தபடி ஓரக்கண்ணால் அன்னையைப் பார்த்துக் கொண்டு அவன் கேட்க...

கொஞ்சமே கொஞ்சம் என்றாலும் அவரின் முகத்தில் தெரிந்த திகைப்பை அவன் மனம் கண்டு கொண்டது...

"எதுக்குப்பா கேட்கிறே...?" தன்னைச் சமாளித்துக் கொண்டு அவர் பேசுவது அவனுக்குப் புரிந்தது...

"இல்லை சும்மா தான் கேட்டேன் சொல்லுங்க மாம்..."

"காதல்ங்கிற வார்த்தையே எனக்குப் பிடிக்காது கண்ணா..." முகத்தில் புன்னகையைப் பூசி கொண்டு அவர் சொல்ல...

"ஓ... நான் திடீர்ன்னு ஒரு பொண்ணை லவ் பண்ணி இது தான் என் வொய்ப்ன்னு கூட்டிட்டு வந்தா என்ன பண்ணுவீங்க மாம்..."

அவனது கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்காதவராய் தனது அதிர்ச்சியை அப்பட்டமாய் முகத்தில் காட்டினார் அமராவதி...

"மாம்..." மகன் உலுக்கவும்...

"விளையாடாதே கண்ணா..." அவர் கண்டிப்புடன் கூற...

"உண்மையான பதில் எனக்கு வேணும் மாம்..." அவன் விடாப்பிடியாய் உறுதியுடன் தன் நிலையில் நிற்க...

"என் உடம்புல உயிர் இருக்கிற வரை நீ நினைக்கிறது நடக்காது..." தீவிரமான குரலில் கூறியவரின் முகத்தில் அத்தனை கோபமும், குரூரமும் பரவியிருந்தது... அவரது முகமாற்றம் ஒவ்வொன்றையும் அவனது மனம் குறித்துக் கொண்டது...

"மாம்... கூல்... கூல்... நான் அப்படிப்பட்டவன் இல்லைன்னு உங்களுக்கே நல்லா தெரியும்... அதுலேயும் ஐஸ்கீரிம் மாதிரி சும்மா சூப்பர் பிகரை எனக்காகப் பார்த்து வச்சு இருக்கீங்க... அந்தக் குல்பி தீபியை விட்டுட்டு வேற யார் பின்னாடியும் போக நான் என்ன முட்டாளா... நான் சித்தார்த் ராம் இல்லையா...?" கடைசி வாக்கியத்தில் அவன் கொடுத்த அழுத்தத்தில் அவரது முகம் பேயறைந்தார் போலானது...

சாப்பிட்டு முடித்தவன் கையைக் கழுவி கொண்டு தனது அறைக்குச் செல்ல அதற்காகக் காத்திருந்தார் போன்று

அமராவதி தனது அலைப்பேசியை எடுத்து ஆராவமுதனுக்கு அழைத்தார்... மறுமுனையில் அவர் எடுத்ததும்,

"அண்ணா... எனக்குப் பயமாயிருக்குண்ணா..."

.................

"கண்ணா காதல் அது இதுன்னு ஏதேதோ உளர்றான்... உங்களுக்கே தெரியும் இவனுக்கும் காதலுக்கும் ரொம்பத் தூரம்ன்னு... இவன் காதலை பத்தி பேசறான்னா... என்னமோ நடந்திருக்கு... அது என்னன்னு தான் தெரியலை... ஒருவேளை கண்ணா யாரையாவது காதலிக்கிறானோ..."

................

"இல்லைண்ணா அப்படி மட்டும் நடக்க விட மாட்டேன்... என் பையனை விட எனக்குக் குடும்பக் கௌரவம் தான் முக்கியம்... அது எல்லாத்தையும் விட என் கணவர் ஆசையா தோற்றுவிச்ச அவரோட தொழில் சாம்ராஜ்யம் முக்கியம்... என் உயிர் இருக்கிறவரை அது சரிய நான் விட மாட்டேன்... கண்ணாவோட காதலுக்கும் நான் ஒத்துக்க மாட்டேன்..." ஆவேசமாய் முழங்கியவர் அலைப்பேசியை அணைத்தார்...

அத்தனையையும் மாடிப்படி மறைவில் இருந்து கேட்டுக் கொண்டு இருந்தான் சித்தார்த்... அன்னையின் ஆவேசம் அவனுக்குள் பல புதிர்களைத் தோற்றுவித்தது...

அடுத்த நொடி வெறி கொண்டவன் போல் தனது அறைக்கு ஓடியவன் கதவை தாளிட்டு விட்டு அங்கிருந்த அலமாரி எல்லாவற்றையும் திறந்து அதில் இருந்தவற்றை எல்லாம் வெளியில் எடுத்து போட்டு எதையோ தேடினான்...

கடைசியாக இருந்த அலமாரியின் இழுப்பறையைத் திறந்தவன் அதில் இருந்தவற்றை வெளியில் எடுத்து போட அதில் இருந்த நாட்காட்டி ஒன்றில் இருந்து புகைப்படம் ஒன்று கீழே விழுந்தது... அதை அவன் கவனிக்கவில்லை...

எல்லாவற்றையும் இழுத்து போட்டு தேடியவன் தான் தேடியது கிடைக்காது தோற்று போனவனாய் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டு என்ன செய்வது என்று அறியாமல் இயலாமையுடன் அவன் நிற்கும் போது பலத்த காற்று ஒன்று வீசியது... அதில் அந்தப் புகைப்படம் பறந்து வந்து அவனது காலடியில் விழுந்தது...

ஏதோ உள்ளுணர்வு உந்த குனிந்து பார்த்தவன் கண்ணில் அந்தப் புகைப்படம் தென்பட்டது... அதில் ஹரிணி வசீகரமாய் அவனைப் பார்த்து புன்னகைத்து கொண்டிருந்தாள்...

அவளின் புகைப்படத்தைக் கண்டதும் மகிழ்ச்சி ஒரு பக்கம், துக்கம் ஒரு பக்கம் எனப் பிரித்தறியாத மனநிலையுடன் நடுங்கும் விரல்களால் அதை எடுத்து பார்த்தவன் ஓய்ந்து போனவனாய், உணர்வுகளை அடக்க முயன்று தோற்று போனவனாய் அப்படியே தரையில் மடங்கிச் சரிந்தான்...

இன்று பார்த்ததை விடப் புகைப்படத்தில் இன்னமும் அழகாய் இருந்தாள் அவள்... அன்றலர்ந்த மலர் போல் மயக்கும் புன்னகையுடன் இருந்தவளை கண்டு அவனது உள்ளம் தடுமாறியது... அந்நேரம் அவனது கையில் இருந்த புகைப்படமும் தடுமாற அதன் பின் இருந்த அந்த வாசகம் பளிச்சென்று அவன் கண்ணில் பட்டது...

"ஐ லவ் யூ ஹனி..."

அதைக் கண்டவன் அதற்கு மேல் தாங்க மாட்டாமல் ஓவென்று வாய்விட்டு அழ துவங்கினான்... தான் ஆண்பிள்ளை என்பதை மறந்து... பெரிய தொழிலதிபன் என்பதை மறந்து... இதுவரை வாழ்க்கையில் அழுகை என்பதை அறியாதவன் இன்று முதன்முறையாய் கண்ணீர் விட்டுக் கதறினான்...

உறவுகள் பொய்த்து போனதை எண்ணி... காதல் தவிர வேறு தவறு செய்யாத அந்த அப்பாவி பேதைப் பெண்ணை எண்ணி.... அவன் கரைந்தான் தனது கண்ணீர் வற்றி போகும் வரை...!!!

அந்நேரம் அவனது கண்ணீரை காண சகிக்காததாய் அவனைத் தேற்றும் வகையறியாததாய் அந்தக் காற்று அறைக்குள் சுழன்று சுழன்று அடித்து அவனைச் சுற்றி சுற்றி வந்தது... அது உணர்த்திய செய்தியை கூட உணராதவனாய் அவன் தனக்குள் மூழ்கியிருந்தான்...!!!

"காதறந்த ஊசியும் கடைசி வரை வாராது எனச் சொன்னான் அந்தப் பட்டினத்தார்
என் காதல் என் கடைசி மூச்சை தாண்டியும் வரும் எனச் சொல்கிறேன் இந்தப் பட்டணத்தான்...
ஆம்... காதல் ஆன்மாக்களின் சங்கமம் அன்றோ...!!!
ஆன்மாவிற்கு அழிவேது... என் காதலுக்கு முடிவேது...!
அழிய நினைப்போர் அழிவர்... முடிய நினைப்போர் மாண்டு போவர்...!!!"

நானாவேன்...

# நான் - 4

"கண்ணா... ரெஸ்ட் எடுக்கப் போறேன்னு சொல்லிட்டு இப்படி உடனே கிளம்பிட்டியே..." வெளியில் செல்வதற்குத் தயாராக வந்த சித்தார்த்தை நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்டார் அமராவதி...

ஏனோ அவனுக்கு வீட்டில் இருக்கவே மூச்சு முட்டியது... இதுவரை நடந்த விசயங்களும், அன்னை மாமனிடம் பேசிய விசயங்களும் அவனுக்கு எதையோ உணர்த்தியது... ஆனால் அதை எப்படி அறிவது என்று அவனுக்குத் தெரியவில்லை... அன்னை மற்றும் மாமன் மீது ஏற்பட்ட சந்தேகத்தின் அளவு இன்று இந்த உரையாடலுக்குப் பின் அதிகரித்துக் கொண்டு போனது...

"வேதாந்த் அங்கிள் என்னை உடனே கிளம்பி வர சொன்னாரு... ஏதோ பிராப்ளமாம்..." என்று அன்னையின் முகத்தைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு கூறியவன் அவரின் பதிலை எதிர்பாராது சென்றுவிட்டான்...

அந்தளவுக்கு அவன் மனதில் அன்னை மீது வெறுப்பு மூண்டு இருந்தது... அன்னைக்கு உடந்தையாய் இருக்கும் அத்தை கணவன் ஆராவமுதன் மீதும் வெறுப்பு எழுந்தது... ஆனால் அந்த வெறுப்பிற்கான ஆதாரம் அவனிடத்தில் இல்லை அது தான் பரிதாபம்...

அமராவதிக்கு அவனின் செய்கையும் பேச்சும் புதிராக இருந்தாலும் தனது மகன் தன்னை மீறி சென்றுவிட மாட்டான் என்ற நம்பிக்கையில் தனது வேலையைப் பார்க்க சென்றார்...

காரை ஓட்டி கொண்டிருந்தவன் முகத்தில் எக்கச்சக்க குழப்ப ரேகைகள்... மீண்டும் விடை தெரியா வினாக்கள்... விடையைத் தேடி அவன்...

வேறு எங்கும் செல்ல பிடிக்காதவனாய் மீண்டும் அலுவலகத்திற்கு வந்து தன்னை வேலையில் மூழ்கடித்துக்

கொண்டான்... அந்தோ பரிதாபம்... அவனது எண்ணங்களே எதிரியாய் மாறி அவனை விடாது துரத்தியது...

மாலையில் வீட்டிற்குச் செல்ல இருந்தவன் முன் வேதாந்தம் நிறையக் கோப்புகளைக் கொண்டு வந்து வைக்க அவனது பொறுமை காற்றில் பறந்தது...

"என்ன அங்கிள்... எப்ப பார்த்தாலும் வீட்டுக்கு கிளம்பும் போது தான் ஃபைலை கொண்டு வந்து கொடுக்கறீங்க... ம்ப்ச்..." சலித்தவன், "நாளைக்கு வந்து பார்க்கிறேன் அங்கிள்..." என்றபடி நாற்காலியில் இருந்து எழ போக...

"தம்பி நாளைக்கு நீங்க வர மாட்டீங்களே..." யோசனையாய் இழுத்தார் அவர்...

"வாட் நான் வர மாட்டேனா... நான் எப்போ அங்கிள் உங்க கிட்ட அப்படிச் சொன்னேன்..."

"தம்பி ஒரு வருசமா மாசாமாசாம் ஆறாம் தேதி ஆபிஸ்க்கு வர மாட்டீங்களே நீங்க... பீச் ஹவுஸ்ல தானே இருப்பீங்க..."

அவரது பேச்சில் மனதுக்குள் திடுக்கிட்டவன் பின் சமாளித்துக் கொண்டு, "ஓ... ஆமாம்ல மறந்து போய்ட்டேன் அங்கிள்..." என்றவன் கோப்புகளைக் கையில் எடுத்து பார்வையிட ஆரம்பித்தான்...

அவன் மனதில் 'பீச் ஹவுஸ், ஆறாம் தேதி' இந்த வார்த்தைகள் பெரும் குழப்பத்தைத் தோற்றுவித்து இருந்தது...

"தம்பி... செக்ரட்டரி போஸ்ட் இன்டர்வியூ நாளைக்கு இருக்கு தம்பி... என்ன பண்ணலாம்...?"

ஒருவேளை தன்னை ஆழம் பார்க்க இந்த மாதிரி கேள்வி கேட்கிறாரோ என்று நினைத்தவன், "அதுக்கென்ன அங்கிள்... நீங்களே அட்டண்ட் பண்ணி செலக்ட் பண்ணிடுங்க..." என்றவன் ஏதோ நினைத்தவனாய்,

"இதுக்கு முன்னாடி இருந்த செக்ரட்டரி என்னவானாங்க...?"

ஒன்றும் அறியாதவனாய் கேட்டவனைக் கண்டு அவர் திகைத்துப் போனார்...

"நீங்க தானே தம்பி அவன் போட்டி கம்பெனிக்கு விலை போயிட்டான்னு கண்டுபிடிச்சி வேலையை விட்டு அனுப்புனீங்க..." திகைப்பு மாறாமல் அவர் கேட்க...

"ஆமாம் அங்கிள் மறந்தே போய்ட்டேன்..."

வார்த்தைக்கு வார்த்தை 'மறந்துவிட்டேன்' என்று சொன்னவனை ஆராய்ச்சியாய் பார்த்தவர் மனம் எதையோ கண்டு கொண்டது... கண்டு கொண்ட விசயத்தை வாய் விட்டு கேட்க அவரால் முடியாது...

வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தவனை அவனது அத்தை குடும்பம் வரவேற்றது...

"அடடே மாப்பிள்ளையே வந்துட்டாரே..." ஆராவமுதன் ஆர்ப்பாட்டமாய் அவனை வரவேற்க...

அதைக் கண்டு உள்ளுக்குள் எரிச்சல் மண்டினாலும் வெளியில் சிரித்தபடி அங்கிருந்த சோபாவில் அமர்ந்தவன் அத்தையையும், தீபிகாவையையும் பார்த்து வரவேற்கும் முகமாய்த் தலையை அசைத்தான்...

"மாப்பிள்ளே... உங்களுக்கும், தீபிக்கும் அடுத்த முகூர்த்தத்துல கல்யாணத்தை வைக்கலாம்ன்னு நாங்க பிரியப்படுறோம்... நீங்க என்ன சொல்றீங்க...?" ஒன்றும் அறியாதவர் போல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்ட மாமனை காணும் போதே காரணம் தெரியாமல் எழுந்த ஆத்திரத்தை அவனால் அடக்க முடியவில்லை...

"என்னால இப்போதைக்குக் கல்யாணம் பண்ண முடியாது..." என்றான் பட்டென்று முகத்தில் அடித்தார் போன்று...

"கண்ணா..." அமராவதி அவனை அதட்ட...

"இல்ல மாம்... கொஞ்ச நாள் நானும் தீபியும் பழகி பார்த்து ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கிட்டு அதுக்கு அப்புறம்

கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு நினைச்சேன்..." என்று மழுப்பினான்...

"வாவ் சித்து... நானும் உங்க கட்சி தான்... ஒருத்தருக்கு ஒருத்தர் நல்லா புரிஞ்சிட்டு அதுக்கு அப்புறம் மேரேஜ் பண்ணிக்கலாம்... எனக்கு ஓகே தான்..." மனதை மறைக்காது உற்சாகமாகச் சொன்ன தீபிகாவை அவன் புன்னகையுடன் பார்த்தான் என்றால் ஆராவமுதனோ மகளைக் கொலைவெறியுடன் பார்த்தார்...

"ஆமாங்க அவங்க சொல்றதும் சரி தான்... சின்னஞ்சிறுசுக ஆசைப்பட்டது போல் செய்யட்டும்..." பிருந்தாவும் மருமகன், மகள் கூறியதற்கு ஒத்து ஊத...

"பிருந்தா..." மனைவியை ஒரு அதட்டல் போட்டு அடக்கிய ஆராவமுதன்...

"தங்கச்சி சொல்றது தான் இறுதி முடிவு... நீ சொல்லும்மா தங்கச்சி..." அவரது வார்த்தையில் ஏகத்துக்கும் குழைவு...

"கண்ணா... உன் விருப்பத்துக்கு நான் சம்மதிக்கிறேன்... உன் வாக்கு மட்டும் மாறுச்சு... அடுத்த முகூர்த்தத்துல உனக்கும் தீபிக்கும் கல்யாணம் பண்ணி வச்சிருவேன்..."

உறுதியான குரலில் கூறிய அமராவதியின் பேச்சுக்கு தனது அலட்சியமான தோள் குலுக்கலையே பதிலாகக் கொடுத்தான் சித்தார்த்...

"சித்து நீங்க நாளைக்கு ப்ரீயா...?" தீபிகா கேட்க...

"இல்லை தீபி... நாளைக்கு நான் பீச் ஹவுஸ் போறேன்... என்னை யாரும் டிஸ்டர்ப் செய்யாதீங்க..." பேச்சுத் தீபிகாவிடம் இருந்தாலும் அவனது கண்கள் அன்னையும், மாமனையும் அளவெடுத்தது...

அவனது பேச்சு கேட்டு அவர்களின் முகம் பேயறைந்தது போலானது... யாருக்கும் தெரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

ஆராவமுதன் தனது நெற்றியில் துளிர்த்த வியர்வை துளிகளைக் கைக்குட்டையால் ஒற்றி எடுத்து தனது பதற்றத்தை மறைத்தார்... அதை அவனது கண்கள் பதிவு செய்து கொண்டது...

சூழ்நிலையை மாற்றும் பொருட்டு, "நாளைக்குப் போகலைன்னா என்ன தீபி... இன்னைக்கு டின்னருக்கு வெளியில் போகலாமா...?" என்று கேட்டபடி அவன் எழ...

"ஓ... எஸ்..." விரிந்த புன்னகையுடன் தீபிகாவும் உடன் எழுந்தாள்...

"பை மாம்..." அன்னையிடம் விடைப்பெற்று தீபிகாவுடன் வெளியில் கிளம்பினான்...

அவன் தன் மனதை உணர்ந்த பின்னும் ஹரிணி அல்லாது வேறு பெண்ணுடன் செல்வதைக் கண்டு அந்தக் காற்று செய்வதறியாது திகைத்து ஸ்தம்பித்தது... ஏனோ அவனுடன் செல்ல மனம் இல்லாததாய் அது அங்கேயே தேங்கியது...

"வர வர மருமகன் போக்கு சரியில்லை தங்கச்சி... கொஞ்சம் கண்டிச்சு வை... அப்புறம் நம்ம கையை மீறி போய்டுவாப்புல..." ஆராமுதன் அமராவதியிடம் கூற...

"நான் சொன்னது என்னவானது அண்ணா...?" அவரது கேள்விக்குப் பதில் அளிக்காமல் வேறு கேட்ட அமராவதியை கண்டு முகம் மாறினார் ஆராவமுதன்...

"பார்த்துட்டு தான் இருக்கேன் தங்கச்சி..." மென்று முழுங்கினார் அவர்...

"முதல்ல அதைச் செஞ்சு முடிங்க... பிறகு கண்ணாவை கவனிப்போம்..." கம்பீரமாகக் கூறியவரை வெறித்துப் பார்த்த ஆராவமுதன் மனதுக்குள்...

'பையனை கண்டிக்க வக்கில்லை... ஆனா வீண் இந்த அலட்டலுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை...' நினைத்து

முடிக்கும் முன் சட்டென்று வீசிய காற்றில் பறந்து வந்த சிறு கல் அவரது வழுக்கை தலையை நச்சென்று பதம் பார்த்து...

ஆவென்று தன் வழுக்கை தலையைத் தடவி கொண்டவரை கண்டு நகைத்த காற்றுச் சிலுசிலுவெனச் சிலுத்தபடி வெளியில் கலைந்து சென்றது...

**********************

நட்சத்திர விடுதியில் உணவை முடித்துக் கொண்டு தீபிகாவை அவளது வீட்டில் விட்டவன் நேரே தனது வீட்டிற்கு வந்தான்...

அவனது வரவை எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருந்த அமராவதி அவனைக் கண்டதும், "கண்ணா என்ன இது...?" அலைப்பேசியில் இருந்த புகைப்படத்தைக் காட்டினார்...

வாட்ஸ் அப்பில் வந்த புகைப்படம் அது... அவன் ஹரிணியை மருத்துவமனைக்குள் தூக்கி செல்வதை யாரோ புகைப்படமாக எடுத்து இருந்தனர்... அதைக் கண்டவன் வேகமாய் வளர்ந்து வரும் அறிவியலை மனதுக்குள் சபித்தவனாய்,

"இதுக்கு என்ன மாம்...?" என்றான் நிதானமாய் ஒன்றும் அறியாததாய்...

அவனின் நிதானத்தில் அவருக்குச் சற்று நிம்மதி வந்தது.

குற்றம் செய்பவனாக இருந்தால் அவர் கேட்டதும் தடுமாறி இருக்க வேண்டும்... ஆனால் அவனிடத்தில் அந்தத் தடுமாற்றம் இல்லை என்பதைக் குறித்துக் கொண்டவர் மகனை நம்பினார்... சித்தார்த்துக்கு இந்த மாதிரி நடிப்பு எல்லாம் அல்வா சாப்பிடுவது போல் என்பதை அவர் அறியவில்லை...

"நாளைக்குப் பேப்பர்ல போடுறதா இருந்தது... நல்ல வேளை தெரிஞ்ச பத்திரிக்கைங்கிறதால நியூஸ் உண்மையா... பொய்யான்னு கேட்டாங்க..." என்றவர்,

"இதுக்கு நீ இன்னமும் விளக்கம் சொல்லலை... யார் இந்தப் பெண்...?"

"நம்ம சிவாவை பார்க்க அவனோட ஹாஸ்பிட்டலுக்குப் போயிருந்தேன்... அப்போ இந்தப் பொண்ணைத் தூக்கிட்டு அவளோட பேரண்ட்ஸ் வந்தாங்க... அவங்களுக்கு ஹெல்ப் பண்ணத்தான் அந்தப் பொண்ணைத் தூக்கிட்டு ஓடினேன்... ஏதோ லவ் பெயிலியராம்..."

மீனின் உயிருக்கே இரக்கப்பட்டு உதவி செய்ய ஓடியவன் தன் மகன்... அவன் கண் முன்னே அந்தப் பெண் உயிருக்கு துடிப்பதை காண சகிக்காது உதவி செய்து இருப்பான் என்று அவன் சொன்ன கதையை முழுதாய் நம்பினார்...

"சரிப்பா... ஆனா பப்ளிக்ல இந்த மாதிரி எமோசனலாகி இது மாதிரி எதையாவது செய்யாதே... நம்ம மாதிரி இருக்கிறவங்க ஒவ்வொரு அடியையும் பார்த்து கவனமா வைக்கணும்..."

அன்னையின் அறிவுரை அவன் காதில் விழவில்லை... மாறாக அன்னையைச் சமாளித்ததை எண்ணி பெருமூச்சு விட்டான்...

"ஓகே மாம் இனி இது மாதிரி செய்யலை..." என்றவன் தனது அறைக்குச் செல்ல எத்தனிக்க...

"கண்ணா..." என்று அவனைத் தடுத்து நிறுத்தியவர், "நீ நாளைக்குப் பீச் ஹவுஸ் போக வேண்டாம்..."

"ஏன் மாம்...?" என்றவன் விழிகள் அன்னையைக் கூர்மையாய் அளவிட்டது...

"வேண்டாம்ன்னா விட்டுரணும் கண்ணா... அம்மா எதைச் சொன்னாலும், செய்தாலும் உன் நல்லதுக்குத் தான் சொல்வேன்... செய்வேன்... நான் சொன்னதை மட்டும் நீ கேட்டா போதும்..." கண்டிப்பும் கறாராருமாய் வந்தது அவரது வார்த்தைகள்...

"சரி மாம்..." சொன்னதும் ஒத்துக் கொண்ட மகனை அதிசயமாய்ப் பார்த்தவர் ஒன்றும் பேசாது படுக்கச் செல்ல...

அவனோ யோசனையுடன் தனது அறைக்குச் சென்றான்...

நள்ளிரவில் தனது அறையை விட்டு வெளியேறியவன் அன்னையின் அறைக்குச் சென்று அவர் உறங்குவதை ஊர்ஜிதம் செய்துவிட்டு யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினான்...

அவன் நேரே சென்ற இடம் அந்தக் கடற்கரை வீடு... கடலுக்கு அருகில் அமைந்திருந்த அந்த வீடு பார்ப்பதற்கு அமைதியாய் கம்பீரமாய்க் காட்சி அளித்தது...

அவனது காரை கண்டதும் கதவை திறந்த காவலாளி அவன் கார் பின்னேயே ஓடி வந்தார்...

"சார் எப்பவும் ஆறாம் தேதி தானே வருவீங்க... இந்தத் தடவை முன்னாடி வந்துட்டீங்க..." என்றவரை பார்த்து,

"வரணும்னு தோணுச்சு வந்தேன்..." என்றவன் உள்ளே செல்ல முயல...

"அப்போ நான் கிளம்பவா சார்..."

"ஏன் உங்களுக்குப் பதிலா ட்யூட்டி பார்க்க வேற யாராவது வர போறாங்களா...?" நக்கலாய் கேட்டவனைக் கண்டு திகைத்த அந்தக் காவலாளி,

"ஐயோ அப்படி எல்லாம் இல்லை சார்... எப்பவும் நீங்க வந்தா தனிமை வேணும்னு என்னை வீட்டுக்குப் போகச் சொல்லிட்டு மறுநாள் தான் வர சொல்வீங்க... அதான் கேட்டேன்..." தலையைச் சொரிந்து கொண்டு அவன் சொல்ல...

"இல்லை... இன்னைக்கு நீங்க போக வேண்டாம்..." அவசரமாய்ச் சொன்னான் அவன்...

"சரிங்க சார்..." என்றபடி நகர்ந்தவரை பார்த்தவன் யோசனையாய் வீட்டினுள் நுழைந்தான்...

அங்கிருந்த சோபாவில் கண்களை மூடி சாய்ந்தவன் தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தான்... மீண்டும் அதே விடை தெரியா வினாக்கள்... விடையைத் தேடி அவன்...

அந்நேரம் அவன் அருகில் காற்றாய் நின்ற அந்த அரூபம் ஊமையாய் அழுதது அவனது காதில் விழவில்லை...

எதையோ சொல்ல நினைத்து அதைச் சொல்ல முடியாமல் தவித்து, அவனுக்கு எதையோ உணர்த்த நினைத்து அதை உணர்த்த முடியாமல் மருகி, அவனை அணுகும் வழி தெரியாது அது திகைத்து விழித்தது...

வேதாந்தம் கூறியது, அன்னை மற்றும் மாமனின் பார்வை பரிமாற்றம், காவலாளி சொன்னது எல்லாவற்றையும் சேர்த்து வைத்து பார்த்தவனுக்கு ஒன்றும் புரியவில்லை...

சிறிது நேரத்தில் எழுந்தவன் வீட்டிற்கு வெளியில் வந்தான்... கடற்கரை குளிர் காற்று அவன் முகத்தை வருடி விளையாடியது... அப்படியே காலார நடந்தவன் கடலுக்குச் சமீபத்தில் வந்துவிட்டான்...

கடற்கரை மணலில் கால் புதைய நடப்பது அவனுக்குச் சுகமாய் இருந்தது... அங்கே சில இளைஞர்கள் கடல் அலையில் மூழ்கி விளையாடி கொண்டு சிரிக்கும் சத்தம் அவனுக்குக் கேட்டது... அந்த உற்சாகக் குரல்களைக் கேட்டவன் முகத்தில் லேசாய் புன்னகை கீற்று...

அவனும் இதே போல் ஒரு காலத்தில் சந்தோசமாய்ச் சுதந்திரமாய்ச் சுற்றி திரிந்தவன் தான்... ஆனால் இப்போது அதை எல்லாம் மறந்து காற்றாய் ஓடி கொண்டிருக்கிறான்... யாருக்காக, எதற்காக அது அவனுக்கே விளங்கவில்லை...

கொஞ்ச நேரம் நடந்துவிட்டு அவன் வீட்டிற்குத் திரும்ப... அந்த இளைஞர் கூட்டமும் இவனோடு சேர்ந்து நடந்து வந்து கொண்டிருந்தது... பக்கவாட்டில் திரும்பி அவர்களைப் பார்த்தான்... மொத்தம் மூன்று பேர் தான் இருந்தார்கள்...

ஆனால் அவர்கள் போட்ட சத்தமோ பத்துப் பேர்களை உள்ளடக்கியதாய் இருந்தது...

அந்நேரம் அந்த வழியாய் சென்ற கார் ஒன்று அவன் மீது வெளிச்சத்தைப் பாய்ச்ச அந்த மூன்று இளைஞர்களின் கவனமும் அவன் மீது சென்றது... அவனும் அவர்களைத் தான் பார்த்தான்...

"டேய் காலையில் பேப்பர் பார்த்துட்டு நான் சொன்னேன்ல... நீ நம்ப மாட்டேன்னுட்ட... இது அவனே தான்டா..." என்று ஒருத்தன் குரல் எழுப்ப...

"ஆமான்டா..." மற்ற இருவரும் அதை ஆமோதித்தனர்...

அவர்கள் பேசியது அவனுக்கு ஒன்றும் புரியவில்லை... அவன் பாட்டிற்கு வீட்டை நோக்கி நடந்தான்...

அடுத்தச் சில நொடிகளில் அந்த மூவரும் எதிர்பாராவிதமாக அவனைப் பின்னால் இருந்து தாக்கினர்...

அதை அவனும் சற்றும் எதிர்பார்க்காததால் தடுமாறி கீழே விழுந்தான்... இப்போது அவன் தலைக்குப்புற கீழே கிடக்க அவன் மேல் அந்த மூவரும் பாய்ந்திருந்தனர்...

அவர்களின் உடல் எடையைச் சமாளித்து அவனால் எழ முடியவில்லை... கஷ்டப்பட்டுத் தம் கட்டி அவர்களைப் புரட்டி போட்டு எழ போனவனின் காலை ஒருவன் இடறி விடச் சித்தார்த் மீண்டும் கீழே விழுந்தான்...

"டேய் எங்க கிட்ட இருந்து நீ தப்பிக்க முடியாதுடா..." என்றபடி அவர்கள் ஒன்று சேர்ந்து அவனை அடிக்கத் துவங்கினர்...

சித்தார்த் படும் துன்பம் கண்டு காண சகிக்காததாய் அந்தக் காற்று அடுத்த நொடி ஆக்ரோசமாய்ச் சுழற்றி அடித்து மூவரின் கண்ணிலும் கடல் மண்ணைத் தூவியது... குப்புற படுத்திருந்ததால் சித்தார்த்தின் கண்கள் தப்பித்தது...

"ஐயோ..." என்று அலறியபடி மூவரும் கண்களைக் கசக்கிய அந்த நொடி சித்தார்த் வேகமாய் அவர்களை உதறி தள்ளியபடி எழுந்தவன் அவர்களைத் திருப்பித் தாக்க துவங்க...

கண்ணில் எரிச்சலோடு அவனது அடியின் வலியும் சேர்ந்து கொள்ள அந்த இளைஞர்கள் மூவரும் விட்டால் போதும் என்று எடுத்தார்கள் தங்களது ஓட்டத்தை...

அவர்களை விரட்டி செல்ல மனம் இல்லாதவனாய் வீட்டிற்குச் சென்றவன் அங்கிருக்க விருப்பம் இல்லாமல் தனது வீடு நோக்கி பயணமானான்...

வீட்டிற்கு வந்தவன் படுக்கைக்குச் செல்லும் போது விடியற்காலை மணி இரண்டு... அயர்வுடன் கண்களை மூட போனவனின் அலைப்பேசி அழைக்க, "ம்ப்ச்..." சலித்தபடி அதை எடுத்துப் பார்த்தான்...

எந்த நேரத்தில் அழைப்பு வந்தாலும் அதை எடுக்க வேண்டும் என்பது அவனது அன்னையின் ஆணை... அவர்களது தொழில் சாம்ராஜ்யத்தை அந்தளவுக்குக் கண்ணும் கருத்துமாய்க் கட்டியாள வேண்டும் என்று அவர் விரும்பினார்...

'இப்படியே போச்சு... ஒருநாள் இல்லை ஒருநாள் நான் சட்டையைக் கிழிச்சிட்டு ரோட்டில பைத்தியமா சுத்த போறேன்... மனுசனை நிம்மதியாவே இருக்க விட மாட்டாங்களா...' அவனுக்குக் கோபமும் ஆதங்கமும் சரிவிகிதத்தில் கலந்து வந்தது...

திரையில் ஒளிர்ந்த 'ஹனி காலிங்' என்ற வார்த்தையைக் கண்டதும் அவனது சோர்வும், கோபமும் ஒருங்கே பறந்து போனது... ஒருபக்கம் சந்தோசம் என்றாலும் மறுபக்கம் அவனைத் தயக்கம் ஆட்கொள்ள யோசனையுடன் அழைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"உங்களுக்கு ஒண்ணுமாகலையே..." எடுத்த எடுப்பில் பதட்டத்துடன் கேட்டவளின் குரல் ஒரு கணம் அவனுக்குள்

மழைச் சாரலை தோற்றுவித்தது...

'வேண்டாம்... இனியும் இதை வளர்ப்பது தவறு...' மனதை முயன்று அடக்கியவன், "காலையில் தானே அவ்வளவு சொல்லிட்டு வந்தேன்... இப்போ இப்படிப் பேசினா எப்படி...? இனிமேல் எனக்கு ஃபோன் பண்ணாதே..." வேண்டும் என்றே வரவழைத்த கோபத்துடன் அவன் சொல்ல மறுபக்கம் அமைதியானது...

"இல்லைன்னா... நேக்குக் கொஞ்சம் பதட்டமா இருந்தது... உங்களுக்கு என்னமோ... ஏதோன்னு..." அவளின் குரலில் இருந்த கவலையை அவன் உணரத்தான் செய்தான்...

ஆனால் அதற்காகத் தான் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருப்பதை எண்ணி தன்னையே அவன் வெறுத்தான்...

"இங்கே பாரு... திரும்பத் திரும்ப ஒரே விசயத்தைச் சொல்ல வைக்காதே... எனக்காகக் கவலைப்பட என் அம்மா இருக்காங்க... எனக்கு நிச்சயிக்கப்பட்ட பொண்ணு இருக்கா... வீணா நீ எதுக்குக் கவலைப்படற...? இனிமேல் இந்த மாதிரி அசட்டுத்தனமா உளறிட்டு இருக்காதே..." என்று படபடத்தவன் அதற்கு மேல் பேச்சை வளர்க்க பயந்து அவளின் பதிலை எதிர்பாராமல் அலைப்பேசியை அணைத்து இயலாமையுடன் அதைப் படுக்கையில் எறிந்தான்...

அங்கே அவள் அவனை நினைத்துக் கண்ணீர் வடிக்க... இங்கே அவனோ அவளின் வார்த்தைகளை எண்ணி கொண்டு படுத்து இருந்தான்... எதையோ யோசித்தவன் படக்கென்று எழுந்து அமர்ந்தான்...

'எனக்கு ஆபத்து வரும் போது எல்லாம் அவள் உணர்கிறாள்... இப்போதும் அப்படியே சொல்கிறாள்... போன மாதமும் இது போல் உணர்ந்ததாய் சொன்னாளே... அப்படி என்றால் அப்போதும் ஏதோ ஆபத்து நிகழ்ந்து இருக்கிறதா...?'

'பீச் ஹவுஸ், ஆறாம் தேதி, ஆபத்து...' எல்லாவற்றையும் கோர்த்து பார்த்தவனுக்கு அந்த நினைவே பயங்கரமாய்...

*********************

ஹரிணிக்கு மாப்பிள்ளை பார்க்க மும்முரமாய் இறங்கினார் ரங்காச்சாரி... சித்தார்த் ஹரிணியைத் தெருவில் அனைவரும் பார்க்க தூக்கி சென்றதை சுட்டி காட்டி சில பையன் வீட்டார் எடுத்த எடுப்பிலேயே மறுக்க... சிலர் தெரு வரை வந்து அங்குப் புனையப்பட்ட ஹரிணியின் கற்பை கேள்விக்குறி ஆக்கும் கதையைக் கேட்டு அப்படியே திரும்பி போயினர்...

மகளுக்கான மணமகனை நாலாப்புறமும் தேடி களைத்துப் போனார் ரங்காச்சாரி... எந்த இடமும் தகையாமல் தள்ளி கொண்டு போனதில் பத்மா பெரும் கவலை கொண்டார்...

அக்கம் பக்கம் வீட்டில் இருந்தோர் யாரும் அவர்களிடம் முகம் கொடுத்து பேசவில்லை... இதை விடக் கொடுமை ஹரிணியின் சகோதரிகள் ஜானகி, மைதிலி இருவரும் வந்து அவளைச் சத்தம் போட்டுவிட்டு சென்றனர்... அவளால் அவர்களது புகுந்த வீட்டில் அவர்களது மானம் போகிறது என்று... ரங்காச்சாரி, பத்மாவால் கூட அவர்களைச் சமாதானம் செய்ய முடியவில்லை...

இதில் கவலை கொள்ளாத ஒரே ஜீவன் ஹரிணி மட்டுமே... எந்த வரனும் அமையாததில் அவள் சந்தோசமாக இருந்தாள்... அவளைப் பொருத்த வரையில் சித்தார்த் மட்டுமே அவளது மணவாளன்... அவன் அவளை ஏற்காவிட்டால் என்ன... அந்தப் பக்தை மீரா போல், சூடி கொடுத்த சுடர் கொடி ஆண்டாள் போல் அவனை நினைத்துக் கொண்டு காலம் பூராவும் கன்னியாய் வாழ அவளால் முடியும்...

ஒருவனுக்கு ஒருத்தி... அது போல் இந்த ஹரிணிக்கு சித்தார்த் மட்டும் தான் என்பதில் உறுதியாய் இருந்தாள்... அவனின் வார்த்தைகள் அவளின் மனதை எந்தவிதத்திலும்

அவளைக் காயப்படுத்தவில்லை... அந்தளவுக்கு அவனை உயிருக்கு உயிராய் நேசிக்கிறாள்...

எம்சிஏ முதலாம் வருடத்தில் காலடி வைத்திருந்தவள் விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டில் இருந்தாள்... இப்போது எந்த மணமகனும் வராததைச் சுட்டி காட்டி 'மீண்டும் படிக்கப் போகிறேன்' என்றவளை பத்மா தடுத்தார்...

"போதும் நீ படிச்சு கிழிச்சது... பேசாம ஆத்தோடு இரு..." என்று அவர் சத்தம் போட...

ரங்காச்சாரி மனைவியை அடக்கினார்... "அவ படிக்கப் போகட்டும் பத்து... அவளுக்கு நல்ல வாழ்க்கையைத் தான் நம்மளால அமைச்சு கொடுக்க முடியல... அட்லீஸ்ட் படிப்பையாவது அவளுக்குக் கொடுப்போமே..."

"அதுக்குச் சொல்லைலன்னா..."

"அதான் அந்தப் பையன் விலகிட்டானே... அப்புறம் எதுக்கு வீணா கவலைப்படறே... நாம இருக்கிற வரை அவளுக்குத் துணையா இருப்போம்... நம்ம காலத்துக்கு அப்புறம்... கொஞ்சம் யோசிச்சு பாரு பத்து..." மனைவியைச் சமாதானம் செய்ய... வேறுவழியின்றிப் பத்மா மகளைக் கல்லூரிக்கு செல்ல அனுமதித்தார்...

கல்லூரிக்கு போன முதல் நாளே அவள் காதில் இனிப்பான செய்தி ஒன்று வந்து விழுந்தது... அதாவது அவர்களின் கல்லூரி தின கொண்டாட்டத்திற்கு 'ராம் இன்டஸ்ட்ரீஸ்' இயக்குனர் சித்தார்த் ராம் கலந்து கொள்கிறான் என்று...

அவனது வரவை வழி மேல் விழி வைத்து அவள் காத்திருந்தாள் மனதில் நிறைந்த காதலுடன்... அவன் கூறி சென்ற வார்த்தைகளை மறந்து...

சித்தார்த்தும் விழாவிற்கு வந்து சேர்ந்தான் அது அவள் படிக்கும் கல்லூரி என்று தெரியாமல்...

காரில் இருந்து வந்து இறங்கியவன் தனக்குப் பூங்கொத்து கொடுத்து வரவேற்ற பெண்ணிடம் நன்றி

சொல்வதற்காகத் தன் பார்வையை அவளிடம் செலுத்தியவன் அங்கே ஹரிணியைக் கண்டதும் திகைத்தான்...

அவளோ கடவுளை கண்ட பக்தன் போல் அத்தனை பரவசமாய் அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

கல்லூரி முதல்வர் அவனை அழைக்க அதில் தன் நினைவு கலைந்தவன் அவருடன் நடந்தான்... அவனது உடல் தான் அவரோடு சென்றது... உயிர் அவளுடனே தங்கிவிட்டது...

நிகழ்ச்சி தொடங்க அதை அசுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் சித்தார்த்... அவனுக்கு இது போல் ஒரு இடத்தில் அடங்கி ஒடுங்கி அமர்வது என்பது ஒவ்வாத விசயம்... ஆனால் அவனின் பதவிக்காக இது போன்ற தியாகங்கள் சில செய்ய வேண்டி இருந்தது...

அந்த நேரம் மேடையில் மைக்கோடு ஹரிணி தோன்றினாள்... அவனது விழிகளில் இப்போது சுவாரஸ்யம் தோன்ற நிமிர்ந்து அமர்ந்தான்...

அவன் பார்த்தவரை அவள் பயந்த சுபாவம் உடையவளாகத் தான் தெரிந்தாள்... அப்படிப்பட்டவள் மேடையில் என்ன செய்யப் போகிறாள் என்று எதிர்பார்ப்புடன் அவளைப் பார்த்திருந்தான்...

அவனின் எதிர்பார்ப்பை பொய்யாக்காமல் தனது மனதை அவனுக்கு எடுத்து உரைக்கும் வண்ணம் ஒரு பாடலை பாடினாள் அவனது காதலி...

"உறக்கமில்லாமல் அன்பே நான் ஏங்கும் ஏக்கம் போதும்
இரக்கமில்லாமல் என்னை நீ வாட்டலாமோ நாளும்?
வாடைக்காலமும் நீ வந்தால் வசந்தமாகலாம் - கொதித்திருக்கும்
கோடைக்காலமும் நீ வந்தால் குளிர்ச்சி காணலாம்
எந்நாளும் தனிமையே எனது நிலைமையோ
துன்பக் கவிதையோ கதையோ?
இரு கண்ணும் என் நெஞ்சும்

இரு கண்ணும் நெஞ்சும் நீரிலாடுமோ?
ஒரு பொழுதேனும் உன்னோடு சேர்ந்து வாழணும்,
உயிர் பிரிந்தாலும் அன்பே உன் மார்பில் சாயணும்
மாலை மங்களம் கொண்டாடும் வேளை வாய்க்குமோ?
மணவறையில் நீயும் நானும்தான் பூச்சூடும் நாளும் தோன்றுமோ?
ஒன்றாகும் பொழுதுதான் இனிய பொழுதுதான்
உந்தன் உறவுதான் உறவு!
அந்த நாளை எண்ணி நானும்
அந்த நாளை எண்ணி நானும் வாடினேன்"

அதில் அவன் தன்னை மறந்தான்... தன் நிலையை மறந்தான்... அவனின் இதயம் கசிந்தது காதலினால்... அப்போது அவளும் அவனைப் பார்த்தாள் விழிகளில் கசிந்த காதலுடன்...
கண்கள் நான்கும் ஒன்றை ஒன்று காந்தமாய் ஈர்க்க சுற்றிலும் உள்ளோரை மறந்து தங்களுக்கான பிரத்யேக உலகில் சஞ்சரித்தனர் அந்தக் காதலர்கள்...
அதே நேரம் அமெரிக்காவில் இருந்த ஒருவன் தனது மடிகணினியில் ஹரிணியின் பிம்பத்தை மனதில் நிறைந்த நேசத்துடன் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்...
அவனது கண்கள் ரசனையுடன் அவளை வருடி சென்றது... அவனது வாய் மெல்ல முணுமுணுத்தது...
"ஐ லவ் யூ ஹனி..."

நீயாவேன்...

## நான் : 5

சித்தார்த்தின் கண்களில் வழியும் காதலில் ஹரிணி கட்டுண்டு இருந்தது எல்லாம் அந்தப் பாடல் முடியும் வரை மட்டுமே... பாடல் முடிந்ததும் தனது இழப்பின் வேதனை அவள் மனதை தாக்க தன் மனவலி தாங்க முடியாமல் கண்கள் கலங்க மேடையில் திரை விழும் முன் அவசரமாக அங்கிருந்து அகன்றாள்... அதற்கு மேல் அங்கிருந்தால் அழுது அவள் தன்னைக் காட்டி கொடுத்துவிடுவாள் என்ற பயமே காரணம் அதற்கு...

அவனைப் பார்க்காதவரை அவனை எண்ணி அவன் காதலை பூஜித்துப் பூரித்து வந்தவளுக்கு அவனை நேரில் கண்ட போதோ பெரும் துன்பமாய் இருந்தது... அவனை இழந்து தவிப்பது பெரும் துயரமாய் இருந்தது...

தோழிகள் எவரும் கேள்வி கேட்பார்களோ என்ற பயத்தில் கண்ணில் கரை கட்டிய கண்ணீரை முயன்று அடக்கியவள் அவர்களிடம் சொல்லிவிட்டு அரங்கத்தை விட்டு வெளியில் வந்தவள் அதற்கு மேல் அங்கிருக்க விருப்பம் இல்லாமல் பேருந்து நிலையம் நோக்கி நடந்தாள்...

ஹரிணியின் கலங்கிய முகத்தைத் தொலைவில் இருந்தாலும் இனம் கண்டு கொண்ட சித்தார்த்தும் அதற்கு மேல் அங்கிருக்க முடியாமல் தவித்தவன் நிகழ்ச்சியின் பாதியில் கல்லூரி முதல்வரிடம் மன்னிப்பு கோரி விட்டு அவன் கிளம்ப... தன்னை வழியனுப்ப உடன் எழுந்த அவரைத் தடுத்துவிட்டு அவன் மட்டும் வெளியில் வந்தான்...

வெளியில் வந்தவன் கண்கள் நாலாப்புறமும் தன்னவளை தேடியது... எங்கும் அவளைக் காணவில்லை...

'ஒருவேளை உள்ளே இருப்பாளோ...' என்று எண்ணியவனுக்கு மீண்டும் உள்ளே செல்ல மனம் வரவில்லை... அவனுக்கு இப்போது வேண்டியது தனிமை... தனிமை... தனிமை மட்டுமே...

தனது காரோட்டிக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு காரிலேறியவன் அதைச் சீராகச் செலுத்தத் துவங்கினான்... கல்லூரியை விட்டு வெளியில் வந்தவன் அருகில் இருந்த பேருந்து நிலையத்தைத் தாண்டும் போது தான் அந்தக் காட்சியைக் கண்டான்...

நகரத்தை விட்டு ஒதுக்குப்புறமாக இருந்த கல்லூரியின் பேருந்து நிலையம் இரவு ஏழு மணிக்கே பாழடைந்தது போல் காணப்பட்டது... அந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு மூன்று ஆண்கள் ஒரு பெண்ணைப் பலவந்தமாக அங்கு நின்று கொண்டு இருந்த காருக்குள் திணிப்பதை கண்டு அவனது கைகள் காரை நிறுத்தியது... வேகமாய்க் காரை விட்டு இறங்கியவன் அங்கே விரைந்து சென்றான்...

அவர்கள் அருகில் சென்ற போது தான் அந்தப் பெண் அணிந்து இருந்த ஆடையில் இருந்து தெரிந்தது அது ஹரிணி என்று...

உள்ளமும் உடலும் பதற இரண்டே எட்டில் அவர்களை நெருங்கியவன் அவர்களுள் ஒருவனைப் பிடித்து இழுத்து, "டேய் அவளை விடுங்கடா..." என்று கத்தியபடி அவன் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட... அதில் நிலைக்குலைந்து போன அந்த ஒருவன் அலறிக் கொண்டே கீழே விழுந்தான்...

அதில் மற்ற இருவரும் அவளைப் பிடித்து இருந்த பிடியை தளர்த்திவிட்டு அவன் பக்கம் திரும்பினர்... அவர்கள் பிடி தளர்ந்ததில் தப்பித்த ஹரிணி வேகமாய் ஓடி சென்று சித்தார்த்தின் பின்னால் மறைவாக நின்று கொண்டாள்... பயத்தில் அவள் உடல் நடுங்குவதைச் சித்தார்த் உணர்ந்தான்...

சித்தார்த் திரும்பி அவளின் கையைப் பிடித்து ஆறுதல் அளிக்க முயன்ற போது அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவனின் சட்டையை ஒருவன் கொத்தாகப் பிடித்து அவனைத் தன்புறமாகத் திருப்பினான்... சித்தார்த்தின் முகத்தில் ஓங்கி குத்து விடப் போனவன்

அவனை அடையாளம் தெரிந்ததும் அவனின் கைகள் ஒரு நொடி தளர்ந்து மறுநொடி இறுகியது...

சித்தார்த்தும் அவனை அடையாளம் தெரிந்து கொண்டான்.... அன்று கடற்கரையில் அவனைத் தாக்கிய அந்த மூன்று அயோக்கியர்கள் தான் அவர்கள்...

"ஏண்டா எங்களை நிம்மதியாவே இருக்க விட மாட்டியா...?" என்றபடி சித்தார்த்தை அடிக்க அவன் கையை ஓங்க...

"பெருமாளே..." என்றபடி கண்களை இறுக மூடி கொண்டு அலறினாள் ஹரிணி...

அதை அடுத்து ஓங்கி அடிக்கும் சத்தம் மட்டுமே கேட்க பதட்டத்துடன் அவள் தன் கண்களைத் திறந்து பார்க்க... அங்கே சித்தார்த்திடம் அடி வாங்கிக் கொண்டிருந்தான் அவனது சட்டையைப் பிடித்திருந்தவன்...

அதற்குள் இன்னொருவனும், கீழே விழுந்தவனும் சுதாரித்துக் கொண்டு சித்தார்த்தின் மீது பாய்ந்தனர்...

"உனக்கு மனசுல என்ன பெரிய ஹீரோன்னு நினைப்பா...? எப்போ லேடீஸ்க்கு ஆபத்துன்னாலும் உடனே ஓடி வர்ற...? அன்னைக்கும் அப்படித்தான் ஓடி வந்த...? அன்னைக்கு அடிச்சு போட்டதுல செத்து போய்ட்டேன்னு நினைச்சோம்... அதுல நீ சாகாம தப்பிச்சிட்ட போல... ஆனா அன்னைக்கு மாதிரி இன்னைக்கு நீ தப்பிக்க முடியாதுடா... இன்னைக்கு உன்னைக் கொல்லாம விடப் போறது இல்லை..." என்றபடி இருவரும் ஒரே நேரத்தில் அவன் மீது பாய்ந்தார்கள்...

அவர்கள் சொன்னது காதில் விழுந்தாலும் அதை அலசி ஆராய அவனுக்கு நேரம் இல்லை... தன்னைத் தாக்க வந்தவர்களிடம் இருந்து தன்னைக் காத்துக் கொள்ள எண்ணி துரிதகதியில் அவர்களைத் திருப்ப தாக்க துவங்கினான்...

அன்று கடற்கரையில் அவர்கள் எதிர்பாராவிதமாக அவனைத் தாக்கியதில் சற்று நிலைக்குலைந்து போனவன்... இன்று தன்னவளை காக்க வேண்டிய

கட்டாயம் ஒருபுறம் அவனுக்குத் தைரியத்தைக் கொடுத்தது என்றால், அவன் கற்ற தற்காப்பு வித்தைகள் மற்றொரு புறம் வீரத்தை அளிக்க அவர்களை எளிதில் தாக்கி பந்தாட துவங்கினான்...

மூவரும் இணைந்து அவனைத் தாக்கிய போதும் அவன் கற்ற வித்தையின் முன் எதுவும் செய்ய இயலாதவர்களாய் அவனின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பயந்து போய்க் கோழைகள் போல் அங்கிருந்து ஓடி தப்பிச் சென்றனர்... உயிர் பயத்தில் தாங்கள் வந்த காரை கூட எடுக்காமல் ஓடி போயினர்...

சித்தார்த் அந்தக் காரின் எண்ணை பார்த்தவன் மனதில் அதைக் குறித்து வைத்துக் கொண்டு ஹரிணியின் புறம் திரும்பினான்...

"இந்த மாதிரி நேரத்தில் இப்படித் தனியா வர்றது சரியில்லைன்னு உனக்குத் தெரியாது... உன் பிரெண்ட்ஸ் கூட வர வேண்டியது தானே...?" அவன் அவளைக் கடிய...

ஏற்கெனவே அச்சத்தின் பிடியில் இருந்தவளுக்கு அவன் திட்டியதில் அவளின் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் உருண்டோடி வழிந்தது... அதைக் கண்டவன் ஒன்றும் பேசாது தனது காரை நோக்கி நடக்க அவளோ அமைதியாய் அழுது கொண்டு அங்கேயே நின்றாள்...

தன் பின்னோடு அவள் வராததை உணர்ந்து திரும்பி பார்த்தவன், "இன்னும் ஏதாச்சும் ஆபத்தை இழுத்து வச்சுக்கலாம்ன்னு நினைக்கிறியா...? ஆனா திரும்பக் காப்பாத்த நான் வர மாட்டேன்..." என்று அழுத்தமாக அதே சமயம் உறுதியாகக் கூறியவனின் குரலே அவன் தான் சொன்னதைச் செய்வான் என்று உணர்த்த... அவள் அவசரமாய் ஓடி வந்து அவனுடன் இணைந்து கொள்ள அதைக் கண்டு அவனது உதட்டில் புன்முறுவல் பூத்தது...

"தட்ஸ் குட்..." என்றவன் மேலே பேசாது காரை திறந்து அவளை ஏற சொல்லி தானும் அமர்ந்து அதைக் கிளப்பினான்...

காரில் இருள் பரவி இருந்த போதும் தெரு விளக்கின் மெல்லிய வெளிச்சம் அவள் மீது விழுந்ததில் அவளது மேனி நடுங்குவதை அவன் கண்டு கொண்டான்... எத்தனையோ பெண்களைச் சற்றும் மனம் சுணக்கம் இல்லாமல் அவன் அள்ளி அணைத்து இருக்கிறான்... ஆனால் எந்தப் பெண்ணிடத்திலும் இந்த மாதிரி மான அவமான உணர்வை அவன் கண்டது இல்லை... அவளிடத்தில் மட்டும் தான் இதைக் காண்கிறான்...

பெண்ணை அனுபவிப்பதற்கும் அவர்களது விருப்பம் வேண்டும் போலும் என்று எண்ணியவனுக்கு அவளை நினைத்து மிகவும் பரிதாபமாக இருந்தது...

அவளை அணைத்து ஆறுதல் சொல்ல அவன் மனம் விழைந்தது... ஆனால் அதற்குப் பின்...??? அந்த நினைவே கசக்க தன்னை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு சாலையில் கண்களைப் பதித்தான்...

அருகருகில் அமர்ந்து இருந்த போதும், மனங்கள் இரண்டும் காதலில் சிக்கி தவித்த போதும் இருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை...

அவளது வீடு இருந்த சந்தின் பிரதான சாலையில் காரை நிறுத்தியவன் தான் கீழே இறங்கி அவள் இறங்குவதற்காகக் கார் கதவை திறந்துவிட்டவன்,

"நீயே போயிருவியா... இல்லை..." அவன் இழுக்க...

"நானே போய்க்கிறேன்..." என்று அவனை நிமிர்ந்து பார்த்து சொன்னவள் தனது வீட்டை நோக்கி நடந்தாள்...

அவள் செல்வதைக் கண்டவனுக்கு உயிர் பிரியும் வேதனை மனதை பிசைய தன் மனதை கட்டுப்படுத்தத் தெரியாமல் தனது பேண்ட் பையில் இருந்த சிகரெட் பெட்டியை எடுத்து அதில் இருந்து ஒன்றை உருவி பற்ற வைத்து அதை வாயில் வைத்து பிடித்தவன் ஆழமாய் மூச்சை இழுத்துவிட்டான்...

பதற்றத்தில் அவனிடம் விடை பெறாமல், காப்பாற்றியதற்கு நன்றி கூடச் சொல்லாமல் வந்துவிட்டோமே என்று

குற்றவுணர்ச்சி குறுகுறுக்கச் சிறிது தூரம் சென்றிருந்தவள் நின்று அவனைத் திரும்பி பார்த்தாள்...

அப்போது அவனது வாயில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை கண்டதும் திகைத்து போனவள் பின் தவிப்புடன் வேகமாய் அவன் அருகில் வந்தாள்...

அவள் வருவதைக் கண்டதும் அவசரமாய்ச் சிகரெட்டை தனது காலடியில் போட்டு நசுக்கி அணைத்தவன் அங்கிருந்த புகை மண்டலத்தைத் தன் இரு கைகளால் வேகமாய் வீசி கலைத்து விட்டு வரவழைத்த புன்னகையுடன் 'என்ன' என்பது போல் அவளைப் பார்த்தான்...

"உங்களுக்குச் சிகரெட் பிடிக்கும் பழக்கம் உண்டோன்னா...?" பரிதவிப்புடன் கேட்டவளை கண்டு அவன் முகத்தில் புன்னகை மறைந்து எரிச்சல் மண்டியது...

ஏற்கெனவே அவளின் காதலுக்குப் பதில் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தவன் இடத்தில் இப்படி ஒரு கேள்வி கேட்டால் அவனுக்கு எரிச்சல் வராமல் என்ன செய்யும்...

"சிகரெட் மட்டும் இல்லை ட்ரிங்க்ஸும் அடிப்பேன்... அப்புறம்..." 'பெண்கள் சகவாசமும் உண்டு' என்று சொல்ல நினைத்தவன் இதுக்கே அவள் முகம் போன போக்கை கண்டு அப்படியே பாதியில் நிறுத்தினான்...

"நீங்க பொய் தானே சொல்றேள்..." அவளது குரல் எழும்பவில்லை...

அதில் அவனது முகம் கனிந்தது... அவளிடத்தில் அவன் பொய் உரைப்பதா...? அது சாத்தியம் இல்லை என்றே அவனுக்குத் தோணியது... அப்போது அவனுக்குத் தெரியவில்லை வாழ்நாள் முழுவதும் அவளிடத்தில் தான் உண்மையை மறைக்கப் போகிறோம் என்று...

"உன் கிட்ட நான் பொய் சொல்வேனா ஹனி..." சொல்லியவனின் குரலில் அத்தனை தேன் சொட்டியது...

"அப்போ அன்னைக்குச் சொன்னது..." என்றவள் அவனது கண்களை உற்று நோக்கிவிட்டு எதையோ தேடி களைத்து போனவளாய்,

"நீங்க என்னோட ராம் இல்லை... இல்லவே இல்லை..." அச்சத்துடன் கூறிக் கொண்டே பின்னால் நகர்ந்தவள் குமுறிக் கொண்டு வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் கைகளால் வாயை மூடி கொண்டு திரும்பி பார்க்காமல் அங்கிருந்து ஓடலானாள்...

அவள் சொன்னதைக் கேட்டவன் உயரழுத்த மின்சாரத்தைத் தொட்டவன் போல் அதிர்ந்து போய் நின்றிருந்தான் அவன்... அவள் கூறியதை கேட்ட போது அந்தக் கணம் மரணம் தன்னை வந்து தழுவாதா என்று எண்ணம் தோன்றி அவனை நிலைக்குலைய செய்தது...

காதல் உயிர்கொல்லி நோய் என்பது மிகச் சரி... அவனைக் கொல்லாமல் கொன்று சென்றது அவளது வார்த்தைகள்... குறிஞ்சி பூவாய் தன்னுள் தோன்றிய காதல் தோற்றுவிட்டதை அந்த நொடி உணர்ந்தவன் செயலற்று போனவனாய் பலமிழந்தவனாய் காரின் மீது சாய்ந்தான்...

எப்படித் தன்னை, தன் காதலை அவளிடம் நிரூபிப்பது என்று தெரியாமல்... அப்படியே நிரூபித்தாலும் இதற்கு எத்தனை ஆண்டுக் காலம் ஆயுள் என்பதைப் பற்றிய நிச்சயத்தை அறியாதவனாய்... அடுத்து என்ன என்று தெரியாதவனாய் தனது முடியை அழுந்த கோதி கொண்டவன் மனதில் அவள் விட்டு சென்ற அவளது நறுமணம் மட்டுமே அவளது அடையாளமாய் மிச்சம் இருந்தது...

செய்வதறியாது சிறிது நேரம் அங்கேயே நின்றவன் பின் தன் காரிலேறி வீடு சென்றான்...

வீட்டிற்குள் பதட்டத்துடன் நுழைந்தவளை பத்மாவின் குரல் தடுத்து நிறுத்தியது...

"என்னடி அதுக்குள்ள வந்துட்ட...?"

"நேக்கு தலைவலிச்சா மாதிரி இருந்ததும்மா... அதான் வந்துட்டேன்..." மழுப்பலாய் பதில் சொன்னவளை அதற்கு மேல் சந்தேகப்பட்டுக் கேள்வி கேட்கவில்லை அந்தத் தாய்...

"இதுக்குத் தான் தலைப்பாடா அடிச்சுக்கிட்டேன்... இந்த மாதிரி பங்சனுக்கு எல்லாம் போகாதேன்னு..." என்று அங்கலாய்த்தவர், "சாப்பிட்டுட்டு படு..." என்க...

"நேக்கு பசிக்கலைம்மா..." அவசரமாய் மறுத்தவள் அன்னை மேலும் கேள்வி கேட்கும் முன் அங்கிருந்து நழுவினாள்...

நேரே அறைக்குள் நுழைந்து கட்டிலில் விழுந்தவள் கண்ணில் அதுவரை அணை போட்டு அடக்கி இருந்த கண்ணீர் பொங்கி கொண்டு நிற்காமல் வழிந்தோடியது...

"என் பெயர் ராம்... என்னைப் பத்தி என்ன சொல்ல... எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாத அக்மார்க் நல்ல பையன் நான்... எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு... ஐ லவ் யூ..." அவளிடம் காதலை சொல்லும் போது அவன் முகத்தில் தெரிந்த மென்மை, கண்ணில் வழிந்த காதல் அதை அவளால் என்றுமே மறக்க முடியாது...

இப்போதும் அவனது அந்த முகம் நியாபகத்தில் வந்து அவளை இம்சித்தது... காதலே ஒருவித இம்சை தானோ...

"என்னை உனக்குப் பிடிச்சியிருக்கா...?" அவனது குரலில் இருந்த பரிதவிப்பை இன்றும் அவள் உணர்ந்தாள்...

'அன்னைக்கு என்னிடம் காதலை சொன்ன ராம் உண்மை என்றால்... இன்னைக்கு என்னைத் தவிர்க்கும் இந்த ராம் யார்...? கெட்ட பழக்கமே இல்லாத ராம் சிகரெட் பிடிக்கிறான் என்றால்... இது யார்...? இவன் ராம் உருவில் இருக்கும் அவனை மாதிரி வேறு ஒருவனோ... அப்படி என்றால் அந்த ராம் எங்கே...? என் ராம்க்கு என்னவானது...?' நினைத்து நினைத்து பார்த்து குழப்பமுற்றவளுக்கு உண்மையில் தலை தான் வலித்தது...

"ஐயோ பெருமாளே என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறே..." வாய்விட்டு புலம்பியவளுக்கு அப்போது தான் அந்த உண்மை புலப்பட்டது... புலப்பட்ட உண்மையோ அவளால் ஜீரணிக்கவே முடியாததாய் இருந்தது...

'எல்லாப் பணக்கார பசங்க மாதிரியும் ராமும் கெட்டவனோ... இத்தனை நாள் நல்லவன் என்ற போர்வையில் என்னை ஏமாற்ற வந்தவனோ... நான் மசியாததால் அவன் அம்மா பார்த்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்து விட்டானோ... அப்படி என்றால் இவன் ஏமாற்றுக்காரனா...?'

அவளது காதல் கொண்ட நெஞ்சம் பலவற்றை எண்ணி தவித்துத் தத்தளித்தது...

'இல்லை அவனுக்கு ஒரு துன்பம் என்றால் நான் துடித்தது உண்மை தானே... அப்போ அந்தக் காதல் பொய்யில்லையே...' என்று எண்ணியவளை பார்த்து அவளது மனசாட்சி எள்ளி நகையாடியது...

"போடி பைத்தியக்காரி... அது அவனது காதலால் அல்ல... நீ அவன் மேல் வைத்து இருக்கும் உண்மையான காதலால் தோன்றியது..."

'இல்லை என் ராம் அப்படிப்பட்டவர் இல்லை...' என்று அவள் வாதாடினாலும் அவளது மனக்கண்ணில் காதலை சொன்ன மென்மையான அந்த ராமின் முகமும், சிகரெட்டை புகைத்துக் கொண்டு இருந்த இந்த ராமின் கடின முகமும் மாறி மாறி தோன்றி அவளது வேதனையை அதிகரிக்கச் செய்ய அதற்கு மேல் தாங்க முடியாதவளாய் குமுறி குமுறி அழ துவங்கினாள்...

அவளது வேதனையைத் தேற்றும் வகையறியாமல் அவளது ரணத்திற்கு மௌன சாட்சியாய் அந்தக் காற்றுச் சத்தம் இல்லாமல் இறுகி போய் அவள் அருகே நின்றிருந்தது...

நாட்கள் நகர்ந்தாலும் ராமின் தேடலில் எந்தவித முன்னேற்றமும் இல்லை... அதை விட அவனுக்கு அதைப் பற்றிச் சிந்திக்க நேரமும் இல்லை... அந்தளவுக்கு வேலை அவனது கழுத்தை நெறித்தது...

அன்று ஒரு டெண்டர் விசயமாக வேதாந்தத்துடன் அவன் வெளியில் சென்றிருந்தான்... அதே டெண்டருக்கு அவனது போட்டி கம்பெனியின் அதிபர் கைலாஷும் வந்திருந்தான்...

சித்தார்த் அவனைச் சாதாரணமாகப் பார்த்து செல்ல அவனோ இவனை முறைத்துக் கொண்டு அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தான்...

"யார் அங்கிள் இது...? எதுக்கு இப்படி அவன் என்னை முறைக்கிறான்...?"

"தம்பி அது யாருன்னு தெரியலையா...?" திகைப்புடன் அவர் கேட்க...

"அவன் யாருன்னு தானே நான் கேட்டேன்... அதுக்கு ஏன் அங்கிள் இப்படி அதிர்ச்சி ஆகுறீங்க...?"

'இப்ப கொஞ்ச நாளாவே என்னை அதிர்ச்சி அடைய வைக்கிற வேலையைத் தானே நீங்க செஞ்சிட்டு இருக்கீங்க தம்பி...' மனதுக்குள் புலம்பியவர்...

"அவர் தான் கைலாஷ் தம்பி... தொழிலில் நம்மைத் தோற்கடிக்கணும்ன்னு மும்முரமா இருக்கிறவர்..." அவன் தொழில் எதிரி என்பதைச் சொல்லாமல் சொன்னார்...

"ஓ..." என்றவன் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை... ஆனால் கண்கள் அந்தக் கைலாஷை எடை போடுவது போல் பார்த்தது...

அந்நேரம் கைலாஷும் அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்... கைலாஷின் பார்வையில் இருந்த அர்த்தத்தை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை... ஆனால் அதில் இருந்த கோபத்தின் உக்கிரத்தை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

டெண்டர் விசயம் சித்தார்த்துக்குச் சாதகமாக முடிந்தது கண்டு கைலாஷின் முகம் கோபத்தில் இறுகியது... ஆத்திரத்துடன் சித்தாரத்தை முறைத்துக் கொண்டே அவன் வெளியேறினான்...

"எல்லாம் நல்லபடியா முடிந்தது தம்பி... எங்கே டெண்டர் அவருக்குச் சாதகமா முடிஞ்சிருமோன்னு பயந்துட்டே இருந்தேன்..." சொல்லி கொண்டே வேதாந்தம் வர...

"ஏன் அங்கிள் அப்படிச் சொல்றீங்க...?" சித்தார்த்தும் கேட்டுக் கொண்டே அவருடன் இணைந்து நடந்தபடி வெளியில் வந்தான்...

அவர்கள் வந்ததைக் கவனிக்காமல் ஆத்திரத்தின் உச்சியில் இருந்த கைலாஷ் தனது அலைப்பேசியை எடுத்து பேச ஆரம்பித்தான்...

"சந்துரு..." என்று மறுமுனையில் இருந்தவனிடம் பல்லை கடித்தவன், "அவன் செத்து தொலைஞ்சுட்டான்னு சொன்ன... இப்ப என்னடான்னா உயிரோட வந்து என் கண் முன்னாடி நிக்கிறான்... நீ சொன்னது ஒண்ணு செஞ்சது ஒண்ணா...? என்னையே ஏமாத்த பார்க்கிறியா...? நான் ஈரோப் ட்ரிப் போய்ட்டு வர்றதுக்குள்ள இங்கே அப்படி என்ன நடந்தது...? இப்ப என்னடான்னா டெண்டரும் நம்ம கை மாறி அவன் கிட்ட போயிருச்சு... நீ என்னடான்னா எந்தக் கவலையும் இல்லாம ஒரு மாசமா லீவ் போட்டுட்டு ஊருல போய் உட்கார்ந்துட்டு இருக்க... இப்பவே இந்த நிமிசமே நீ கிளம்பி இங்கே வர்ற... என்ன புரிஞ்சதா...?"

மறுமுனையில் இருந்தவனைப் பேச இடம் கொடாதபடி பேசி முடித்தவன் அதன் பின் காருக்கு செல்ல... அவன் பேசியதை கேட்டு வேதாந்தம் முகம் பேயறைந்தது போலானது என்றால் சித்தார்த்தின் முகம் ஆத்திரத்தில் சிவந்து போய்த் துடித்தது...

"அந்தச் சந்துரு யாரு...?" என்று கேட்டான் இறுகிய குரலில்...

"முன்னாடி உங்க கிட்ட செக்ரட்டரியா வேலை பார்த்தவன் தான் அவன்..." இந்த முறை திகைப்பை மென்று முழுங்கிவிட்டுச் சாதாரணக் குரலில் அவர் கூற...

"ஓ..." என்றவன் அதற்கு மேல் பேசவில்லை...

அவரை அலுவலகத்தில் இறக்கி விட்டவன் காரை எடுத்துக் கொண்டு கை போன போக்கில் சென்றான்... அவனது மனம் வேகமாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்தது...

ஒரு பக்கம் அன்னை, இன்னொரு பக்கம் அவனது மாமன், மற்றொரு பக்கம் தொழில் எதிரி கைலாஷ் மற்றும் அவனது உதவியாளராய் இருந்த சந்துரு மூன்று பக்கமும் மூன்று எதிரிகளை வைத்துக் கொண்டு யோசித்தவன் மூளையில் அந்தக் குரல்கள் கூவியது...

அந்தக் குரல்களுக்குச் சொந்தக்காரர்கள் அந்த மூன்று இளைஞர்கள்... அவர்கள் கூறியதும் நினைவுக்கு வர தன்னைச் சுற்றி நாலாப்புறமும் எதிரிகள் சூழ்ந்து மிகவும் இக்கட்டான நிலையில் தான் இருப்பதை அவன் உணர்ந்தான்...

அதை எல்லாம் விட அவனைப் பெரிதும் வாட்டி வதைத்தது ஹரிணியின் நினைவுகள்... எதிரிகளைக் கூடச் சமாளித்து விடலாம் போல் இருந்தது... ஆனால் உள்ளிருந்து அவனை உயிரோடு வதைக்கும் காதலை சமாளிப்பது அவனுக்குப் பெரும் துன்பமாக இருந்தது...

அவளுக்காக அவளது காதலுக்காக எல்லாவற்றையும் அலசி ஆராயத் துணிந்தது அவனது மனம்... இடியாப்ப சிக்கல் போல் பின்னி பிணைந்து இருந்த பிரச்சினையின் நுனி தெரியாமல் அவன் விழித்தான்... அந்த நுனியை எங்குத் தேடுவது என்று வெகுநேரம் யோசித்தவன் பின்பு முகம் மலர கடற்கரை வீடு நோக்கி காரை விரட்டினான்...

அங்கே சென்றதும் நேரே படுக்கை அறைக்குச் சென்று அங்கிருந்த அலமாரி ஒவ்வொன்றையும் திறந்து பார்த்தான்... அங்கு எதுவுமே இல்லாமல் சுத்தமாய்த்

துடைத்து வைக்கப்பட்டு இருந்தது... ஏமாற்றத்துடன் திரும்பியவனின் கண்ணில் கட்டிலின் பக்கவாட்டு மேஜையில் இருந்த அந்த இழுப்பறை தென்பட்டது...

மனதில் எழுந்த ஆர்வத்துடன் அதைத் திறந்தான்... நிச்சயம் அதனுள் அவன் தேடி வந்ததில் ஏதோ ஒன்று இருப்பதாய் அவனது உள்மனது சொல்லியது... அதில் இருந்த நாட்காட்டி, 'என்னைப் பிரித்துப் பார்... உனக்கு நான் வழி காட்டுகிறேன்...' என்று அவனைப் பார்த்து கண்சிமிட்டி சிரித்து அழைத்தது...

நடுங்கும் கையால் அதை எடுத்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவன் அதைப் பிரிப்பதா வேண்டாமா என்று ஒரு கணம் கண்களை மூடி கொண்டு வேதனையுடன் யோசித்தவன் கண் முன் ஹரிணியின் கண்ணீர் முகம் வர அதன் பின் வேறு எதைப் பற்றியும் யோசிக்காமல் அதைத் திறந்தான்...

"என்னை எப்படி அவளிடம் அறிமுகப்படுத்துவது என்று யோசித்துக் கொண்டு இருக்கும் போது அவளது வாய் விடாமல் முணுமுணுத்த 'ஸ்ரீராமஜெயம்' என்ற வார்த்தை என் காதில் விழுந்தது... அந்த நொடி மேலே எதுவும் யோசிக்காமல் சித்தார்த் ராம் என்ற எனது பெயரை ராம் என்று அவளிடம் கூறிவிட்டேன்... ஏனெனில் அப்பத்தானே அவள் எப்போதும் என்னை, என் பெயரை நினைத்துக் கொண்டு இருப்பாள்... எவ்வளவு சுயநலம் எனக்கு... காதலில் சுயநலம் ஒரு அங்கம் என்பதை உணர்ந்த அழகிய தருணம் அது...

முதல் பக்கத்தில் எழுதி இருந்ததைப் படித்தவன் கண்கள் கலங்கியது அந்த அதீத காதலில்... அடுத்தப் பக்கத்தைத் திருப்பவே அவனுக்குப் பயமாய் இருந்தது... இருந்தாலும் அடுத்தப் பக்கத்தைப் புரட்டினான்...

அதில் இருந்ததைப் படிக்கப் படிக்க மனம் கனத்துப் போனது அவனுக்கு... காதலின் அர்த்தம் புரிந்தது... நேசிப்பது என்பது சுவாசிப்பது போல் என்ற உண்மையை அவன் உணர்ந்தான்...

அவனுள் நிகழும் மாற்றத்தை அமைதியாய் பார்த்துக் கொண்டு அமர்ந்து இருந்தது காற்றாய் இருந்த அந்த அரூபம்... அவன் தன்னை முற்றிலும் முழுதாய் மாற்றிக் கொள்ள வேண்டிய நேரம், அவசியம் வந்துவிட்டதை உணர்ந்து அது மகிழ்ந்தது...

அதே நேரம் ஹரிணியின் வீட்டிற்குக் கைலாஷ் தன் மனைவி, தம்பியுடன் உள்ளே நுழைந்தான்...

"என் பேர் கைலாஷ்... சிவா இன்டஸ்ட்ரீஸ் கேள்விப்பட்டு இருப்பீங்களே... அது எங்களோடது தான்... இவள் என் மனைவி சித்ரா... இவன் என் ஒரே தம்பி சந்தோஷ்... இரண்டு நாளைக்கு முன்னாடி தான் யுஎஸ்ல இருந்து வந்தான்... வந்தவுடனே உங்க பொண்ணைக் காதலிக்கிற விசயத்தைச் சொல்லி பொண்ணு கேட்டு போகணும் என்னையும், அவங்கண்ணியையும் பாடா படுத்தி எடுத்துட்டான்... குழந்தை இல்லாத எங்களுக்கு இவன் தான் குழந்தை மாதிரி... மாதிரி என்ன இவன் எங்க மகன் தான்... என் தம்பிக்கு உங்க பொண்ணு ஹரிணியைக் கல்யாணம் பேசி முடிக்கலாம்ன்னு வந்திருக்கேன்... உங்களுக்குச் சம்மதம்ங்களா...?"

பணிவாக இருகரம் கூப்பித் தன்னையும், தன் குடும்பத்தையும் கைலாஷ் அறிமுகப்படுத்த... அவன் சொன்ன செய்தியில் ரங்காச்சாரியும், பத்மாவும் அதிர்ந்து போய் நின்றனர்...

அந்த நேரம் கல்லூரியில் இருந்து வந்த ஹரிணி களைப்புடன் வீட்டினுள் நுழைந்தாள்... வியர்த்து விறுவிறுத்து வந்தவளை ஆர்வமாய் விழுங்கியது சந்தோஷின் கண்கள்... அவனது மனம் துள்ளியது மகிழ்ச்சியில்...

"ஹனி நான் வந்துட்டேன்..." அவன் உள்ளம் கூவியது உற்சாகத்தில்...

நீயாவேன்...

## நான் : 6

அன்று சித்தார்த் ராம்க்கு பிறந்தநாள்... அதனால் அதிகாலையிலேயே கோவிலுக்கு வந்திருந்தான்... இந்தப் பழக்கம் அவனது தந்தையிடம் இருந்து அவனுக்கும் தொற்றிக் கொண்டது... எந்த வேலை எப்படிப் போனாலும் அதிகாலையில் கோவிலுக்கு வந்து கடவுளை வணங்கிவிட்டு தான் அவர் தனது அன்றைய நாளை துவங்குவார்... இது தலைமுறை தலைமுறையாக அவர்கள் குடும்பம் பின்பற்றும் ஒரு ஆச்சாரமான கலாச்சாரம்... அதை அவனது தந்தை ராஜாராம் விடாமல் கடைப்பிடித்தார்... அதே போல் அவனும் அவரைப் பின்பற்றிச் செய்கிறான்... ஆனால் அவனது அன்னையோ இதற்கு நேர்மாறு... வீட்டில் விளக்கு ஏற்றி கடவுளை வணங்குவதோடு சரி... கோவிலுக்கு எல்லாம் அவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட மாட்டார்...

சித்தார்த்துக்கும் தன் தந்தை போல் கோவிலுக்கு வர பிடித்திருந்தது... ஆனால் பிரபலமான கோவிலுக்குச் செல்வதை முடிந்தளவு தவிர்த்து விடுவான்... ஏனெனில் அங்கு அவனது அந்தஸ்துக்காகக் கொடுக்கப்படும் மரியாதையை அறவே அவன் வெறுத்தான்... அதனால் தான் இன்றும் திருவல்லிக்கேணியில் இருந்த அந்தச் சிறிய பெருமாள் கோவிலுக்கு வந்திருந்தான்...

அவன் கோவிலுக்குள் நுழைந்த நேரம் பூஜை புனஸ்காரங்களுக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டு இருந்தது... சரி என்று அங்கிருந்த பிரகாரத்தில் அமர்ந்தான்...

அப்போது ஒரு பெண் அவனைக் கடந்து சென்றாள்... பொதுவாக அவன் எந்தப் பெண்களையும் ஆழ்ந்து கருத்தாய் கவனிக்க மாட்டான்... அதனால் அசட்டையாக இருந்தவன் அவள் சென்ற பின் தான் கவனித்தான் அந்த நடைபாதையில் கிடந்த கால் கொலுசை...

எழுந்து சென்று அதை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தவன் சற்று தள்ளி சென்று கொண்டு இருந்த அந்தப் பெண்ணைக் கண்டான்...

'ஒருவேளை அவளுடையதாக இருக்குமோ' என்ற எண்ணம் அவனுள் ஓடியது... அவளிடம் கொலுசை கொடுக்க நினைத்து ஒரு எட்டு வைத்தவன் பின் நின்றான். சாதாரணக் கால் கொலுசுக்காக ஒரு பெண்ணின் பின்னால் செல்வதா என்று அவனுக்குத் தோன்ற அப்படியே நின்று இருந்தான்... பின் மனது கேட்காமல் அவளை அழைக்க நினைத்து வாய் திறக்க போனவன் கப்பென்று வாயை இறுக மூடி கொண்டான்...

இந்த ஏகாந்த வேளையில் அந்தப் பெண்ணைத் தான் கத்தி கூப்பிடுவது சரியில்லை என்று தோன்ற தானே அவளிடம் சென்று சேர்ப்பிக்க எண்ணியவனாய் அவள் பின் செல்ல எத்தனிக்கும் போது அவள் கோவில் பின்பக்கம் செல்ல திரும்பி கொண்டு இருந்தாள்...

வேக எட்டுக்கள் எடுத்து வைத்து சில நொடிகளில் அவளை அடைந்தவன், "இது உங்களோடதா...?" அவளின் முகத்தைப் பார்க்காமல் தன் கையில் இருந்த கொலுசை பார்த்துக் கொண்டு கேட்டான்...

அவள் பதில் ஏதும் பேசாததில் யோசனையாய் அவளை ஏறிட்டு பார்த்தவன் பார்த்த கணத்தில் அவளது அழகில் அயர்ந்து போய் நின்றுவிட்டான்...

'என்ன ஒரு அழகு... பெண்ணா இல்லை தேவதையா...' அவளது அழகு கண்டு அவன் மனம் அவசரமாய்ப் பட்டிமன்றம் நடத்தியது...

அந்த அதிகாலை நேரத்தில் கோவிலுக்குள் எரிந்து கொண்டிருந்த மெல்லிய மின்விளக்கு ஒளியில் ஒரு தேவதை போல் அவள் நின்றிருந்தாள்...

மஞ்சள் பூசிய முகத்தில் அரக்கு நிற வட்ட வடிவ பொட்டும் அதன் கீழே மெல்லிய தீற்றலாய் குங்குமமும், தலைக்குக்

குளித்திருந்த முடியை உலர வைப்பதற்காக விரித்துப் போட்டிருந்தவள் அதன் நுனியில் சிறு முடிச்சிட்டு அதில் சிறு துண்டாய் முல்லை பூவை சூடி இருந்தாள்...

கண்களில் மிரட்சியைத் தேக்கி அவள் அவனைப் பார்த்த பாவத்தில் அவனது இதயம் நொடியில் மொத்தமாய்க் கரைந்து போனது... எந்தப் பெண்ணிடமும் சிக்காமல் தப்பித்துக் கொண்டு இருந்தவன் அவளின் விழி வீசிய வலையில் விரும்பியே சிக்கி தவித்தான்...

"இது உன்னோடதா...?" மனதால் அவளிடம் நெருங்கியவனுக்கு மரியாதை பன்மையில் பேசி அவளைத் தள்ளி நிறுத்த விரும்பவில்லை... வார்த்தையில் கூட அவளுடன் நெருக்கமாய் இருக்க நினைத்தான்...

அவன் கூறியது அவளுக்கு அப்போது தான் புரிந்தது போலும் அச்சம் நீங்கியவளாய் அவன் கையில் இருந்ததை உற்று பார்த்தவள் அவசரமாய்த் தனது கால்களைக் குனிந்து பார்த்தாள்...

அவளது வலது கால் கொலுசு தான் காணாமல் போயிருந்தது... பின் நிமிர்ந்து அவனைப் பார்த்தவள் 'ஆம்' என்பது போல் தலையசைத்தாள்...

'என்னடா இது வாயை திறந்து பேச மாட்டேங்கிறாளே...' என்று மனதுக்குள் சலித்துக் கொண்டவன்,

"இந்தா..." என்று அவளது கையில் கொடுக்க நினைத்துக் கொலுசை நீட்ட... அவள் பரிதாபமாய் அவனைப் பார்த்தாள்...

"என்ன...?" என்று கேட்டுக் கொண்டே அவளைப் பார்த்தவனுக்கு அவளின் பார்வைக்கான அர்த்தம் புரிந்தது...

அவளது இடுப்பில் இருந்த தண்ணீர் குடத்தை அவளின் இடது கரம் வளைத்துப் பிடித்திருக்க, அவளின் வலது கரத்தில் தண்ணீர் நிரம்பிய வாளி இருந்தது...

"கொடுங்கோ..." என்று மெல்லிய குரலில் கூறியவள் கொலுசுக்காகக் குடத்தைப் பிடித்திருந்த இடது கரத்தை விரித்து அவனிடம் காண்பித்தாள்...

'அட ஐயர் ஆத்து மாமியா நம்மாளு...' என்று உள்ளுக்குள் வியந்தவன் ஒரு நொடி கூட யோசிக்காமல் கீழே குனிந்து அவளது காலை தொட போக அவளோ,

"பெருமாளே..." என்று அவசரமாய்ப் பின்னால் நகர்ந்தாள்...

"எதுக்கு மாமி இப்போ பெருமாளை கூப்பிடற...?" சிரித்தபடி அவளிடம் கேட்டவன் தன் கையை நீட்டி அவளது பாதத்தைப் பிடித்தான்...

அந்நிய ஆடவன் தொடுகையில் உடல் கூச காலை உடனே எடுக்க முடியாமல் அவள் இரு கையில் இருந்த பாரம் சுமையாய் இருந்தது...

"இது என்ன அபச்சாரம்...? நீங்க போய் என் காலை தொட்டுட்டு..." சொல்லும் போதே அவளுக்குக் கண்கள் கலங்கியது... அவனின் இந்தச் செய்கையை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை...

'நீ என் தேவதை பெண்ணே... மலர்களால் அர்ச்சிக்கப் பட வேண்டியவை உனது பாதங்கள்... ராமர் பாதம் பட்டுப் பாபவிமோசனம் அடைந்த அந்த அகலிகை போல் நானும் பாபவிமோசனம் பெற்று இந்தப் பிறவிக்கான பிறவிப் பலனை அடைந்தேன்...' மனதுக்குள் சொல்லியவன் அவளிடம் அதைச் சொல்லவில்லை...

அவளது உணர்களை உணர்ந்து அவளின் மேல் கை படாமல் அதே சமயம் நிதானமாய் அவளது காலில் கொலுசை மாட்டிவிட்டே அவன் எழுந்தான்... அவனது செயல் கொடுத்த அதிர்ச்சியோ அல்லது அடுத்து அவன் என்ன செய்யப் போகிறான் என்ற பயத்திலோ அவளது வாய் விடாமல் 'ஶ்ரீராமஜெயத்தை' முணுமுணுத்தது...

அச்சத்தில் அகல விரிந்த அவளது விழி சமுத்திரத்தில் அவன் விருப்பமாய் விழுந்து மூழ்கினான்... அந்தக் கணம்

அவன் தன்னைப் பற்றியோ தன் அந்தஸ்து பற்றியோ சிறிதும் யோசிக்கவில்லை... அந்த நொடி அவன் மனதில் இருந்தது எல்லாம் அவள் மட்டுமே...

தன் மனதின் காதலை அவளிடம் சொல்ல விரும்பினான்... ஏனோ அதைத் தள்ளி போட மனம் வரவில்லை... ஒருவேளை எப்போதும் தொழிலில் தனித்தே ஆனாலும் ஸ்திரமாய் நொடியில் முடிவு எடுத்து பழகியதின் விளைவாய் கூட இருக்கலாம்...

தன்னைச் 'சித்தார்த் ராம்' என்று அறிமுகப்படுத்த எண்ணியவன் காதில் விடாமல் அவள் மெதுவே முணுமுணுத்த 'ஸ்ரீராமஜெயம்' விழுந்தது... ஏனோ அவள் தன் பெயரை தாரக மந்திரம் போல் உச்சரிப்பதாய் எண்ணி புளங்காகிதம் அடைந்தான்...

எப்போதும் அவள் தன்னை, தன் பெயரை நினைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்ற சுயநலம் தலைத் தூக்க நொடி நேரம் கூடத் தயங்காமல், யோசிக்காமல்,

"என் பெயர் ராம்... என்னைப் பத்தி என்ன சொல்ல... எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாத அக்மார்க் நல்ல பையன் நான்... எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சியிருக்கு... ஐ லவ் யூ..." விடலைப் பையன் போல் நொடி நேரம் கூட யோசிக்காமல் தனது காதலை அவளிடத்தில் சொல்லிவிட்டான்...

கண்களில் காதல் வழிய கனிவான முகத்துடன் காதல் சொன்னவனைக் கண்டு அவளது விழிகள் இன்னமும் விரிந்தது மிரட்சியில்...

தொழில் முறையில் கடினமாய் இருந்தே பழக்கப்பட்டவன் இன்று முதன்முறையாக ஒரு பெண்ணிற்காகத் தன் கடினத்தை மாற்றிக் கொண்டு மென்மையாய் புன்னகை முகமாய்க் காதல் யாசகம் வேண்டி நின்றான்...

நேற்றுவரை திரைப்படத்தில் கண்டவுடன் காதல் வருவதைக் கண்டு எள்ளி நகையாடி சிரித்தவன் இன்று காலையில் எழும் போது கூடத் தானும் அதே மாதிரி

காதலில் விழுவோம் என்று சத்தியமாக நினைக்கவில்லை... தன்னைக் குறித்து அவனுக்கே சிரிப்பாய் இருந்தது... அதே சமயம் இத்தகைய பெண்ணை இழக்கவும் அவனுக்கு மனம் ஒப்பவில்லை... அவளுக்காக எதையும் செய்யலாம், இழக்கலாம் என்றே நினைத்தான்...

"என்னை உனக்குப் பிடிச்சியிருக்கா...?" அவளது மௌனம், அச்சம் இரண்டுமே அவனுக்குள் கிலியை ஏற்படுத்த பரிதவிப்புடன் அவளைப் பார்த்து கேட்டான்...

"நேக்கு... நேக்கு..." அவளுக்குத் தொண்டைக்குழியில் வார்த்தைகள் வராமல் சதிராட்டம் ஆடியது...

"நோக்கு என்ன சொல்லுங்க மாமி..." அவளின் தவிப்பு கண்டு தன் தவிப்பை மறந்தவனாய் அவனின் ஆழ்மனதின் குறும்பு சட்டென்று தலை தூக்க விரிந்த புன்னகையுடன் அவளைப் பார்த்து கேலியாய் வினவினான்...

அதற்குள் கோவிலுக்குள்ளேயே சற்றுத் தள்ளியிருந்த சிறு சன்னிதியில் இருந்து ரங்காச்சாரி குரல் கொடுத்தார்...

"ஹரிணி ஜலத்தைக் கொண்டு வர இத்தனை நாழியா...? அபிசேகம் பண்ணனுமோ இல்லியோ..." அவளைப் பார்த்து உரக்க கத்தி கூப்பிட...

அதில் அவனது கவனமும் கலைய திரும்பி பார்த்தான்... இது தான் சமயம் என்று வில்லில் இருந்து விடுப்பட்ட நாணாய் அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டாள் அவள்...

பாரத்தைச் சுமந்து கொண்டு வேகமாய்ச் செல்லும் அவளைப் பார்த்து கொண்டிருந்தவன் மனதில் அவளைப் போலவே அவளின் பெயரும் ஆழமாய்ப் பதிந்தது...

"ஹரிணி..." வாய்விட்டு சொல்லி பார்த்தான்...

எத்தனையோ இனிப்புகளை அவன் உண்ட போது கிடைக்காத தித்திப்பு அவளது பெயரை சொல்லும் போது அவன் உணர்ந்தான்... கண நேரத்தில் அவளுக்கான செல்லப் பெயர் சுருக்கத்தை அவன் கண்டுப்பிடித்தான்...

"ஹனி..." அவளது பெயரை போலவே அது தேனாய் அவனுள் இறங்கியது...

அதற்குள் பொழுது நன்றாக விடிந்திருக்க ஆட்கள் நடமாட்டம் அதிகமாகியது... அவர்களின் பேச்சுச் சத்தத்தில் தன் நினைவு கலைந்தவன் தனது நிலையை எண்ணி வெட்கம் கொண்டவனாய் தனது முடியை அழுந்த கோதி தன்னைச் சமன்படுத்தி நிலைப்படுத்திக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்...

வெகுநாட்கள் இல்லை இல்லை வெகு வருடங்களுக்குப் பின் அவனது மனம் இறகை போல் லேசாக இருந்தது... கல்லூரி படிக்கும் காலத்தில் இது போல் குறும்பாய் மனம் விட்டுச் சிரித்துப் பேசி மகிழ்ந்தது அவனது நியாபகத்தில் வந்தது... என்று தொழிலை கையில் எடுத்தானோ அன்றோடு அவனது குறும்பும், சிரிப்பும் மறைந்து போனதும் நியாபகத்தில் வந்து அவனை வேதனையில் ஆழ்த்தியது...

ஹரிணியின் காதல் மட்டுமே தன்னை உயிர்ப்புடன் வைத்திருக்கும் என்பதை அக்கணம் உணர்ந்தான்... தனது காதலுக்கு அவனது அன்னை அந்தஸ்து காரணம் காட்டி எதிர்ப்பு தெரிவிப்பார் என்று தெரிந்த போதும் தன் காதலை கைவிட அவன் தயாராக இல்லை... அவள் தன்னவள் என்பதில் அவன் உறுதியாக இருந்தான்...

அதன் பின் அந்த நாட்காட்டியில் எழுதி இருந்தது எல்லாம் காதல்... காதல்... காதல்... மட்டுமே... படித்து முடித்த சித்தார்த் பிரமித்துப் போனவனாய் அப்படியே அமர்ந்திருந்தான்... அந்தக் காதல் கொடுத்த தாக்கத்தில் இருந்து அவனால் அவ்வளவு எளிதில் மீண்டு வர முடியவில்லை...

காதல் இத்தனை வலி, வேதனை, சந்தோசத்தைக் கொடுக்குமா என்று தனக்குள் கேள்வி கேட்டுக் கொண்டான்... அந்த உணர்வு கொடுத்த தாக்கத்தில் அவனது மனதில் ஏதேதோ இனம் புரியாத வேதனை...

அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காமல் நாட்காட்டியை இருந்த இடத்தில் வைத்துவிட்டு அறையை விட்டு வெளியில் வந்தான்...

வரவேற்பறைக்கு வந்து அமர்ந்தவன் மனதில் பலவித குழப்ப மேகங்கள் சூழ்ந்தது... அவனுடனே இருந்த அந்த அரூபம் அவனது குழப்பத்தை நீக்கும் வழி தெரியாமல் தவித்தது...

தலைக்குப் பின்னால் கையைக் கட்டி கொண்டு சோபாவில் சாய்ந்து அமர்ந்த சித்தார்த்தின் கண்களில் மேற்கூரையில் தொங்கி கொண்டிருந்த மின்விளக்கில் பொருத்தப்பட்டு இருந்த அந்தச் சிறிய பொருள் தென்பட்டது... அது அவனது கவனத்தைக் கவர சற்று உற்று நோக்கினான்...

அது கண்காணிப்பிற்காகப் பொருத்தப்பட்ட கேமிரா என்பது புரிந்தது அவனுக்கு... தான் கண்காணிக்கப் படுகிறோமோ என்ற அச்சத்தில் அவனுக்கு வியர்த்தது...

பின் நிதானத்து யோசித்துப் பார்த்தவனுக்கு விசயம் சிறிது சிறிதாய் விளங்க ஆரம்பித்தது... அதன் ஆணி வேரை தேடி எடுத்தவன் அதை அலசி ஆராய அதில் அவனது விடை தெரியா பல புதிர்களுக்கான விடை இருந்தது... கிடைத்த விடையோ அவனுள் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியது...

ஒரு வார காலமாய்ச் சித்தார்த்தால் அலுவலகத்திற்குக் கூடச் செல்ல முடியவில்லை... அந்தளவுக்கு அதிர்ச்சியில் அவன் இருந்தான்... அதைவிடக் கொடுமை என்னவென்றால் அவன் மனதில் நினைப்பதை அவனால் யாரிடமும் வாய்விட்டு சொல்ல முடியவில்லை...

"கண்ணா... நீ பண்றது கொஞ்சமும் நல்லா இல்லை... நீ என்ன சின்னப் பையனா... தொழிலை கூட ஒழுங்கா நடத்த முடியாமல் நீ இப்படி வீட்டில் முடங்கிக் கிடப்பது சரி இல்லை... போய் வேலையைப் பார்... வேதாந்தம் மட்டும் தனியாய் கிடந்து இந்த வயதில் ஒத்தை ஆளாய் அல்லாடி கொண்டு இருக்கிறார்..." என்று சத்தம் போட்ட

அன்னையை வெறித்துப் பார்த்தவன் ஒன்றும் பேசாது வேறுவழியின்றி அலுவலகத்துக்குக் கிளம்பினான்...

பல நாள் காய்ச்சலில் விழுந்து எழுந்தவன் போல் வந்தவனைக் கண்டு வேதாந்தம் உள்ளம் பதறிப் போனார்...

"தம்பி என்னாச்சு...? ஏன் இப்படி இருக்கீங்க...?"

"ஏன் இப்படி இருக்கேன்னு கேட்காதீங்க அங்கிள்... ஏன் உயிரோடு இருக்கேன்னு கேளுங்க அங்கிள்..." விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டிருப்பவன் போல் ஒலித்தது அவனது குரல்...

"தம்பி..." என்னத்தான் முதலாளி என்ற ஸ்தானத்தில் வைத்து மரியாதையுடன் அவனிடம் பழகி வந்தாலும் சின்ன வயதில் இருந்து அவனைத் தூக்கி வளர்த்தவர் அன்றோ அதனால் அவனது வார்த்தையில் சற்றுத் துடித்துப் போனார்...

"என்ன பேசுறீங்க தம்பி...?" அவரது முகத்தில் கவலை நிரம்பி வழிந்தது...

"என்னால வேதனை தாங்க முடியலை அங்கிள்..." என்று துக்கம் அடங்கிய குரலில் கூறியவன் தலையைக் கைகளால் தாங்கி கை முட்டியை மேசையில் ஊன்றி தலை கவிழ்ந்து அமர்ந்தான்...

அவனது அருகில் வந்து ஆறுதலாய் அவனது தோளில் கை வைத்து அழுத்தினார் வேதாந்தம்... அவ்வளவு தான் அவன் அப்படியே உடைந்து போனான்... தன் மனதை கொன்ற அந்த விசயத்தை அவன் கூற கூற அவரும் அதிர்ந்து போனார் அவனை விட அதிகமாய்...

"தம்பி நீங்க சொல்றது உண்மையா...?" பயத்தில் அவரது உடல் நடுங்கியது...

"ஆமாம் அங்கிள்..." கண்கள் கலங்க கூறியவன் அதற்கு மேல் தாங்க முடியாதவனாய் அவரது இடுப்பை கட்டி கொண்டு அழுதுவிட்டான்... அவரும் அவனது தலையை

வருடி ஆறுதல் படுத்த முயன்றார்... அவரது கண்களும் கலங்கியது...

அங்கே முதலாளி, தொழிலாளி என்ற உறவு மறைந்து வளர்த்த பாசம் மட்டுமே ஓங்கி நின்றது...

"இது இப்படித்தான்னு எனக்கு முதல்லேயே தெரியும் தம்பி..." அவரது துயரமான குரலில் அதிர்ச்சியுற்றவன் அவரிடம் இருந்து வேகமாய் விலகி அவரை நிமிர்ந்து பார்த்தான்...

"உங்களை நான் சின்ன வயசில் இருந்து வளர்த்தவன்... உங்களை எனக்குத் தெரியாதா தம்பி..." கூர்மையுடன் அவனை ஊடுறுவியது அவரது பார்வை... அதில் அவனது தலை தானாகக் கவிழ்ந்தது...

"சரி இதை விடுங்க தம்பி... முதல்ல இந்த விசயத்துக்கு என்ன பண்ண போறீங்க...?" என்று கேட்டவர், "இதுக்கு நீங்க ஏதாவது பதிலடி கொடுத்தே ஆகணும் தம்பி..." என்றார் கோபத்தோடு...

என்றுமே நிதானத்தை இழக்காத வேதாந்தம் தன் நிதானத்தை இழந்து இருந்தார் நடந்து முடிந்திருந்த அநியாயத்தை எண்ணி...

"நிச்சயமா அங்கிள்... இதுக்குப் பதிலடி கொடுக்காம நான் ஓய மாட்டேன்..." வெறி வந்தவன் போல் ஆவேசமாகக் கத்தியவன் மேசை மீது தன் இரு கைகளையும் பலங்கொண்ட மட்டும் குத்தினான்...

அவன் குத்திய வேகத்தில் மேசை மீதிருந்த காகிதம், பேனா எல்லாம் பறந்து போய்க் கீழே விழுந்தது... அவனது ஆவேசம் கண்டு வேதாந்தமே திகைத்துப் போனார்... ஆனாலும் இன்றைய நிலைக்கு இந்த ஆவேசம் அத்தியாவசியம் என்பதை உணர்ந்து அமைதி காத்தார்...

"எல்லாத்துக்கும் நான் பதிலடி கொடுப்பேன் அங்கிள்... ஆனால்... ஆனால்..." சொல்ல முடியாமல் தவித்தவன் கண் முன் ஹரிணியின் முகம் வந்து போனது...

"ஆனால் அவளுக்கு நான் என்ன பதில் சொல்வது அங்கிள்... அதை நினைக்கும் போதே என் இதயம் இரண்டாகப் பிளப்பது போல் வலிக்கிறது..." என்று அவரைப் பார்த்து சொல்லியவன் மீண்டும் வேதனையுடன் கண்களை மூடி கொண்டான்...

"யாரு தம்பி அது...?"

"அவள்... ஹ..." 'ஹனி' என்று சொல்ல வந்தவன் பின் நிதானித்து, "ஹரிணி..." என்றவன் அவள் மீதான காதல் கதையைக் கூறலானான்...

அதைக் கேட்டு வேதாந்தத்திற்குமே என்ன செய்வது என்று தெரியவில்லை... ஆனால் ஹரிணியின் காதல் அவரைப் பிரமிக்க வைத்தது...

ஒரு கணம் அமைதியாய் இருந்து யோசித்தவர் அவனிடம், "நீங்க தான் தம்பி அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கணும்... பெண் பாவம் பொல்லாதது தம்பி... சும்மா இருந்த பொண்ணைக் காதல் கீதல்ன்னு அலைக்கழிச்சிட்டு இப்ப உதறி தள்ளினா எப்படிப்பா...?"

"என்ன அங்கிள் இப்படிச் சொல்றீங்க...? எனக்கு வேறு பொண்ணோட நிச்சயம் ஆகியிருச்சே..." அவனுக்குமே மனதிற்குள் தவிப்பாய் இருந்தது ஹரிணியின் கண்ணீர் முகத்தை நினைத்து...

"அதுக்காக இந்தப் பொண்ணை இப்படியே விட்டுற முடியுமா தம்பி... காதல் தோல்வியில் தற்கொலை அது இதுன்னு செஞ்சுக்கிட்டா..."

"அங்கிள்..." அதிர்ச்சியில் அவன் கூவியே விட்டான்... அவனது அதிர்விலேயே அவனது மனம் பிடிபட்டு விட அவர் ஆதுரத்துடன் அவனைப் பார்த்தார்...

"மனசுல இவ்வளவு காதலை வச்சிக்கிட்டு ஏன் தம்பி இப்படி நடிக்கிறீங்க...?" அவர் சொல்லவும் அவனது தலை தானாகக் கவிழ்ந்தது...

"நான் ஆசைப்பட்டது எல்லாமே அவ்வளவு ஈசியா எனக்குக் கிடைச்சிடுறது இல்லை அங்கிள்... அந்தளவுக்கு நான் அதிர்ஷ்டம் இல்லாதவன்..." எதையோ நினைத்து ஏக்கமாய்ப் பெருமூச்சு விட்டான்...

"தம்பி..." அவனின் மனம் புரிந்தவராய் அவனது தோளில் ஆறுதலாய் தட்டி கொடுத்தார் வேதாந்தம்...

"அதனால் தான் அங்கிள் நான் எது மேலயும் ஆசைப்படுறது இல்லை... வாழ்க்கை எப்படிப் போகுதோ அப்படியே போய் வாழ பழகிட்டேன்... ஆனா இந்தப் பாழாப் போன காதல்..." என்று இடை நிறுத்தியவன்,

"நான் ஏன் அங்கிள் அவளைப் போய்க் காதலிச்சேன்... எப்போதும் மாதிரி வாழ்க்கையை ஜாலியா எடுத்துட்டு போயிருக்கலாமே... இப்போ பாருங்க அவளைக் காதலிச்சிட்டு அவஸ்தைப்பட்டுட்டு இருக்கேன்... எனக்கு எல்லாம் காதல் ஒரு கேடு..." தன்னைக் குறித்தே அவனுக்கு வெறுப்பாய் இருந்தது...

"மனசை தளரவிடாதீங்க தம்பி... இனி தான் உங்க போராட்டம் ஆரம்பமாகப் போகுது... அதில் உங்கள் காதலும் அடக்கம்... நான் ஒண்ணு மட்டும் சொல்றேன் தம்பி... எந்தக் காரணம் கொண்டும் அந்தப் பொண்ணைக் கைவிட்டுறாதீங்க..."

அவர் சொன்னதை ஆமோதிப்பது போல் அவன் அமைதியாய் இருந்தான்...

"எனக்கும் மனசு சரியில்லை தான்... இருந்தாலும் வேலையைப் பார்க்கணுமே... நீங்களும் வேலையைப் பாருங்க... இனி தான் உங்களுக்கு நிறைய வேலை இருக்கு..." பூடகமாக அவர் சொல்லிவிட்டு செல்ல அதன் உட்பொருளை அறிந்தவனாய் கண்கள் சிவந்தது ஆத்திரத்தில்... மனம் இறுகியது துரோகத்தில்... ரத்தம் கொதித்தது நடந்து முடிந்த அநியாயத்தை எண்ணி...

**************************

"அம்மா நேக்கு இஷ்டமில்லைன்னா விடேன்... ஏன் தொந்திரவு பண்ற...?" அழுத்தமாய் அமர்ந்திருந்த ஹரிணி பத்மாவுக்குப் பதில் அளித்தாள்...

"இப்போ நீ கிளம்பப் போறியா இல்லையா...?" அதை விட அழுத்தமாய்க் கேட்டார் பத்மா... ரங்காச்சாரி இருவரையும் பார்த்துக் கொண்டு எதையும் செய்ய இயலாதவராய் அமர்ந்து இருந்தார்...

அன்று கைலாஷ் பெண் கேட்டு வந்த போது முதலில் திகைத்த பத்மவிலாசினி பின் சுதாரித்துக் கொண்டு அவர்களை வரவேற்றார்... அதன் பின் நடந்த பேச்சு வார்த்தையில் எல்லாம் சுபமாய் முடிய கைலாஷ் தம்பியை வெற்றி பார்வை பார்த்தான்... எப்போதுமே அவன் இறங்கிய காரியம் யாவுமே ஜெயமாய்த் தான் முடியும்... அந்தளவுக்குப் பேச்சுத் திறமை மிக்கவன் அவன்... பேசியே ஹரிணியின் பெற்றோரை கரைத்தான்...

வேற்று ஜாதிக்காரர்க்குப் பெண்ணைக் கொடுக்க ரங்காச்சாரிக்கு முதலில் விருப்பம் இல்லை... ஆனால் பத்மாவின் வரவேற்பை கண்டு அவர் வாயை மூடி மௌனியாய் அமர்ந்து இருந்தார்... மனைவியின் நடவடிக்கை அவருக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை... அதை விடப் புரியவில்லை என்றே சொல்லலாம்...

சந்தோஷ் தனது காதல் வெற்றி அடைந்ததில் மிகுந்த சந்தோசத்தில் இருந்தான்... அவன் பார்வையால் ஹரிணியை விழுங்கி கொண்டு அமர்ந்து இருந்தான்...

ஹரிணி திருமணப் பேச்சை கேட்டு அதிர்ந்தவள் இப்போது சந்தோஷின் காதல் பார்வையில் இன்னமும் அதிர்ந்தாள்... அவனது பார்வையில் அவளது உடல் கூச அவசரமாய்த் தன் அன்னையின் பின் சென்று மறைந்தாள்...

பத்மாவே முன்னாடி இருந்து திருமணப் பேச்சை பேசி முடித்தவர் அவர்களை வழியனுப்பி விட்டு உள்ளே வந்த போது ரங்காச்சாரி கோபத்துடனும், ஹரிணி ஆதங்கத்துடனும் அவரை எதிர்பார்த்து காத்திருந்தனர்...

"பத்து நீ பண்றது கொஞ்சம் கூடச் சரியில்லைடி..." கணவரது குரலில் இருந்தது கோபமா இயலாமையா என்ன என்பதைப் பிரித்து அறிய முடியவில்லை பத்மாவால்...

ஆனால் சில விசயங்களைப் பேசியாக வேண்டிய கட்டாயம் இருந்ததால் கணவரின் கால் மாட்டில் வந்து அமர்ந்தவர் அமைதியாய் அவரை ஏறிட்டு பார்த்தார்... மனைவியின் பார்வையில் இருந்த வேதனை, தவிப்பு இதை எல்லாம் கண்ட ரங்காச்சாரி மனம் துடித்துப் போனார்...

"பத்து..." அவரால் பேச முடியவில்லை... மனைவியின் மனதை தான் வருத்திவிட்டோமோ என்று மனதுக்குள் குமைந்து போனார்...

"ஏன்னா நான் தப்பு பண்ணுவேன்னு நினைக்கிறேளா...?" கண்களில் கண்ணீர் மல்க அவர் கேட்ட போது ரங்காச்சாரி தலை மறுப்பாய் இடமும் வலமுமாய் அசைந்தது...

"அதுக்காக இப்படிப் பண்ணலாமாடி... உறவுக்காராளை விடு... நாளைக்கு இந்த விசயத்தைக் கேள்விப்பட்டு நம்ம மத்த பொண்ணுங்க சண்டைக்கு வந்தா என்ன செய்வே... அவங்க உறவை அறுத்து எறிஞ்சிருவியா..."

"கட்டாயம்ன்னா..." உறுதியான குரலில் கூறிய மனைவியைத் திகைப்பாய் அவர் பார்க்க...

ஹரிணியும் அதிர்ந்து போய் அன்னையைப் பார்த்தாள்... தனக்குத் திருமணம் நடப்பதற்காகத் தான் பெற்ற மற்ற இரு பெண்களை அன்னை தூக்கி எறிய தயாராய் இருந்தது தெரிந்ததும் அவள் மனதில் இருந்த காதலுக்கான போராட்டம் சொல்லாமல் கொள்ளாமல் விடைப்பெற்றுச் சென்றது...

"என்னடி சொல்ற பத்து...?" அதிர்ச்சி மறையாமல் கேட்டவரை இரக்கத்துடன் பார்த்த பத்மா,

"ஆமாம்ன்னா... நம்ம காலத்துக்கு அப்புறம் ஹரிணியோட நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சு பார்த்தீங்களோ... அவ

கல்யாணமாகாம தனிமரமா இருந்தா நம்ம ஜானுவும், மைத்துவும் பார்த்துப்பாளா...? சொல்லுங்கோ..."

இதுக்கு ரங்காச்சாரி என்ன பதில் சொல்வது என்று தெரியாது அமைதி காத்தார்... சுயநல உலகில் பெற்றோராவது உடன்பிறந்தவராவது... எல்லாமே தன்னலம் மட்டும் தான்... இங்கே பொதுநலம் என்பது கேள்விக்குறி... நினைக்கும் போதே அந்த நினைவு அடி நெஞ்சு வரை கசந்தது அவருக்கு...

"அப்படி இருக்கறச்சே நான் என்ன மாதிரி முடிவு எடுக்கச் சொல்லுங்கோ... நாமளும் நம்மாத்து மனுசால்ல மாப்பிள்ளை தேட தான் செய்தோம்... ஒண்ணும் தகைஞ்சு வரலையே... அதுக்காக அவளை அப்படியே விட்டுற முடியுமா...? வேத்து ஜாதிக்காராளா இருந்தா என்ன அவங்களும் மனுசங்க தான்..." என்று சொன்னவரை கண்டு,

"அப்போ ராமை நான் காதலிச்சதுக்கு மட்டும் என்னை அப்படிப் போட்டு அடிச்ச... அப்போ நான் பண்ணின தப்பை தானே இப்போ நீயும் பண்ணியிருக்க... உனக்கு ஒரு நியாயம் எனக்கு நியாயமாம்மா..." ஹரிணி ஆதங்கத்துடன் கேட்க...

"ஆமான்டி நான் தப்பு தான் பண்ணிட்டேன்... வேணும்ன்னா என்னை ரெண்டு அடி அடிச்சுக்கோ..." ஆத்திரத்துடன் அவளைப் பார்த்து கத்தியவர்,

"நீ பண்ணின வேலையால நம்ம ஜாதி மனுசங்க நம்மளை கேவலமா பார்க்கறா... இதை எல்லாம் விட ஒரு வரன் உனக்குத் தகையல... வேற என்னத்தான்டி நான் செய்ய முடியும்... நேக்கு என் கடமையை முடிக்கணும்... அதுக்குத் தான் இதுக்குச் சம்மதிச்சேன்... வேணும்ன்னா நீ காதலிச்சதா சொன்னியே அந்தக் கடங்காரனை இரண்டாம் தாரமா கல்யாணம் பண்ணிண்டு போறியா...?"

"அம்மா..." உடலும் உள்ளமும் அதிர அலறினாள்...

"எதுக்குடி அலர்ற... உன் நிலமையைப் பார்த்து நேக்கும் அப்படித்தான்டி இருக்கு..." என்றவர் அப்படியே உடைந்து போய் அழுதார்...

"நேக்கு வேற வழி தெரியலைடி ஹரிணி... நீ யாரையாவது கல்யாணம் பண்ணி நல்லா இருந்தா அதுவே போதும்... அது தான் நேக்கு வேணும்... எப்படியோ யார் கூடவோ உன் கல்யாணம் நடந்தாகணும்... நடக்கணும்..." அவர் அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு கூற...

"அதுக்காக யார்ன்னு தெரியாதவா கூட என்னை அனுப்பி வச்சிருவியாம்மா... அந்தளவுக்கு உனக்கு நான் பாரமாகிட்டேனாம்மா..." பாவமாய்க் கேட்ட மகளைப் பார்த்துப் பரிதாபம் கொண்டது அந்தத் தாயின் உள்ளம்...

கணவர் அருகில் இருந்து எழுந்தவர் அவள் அருகில் வந்து அவளை அணைத்துக் கொண்டு, "அசடு மாதிரி பேசாதே ஹரிணி... அப்படி எல்லாம் உன்னைத் தள்ளிவிட்டா போதும்ன்னு தள்ளிவிட்டிருவோமா... அவங்க குடும்பத்தைப் பத்தி ஊருக்கே தெரியும் ரொம்ப நல்ல மாதிரின்னு... அதிலும் அந்தப் பையன் உன்னைப் பார்த்த பார்வையில் அவ்வளவு காதல் இருந்தது... இதை விட ஒரு பொம்மனாட்டிக்கு என்ன வேணும் சொல்லு..." என்ற அன்னையை விரிந்த விழிகளுடன் நோக்கியவள்,

"அப்போ ஏன்ம்மா ராமோட காதல் மட்டும் நோக்கு புரியலை..." அதைக் கேட்டதும் இறுகி போனவராய் அவளை விட்டு விலகிய பத்மா,

"சரி இப்ப நான் என்ன பண்ணணும்ன்னு சொல்ற... அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம்ன்னு சொல்லணுமா... சரி சொல்றேன்... நாளைக்கே அவன் வந்து உன் கழுத்திலே தாலி கட்டுவானா...?"

அன்னை கேட்கும் கேள்விக்கு விடையறியாது அவள் மலங்க மலங்க விழித்தாள்... மகளின் நிலையை எண்ணி வருந்தியவர் அவளின் முகத்தை ஆதுரத்துடன் வருடி,

"புரிஞ்சிக்கோடி ஹரிணி... அவன் தான் உன்னை வேண்டாம்ன்னு தூக்கி எறிஞ்சிட்டு வேற பொண்ணைக் கல்யாணம் பண்ண போய்ட்டானே... அது தெரிஞ்சும் அவனை நீ உன் நெஞ்சுல சுமந்துண்டு இருக்கியா... இது நல்லது இல்லை ஹரிணி... அடுத்தாத்து பொண்ணோட சாபத்தை வாங்கிக்காதே... அது ரொம்ப ரொம்பப் பாவம்... அவனை நீ மறந்துண்டு உன் வாழ்க்கையைப் பத்தி யோசிக்கிறது தான் சரி..."

அன்னை கூறியதை கேட்டவளுக்கு ராம் சம்பந்தமான அவளின் சந்தேகங்கள் மனதுக்குள் மீண்டும் பூதாகரமாய் விஸ்வரூபம் எடுத்தது... ஆனால் அதுக்காக வேறு ஒருவனை மணப்பது என்பது... ம்ஹூம் சற்றும் இயலாத காரியம் அது... இயலாதவளாய் அன்னையைப் பார்த்தாள்... அவளின் பார்வையின் அர்த்தம் புரிந்த அந்த அன்னையோ இரும்பாய் இறுகி உறுதியாய் தன் நிலையில் நின்றார்...

இது எல்லாம் நடந்து முடிந்து ஒரு வாரகாலத்துக்கும் மேலாகிவிட்டது...

இன்று சந்தோஷ் அவளை இரவு உணவுக்கு வெளியே அழைத்துச் செல்ல அனுமதி கோரி காலையில் ஹரிணியின் வீடு தேடி வந்தான்... அவளே அவனது சொத்து இதில் மறுக்க என்ன இருக்கிறது என்று அவர்களும் சம்மதமாய்த் தலையை ஆட்டினர்...

இதோ மாலை மங்கி இரவும் வந்துவிட்டது... அவளை அழைத்துச் செல்ல சந்தோஷ் வந்துவிடுவான்... அதற்கு அவளைக் கிளம்பச் சொல்லித்தான் பத்மா அவளிடம் போராடி கொண்டு இருக்கிறார்...

"இப்போ நீ கிளம்பல அதுக்கப்புறம் என்னைய உயிரோட பார்க்க முடியாது..." கடைசியில் அவர் அவளை மிரட்ட... அதற்கு அவளிடத்தில் கொஞ்சம் பிரதிபலிப்பு இருந்தது...

அறைக்குள் சென்றவள் அடுத்த ஐந்தாவது நிமிடம் தயாராகி வந்தாள்... தலை முதல் கால் வரை மகளை அளவிட்ட பத்மா,

"இன்னும் கொஞ்சம் நல்லா ட்ரஸ் பண்ணி இருந்திருக்கலாம்..."

"இதுவே அதிகம்..." வெடுக்கென்று அவள் கூறும் போதே வாயிலில் வந்து நின்றான் சந்தோஷ்...

"வாங்கோ... வாங்கோ..." என்று பத்மா அவனை வரவேற்க... ஹரிணியோ உம்மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருந்தாள்...

"நான் ஹனியை கூட்டிட்டு போறேன்..." சம்மதமாய்க் கேட்க...

அவனது 'ஹனி' என்ற அழைப்பில் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள் ஹரிணி...

"தாராளமா..." பத்மா சொல்லவும்...

அவர்களிடம் விடைப்பெற்றுக் காரில் ஏறும் வரை அமைதியாய் இருந்தவன் காரை கிளப்பிக் கொண்டே, "ஹனி... என்னைப் பத்தி உனக்குத் தெரியாது... ஆனா உன்னைப் பத்தி எனக்கு எல்லாம் தெரியும்..." என்று அவளைப் பார்த்து புன்னகைக்க... அவளோ யாருக்கோ வந்த விருந்து என்று அமைதியாய் வெளிப்புறமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்...

"ஹனி..." அவன் அழைக்க அவள் திரும்பவில்லை...

"ஹனி... ப்ளீஸ் திரும்பி பாரேன்..." அவனின் குரலில் இருந்த கெஞ்சல் அவளை எரிச்சல் படுத்த கோபத்துடன் அவனைத் திரும்பி பார்த்தாள்...

அவனது கையில் அவளுக்கு மிகவும் பிடித்த காட்பரீஸ் டெய்ரி மில்க் சில்க் சாக்லேட் இருந்தது... ஒருமுறை அவள் இதைக் கேட்டு அவள் அன்னை விலை அதிகம் என்று அவளை அடித்தது நியாபகத்தில் வந்தது... அதன் பின் அவளாகச் சாக்லெட் கேட்பது இல்லை... இனிப்பை பற்றி மனதில் பதிந்து போன கசப்பான விசயம் இது...

"உனக்கு ரொம்பப் பிடிக்கும்ல..." சாக்லெட்டை அவளிடம் நீட்டியபடி அவன் கேட்க...

அதை அவள் வாங்காமல், "இது எப்படி உங்களுக்குத் தெரியும்...?" கேட்டவளின் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி...

"இது மட்டும் இல்லை... உனக்குப் பிங்க் கலர் ரோஸ் ரொம்பப் பிடிக்கும்..." என்று சொல்லியபடி பின் இருக்கை பக்கம் இடது கையை நீட்டி இளஞ்சிவப்பு நிற ரோஜா பூங்கொத்தை எடுத்து அவளிடம் நீட்டினான்...

"என் இதயத் தேவதைக்கு இந்த அடியேனின் சின்னக் காணிக்கை..." தலையை லேசாகக் குனிந்து பவ்யத்துடன் கூறியவனை மனதில் எழுந்த கிலியுடன் பார்த்தாள் அவள்...

'யார் இவன்...? இத்தனை காலமாய் எங்கிருந்தான்...? எதற்கு இத்தனை காதலாய் என்னிடம் இருக்கிறான்...? எனக்கும் ராம்க்கும் இடையில் வந்திருக்கும் வில்லனா இவன்...?' அவளின் மனதில் போராட்டம் துவங்கிவிட்டது...

"ஹனி வேண்டாமா...?" அவனின் குரலில் இருந்த வருத்தத்தை உணர்ந்து அவன் புறம் திரும்பியவள்,

"நான்... நேக்கு..." தன் காதலை எப்படிச் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினாள்...

"என்னை உன் வருங்காலக் கணவனா பார்க்க வேண்டாம்... அட்லீஸ்ட் பிரெண்ட்டா பார்க்கலாமே... ஏன் உன் கூடப் பிரெண்ட்டா இருக்கக் கூட எனக்குத் தகுதி இல்லையா...?" அவனின் ஆதங்கம் புரிய அமைதியாய் அந்தப் பூங்கொத்தை வாங்கிக் கொண்டாள்...

அதைக் கண்டு அவனது முகம் மலர்ந்தது...

அந்த நட்சத்திர விடுதியில் நுழைவதற்கே அவளுக்குப் பயமாய் இருந்தது... அதன் ஆடம்பரத்தை கண்டவள் தன்னை ஒருமுறை குனிந்து பார்த்து கொண்டாள்... பின்

அருகில் வருபவனை ஏறிட்டு பார்த்தாள்... அவளின் பார்வையை உணர்ந்து புரிந்தவனாய் புன்னகைத்தவன்,

"தேவதை எப்படி இருந்தாலும் அழகு தான்..."

கொஞ்சம் அதிகப்படியான புகழ்ச்சியோ என்று மனதில் நினைத்தவள் மௌனமாய் அவனுடன் இணைந்து நடந்தாள்...

ஹரிணி வேறு ஒருவனுடன் வருவதை அங்கு ஏற்கெனவே வந்து அமர்ந்திருந்த சித்தார்த் கண்டு கொண்டான்... அவன் அவளிடத்தில் சிரித்துச் சிரித்துப் பேசியது கண்டு இவனது உள்ளம் பெட்ரோல் ஊற்றாமலேயே பற்றி எரிந்தது...

'என்ன கொழுப்பு இவளுக்கு...? என்னைக் காதலிப்பதாய் சொல்லிவிட்டு வேறு ஒருவனுடன் கொஞ்சி குழாவிட்டு இருக்காளா...? இவளை...?' பல்லை கடித்தான் சித்தார்த்...

அவனுக்கு இருந்த கோபத்தில் ஹரிணியின் முகத்தை ஆராய்ந்து பார்க்கவில்லை... அதே சமயம் தானும் தீபிகாவுடன் தான் வந்து இருக்கிறோம் என்று எண்ணமும் அவனுக்கு இல்லை... அவனுக்கு இருந்த ஒரே எண்ணம் ஹரிணி எப்படி இன்னொருவனுடன் இப்படி இணைந்து கொஞ்சி குழாவி கொண்டு வரலாம்...

அமராவதி தான் அவனின் பற்றற்ற போக்கை கண்டித்து அவனைத் தீபிகாவுடன் இரவு உணவுக்காக வெளியில் அனுப்பி வைத்தார்... வேறுவழியின்றி அவனும் அவளை அழைத்து வந்திருந்தான்...

தன் குற்றம் மறைந்து தன்னவளின் குற்றமே அவனது கண்ணை உறுத்தியது...

சந்தோஷ் ஹரிணி அமர நாற்காலியை இழுத்து போட்டு அவளுக்கு உதவியவன் அவள் அமர்ந்ததும் தானும் அவள் அருகில் அமர்ந்தான்...

'லூசுப்பய அவ்வளவு இடம் இருக்கு எதுக்கு அவள் பக்கத்தில் உரசிட்டு உட்கார்றான்... எழுந்து வந்தேன்

உன்னை வெட்டி போடுவேன்னு வெட்டி...' சித்தார்த்தின் பற்கள் கடிப்பட்டது கோபத்தில்...

சித்தார்த்தின் முகத்தில் தெரிந்த ஆத்திரத்தை கண்டு தீபிகா குழம்பி போய் அமர்ந்து இருந்தாள்... அவன் பார்வை சென்ற இடத்தைப் பார்த்தவள் இன்னமும் குழம்பி போனாள்...

'எதுக்கு அவங்களைச் சித்து முறைச்சு பார்க்கிறாரு...?' கேள்வி எழுந்தது அவளது மனதில்...

அந்த நேரம் தான் சந்தோஷ் அந்தக் காரியத்தைச் செய்தான்... தனது பேண்ட் பையில் இருந்து ஒரு பெட்டியை திறந்து அதில் இருந்த வைர மோதிரத்தை எடுத்தவன் பின் ஹரிணியின் வலது கையை மென்மையாய்ப் பற்றினான்...

அவனது செயலில் திகைத்து போய் ஹரிணி அமர்ந்திருக்க அதைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்துக்குப் பொறுமை காற்றில் பறக்க ஆத்திரத்துடன் தான் அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து வெடுக்கென்று எழ அது மெல்லியதாய் சத்தம் எழுப்பியபடி தள்ளி சென்றது...

"சித்து..." தீபிகா அழைத்தது அவனது காதில் விழவில்லை...

அவன் ஆத்திரம் கொஞ்சமும் குறையாமல் நான்கே எட்டுக்களில் ஹரிணியின் முன் போய் நின்றான்...

சந்தோஷின் செயலில் திகைத்து போயிருந்தவள் அங்கே எதிர்பாராதவிதமாகச் சித்தார்த்தை கண்டதும் அச்சத்தில் முகம் வெளுக்க அதிர்ந்து போய் எழுந்து நின்றாள்...

அவளை முறைத்து பார்த்தவன் வேகமாய் அவளைப் பிடித்து இழுத்து தனது கை வளைவுக்குள் கொண்டு வந்தவன் சந்தோஷை பார்த்து, "யாருக்கு யாருடா மோதிரம் போட்டு விடுறது... இவளை யார்ன்னு நினைச்ச...? என் உயிர்... என்னுடைய காதலி... என் மனைவி..." என்றான் கொஞ்சமும் கோபம் குறையாமல்...

சந்தோஷ் சித்தார்த்தின் செய்கையில் அதிர்ச்சி அடைந்து இருந்தவன் அவனது வார்த்தையில் அப்படியே எழுந்துவிட்டான்...

தீபிகாவோ தான் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து சித்தார்த் அருகே ஓடி வந்தாள்...

"வாட்...?" அதிர்ச்சி மாறாமல் வந்தது சந்தோஷின் வார்த்தைகள்...

"என்ன வாட்...? தமிழ்ல சொன்னா உனக்குப் புரியாது... இவள் என்னோட மனைவின்னு சொன்னேன்..." சித்தார்த் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் சந்தோஷை கடித்துத் துப்ப முடியாத ஆத்திரத்தில்...

"சித்து... என்ன சொல்றீங்க...?" இப்போது அதிர்வது தீபிகாவின் முறையாயிற்று...

"சாரி தீபி..." என்று அவளைப் பார்த்து சொன்ன சித்தார்த் ஹரிணி புறம் திரும்பி,

"ஆனா உனக்கு மன்னிப்பே இல்லைடி..." என்று கர்ஜித்தவன், "வா... என் கூட..." என்று அவளை அழைக்க... அவளோ பயத்தில் அசையாமல் நின்றாள்...

"ஹேய் மிஸ்டர்... நீ என்ன கலாட்டா பண்ணன்னு வந்திருக்கியா...? நான் யாருன்னு தெரியுமா...?" சந்தோஷ் கோபத்தில் கத்த துவங்க... அங்கிருந்த ஆட்கள் எல்லோரும் இவர்களைக் கவனிக்க ஆரம்பித்தனர்...

"வாயை மூடுடா... நீ யாரா இருந்தா எனக்கு என்ன...? உனக்கு எதுக்கு இவ்வளவு கோபம் வருது...? நீ என் பொண்டாட்டி கையைப் பிடிச்சதுக்கு நியாயத்துக்கு எனக்குத் தான் கோபம் வரணும்... எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு அவ கையைப் பிடிச்ச உன் கையைத் துண்டு துண்டா வெட்டி போடணும் போலிருக்கு..." சந்தோஷிடம் உறுமியவன்,

"வாடி..." என்று வலுக்கட்டாயமாய் ஹரிணியின் கையைப் பிடித்து இழுத்து செல்ல... சந்தோஷும், தீபிகாவும் செய்வதறியாது திகைத்து நின்றனர்...

பலியாடு போல் ஹரிணி சித்தார்த் பின்னே சென்றாள்... அவனோ பெரும் கோபத்தில்... அவளோ பெரும் குழப்பத்தில்... இனி இருவரின் வாழ்க்கையும் எந்தவிதத்தில் செல்ல போகிறதோ அது விதிவசத்தில்...!!!

நீயாவேன்...

## நான் : 7

ஹரிணியைக் கூட்டி கொண்டு காரில் ஏறிய சித்தார்த் செய்த முதல் வேலை தனது அலைப்பேசியை அணைத்து வைத்தது தான்... அவனுக்கு நன்கு தெரியும் தீபிகா தனது அன்னையிடமும், மாமனிடமும் இந்த விசயத்தைப் பற்றிக் கூறிய அடுத்த நிமிடம் அவர்கள் தனது அலைப்பேசி எண்ணை வைத்து தான் இருக்கும் இடத்தை எளிதில் கண்டு பிடித்துவிடுவார்கள் என்று... அதற்கு இடம் அளிக்காத வகையில் அவன் நடந்து கொண்டான்...

தீபிகாவை அம்போ என்று விட்டு வந்தது கூட அவனுக்குத் தவறாகத் தோன்றவில்லை... அவளைப் பார்த்துக் கொள்ள அவளுக்குத் தெரியும் என்று அவனுக்கு நம்பிக்கை இருந்தது... ஆனால் ஹரிணியைத் தன்னை விட வேறு யாரும் அவளைப் பாதுகாக்க முடியாது... பார்த்துக் கொள்ள முடியாது என்று எண்ணினான்... அந்த எண்ணம் தான் அவளைத் தன்னுடன் அழைத்து வர செய்தது...

"யார் அவன்...?" என்று காரை ஓட்டி கொண்டே கேட்ட சித்தார்த்தின் குரலில் அளவுக்கு அதிகமாகக் கோபம் இருந்ததோ... குரல் கூடச் சற்று உயர்ந்து இருந்ததோ...

ஏற்கெனவே அவனது கோபத்தில் பயந்து காரின் கதவோடு ஒன்றி அமர்ந்து இருந்தவள் அவனது கோபக் குரலில் இன்னமும் நடுங்கி போய் ஒடுங்கி அமர்ந்தாள்...

"கேட்கிறேன்ல்ல..." 'நீ பதில் சொல்லியாக வேண்டும்' என்ற பிடிவாதம் இருந்தது அவனின் குரலில்...

"அவர் நேக்கு..." உண்மையைச் சொல்ல முடியாத அச்சத்தில் எச்சிலை கூட்டி விழுங்கினாள்...

"உனக்கு..." கூர்மையாய் கேட்டவனின் பார்வையும் அவளைக் கூர்மையாய் துளைத்து எடுத்தது...

"நேக்கு பார்த்து இருக்கும் வரன்..." ஏனோ அந்தச் சந்தோஷை தனக்குப் பார்த்து இருக்கும் மாப்பிள்ளை என்று சொல்ல அவளுக்கு மனம் வரவில்லை...

அவளது பதிலில் திகைத்து போனவனாய் சட்டென்று பிரேக்கை அழுத்தியவன் அவளைத் திரும்பி பார்த்து முறைத்தான்... பின் காரை சாலையில் இருந்து ஓரம் கட்டியவன் அவள் புறம் திரும்பி,

"அப்போ நான் யாரு...?" இப்போதும் அவனது பார்வை அவளைத் துளைத்து எடுத்தது...

அவனின் பார்வையைச் சந்திக்க இயலாமல் தலையைக் குனிந்தவளின் கண்கள் கண்ணீர் வடித்தது அவனது வார்த்தைகள் கொடுத்த வலியால்...

அவளது கண்ணீரை கண்டதும் அவனது மனம் சற்று இரங்கி இறங்கியது... தொழிலில் இருப்பதாலோ என்னமோ எல்லோரிடமும் அளவுக்கு அதிகமாகவே கடினத்துடன் இருந்து பழக்கப்பட்டவன் அவன்... யாரிடமும் இரங்காத, இறங்காத அவனது மனம் அவளிடம் மட்டுமே இரங்கி, இறங்கி வந்தது அவள் மீது கொண்ட காதலினால்...

ஒற்றை விரலால் அவளது முகத்தை நிமிர்த்தியவன், "அன்னைக்கு உன்னோட ராம் இல்லைன்னு என்னைப் பார்த்து சொல்லிட்டு போனியே... எங்கே இப்போ என்னைப் பார்த்து சொல்லு... நான் உன்னோட ராம்மா இல்லையா...?"

அவளது கண்களைப் பார்த்து ஏக்கத்துடன் கேட்டவனைக் கண்களில் கண்ணீருடனும் தவிப்புடனும் பார்த்தவள் கண்கள் வியப்பில் அகல விரிந்தது... அவனை அடையாளம் கண்டு கொண்டதன் விளைவாக அவளது விழிகள் பளிச்சிட்டது... முகம் மலர்ந்தது அன்றலர்ந்த மலராக...

விரிந்த புன்னகையுடன் அவனது முகத்தைத் தன் கைகளில் தாங்கியவள் மகிழ்ச்சியுடன், "நீங்க என்னோட ராம் தான்... என்னோட ராம் தான்..." என்று சொல்லியவளின் கைகளைப் பிடித்துக் கொண்டவனின் கண்களும் கலங்கியது அவள் தன்னை அடையாளம் கண்டு கொண்டதால்...

எப்போதும் அவளைக் கண்டதும் காதலை பொழியும் அவனது கனிவு மிகுந்த கண்கள், அவளைக் கண்டதும் மென்மையுறும் அவனது முகம் எல்லாம் சொல்லாமல் சொல்லியது அவன் தான் அவளுடைய ராம் என்று...

அவனது பழக்க வழக்கத்தால் வந்த சந்தேகத்தைப் பின்னுக்குத் தள்ளியது அவன் மீதான அவளது காதல்... காதல் என்று ஒன்று வந்துவிட்டால் குற்றம் குறைகளும் பின்னுக்குத் தள்ளி காதல் மட்டுமே உயிர் வாழ தேவையான உந்து சக்தியாக மாறும்... இந்த விந்தையான செயல் காதலில் மட்டுமே சாத்தியம்...

"பின்னே ஏன் மாமி என்னை விட்டுட்டு அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்ச...?" அவனது குரல் ஆதங்கத்துடனும், கொஞ்சம் கோபத்துடனும் ஒலித்தது...

"இல்லை... நான் சம்மதிக்கலை..." அவசரமாக அவனது கூற்றை அவள் மறுக்க... அதில் அவனது கோபம் சற்று மட்டுப்பட்டது...

"நீங்க வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதை சொல்லி அம்மா தான் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துண்டா... நான் இல்லை... நான் முடியாதுன்னு மறுத்துப் பார்த்தேன்... அதுக்கு உங்களை வந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்ல முடியுமான்னு கேட்டா... இல்லை உங்களுக்கு என்னை..." எப்படிச் சொல்வது என்று தெரியாமல் நிறுத்தியவள் அவனது முகத்தைப் பாவமாய்ப் பார்த்தாள்...

"என்ன சொன்னாங்க சொல்லு...?"

"உங்களுக்கு வைப்பாட்டியா... நான்..." அதற்கு மேல் அவளால் சொல்ல முடியவில்லை... எழுந்த பெரும் கேவலை வாயை கைகளால் பொத்தி கொண்டு அடக்கியவள் தாங்க மாட்டாமல் விம்மினாள்...

"ஹனி..." அடுத்த நொடி அவளை அணைத்துக் கொண்டான் அவன் அவளது வேதனையைப் போக்கும்

படி...

பெண்ணான அவளது மனம் படும் பாடு அவனுக்குப் புரிந்தது... இதற்கு எல்லாம் காரணம் தான் அல்லவா... தீபிகாவுடன் நடந்த நிச்சயமே அவனுக்கு அப்போது தான் நியாபகம் வந்தது... அதை முதலிலேயே நிறுத்தி இருக்க வேண்டும் அதைச் செய்யாதது தனது தவறு என்றும் அவனுக்குப் புரிந்தது...

"வேண்டாம் ஹனி... இந்த வேதனை உனக்கு வேண்டாம் கண்ணம்மா... எல்லாம் என் தப்புத்தான்... நான் தப்பு செஞ்சிட்டு உன்னிடம் கோபப்படுறதுல அர்த்தம் இல்லை..." என்று அவளை ஆறுதல் படுத்தியவன், அவள் முகத்தை நிமிர்த்தி,

"நீ எதுக்குடி மாமி பின் வழியா வரணும்... உன்னைக் கல்யாணம் பண்ணிட்டு முறையா முன்வாசல் வழியா என் வீட்டுக்கு நான் அழைச்சிட்டு போறேன்..."

அவனது வார்த்தையில் மகிழ்ந்த அந்தப் பேதை பெண், 'அப்போ ஏன் வேறு பெண்ணை நிச்சயம் செய்தாய்?' என்று கேள்வி எழுப்பவில்லை... அவனைச் சந்தேகப்படவில்லை... ஒருவேளை அவர்களின் காதல் சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டதோ...

"இன்னும் ரெண்டு நாளில் நம்ம கல்யாணம் நடக்கும்... இன்னும் புதுசு புதுசா வில்லன்கள் முளைக்கிறதுக்குள்ள நாம கல்யாணம் பண்ணிக்கணும்..." என்று சொன்னவனின் கண்கள் எதையோ நினைத்து வெறியில் பளபளத்தது...

அவனது வார்த்தை கொடுத்த சந்தோசத்தில் அவனது நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள் ஹரிணி... காடு மேடு அலைந்து திரிந்து விட்டு சொந்த இடம் வந்தடைந்த நிம்மதி ஏற்பட்டது அவளுக்கு... இது அவளுக்கு மட்டுமே சொந்தமான இடம் என்ற உவகை மட்டுமே அவளது உள்ளத்தை ஆக்கிரமித்து இருந்தது...

அவளின் உரிமையான அந்தச் செயலில் மனம் நெகிழ்ந்தவன், "இப்படியே இருக்கத்தான் எனக்கும் ஆசையா இருக்கு ஹனி..." அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்து கொண்டவன் அவளது காதில் ஏக்கத்துடன் முணுமுணுத்தான்...

"ஆனா ரொம்ப நேரம் நாம இப்படியே இருக்க முடியாது..." என்றவனை

அவள் அச்சத்துடன் நிமிர்ந்து பார்க்க அவளது அச்சம் கண்டு ஆறுதலாய் புன்னகைத்தவன், "ஒரு தடவை உன்னை மிஸ் பண்ணிட்டேன் ஹனி... இனி இன்னொரு தடவை மிஸ் பண்ண மாட்டேன்... பயப்படாதே... அதுக்கு உன்னோட ஒத்துழைப்பு எனக்குத் தேவை..."

"நிச்சயமாய்ச் செய்றேன்னா..." அவளது வார்த்தையில் அவன் மகிழ்ந்ததை விட அவளது அழைப்பில் அவனது மனம் அதிகமாய் மகிழ்ந்தது...

"அது என்னடி மாமி... இப்போ எல்லாம் வான்னா, போன்னான்னு கூப்பிடுற... அதுக்கு அர்த்தம் நான் உன்னோட வீட்டுக்காரன் என்பது தானே..." அவளது தலையில் செல்லமாய் முடியப்படி கேட்டவனை நிமிர்ந்து பார்க்க நாணியவள் விழிகளைத் தாழ்த்தி கொண்டு,

"ம்... ம்..." என்று தலையை மட்டும் அசைத்தாள்... அவளது நாணம் அவனுக்கு ஏதேதோ கதைகள் பேச அவனது வயதிற்கே உரிய உணர்வுகள் மெல்ல மெல்ல மேலெழும்பியது...

சூழ்நிலை கருதி தன்னை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டவன், "உன்னை மாதிரி காதலி கிடைக்க நான் கொடுத்து வச்சியிருக்கணும் ஹனி... அது எவ்வளவு பணம் கொடுத்தாலும் கிடைக்காதது..." என்றவன், "கிளம்பலாமா ஹனி..." என்றபடி காரை கிளப்ப...

சம்மதமாய்த் தலையசைத்தவள் அவனை விட்டு விலகி அமர முயல அவனோ தனது இடது கரத்தால் அவளைத் தன்

அருகில் இழுத்தவன் தன்னோடு அவளை இருத்தி கொண்டான்...

அவனுடைய கோபத்தைச் சடுதியில் மறைய செய்துவிட்டது அவளது காதல்... அந்தக் காதலுக்கு மரியாதை செய்யும் பொருட்டு அவனும் எல்லாவற்றையும் எதிர்க்க தயாராகிவிட்டான்...

நேரே வேதாந்தம் வீட்டிற்குச் சென்றவன் அழைப்புமணி அழுத்திவிட்டுக் காத்திருக்க... கதவை திறந்த வேதாந்தம் அங்கே சித்தார்த்தை கண்டதும் திகைத்து போனவர் பின்னே சுதாரித்துக் கொண்டு,

"வாங்க தம்பி..." என்று வரவேற்றவர்... அவன் பின்னே நின்றிருந்த ஹரிணியைக் கண்டு புரிந்து கொண்டவராய், "வாம்மா..." என்று அவளையும் அழைத்தார்...

"சக்கு... யார் வந்திருக்கா பாரு..." உள்ளே திரும்பி அவர் குரல் கொடுக்க அதைத் தொடர்ந்து அவரது மனைவி சகுந்தலா அங்கே பிரசன்னமானார்...

"தம்பி..." சித்தார்த்தை கண்டு ஆனந்த அதிர்ச்சி அடைந்தார்...

"ஆன்ட்டி... எப்படி இருக்கீங்க...?" என்றபடி அவரது காலில் விழுந்து அவன் ஆசிர்வாதம் வாங்க வேதாந்தம் குழப்பத்துடன் அவனைப் பார்த்தார்...

"நல்லாயிரு தம்பி..." என்று அவனை ஆசிர்வாதம் செய்தவர், "இது தான் நீ காதலிக்கும் பெண்ணா...?" என்று கேட்டார் ஹரிணியைச் சுட்டி காட்டி... ஏற்கெனவே வேதாந்தம் அவன் காதலிக்கும் விசயத்தை மனைவியிடம் கூறியிருந்தார்...

"ஆமாம் ஆன்ட்டி... எப்படி இருக்கு என் செலக்சன்...?" கண்சிமிட்டியபடி அவன் கேட்க...

"உன் செலக்சன் மேல எனக்கு நம்பிக்கை இருக்கோ இல்லையோ இந்தப் பொண்ணு மேல நம்பிக்கை இருக்கு...

பார்த்தா ரொம்ப நல்ல பொண்ணா தெரியறா..." என்றவர் அவள் அருகில் வந்து வாஞ்சையுடன் கன்னத்தை வருடி கொடுத்தார்...

உடனே ஹரிணி அவரின் தாள் பணிந்து எழ, "நான் சொன்னேன் பார்த்தியா ரொம்ப நல்ல பொண்ணு..." என்றபடி அவளை வாழ்த்தினார்...

சிறிது நேரம் பரஸ்பர நலம் விசாரித்துவிட்டு ஹரிணியைச் சகுந்தலா உள்ளே அழைத்துச் செல்ல... சித்தார்த் வேதாந்தம் பக்கம் திரும்பினான்...

"அங்கிள்..." என்று பேச போனவன் அவரின் பிரமிப்பான பார்வையில் தன் பேச்சை நிறுத்தினான்...

"என்ன அங்கிள்...?" சிரித்தபடி கேட்டவனைக் கண்டு,

"சித்துத் தம்பி..." என்றவரின் குரல் நடுங்கியது... கண்களில் கண்ணீர் தளும்பியது...

தன்னை அடையாளம் கண்டு கொண்டவரின் அருகில் வந்து அவரது கைகளை ஆறுதலாய் பற்றிக் கொண்டவன்,

"யாரை ஏமாத்தினாலும் உங்களை மட்டும் ஏமாத்த முடியாது அங்கிள்..." என்றான் புன்னகைத்தபடி...

"உங்களைச் சின்ன வயசில் இருந்து வளர்த்தவன் நான் தம்பி..." என்றவர் மனம் கலங்கியது நடந்து முடிந்த கொடூரத்தை எண்ணி...

"என்னைப் பார்த்தா பயமா இல்லையா அங்கிள்...?" என்று கேட்டவனை ஆதூரத்துடன் பார்த்தவர்,

"எங்க சித்துத் தம்பியை பார்த்து நான் ஏன் பயப்படணும்...? நீங்க யாருக்கும் எந்தக் கெடுதல் நினைக்காதவர் தம்பி..."

"அங்கிள்..." அவனது கண்களும் கலங்கியது...

"அங்கிள் நான் சொல்ல போறதை நல்லா கேட்டுக்கோங்க அங்கிள்... இன்னும் ரெண்டு நாளில் இந்தக் கல்யாணம்

நடந்தாகணும்... இதுக்கு நிறைய எதிர்ப்பு வரும்... முக்கியமா என் அம்மா கிட்ட இருந்து... அப்புறம் அவளுக்குப் பார்த்து இருக்கும் மாப்பிள்ளை வீட்டில் இருந்து... எல்லாத்தையும் சமாளிச்சு ஆகணும்... அதுவரைக்கும் ஹரிணி இங்கே இருக்கட்டும்..." என்றவன் திருமணம் பற்றிய ஏற்பாடுகளைப் பற்றிச் சொல்லலானான்...

"எல்லாம் நான் பார்த்துக்கிறேன்... நீங்க மத்த பிரச்சினையைப் பார்த்துக்கோங்க..." வேதாந்தம் கூறியதும் அவனுக்கு நிம்மதியாய் இருந்தது...

அதன் பின் ஹரிணியைச் சந்தித்தவன், "ஹனி உன் வீட்டுக்கு போகாம இருக்கிறது உனக்கு ஒண்ணும் கஷ்டமா இல்லையே..."

"கொஞ்சம் கஷ்டமா தான் இருக்குன்னா..." அவன் முகம் கவலையில் ஆழ்வதைக் கண்டு அவசரமாக, "உங்களைக் காதலிக்கிறதுன்னு முடிவு பண்ணியதுக்கு அப்புறம் இப்படி எல்லாம் நடக்கும்ன்னு எதிர்பார்த்தது தான்... பெண்ணாய் பிறந்த எந்தப் பெண்ணுக்கும் இது சகஜமான விசயம் தான்... எல்லாத்தையும் நான் சமாளிச்சுக்கிறேன்... உங்களுக்காக... நீங்க வேணும்ங்கிறதுக்காக..." என்றவளின் வார்த்தையில் அவன் நிம்மதி அடைந்தான்...

"இது போதும் ஹனி..." என்றான் புரிதலுடன் கூடிய அவளது காதல் கொடுத்த மகிழ்ச்சியில்...

அவளிடம் விடைப்பெற்று நேரே தன் வீடு நோக்கி சென்றான்... அங்குத் தனக்காகக் காத்திருக்கும் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தவனாய் காரை செலுத்தினான் அவன்...

சந்தோஷ் கூறிய செய்தியை கேள்விப்பட்ட கைலாஷ் கொதித்துப் போய்விட்டான்... உடனே அந்த நட்சத்திர விடுதிக்குத் தொலைப்பேசியில் அழைத்து விவரத்தை கூறி அது யார் என்ன என்று விசாரிக்க, அது சித்தார்த் ராம்

என்று அவன் பெயரில் மேசை பதிவு செய்ததில் இருந்து தெரிய வந்தது...

"சித்தார்த்..." கோபத்துடன் பல்லை கடித்தான் கைலாஷ்...

"அவன் அந்தப் பொண்ணை இழுத்துட்டு போற வரைக்கும் நீ வேடிக்கை பார்த்திட்டு இருந்தியா...? அந்த இடத்திலேயே அவனைத் தூக்கி போட்டு மிதிச்சி இருக்க வேண்டாம்..." கொஞ்சமும் கோபம் குறையாமல் தம்பியை பார்த்துக் கத்தினான்...

"எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்திருச்சுண்ணா..." துயரம் ததும்பிய குரலில் கூறிய தம்பியை பார்த்து கைலாஷுக்கும் துக்கமாய் இருக்க அவனை அணைத்துக் கொண்டான்...

"நீ கவலைப்படாதே சந்தோஷ்... எல்லாம் நான் பார்த்துக்கிறேன்..." அவன் ஆறுதல் கூற...

"என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ தெரியாது... எனக்கு என் ஹனி வேணும்ண்ணா... அவ இல்லாம நான் இல்லை... அவ மட்டும் அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா... அப்புறம்... அப்புறம்..." முடிக்காமல் விட்டவனின் தோளில் ஆதரவாய் தட்டி கொடுத்த கைலாஷ்,

"டேய் ரொம்ப யோசிக்காதடா... அப்படி எல்லாம் நடக்க நான் விட்டிருவேனா என்ன...? நீ எதைப் பத்தியும் யோசிக்காம இரு..."

"ம்..." என்று முனங்கியவன் சொல்லொண்ணா வேதனை நிரம்பிய முகத்துடன் தனது அறைக்குச் செல்ல... கைலாஷ் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று யோசிக்க ஆரம்பித்தான்...

தீபிகா சொன்ன செய்தி கேட்டு அவளது பெற்றோர் சித்தார்த்தின் வீட்டில் குழுமியிருந்தனர்...

"என்ன தங்கச்சி இது... மாப்பிள்ளை இப்படிச் செய்வார்ன்னு கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை... நம்பி கூட

வந்த பொண்ணைக் கை கழுவிவிட்டுட்டு யாரோ ஒருத்தியை கூட்டிட்டு போறாரு... அவரு மனசுல என்ன நினைச்சிக்கிட்டு இருக்காரு... இப்போ என் பொண்ணுக்கு என்ன பதில் சொல்ல போற தங்கச்சி... ஊரறிய நிச்சயம் பண்ணிட்டு இப்போ இப்படிப் பண்ணினா என் பொண்ணை யார் கல்யாணம் பண்ணிக்குவாங்க..." கோபத்தில் தாம்தூம் என்று ஆராவமுதன் குதித்தார்...

பிருந்தாவுக்குமே சித்தார்த்தின் இந்தச் செய்கை கொஞ்சமும் பிடிக்கவில்லை என்று அவரது முகத்தில் தெரிந்த கவலை சொல்லாமல் சொல்லியது...

"கொஞ்சம் பொறுமையா இருங்கண்ணா... அவன் வந்ததும் பேசிக்கலாம்..." பொறுமையான குரலில் ஆராவமுதனிடம் அமராவதி எடுத்து சொன்னாலும் அவரது மனமும் எரிமலை போல் கொதித்துக் கொண்டு இருந்தது... அலைப்பேசி முதற்கொண்டு அனைத்து வைத்துக் கொண்டு புத்திசாலித்தனமாகச் செயல்படும் மகனின் மீது அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது...

அந்நேரம் ஒன்றும் அறியாதவன் போல் கார் சாவியைச் சுழற்றிக் கொண்டு உள்ளே நுழைந்தான் சித்தார்த்... அவனது முகத்தில் சந்தோசம் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"கண்ணா..." அன்னையின் அழைப்பில் அவர் அருகே வந்து அமர்ந்தவன், "என்ன மாம்...?" மீண்டும் ஒன்றும் அறியாதவன் போல்...

"என்ன மாம் மா... நீ என்ன காரியம் பண்ணிட்டு வந்திருக்க...? யார் அந்தப் பொண்ணு...? உன் மனைவின்னு சொன்னியாமே..." கோபத்தில் படபடவென வந்தது அமராவதியின் வார்த்தைகள்...

"என் மனைவி யாருன்னு உங்களுக்குத் தெரியாதா மாம்..." அவரது கண்களை ஊடுருவி பார்த்தபடி கேட்டவனைக் கண்டு அதிர்ந்து போனார் அவர்...

"கண்ணா..." என்றார் அதிர்ச்சி விலகாமல்...

"எஸ்... த சேம் பெர்சன் தான்... அவள் பெயர் ஹரிணி... அவளைத் தான் நான் காதலிக்கிறேன்... அவளைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்... இன்னும் இரண்டு நாளில் அவளுக்கும் எனக்கும் கல்யாணம்..."

அவன் வீசிய அணுகுண்டு கண்டு அமராவதி, ஆராவமுதன், பிருந்தா அனைவரும் திகைத்தனர் என்றால் தீபிகா அதிர்ந்து போனாள்... அவள் ஒன்றும் அவனை விரும்பி நிச்சயம் வரை செல்லவில்லை... ஆனால் நிச்சயத்திற்குப் பின் அவனை மனதார ஏற்றுக் கொள்ள முயற்சி செய்து கொண்டு இருந்தவளுக்கு நிச்சயம் இது பெரிய இடி தான்...

இருந்தாலும் சுதாரித்துக் கொண்டு அவனைப் பார்த்து, "கங்கிராஜூலேசன்..." என்றாள்...

இதை அவள் சொல்லும் போது அவளது மனம் பெரிதாகத் துக்கம் கொள்ளவில்லை... அதில் இருந்தே தெரிந்து கொண்டாள் தனது மனதை... அவன் கூறிய செய்தி தான் அவளுக்கு அதிர்ச்சியாக இருந்ததே தவிர... அவனை இழப்பது ஒன்றும் மிகவும் துக்கமாகவோ, துயரமாகவோ இல்லை... இந்த விசயங்களே அவளது மனதை அவளுக்குத் தெளிவாக எடுத்து உணர்த்தியது...

"தீபி..." ஆராவமுதன் பெருங்குரல் எடுத்து கத்தியவர், "என்ன மாப்பிள்ளை விளையாடுறீங்களா...? ஊரறிய என் பொண்ணை நிச்சயம் பண்ணுவீங்க... ஆனா வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணுவீங்களா... இதுக்கு நாங்க சம்மதம் சொல்லி ஆசிர்வாதம் செய்யணுமா... நான் உயிரோட இருக்கும் வரை இதை நடக்க விட மாட்டேன்..." என்று ஆக்ரோசமாய்ப் பேச...

"அப்போ வெரி சிம்பிள்... உயிரை விட்டுருங்க..." தோளை குலுக்கி அசால்ட்டாய் சொன்னவனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார் அமராவதி...

"என்னடா பேசிட்டே போற... பெரியவங்கங்கிற மட்டு மரியாதை வேண்டாம்... அண்ணா சொன்னதைத் தான்

நானும் சொல்றேன்டா... நீ அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா நான் உயிரை விட்டிருவேன்... அதுக்கு அப்புறம் நீ யாரை வேணும்ன்னாலும் கல்யாணம் பண்ணிக்கோ... இப்போ சொல்லுடா என்னையும் உயிரை விடுன்னு இப்போ சொல்லுடா..." அவனின் சட்டையைப் பிடித்துக் கொண்டு அவர் ஆங்காரமாய்க் கேட்க...

அவர் அடித்தது அவனுக்கு அதிர்ச்சி என்றால் அவரது வார்த்தைகள் அதைவிடப் பேரதிர்ச்சியாய் இருந்தது... அதற்காக அவன் தனது காதலை எந்தக் காலத்திலும் யாருக்காவும் விட்டு கொடுக்க முடியாதே... ஒரு முறை விட்டு கொடுத்து அனுபவித்தது போதும்...

"என்னம்மா பிளாக்மெயில் பண்றீங்களா...? அப்போ நானும் என் ஆயுதத்தைக் கையில் எடுக்க வேண்டியது தான்... சரி நான் ஹனியை கல்யாணம் பண்ணிக்கலை... அதே மாதிரி தீபியையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்... அடுத்தப் பிளைட் பிடிச்சு ஆஸ்திரேலியா போறேன்... என்ன ஓகேவா...?"

எதற்கும் அசையாமல் சவடாலாய் பேசும் மகனை கண்டு திகைத்துப் போனார் அமராவதி... அவனின் குணம் சிறுவயதில் இருந்து அவர் அறிந்த ஒன்று ஆயிற்றே... அவன் சொன்னது போல் ஆஸ்திரேலியா கிளம்பி போய்விட்டால் இங்கே கணவர் ஆசை ஆசையாய் கட்டி காத்த தொழிலின் நிலை என்னவாவது...???

அன்றும் இதே தொழிலை காட்டி தான் அவனது காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்... ஆனால் இன்று அதே தொழிலுக்காக அவனது காதலுக்குச் சம்மதம் தெரிவிக்கும் நிலைக்குத் தான் தள்ளப்பட்டுவிட்டதை உணர்ந்தவரின் நிலை மிகவும் பயங்கரமாய்...

"என்னடா மிரட்டுறியா...?" அப்போதும் விட்டு கொடுக்க முடியாதவராய் அவரது குரல் உயர்ந்தது...

"நான் உங்க பையன்ம்மா..." 'உங்களை மாதிரி எனக்கும் மிரட்ட தெரியும்' என்று சொல்லாமல் சொன்னான் அவன்...

"அந்தளவுக்கு மயக்கி வச்சிருக்கா அவ உன்னை..." வெறுப்பாய் வந்தது அவரது வார்த்தைகள்...

ஹரிணியின் அப்பாவியான தோற்றம் மனக்கண்ணில் வர அன்னையின் வார்த்தையில் அவனுக்குச் சுரீர் என்று கோபம் எழுந்தது...

"தேவையில்லாம ஹனியை பத்தி பேச வேண்டாம் மாம்... நீங்க இதுக்குச் சம்மதிக்கிறீங்களா... இல்லை நான்..." விமானம் பறப்பது போல் அவன் தனது கையால் சைகை செய்ய...

"சரி..." என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தார் அமராவதி...

அதைக் கேட்டு பிருந்தாவின் முகம் வாடியது... "சித்து... இந்த அத்தையைக் கொஞ்சம் கூட நீ நினைச்சு பார்க்கலையே... நான் பெத்த பெண் என்ன பாவம் செய்தாள்...?" பரிதாபமாய்க் கேட்டவரை கண்டு அவனுக்கும் இரக்கம் சுரந்தது...

ஆராவமுதன் போன்ற ஒருவனைத் திருமணம் செய்தது தவிர இந்த அத்தை செய்த தவறு தான் என்ன...? அவருக்கு விளக்கம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் தான் இருப்பதை உணர்ந்து அவரிடம் பேச ஆரம்பித்தான்...

"அத்தை தீபியை நான் எப்போதுமே அப்படி நினைச்சது இல்லை... அவள் என் கூடப் பிறக்கலைன்னாலும் அவள் எனக்குத் தங்கை மாதிரி... அந்த உறவை இப்படிக் கல்யாணம் வரை கொண்டு வந்து கொச்சைப்படுத்தியது அம்மாவும், மாமாவும் தான்... தீபிக்கு தகுந்த மாதிரி நல்ல மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டியது என் பொறுப்பு..." அவன் சொன்னது கேட்டு சிறிது சமாதானம் அடைந்தார் பிருந்தா...

தீபிகா அவன் பேசியதை கேட்டு குழப்பமாய் அவனைப் பார்த்தாள்... நிச்சயம் அன்று பேசிய சித்தார்த்தை நினைத்து பார்த்தவள் அவனுக்கும் இவனுக்கும் மலையளவு வித்தியாசம் இருப்பதை உணர்ந்தாள்... அதே

போல் அன்றும் இன்றும் அவன் பேசிய பேச்சிலும் பெரும் வித்தியாசம் இருப்பதை உணர்ந்தவள் மிகவும் குழம்பி போனாள்...

சித்தார்த்தின் பேச்சு அமராவதி, ஆராவமுதன் இருவரையும் அதிக அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது... அவசரமாய் இருவரும் தங்களுக்குள் பார்வையைப் பரிமாறி கொண்டனர்... அவர்களின் முகத்திலும் குழப்ப ரேகைகள்...

"சரி மாம்... இதுவே ரொம்ப லேட்... நான் தூங்க போறேன் மாம்..." என்றவன், "மாம் நாளைக்குக் காலையில் ஹனி வீட்டில் போய் அவளோட அப்பா, அம்மாவை பார்த்துக் கல்யாணத்தைப் பத்தி பேசிட்டு வரணும்... ரெடியா இருங்க..."

அதைக் கேட்டு வேப்பங்காய்த் தின்றது போல் முகம் அஷ்டகோணலானது அமராவதிக்கு... மனதில் எழுந்த எரிச்சலை வெளியில் காட்ட முடியாமல் அமைதி காத்தார்...

அன்னையைக் கண்டு கொள்ளாது ஆராவமுதன் அருகில் வந்தவன் அவரின் காதுக்கு அருகில் குனிந்து, "என்ன மாமா அதிர்ச்சியா இருக்கா...? இனித்தான் இந்தச் சித்தார்த்தோட கேம் ஸ்டார்ட்... என்னோட ஆட வர போற முதல் ஆள் யாரு தெரியுமா...?" என்று கேட்டவனைக் கண்டு வியர்த்து விறுவிறுத்தது அவருக்கு...

"நீங்க தான்..." என்றவன் சிரித்தபடி தனது அறைக்குச் செல்ல...

அவனது வார்த்தைகள் கொடுத்த அச்சத்தில் அந்த இரவு வேளையிலும் தொப்பலாய் நனைந்து போனார் ஆராவமுதன்... வருங்காலத்தில் தனக்குக் காத்திருக்கும் சோதனைகளை எப்படி எதிர் கொள்வது என்ற வழியறியாது விழித்தார்...

தனது அறைக்குள் நுழைந்த சித்தார்த் வேகமாய்க் கதவை தாளிட்டவன் அடுத்த நொடி தனது சக்தி எல்லாம் வடிந்தார் போன்று படுக்கையில் அமர்ந்தான்... அவனுக்குள் நிகழும்

மாற்றம் அவனுக்கே புதிராய் இருந்தது... அதை விட அவன் செய்த காரியங்கள் அனைத்தும் அவனையும் மீறி எப்படி நடந்தது என்று அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

தான் செய்த காரியம் சரியா...? என்று அவன் மனதுக்குள் நினைத்து மருகும் போதே அவனது மனசாட்சி, 'இல்லை நீ செய்தது சரியில்லை... அன்னை ஸ்தானத்தில் வைத்து பூஜிக்க வேண்டியவளை நீ காதலித்ததே தவறு... இதில் கல்யாணம் வரை கொண்டு சென்றது எப்படிச் சரியாகும்...?' என்று குத்தலாய் கேள்வி கேட்க...

"இல்லை... இல்லை நான் அப்படிப்பட்ட ஆள் இல்லை... இதை நான் செய்யவில்லை... நான் செய்யவில்லை..." என்று தலையைப் பிடித்துக் கொண்டு அலறினான் அவன்...

பிறகு நிதானித்து யோசித்துப் பார்த்தவன் பின் மனம் பதறியவனாய் சுற்றும் முற்றும் யாரையோ விழிகளால் தேடியபடி, "சித்து... நீ இங்கே தான் எங்கேயோ இருக்க... எங்கேடா இருக்க...? ப்ளீஸ்... என் கண் முன்னாடி வாடா..." என்று காற்றில் கலந்துவிட்ட தனது சகோதரனிடம் கெஞ்சி கதறிக் கொண்டிருந்தான் சைதன்யா என்கிற சைதன்யராம்... சித்தார்த் ராமுடன் ஒட்டி பிறந்த இரட்டை அவன்...

நீயாவேன்...

## நான் : 8

"ப்ளீஸ் வா சித்து... என் கண் முன்னாடி வாடா..." சகோதரனை கத்தி கூப்பிட்ட சைதன்யாவின் கண்கள் அவனைத் தவிர வேறு யாரும் இல்லாத அந்த அறையைச் சுற்றி வேகமாய் வலம் வந்தது...

"சித்து... சித்து... சித்து..." சித்தார்த்தை காணாது தவித்தவன் பைத்தியக்காரன் போல் கதறியபடி அவனைத் தேடி அறைக்குள் ஓடினான்...

அவனது கூக்குரலுக்குச் சித்தார்த்திடம் இருந்து எந்தவித பதிலும் இல்லை... ஆனால் சைதன்யாவிற்குத் தெரியும் அவன் இங்கு எங்கோ தான் இருக்கிறான் என்று... ஏனெனில் தன்னை வழி நடத்துபவன் அவன் தான் என்பது அவனுக்கு நன்கு தெரியும்...

"ப்ளீஸ் சித்து... என்னை உயிரோடு சாகடிக்காதே... ஏற்கெனவே நான் குற்றவுணர்ச்சியில் தவிச்சிட்டு இருக்கேன்..." கண்கள் கலங்க கூறியவன் அங்கிருந்த கண்ணாடியின் முன்னிருந்த மேசை மீது கைகளை ஊன்றி தலை கவிழ்ந்து நின்றான்... தன் மனத் தவிப்பை அடக்கும் பொருட்டு மேசையைத் தனது கைகளால் இறுக பற்றிக் கொண்டான்...

அப்போதும் அவன் தேடலுக்கான விடை கிடைக்காமல் அமைதி மட்டுமே நிலவ சைதன்யா பரிதவிப்புடன் நிமிர்ந்தான்... அப்போது கண்ணாடியில் தெரிந்த அவனது பிம்பத்தைப் பார்த்தவன் அப்படியே அதிர்ந்து போய்ப் பின்னால் நகர்ந்தான்...

ஏனெனில் கண்ணாடியில் தெரிந்த அவனது பிம்பம் சிரித்தபடி அவனைப் பார்த்தது... ஆனால் உண்மையில் அவன் அழுது வடிந்து கொண்டல்லவா இருக்கிறான்... ஏதோ நினைத்தவனாய் அவன் சிறிது தள்ளி நகரக் கண்ணாடியில் இருந்த அந்தப் பிம்பமும் அவனோடு சேர்ந்து நகர்ந்தது...

அது தன்னோடு நகர்ந்தாலும் அது தான் இல்லை என்பது சைதன்யாவிற்கு நன்கு புரிந்தது... அப்படி என்றால் இது...???

"சித்து..." கைகள் நடுங்க கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தை ஆசையுடன் வருடினான்...

அது அவனுடன் பிறந்த இரட்டைப் பிறவி சித்தார்த் என்பது நன்கு புரிந்தது... சகோதரர்கள் என்ற உறவை தாண்டி நண்பர்கள் போல் ஒட்டி உறவாடி திரிந்தவர்கள் அவர்கள்... எந்த நேரத்திலும் அவர்களுக்குள் தன்மானப் பிரச்சினை எழுந்தது இல்லை... அந்தளவுக்கு ஒருவருக்கு ஒருவர் விட்டு கொடுத்து பாசத்தோடு நடந்து கொள்வார்கள்... அனைவரும் பொறாமை படும் அளவுக்கு அன்பு உடையவர்கள் அவர்கள் இருவரும்...

அப்படிப்பட்ட பாசமலர்களில் ஒரு மலர் கருகாகி போனதை நினைத்து சைதன்யாவின் மனம் துயரம் கொண்டது...

"சித்துப் பேசுடா..." என்றான் சித்தார்த்திடம்... அதற்கு அவனிடத்தில் இருந்து பதில் இல்லை...

ஆனால் அதற்கான பதில் சைதன்யாவிற்குள் இருந்து ஒலித்தது...

'தனு குட்டி...' தனக்குள் ஒலித்த அந்தக் குரலில் சைதன்யாவின் உடல் பரபரத்தது...

"இது... இது... சித்துவின் குரல் அல்லவா..." என்று வாய்விட்டு சொன்னவன், "சித்து நீ எங்கேடா இருக்க...?"

'உனக்குள் தான்டா நான் இருக்கேன்...நான் தான் நீ... இனி நீ தான் நான்...'

"அப்போ நீ தான் ஹனி... சாரி ஹரிணியை அழைச்சிட்டு போக வச்சது... கல்யாணம் வரை கொண்டு வந்தது எல்லாம் நீ தானா...?"

'ஆம்... நானே தான்... என்னால் உன்னை, உன் உணர்வுகளை எளிதாய்க் கட்டுப்படுத்த முடியும்...'

அந்தப் பதிலில் வேதனையுடன் தலையில் அடித்துக் கொண்டான் சைதன்யா...

"என்ன பண்ணி இருக்கச் சித்து... அவள் நீ காதலிச்ச பெண்... அதுவும் நீ உருகி உருகி காதலிச்ச பெண்... அவளைப் போய் நான் எப்படி...? அவள் எனக்கு அண்ணி மாதிரி சித்து... அவளை எப்படி என் மனைவியா ஏத்துக்கறது... வேண்டாம்... இந்தக் கல்யாணத்தை நான் இப்பவே நிறுத்த போறேன்..." சைதன்யா படபடத்தான்...

'ஏன் நீ அவளைக் காதலிக்கலையா...?' அமைதியாய் ஒலித்த குரலில் சைதன்யாவின் மனம் குற்றவுணர்வில் தவித்தது...

அண்ணன் காதலித்த பெண் என்று தெரியாமல் அவளிடத்தில் காதலில் விழுந்த அவனின் நிலை மிகவும் பயங்கரமாய் இருந்தது...

"அது உண்மை தெரியாத போது... இப்போ அப்படி இல்லை..." இதைச் சொல்லும் போதே அவன் குரல் தடுமாறியது...

'பொய் சொல்ற தனு... அவளை உனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்... அது எனக்கும் தெரியும்... உனக்கும் தெரியும்... பிறகு எதுக்குப் பொய் சொல்ற...? ஏன் நான் காதலித்த பெண் என்பதாலா...? ஆனால் நான் தான் உயிரோடு இல்லையே... நீயே சொல்லு விதவைகளே மறுவாழ்வு பெறும் இந்தக் காலத்தில் என்னைக் காதலித்த பாவத்திற்காகக் காலம் முழுவதும் என்னை நினைச்சு அழுதுட்டு கன்னியாய் அவள் வாழ்க்கை முடிய வேண்டுமா...? அப்படி என்ன பாவம் செய்தாள் அவள்...? என்னைக் காதலித்ததைத் தவிர... நிம்மதியாய் இருந்த அவளின் வாழ்க்கையில் பெரிய சலனத்தை ஏற்படுத்திட்டு இப்போ நான் தவிக்கிறது எனக்கு மட்டும் தான் தெரியும்... என் தவிப்பை போக்குறதுக்காகவாவது நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்கோ தனு...'

'நான் சாகும் போது இந்தச் சொத்துக்களை விட்டு போறேன்னோ இல்லை அம்மாவை விட்டு போறேன்னோ கூடக் கவலைப்படலை... ஏன்னா என்னை விட்டா அம்மாவுக்கு நீ இருக்க... அவங்களை நீ நல்லா பார்த்துக்குவேன்னு எனக்கு நம்பிக்கை இருந்தது... ஆனா அவள்...? அவளுக்கு என்னை விட்டா யார் இருக்காடா...? அவள் என் கிட்ட காதலை சொல்லலைன்னாலும் என் மேல் அவளுக்குக் காதல் இருந்ததுன்னு எனக்கு நல்லா தெரியும்... அவளை மாதிரி ஒரு பொண்ணு அவ்வளவு எளிதா காதலிச்சவனை மறந்து வேறு ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்க மாட்டா... இப்போ என் இடத்தில் இருப்பவன் நீ... நீ தான் எனக்குப் பதில் அவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்... அவளை நல்லா வச்சிக்கணும்... அவளுக்குக் காலம் முழுவதும் நீ பாதுகாப்பா இருக்கணும்... அவளும் அவள் காதலிச்ச ராமோட வாழுறோம்ங்கிற திருப்தியில் காலம் முழுவதும் சந்தோசமாய் வாழணும்...'

"இருந்தாலும் சித்து... நான் உன்னளவுக்கு நல்லவன் இல்லை... நான் கெட்டவன் ரொம்ப ரொம்பக் கெட்டவன்... அதை விட அவள் என்னை நீ என்றே நம்புகிறாள்... இந்தப் பொய்யை எப்படி நிரந்தரமாய்ச் சொல்ல முடியும்...? என்றாவது ஒருநாள் அவளுக்கு இந்த உண்மை தெரிய வரும் போது...?" அந்த நிலையை நினைத்து பார்க்கும் போதே சைதன்யாவிற்குப் பயங்கரமாய் இருந்தது...

அண்ணன் காதலித்த பெண் என்று ஹரிணியை அவன் மறுத்தாலும் சீட்டு கட்டு மாளிகை போல் பொய் மேல் பொய்யாய் அவன் போடும் வேசம் என்று களைய கூடுமோ...? அந்த நேரம் அவளது நிலைமையை மட்டுமே அவன் யோசித்துப் பார்த்தான்... தன்னைப் பற்றிக் கூட அவன் யோசித்துப் பார்க்கவில்லை...

"வேண்டாம் சித்து... இந்த விபரீத விளையாட்டு வேண்டாம்..." என்றவன், "பேசாம நான் உயிரை விட்டிர்றேன்... என் உடம்பில் நீ புகுந்து ஹரிணியுடன் சேர்ந்து சந்தோசமா வாழு... எப்போ நீ இறந்தது

தெரிஞ்சதோ அப்பவே எனக்கு வாழும் ஆசையே போயிருச்சுடா... நான் செத்து போறேன்டா..." வேதனை தாங்க முடியாமல் அவனது கண்கள் கலங்கியது...

'நீ ஏண்டா சாகணும்... என் விதி முடிஞ்சு போச்சு... அதை மாத்தி எழுத யாராலும் முடியாது... மாண்டவன் மீண்டும் உயிர்ப்பது இல்லை... அதே போல் இறந்த நான் மீண்டும் உயிர்ப்பித்து வாழணும்னு நினைப்பதில் அர்த்தமும் இல்லை... எனக்கு அந்த ஆசையும் இல்லை... என் ஆசை ஒன்றே ஒன்று தான்... அது ஹரிணியை நீ கல்யாணம் பண்ணிட்டுச் சந்தோசமாக இருக்கணும்... அவ்வளவு தான்...'

"ம்ப்ச்... நான் எப்படி அவளை...? கொஞ்சம் யோசிச்சு பாரு சித்து... உன்னை மாதிரி நான் இல்லை எல்லாக் கெட்ட பழக்கங்களும் உள்ளவன்... ஏற்கெனவே அவளுக்கு என் மேல் சந்தேகம் இருக்கு... நீ நானில்லை என்று..."

'உன்னை எனக்கு நல்லா தெரியும் தனு... என்னை விட நீ ரொம்ப ரொம்ப நல்லவன்னும் எனக்குத் தெரியும்... நீ ஏன் இப்படி மாறினேன்னும் எனக்குத் தெரியும்... இது எல்லாமே இடையில் வந்தது... இடையில் போகட்டும்... ஹரிணியைக் காதலிச்சதுக்குப் பின் இத்தனை நாளில் நீ எந்தப் பெண்ணையாவது தொட்டு இருக்கியா...' சித்துவின் கேள்விக்குச் சைதன்யாவிடம் பதில் இல்லை...

அதுவும் உண்மை தான்... ஹரிணியைக் காதலித்த பின் எந்தப் பெண்ணிடத்திலும் அவனது மனம் செல்லவில்லை... யாரையோ பழிவாங்க அவன் வெற்றிகரமாகத் தொடர்ந்த பெண் சகவாசம் ஒரு பெண்ணின் காதல் முன்னால் மண்ணைக் கவ்வியதை அவனும் அறிவான்... ஆனாலும்...???

"வேண்டாம் சித்து... என்னத்தான் இருந்தாலும் அவள் நீ காதலித்த பெண்.... நீ எப்படி அவளை உருகி உருகி காதலிச்சேன்னு உன் டைரியை படிச்சு நான் தெரிஞ்சுக்கிட்டேன்... அவளைக் கல்யாணம் பண்ணி அந்தக் காதலை கேவலப்படுத்த சொல்றியா சித்து...

என்னால அது முடியாதுடா... முடியவே முடியாது..." தனக்குள் கரைந்தான் சைதன்யா....

'என்னை விட நீ அவளை உயிருக்கு உயிராய் காதலிக்கலை...? ஹரிணியைப் பத்தி உனக்கு எப்படிச் சொல்றதுன்னு நான் தவிச்சிட்டு இருந்தப்பத்தான் அவளே உனக்கு ஃபோன் பண்ணினா... நான்னு நினைச்சு உன் கிட்ட எல்லாத்தையும் சொன்னா... அப்பவே உனக்கு அவள் மேல் ஏதோ ஒன்று தோன்றவில்லை...? அந்த நொடி நேரத்தை நான் எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு உன்னில் நுழைந்து அவளை உனக்கு அடையாளம் காட்டினேன்... அதன் பின் அவளை நேரில் பார்த்த போது காதலில் விழவில்லை...? அப்போதே நீ அவளைக் காதலிக்கத் தொடங்கிவிட்டாய் தனு... உன் மனதில் என்னை இருத்தி கொண்டு தான் அவளை விட்டு விலகி நின்ன... ஆனால் அவளது எண்ணம் உன் மனசை விட்டு போகவே இல்லை... இது தப்புன்னு உன் மனசை நீ கட்டுப்படுத்திக்கிட்டு இருந்தே... எல்லாம் எனக்குத் தெரியும்... உன் கூடவே இருந்து உன்னைப் பார்த்துக் கொண்டு தான் இருந்தேன்... உன் காதல் மேல் எனக்கு நம்பிக்கை இருந்தது... அதனால் ஹரிணியை நீ கல்யாணம் பண்ண முயற்சி எடுப்பேன்னு நானும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தேன்... நீ முயற்சி எடுக்கவே இல்லை... இன்று கூட அவளை ஹோட்டலில் வேறு ஒருத்தனுடன் பார்த்ததும் உனக்கு எப்படிக் கோபம் வந்ததுன்னு எனக்குத் தெரியும்... ஆனால் நீ அப்போதும் என்னை மனதில் நிறுத்தி ஹரிணியை விட்டு விலகி நின்ன... இதுக்கு மேல் பார்த்துட்டு சும்மா இருக்க முடியாம தான் நான் உன் உணர்வுகளோடு கலந்து உன்னைச் செயல்படுத்த வச்சேன்...'

சித்தார்த்தின் குரல் ஆழத்தில் இருந்து ஒலிப்பது போல் சைதன்யாவினுள் ஒலித்தது...

'நான் ஏன் இவ்வளவு நாளா விலகி இருந்தேன்னு நீ நினைக்கலாம்... அதுக்குக் காரணம் காதல் பரிதாபத்தில் வர கூடாது... அது உணர்ந்து வரணும்... நீ அவளை

உணரணும், உன் மனதை உணரணும்ன்னு தான் நான் பொறுமையா இருந்தேன்... ஆனால் நீ இதை எல்லாம் உணர்ந்தாலும் கடைசி வரை அதுக்கான முயற்சி எடுக்கவே இல்லை... சரி அதை விடு... எனக்காக அவளைக் கல்யாணம் பண்ணி கொள்வாயா...? மாட்டாயா...?'

சித்துவின் குரலுக்குச் சைதன்யாவிடம் பதில் இல்லை...

'அப்போ நீ ஹறிணியைக் கல்யாணம் பண்ணிக்காம தீபியை கல்யாணம் பண்ணிக்கப் போறியா...? தீபி நல்ல பெண் தான்... ஆனால் கல்யாணத்திற்கு அது மட்டும் போதாதே... உன்னை விடு... என்னை விடு... ஹறிணியைக் கொஞ்சம் நினைத்து பார்... காதலன் இறந்துட்டான்னு தெரிஞ்சா அவளோட முடிவு என்னவாக இருக்கும்... வீணே ஒரு பெண் உயிர் போவதற்கு நீ காரணமாய் இருக்கலாமா...?'

விசயம் தெரிந்தால் நிச்சயம் ஹறிணி உயிரை விட்டு விடுவாள் என்று அவனுக்கு நன்கு தெரியும்... அதைச் சித்துவின் வாய்மொழியாகக் கேட்டதும் சைதன்யாவின் மனமும், உடலும் பதறியது...

'இவ்வளவு காதலை அவள் மேல் வச்சிட்டு அவளை வேண்டாம்ன்னு சொல்றியே தனு...' சித்துவின் குரல் கெஞ்சியது...

"நீ காதலித்த பெண்ணை..." மீண்டும் இழுத்தான் சைதன்யா... ஏனோ இந்தத் திருமணத்தில் அவனுக்கு மனம் ஒப்பவில்லை...

'நீ வேறு நான் வேறா தனு... அப்போ அவள் எச்சில் பழம்ன்னு நீ நினைக்கிறியா...?'

"சித்து..." என்று அலறிவிட்டான் சைதன்யா...

ஹறிணியை அது போல் நினைக்கத் தோன்றவில்லை... அதை விடத் தன் சகோதரனை அந்த விசயத்தில் தவறாக நினைத்து சந்தேகப்பட முடியவில்லை...

"இல்லை நான் அப்படி எல்லாம் அவளைச் சந்தேகப்படலை சித்து... அதை விட உன்னைப் போய் நான் சந்தேகப்படுவேனா... அவள் எந்த நிலையில் இருந்தாலும் நான் ஏற்றுக் கொள்வேன் சித்து... அந்தளவுக்கு நான் அவளைக் காதலிக்கிறேன் சித்து..." என்றவன் முகத்தை அழுந்த துடைத்து அலைப்பாயும் தன் மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு,

"ஓகே சித்து ஹரிணியை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்... ஆனால் உண்மையை எல்லாம் எடுத்து சொல்லிட்டுக் கல்யாணம் பண்ணிக்கிறேன்..."

'உண்மை தெரிந்தால் அவள் செத்து விடுவாளடா முட்டாள்...' சித்துவின் குரல் கோபத்துடன் ஒலித்தது...

"ம்... ம்..." சுரத்தில்லாமல் முனங்கினான் சைதன்யா...

'சரி தனு... உன் முடிவு கேட்டு எனக்கு ரொம்பச் சந்தோசமாய் இருக்கு... நான் போய் வருகிறேன்... என் ஆத்மா சாந்தி அடையாமல் தவித்தது எல்லாம் ஹரிணிக்கு ஒரு நல்ல வழி காட்டத்தான்... அந்த வழி நீ தான் என்று நினைத்துக் கொண்டே தான் இறந்தேன்... அதை நடத்தியும் முடித்துவிட்டேன்... இனி நான் போய் வருகிறேன் தனு... நீ உன் மனைவியோடு சந்தோசமாய் இரு...' விடைப்பெற தயாரானது சித்தார்த்தின் ஆன்மா...

"சித்து... வேண்டாம் போகாதே... உன்னைக் கொன்றவர்களை நீ பழிவாங்க வேண்டாமா...? அதுக்கு எனக்கு நீ உறுதுணையாய் இருக்கணும் சித்து..." அந்தப் பாவிகளை எண்ணி ஆத்திரத்துடன் பற்களைக் கடித்தான் சைதன்யா...

விடைப்பெற துடிக்கும் தமையனிடம் நீதிக்கு போராட வேண்டிய அவசியத்தைக் கூறி இவன் துடித்தான்...

'பழிவாங்க இது என்ன சினிமாவா தனு...? இது வாழ்க்கை தனு... நீ எந்தப் பிரச்சினையிலும் மாட்டிக்காம சந்தோசமா, நிம்மதியா உன் மனைவியோடு வாழும் வழியைப் பார்...

இதை நான் ஏன் சொல்கிறேன் என்று உனக்கு இப்போது புரியாது... தேவையில்லாமல் சிக்கலில் மாட்டி கொள்ளாதே... நான் போகிறேன்...' அது தான் கடைசியாய் ஒலித்த சித்தார்த்தின் வார்த்தைகள்... அதன் பின் சித்தார்த்திடம் இருந்து எந்தவித பதிலும் இல்லை...

சித்துவின் ஆன்மா சகோதரனிடம் பல உண்மைகளைச் சொல்லாமல் சென்றது... அது கூடச் சைதன்யாவின் நன்மைக்காகத் தான்... ஆனால் அதைக் கூறியிருந்தால் பின்னால் நிகழப் போகும் பல விபரீதங்களைத் தடுத்து இருக்கலாம்...

"சித்து... சித்து..." சைதன்யா எங்குத் தேடியும் சித்தார்த் வரவே இல்லை...

"சித்துப் போய்ட்டியாடா..." அவனைக் காணாது உணராது கண்கள் கலங்கியவன் அப்படியே திக்பிரம்மை பிடித்தார் போன்று நின்று இருந்தான்...

தொழிலை காப்பாற்றுவதற்காக அன்னைக்காகச் சித்தார்த்தாக வேடமிட்டவன் இன்று காதலுக்காகத் தன் சுயத்தை இழந்து தன்னையும் இழக்க போகிறான்... அது எந்தளவிற்கு நடைமுறையில் சாத்தியம் என்று அவனுக்குத் தெரியவில்லை... பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது அவனுக்கு...

உள்ளுக்குள் சைதன்யாவாக வெளியில் சித்தார்த்தாக நடிப்பது பெரும் அவஸ்தையாக இருந்தது... தன் விருப்பம் போல் முன்பு வாழ்ந்த வாழ்க்கைக்கு அவன் மனம் ஏங்கியது...

அதைவிட இனி வரும் சவாலான விசயங்களை முறியடித்து முன்னேறுவது ஒன்றும் அவ்வளவு எளிது அல்ல என்றே அவனுக்குத் தோன்றியது... அதற்காகத் தான் அதில் இருந்து ஒரு போதும் பின் வாங்க போவதில்லை என்பதிலும் அவன் உறுதியாக இருந்தான்...

சகோதரனை கொன்றவனைப் பழிக்கு பழி தீர்த்தால் மட்டுமே அவனது மனக்கொந்தளிப்பு அடங்கும்... ஆத்திரத்தில் கை முஷ்டியை மடக்கி சுவற்றில் ஓங்கி குத்தினான்... அது கொடுத்த வலி கூட அவனின் மனதின் வலியை போக்குவதாய் இல்லை...

படுக்கையில் படுத்தவனுக்கு உறக்கம் என்பது அறவே இல்லை... காதல் ஒரு பக்கம், அந்தக் கயவர்கள் ஒரு பக்கம் என்று அவன் மனதை ஆட்டி படைத்துக் கொண்டு இருந்தனர்...

மறுநாள் ஹரிணியின் வீட்டிற்கு வேண்டா வெறுப்பாய் கிளம்பிய அமராவதியை கண்டு கொள்ளாமல் காரை கிளப்பினான் சித்தார்த்... (இனி கதை முழுக்கச் சைதன்யா சித்தார்த்தாகவே வலம் வருவான்) அன்னையை விட அவனது மனம் பெரும் குழப்பத்தில் இருந்தது...

ஆராவமுதன் இன்று வரவில்லை... அவர் வராததும் நன்று என்றே நினைத்தான் அவன்... அவனுக்கு இருக்கும் கோபத்தில் அவரை ஏதாவது செய்துவிடுவான்... அந்தளவுக்கு அவர் மீது ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது... நெருங்கிய உறவினரான அவரது துரோகத்தை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை...

ஹரிணி வீடு இருக்கும் தெரு திரும்பும் பிரதான சாலையில் காரை நிறுத்தியவன் அன்னையை இறங்க சொல்ல...

அமராவதி சுற்றும் முற்றும் பார்த்தபடி, "கண்ணா நான் வரலை... இந்த மாதிரி தெருவில் இறங்கி நடப்பது எனது தகுதிக்கு அசிங்கம் கண்ணா..." அருவருப்பில் முகம் சுளித்தவராய்...

"மாம்... நீங்க கண்டிப்பா வந்து தான் ஆகணும்... இங்கே இருந்து தான் நம்ம வீட்டுக்கு மருமகள் வர போகிறாள்... அவள் வீட்டுக்கு நீங்க வராம இருக்கிறது நீங்க அவளை மட்டும் இல்ல என்னையும் சேர்த்து அவமானப்படுத்துற மாதிரி இருக்கு... ப்ளீஸ் மாம் வாங்க..."

மகனின் கெஞ்சுதல் அவரை அசைத்ததா இல்லை ஏதோ ஒரு நினைவு அவரைக் கலங்கடித்ததா ஏதோ ஒன்றில் சட்டென்று கீழே இறங்கினார்...

ஹரிணி வீட்டிற்குச் செல்லும் அந்தக் கொஞ்ச தொலைவு வீதியில் நடக்கவே அமராவதிக்குச் சங்கடமாக இருந்தது... அவரது கௌரவத்திற்கு அது மிகப் பெரிய இழுக்காகவே அவர் எண்ணினார்... மனதிற்குள் மகனை வசைப்பாடியபடி நடந்தார்...

ஹரிணி வீட்டு கதவை சித்தார்த் தட்டியதும் பத்மா தான் கதவை திறந்தார்... மகளைப் பற்றிய விசயத்தை நேற்றிரவே சந்தோஷ் மூலம் அறிந்து கொண்டவர் இரவு எல்லாம் தூங்காமல் கவலையில் அழுது கரைந்தார்... அதன் எதிரொலி அவரது முகத்தில் பிரதிபலித்தது...

சித்தார்த்தை கண்டதும் பத்மாவின் ஆத்திரம் இன்னமும் அதிகரித்தது...

"பாவி... என் மகளை என்னடா பண்ணினே...? எங்கே கொண்டு வச்சிருக்க... நீ தான் அவளைக் கைக்கழுவி விட்டுட்டு வேற கல்யாணம் பண்ணிக்க இருந்தியே... அப்புறம் எதுக்கு ஹரிணியைக் கடத்திட்டு போன...? என் மகளை நிம்மதியா இருக்க விட மாட்டியா...? இன்னும் என்ன பண்ண காத்திருக்க...?" அடக்கப்பட்ட குரலில் என்றாலும் அவரின் கோபம் அதில் அப்பட்டமாய்ப் பிரதிபலித்தது... அவரது சத்தம் கேட்டு ரங்காச்சாரி அங்கே விரைந்து வந்தார்...

"ப்ளீஸ் ஆன்ட்டி... நான் சொல்றதை கேளுங்க... இவங்க என்னோட அம்மா... ஹரிணியை முறைப்படி பெண் கேட்டு தான் வந்திருக்கோம்... அவளை நான் கடத்திட்டு போகலை... அவள் பத்திரமா இருக்கா..."

அவன் சொன்னதைக் கேட்டு ரங்காச்சாரி வாயை திறந்தார்...

"உங்களுக்கு அப்படி என்ன கெடுதல் பண்ணினோம் அம்பி... அவளைக் காதலிச்சிட்டுக் கை விட்டுட்டு இப்போ அவளுக்கு வேற மாப்பிள்ளை பார்த்திருக்கிற நேரத்தில் இப்படி வந்து பேசறேளே... இது நியாயமா...? இப்ப இந்த மாப்பிள்ளையை வேண்டாம்ன்னுட்டு உங்களுக்கு என் பொண்ணைக் கட்டி கொடுத்தா ஊர் உலகம் எங்களை என்ன பேசும்...? என் பொண்ணைக் கேவலமா பேசாதா... இதுக்குப் பேரு கல்யாணம் இல்லை வேற..." 'கூட்டி கொடுப்பது' என்ற அந்த வார்த்தையைச் சொல்ல விருப்பம் இல்லாதவராய் அவர் நிறுத்தினார்...

"தயவுசெஞ்சு நீங்க போங்கோ... என் பொண்ணை அந்தப் பையனுக்குத் தான் கல்யாணம் பண்ணி கொடுப்பேன்... நீங்க நிச்சயம் பண்ணின பொண்ணை நீங்க கல்யாணம் பண்ணிக்கோங்க... அது தான் சரி... என் பொண்ணைத் திருப்பி எங்க கிட்ட ஒப்படைச்சிருங்கோ உங்களுக்குப் புண்ணியாம போகும்..." சித்தார்த்தை நோக்கி அவர் கையெடுத்து கும்பிட...

"என்ன அங்கிள் இது...?" அவன் பதறி போய் அவர் கையைப் பற்றிக் கீழிறக்கினான்...

"நாங்க எல்லாம் சாமானியப்பட்டவா... உங்களை மாதிரி பணக்காரா இல்லை... மான அவமானம் பார்க்காம வாழ்றதுக்கு..."

ரங்காச்சாரியின் இந்த வார்த்தை அமராவதியை உசுப்பி விட்டது... பேசினால் தன் கௌரவம் போய்விடும் என்று அதுவரை அமைதியாய் இருந்தவர் இப்போது அதே கௌரவத்திற்காக வாய்த் திறந்தார்...

"பணக்காரங்களுக்கு மான அவமானம் இல்லைன்னு உங்களுக்கு யாருங்க சொன்னது...? இதோ இப்ப உங்க வீடு தேடி வந்து பெண் கேட்கிறது கூட எனக்கு அவமானமா தான் இருக்கு... அதுக்காக நான் வராமலா இருந்தேன்..." என்று அவர் படபடக்க...

"மாம்..." என்று சித்தார்த் அவரை அதட்ட...

"அப்படி ஒரு அவமானம் நீங்க பட வேண்டாம்மா... நீங்க போகலாம்... உங்க மகன்ட்ட சொல்லி எம் பொண்ணைத் திருப்பி அனுப்ப சொல்லுங்கோ... அது போதும்..." பத்மா அமராவதிக்கு பதிலடி கொடுக்க...

"இது எனக்குத் தேவையாடா..." என்று அமராவதி மகனை முறைக்க...

சித்தார்த் தான் இடையில் மாட்டி கொண்டு முழித்தான்...

"ப்ளீஸ் உங்க பிரச்சினையைப் பேசாதீங்க..." என்று பொதுவாகக் கூறியவன், ஹரிணி பெற்றோரிடம் திரும்பி, "இப்ப முடிவா என்ன சொல்றீங்க...? ஹரிணியை எனக்குக் கல்யாணம் பண்ணி கொடுக்க முடியுமா... முடியாதா...?" தீர்மானமான குரலில் கேட்டான்...

"எங்க முடிவை நாங்க ஏற்கெனவே சொல்லிட்டோம் அம்பி..." அவனை விடத் தீர்மானமாய்ப் பதில் சொன்னார் பத்மா...

எல்லோரையும் கூர்மையாய் ஒரு முறை அளவிட்டவன் பின், "எங்க கல்யாணம் உங்க எல்லோருடைய சம்மதத்தோட நடக்கணும்ன்னு ஆசைப்பட்டேன்... ஆனா அது நடக்காதுன்னு இப்ப தெரியுது... ஓகே... இப்போ நான் சொல்றதை கேட்டுக்கோங்க... நாளைக்குக் காலையில் உங்க பொண்ணுக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கப் போகுது... அதுக்கு நீங்க வரலைன்னாலும் பரவாயில்லை... உங்க ஆசிர்வாதத்தை நீங்க இங்கே இருந்தே கொடுங்க..." என்றவன் தன் அன்னையிடம்,

"போகலாம் மாம்..." என்றபடி கிளம்ப எத்தனிக்க...

"இந்தக் கல்யாணம் நடக்காது... இதை எப்படித் தடுத்து நிறுத்தறதுன்னு எங்களுக்குத் தெரியும்... எங்க சம்பந்தியும் சமூகத்துல பெரிய ஆள் தான்... கைலாஷ் தம்பி உங்களைச் சும்மா விட மாட்டார்..." பத்மாவின் பொறுமலில் சித்தார்த் அப்படியே தேங்கினான்...

"யாரை சொல்றீங்க... சிவா இன்டஸ்ட்ரீஸ் ஓனரையா சொல்றீங்க...?" பத்மாவிடம் அவன் கேட்க...

பத்மா பெருமையுடன், "அவரே தான்... அவரோட தம்பி தான் எங்க மாப்பிள்ளை..." என்றார் கர்வமாய்...

அதைக் கேட்டு ஏளனமாய் அவரைப் பார்த்தவன், "தொழிலில் என்னை ஜெயிக்க முடியாதவன்... இதில் என்னை ஜெயிச்சுடுவானா... ம்... குட்... அதையும் பார்க்கலாம்... இதைச் சவாலாவே நான் எடுத்துக்கிறேன்... அவன் கிட்ட சொல்லுங்க... ஹரிணியை ராம் இன்டஸ்ட்ரீஸ் ஓனர் சித்தார்த் ராம் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறான்னு... அவனால முடிஞ்சதை செய்யச் சொல்லுங்க..." சவாலாய் சொல்லியவன் அன்னையை அழைத்துக் கொண்டு விறுவிறுவெனச் சென்றுவிட்டான்...

அவனது பேச்சில் ஹரிணியின் பெற்றோர் விக்கித்துப் போயினர்...

அமராவதி மனதிற்குள் சந்தோசம் பொங்க அருகில் அமர்ந்திருந்த மகனை பார்த்தார்... காரை ஓட்டி கொண்டு இருந்த சித்தார்த்தின் முகமோ இறுகி போய் இருந்தது...

"இன்னமும் அந்தப் பொண்ணு உனக்கு வேணுமா கண்ணா... கல்யாணம்ங்கிறது சந்தோசமா பண்ணிக்கணும் இப்படிப் பிரச்சினையோட பண்ணிக்கக் கூடாது... அந்தப் பொண்ணு உனக்கு வேணாம் கண்ணா... நம்ம அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி கௌரவமா நம்ம தீபியை கல்யாணம் பண்ணிக்கோ..." என்ற அன்னையை முறைத்து பார்த்தவன்,

"இதுவும் என் கௌரவப் பிரச்சினை தான் மாம்..." என்றான் கைலாஷை மனதில் நினைத்துக் கொண்டு...

"கண்ணா..." அமராவதி மேலே பேசும் முன் கையமர்த்தித் தடுத்தவன்,

"இதைப் பத்தின பேச்சு இனி வேண்டாம் மாம்..." என்று திருமணப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்து ஹரிணி தான்

மணப்பெண் என்பதை மறைமுகமாக அறிவுறுத்தி விட்டான்...

தன் பேச்சிற்கு மதிப்பில்லை என்று தெரிந்ததும் அமராவதியின் கோபம் அந்த ஹரிணியின் மீது திரும்பியது...

'என் வீட்டுக்கு தானே நீ வந்தாகணும்... வாடி உன்னை நல்லா கவனிக்கிறேன்...' 'கவனிக்கிறேன்' என்ற வார்த்தையை அழுத்தமாய்த் தன்னுள் பதித்துக் கொண்டார்...

மறுநாள் கல்யாண மண்டபத்தில் மணவறையில் அமர்ந்து இருந்த சித்தார்த் எந்தவித பதற்றமும் இல்லாமல் அய்யர் சொன்ன மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு இருந்தான்...

அமராவதி அடிக்கடி மண்டபத்தின் வாயிலை பார்த்துக் கொண்டு இருந்தார் ஹரிணியின் வரவிற்காக... ஆம் மணப்பெண் ஹரிணி இன்னமும் வந்து சேரவில்லை... சித்தார்த் தான் பிரச்சினை வரும் என்று முகூர்த்த நேரத்திற்கு ஐந்து நிமிடத்திற்கு முன்பாக வர அவளை அழைத்து வர சொல்லி வேதாந்தத்திடம் கூறி இருந்தான்... அவன் சொன்னது போல் பிரச்சினை கைலாஷ் குடும்பத்தினர் மற்றும் ஹரிணியின் குடும்பத்தினர் ரூபத்தில் அங்கே காத்துக் கொண்டு இருந்தது...

அவர்கள் காவல்துறையை அணுகி திருமணத்தை நிறுத்துவதற்காக அவர்களை இங்கே அழைத்து வந்திருந்தனர்...

அங்கு வந்த காவல்துறை அதிகாரி சித்தார்த்திடம் விசாரணை நடத்திய போது அவனோ அசால்ட்டாக, "இவர்கள் யார் என்னன்னு எனக்குத் தெரியாது... நான் ஹரிணி என்ற பெண்ணைக் காதலித்தது என்னமோ உண்மை தான்... அவள் இவர்கள் பெண் தானான்னு எனக்குத் தெரியாது... அவள் வந்ததும் அவளிடமே

விசாரித்துக் கொள்ளுங்கள்..." என்று கூறி முடித்துக் கொண்டான்...

இரு இடமும் பெரிய இடம் என்பதால் காவல்துறையும் அடக்கி வாசித்தனர்... சட்டப் பிரச்சினையைக் கிளப்பினால் சித்தார்த் அவமானப்படுவான் என்று நினைத்த கைலாஷ்க்கு அவனின் திமிரான இந்தப் பதில் கொதிப்பை உண்டாக்கியது... அதே போல் மறைமுகமாகச் சித்தார்த்தை எதிர்க்க அவன் போட்ட திட்டம் எல்லாம் தவிடு பொடியானது சித்தார்த்தின் சாமார்த்தியத்தால்... எந்த வழியிலும் நெருங்க முடியாமல் பாதுகாப்பாய் இருப்பவனைக் கண்டு அவனது ஆத்திரம் மேலும் மேலும் அதிகரித்தது...

வேறுவழியின்றி எல்லோரும் ஹரிணியின் வரவிற்காகக் காத்திருந்தனர்... சந்தோஷ் முகம் இறுக சித்தார்த்தை பார்த்துக் கொண்டு நின்றான்... கைலாஷ் தன் குரோதத்தைப் பார்வையால் உணர்த்தியபடி அவனை முறைத்துக் கொண்டிருந்தான்...

ஹரிணியின் பெற்றோரோ அவமானத்தில் தலை குனிந்து நின்றனர்...

ஆராவமுதன் தன்னை மீறிச் செல்லும் காரியங்களைக் கட்டுப்படுத்த இயலாமல் விதியை நொந்து கொண்டு அங்கே நின்றிருந்தார்... குள்ளநரி போன்ற அவரால் இதைக் காரியத்தைக் கட்டுப்படுத்த இயலாமல் இல்லை... ஆனால் அதைச் செய்ய முடியாமல் தன் கைகளைக் கட்டி போட்டிருக்கும் தன் நிலையை அறவே வெறுத்தவராய் இருந்தார்...

அன்று யாருக்கும் தெரியாது என்று அவர் செய்த செயலானது இப்போது பூமராங் போல் அவருக்கே திருப்பி வந்ததை என்ன என்று சொல்வது... அவர் போட்ட திட்டம் தான் என்ன... ஆனால் நடந்து கொண்டிருக்கும் திட்டம் தான் என்ன...? இதைத் தான் விதி வலியது என்பார்களோ...

முகூர்த்த நேரத்திற்கு ஐந்து நிமிடத்திற்கு முன் ஹரிணி மேடைக்கு அழைத்து வரப்பட்டாள்... அவளுக்குத் தெரியாது

அவளது பெற்றோர் இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கவில்லை என்று...

"உன் அப்பா, அம்மாவை சம்மதிக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு... நீ கவலைப்படாதே..." என்று சித்தார்த் முன்பே கூறியிருந்ததால் அவள் கவலை இல்லாமல் சித்தார்த்தை நம்பி மணவறைக்கு வந்தாள்...

அவளைக் கண்டதும் பத்மா அழுது கொண்டே அவளை நோக்கி ஓடினார்... மனைவியின் செயலை கண்டு ரங்காச்சாரி திகைத்து போய் நின்றார்...

"ஹரிணி..." கண்ணீரும் கம்பலையுமாய்த் தன் முன் வந்து நின்ற அன்னையைக் கண்டு அவள் அதிர்ந்து போனாள்...

அவளையும் அறியாமல் அவளது கண்கள் சித்தார்த்தை பார்த்தது... அவளது பார்வையை உணர்ந்தவனாய் அவன் மணவறையை விட்டு எழ அமராவதி அவனைத் தடுத்தார்...

"மணவறையில் உட்கார்ந்த பின் எழுந்துக்கக் கூடாது கண்ணா..."

"மாம்... என் கல்யாணத்தை நிறுத்த எப்படி இப்படி டிசைன் டிசைன்னா யோசிக்கிறீங்க... ம்..." என்றவன், "இப்போ நான் அங்கே போகலைன்னா காலம் பூரா இப்படியே தனியா உட்கார வேண்டியது தான்..." என்று சொல்லியபடி எழுந்து தன்னவளை நோக்கி சென்றான்...

"இந்தக் கடங்காரன் உனக்கு வேண்டாம் ஹரிணி... நாங்க பார்த்து இருக்கிற பையனை கல்யாணம் பண்ணிக்கோ..." பத்மா மகளிடம் இறைஞ்ச...

அவளோ செய்வதறியாது தவித்துச் சித்தார்த்தை பார்த்தவள் பின் அன்னையிடம், "என்னை யாருக்கோ கல்யாணம் பண்ணி கொடுக்கிறதை விட நான் காதலிச்சவாளுக்கே கல்யாணம் பண்ணி கொடுத்தா என்னம்மா...? ஏன்ம்மா இப்படிக் காதலை எதிர்க்கிறேள்...?" அவளும் பதிலுக்குக் கெஞ்சினாள்...

தாயும் மகளும் பேசுவதைக் கையைக் கட்டி கொண்டு வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது சித்தார்த்தால்... அவன் இடையில் நுழைய முடியாமல் அவர்களின் பாசம் தடுத்தது...

"புரியாம பேசாதே ஹரிணி... நீ பண்ணின்டு இருக்கிற காரியத்தோட வீரியம் தெரியாம பேசாதே... இப்படி ஒரு மாப்பிள்ளைக்கு நிச்சயம் பண்ணி இன்னொருத்தனை கல்யாணம் பண்ணினா அதுக்கு லோகம் என்ன தெரியுமா சொல்லும்..." என்று முடிக்காமல் அவர் நிறுத்த...

ஹரிணி கண்கள் கலங்க அவரைப் பரிதாபமாய்ப் பார்த்தாள்... "நேக்கு இவர் தான் வேணும்மா..."

"அப்போ முடிவா வர மாட்ட அப்படித்தானே..."

அதற்குள் அங்கே வந்த காவல் அதிகாரி, "இவர் உங்களைக் கடத்திட்டு வந்துட்டதா இவங்க எல்லாம் சொல்றாங்களே... அது உண்மையா...?"

அவளின் பதிலில் தான் அவளுடைய பெற்றோர் மற்றும் காதலனின் நிம்மதி, வாழ்க்கை அனைத்தும் அடங்கி இருக்கிறது... ஆனால் அதற்கான பதிலோ ஒன்றுக்கு ஒன்று எதிர்மறையானது...

இரு தரப்பினரும் கூர்மையாய் ஹரிணியைப் பார்த்தனர்... அவளின் வாயசைப்பை உன்னிப்பாய் கவனித்தனர்...

தான் இக்கட்டான நிலையில் இருப்பதை உணர்ந்து ஹரிணி என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள்... எல்லாம் ஒரு கணம் தான் அடுத்தக் கணம் முடிவு எடுத்தவளாய் சட்டென்று ஹரிணி சித்தார்த்தின் அருகில் சென்று அவனின் கையைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டு,

"யாரும் என்னைக் கடத்தலை... நானா தான் விரும்பி இவர் கூட வந்தேன்... நான் இவரைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்... இவர் தான் என் உயிர்..." தெள்ளத்

தெளிவாய் தைரியமாய்ச் சொல்ல... சித்தார்த் பிரம்மிப்பாய் அவளைப் பார்த்தான்...

அவளது பெற்றோர் அவளுக்கு எவ்வளவு முக்கியம் என்று அவனுக்குத் தெரியும்... அவர்களுக்காவே தன் காதலை சொல்லாமல் மறைத்து வைத்து விலகி இருந்தவள் அவள்... அன்றும் அவன் கிடைக்க மாட்டானோ என்ற பதற்றத்தில் தன் உள்ளத்து காதலை அவனிடம் சொல்லியவள், இன்றும் அவன் எட்டாக்கனியாய் ஆகிவிடுவானோ என்ற பயத்தில் தன் காதலை ஊருக்கே உரக்க சொன்னவளை கண்டு அவனுக்குள் ஏதோ ஒன்று உருகி கரைந்தது... அவன் உள்ளத்தில் அவள் மீதான காதல் பல்கி பெருகி பெருக்கெடுத்து ஓடியது...

சகோதரனை எண்ணி அவளைத் தள்ளி வைத்து தவித்தவன் இன்று அவளின் காதலுக்காகத் தன்னை, தன் அடையாளத்தை இழக்க முடிவு செய்தான்... ஆம் அவளுக்காக, அவளின் தூய்மையான காதலுக்காக அவன் சித்தார்த் ராமாக மாற முடிவு செய்தான்...

சைதன்யாவுக்கும் சித்தார்த்துக்கும் இடையில் மனதுக்குள் போராடி கொண்டு இருந்தவன் முற்றும் முடிவுமாகச் சைதன்யாவை உயிரிழக்க செய்து முழுவதுமாகச் சித்தார்த்தாக மாற ஆரம்பித்தான்... இதுநாள் வரை மனதிற்குள் தவித்துக் கொண்டு இருந்த சைதன்யா மறைந்து அவன் எண்ணங்களில் சித்தார்த் உருபெற துவங்கினான்...

அவளின்றி அவனில்லை... அவளுக்காகத் தன்னை இழந்து அவளின் காதலை பெற எண்ணினான்...

'நீயின்றி நானேதடி பெண்ணே... உனக்காகத் தான் நான்... உனக்காக உயிரை கூட விடத் தயாரா இருக்கும் நான்... உனக்காக என்னை, என் சுயத்தைத் துறக்க மாட்டேனா பெண்ணே... எனக்கு நீ வேணுமடி பெண்ணே... இந்த ஜென்மம் மட்டும் அல்ல ஈரேழு ஜென்மத்துக்கும் நீ வேணுமடி...' மனதில் மகிழ்வுடன் நினைத்தவன் முதன்முறையாய் உள்ளத்தில் நிறைந்த காதலோடு

தன்னவளாய் அவளைப் பார்த்தவன் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான் அவள் காதல் தந்த கர்வத்தில்...

நீயாவேன்...

## நான் : 9

"ஹரிணி..." மகளின் தைரியத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார் பத்மா...

"என்னடி ஹரிணி இது...? நீயா இப்படி...?" ரங்காச்சாரி மகளிடம் கண்ணீர் மல்க கேட்டார்...

பெற்றோரின் நிலை மனதை பிழிய செய்வதறியாது நின்ற ஹரிணி தன்னவனை நிமிர்ந்து பாவமாய்ப் பார்த்தாள்...

அவளின் பார்வையை உணர்ந்தார் போன்று சித்தார்த்தும் அவளைப் பார்த்தான்... தனக்காகத் தன் பெற்றோரை விட்டுக் கொடுக்கத் தயாராய் இருந்த அவளின் உண்மையான நேசத்திற்குத் தான் கைம்மாறு செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்ந்தவனாய் அவளின் பெற்றோரை பார்த்தவன்,

"உங்க ரெண்டு பேர் கூடவும் நான் தனியா பேசணும்..." என்றான்...

"எங்க கிட்ட பேச என்ன இருக்கு...?" பத்மா முகத்தைத் திருப்பிக் கொள்ள... ரங்காச்சாரி அவனிடம் பதில் சொல்ல முடியாமல் இயலாமையுடன் அவனைப் பார்த்தார்...

"ப்ளீஸ் நான் சொல்றதை கேட்டுட்டு அப்புறம் எந்த முடிவு வேணும்னாலும் நீங்க எடுங்க..." தன் அந்தஸ்தை மறந்து தன்னவளுக்காக அவளின் பெற்றோரிடத்தில் ஏறக்குறைய அவன் கெஞ்சினான்...

"சரி..." என்று மகளுக்காக முடிவு எடுத்தார் ரங்காச்சாரி...

பத்மா அவரை முறைக்க, "ஹரிணி வாழ்க்கை பத்து... எடுத்தோம் கவிழ்த்தோம்ன்னு முடிவு எடுக்கக் கூடாது..." என்று அவர் கூற... அனைவரின் முன் எதுவும் கூற இயலாதவராய் பத்மா தலையை மட்டும் ஆட்டினார்... மகளின் துணிவு அவரின் தைரியத்தைக் கேள்விக்குறி ஆக்கி இருந்தது...

இதை எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த கைலாஷ்க்கு ஆத்திரம் கூடி கொண்டே போனது... அவன் பத்மாவை பார்த்துச் சத்தம் போட்டான்...

"என்னம்மா உங்க மகளை அடிச்சு இழுத்துட்டு வராம... இப்படிப் பேசிட்டு இருக்கீங்களே... உங்களால முடியலைன்னா அதை என் தம்பியை விட்டுச் செய்யச் சொல்லவா...?" என்று அவன் கோபத்தில் கத்த...

"வார்த்தையை ஒழுங்கா யோசிச்சு பேசு கைலாஷ்... அவளை அடிக்கிற உரிமை அவளோட அப்பா, அம்மாவுக்குக் கூடக் கிடையாது..." சுட்டு விரல் நீட்டி சித்தார்த் அவனை எச்சரிக்கை செய்தான்...

"ஒழுங்கை பத்தி நீ பேசாதே... அடுத்தவளோட நிச்சயம் வரை போய்... இப்ப அடுத்தவனோடு நிச்சயம் பண்ணின பெண்ணை மணவறை வரை கொண்டு வந்து நிறுத்தி இருக்கிற நீ ஒழுக்கத்தைப் பத்தி பேசாதே..." என்று சித்தார்த்திடம் எகிறியவன் ஹரிணியின் பெற்றோர் புறம் திரும்பி,

"முடிவா என்ன சொல்றீங்க...? என் தம்பிக்கு உங்க பொண்ணைக் கொடுப்பீங்களா...? மாட்டீங்களா...?"

அவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் கையைப் பிசைய... அதற்கும் சித்தார்த்தே சேர்த்துப் பதில் கூறினான்...

"இன்னும் உனக்கு என்ன சந்தேகம் கைலாஷ்... ஹனியை கல்யாணம் பண்ணிக்கப் போறது நான் தான்... உன் தம்பி இல்லை... அதே மாதிரி என் ஒழுக்கத்தைப் பற்றி நீ பேச தேவையில்லை... காதலிச்ச பெண்ணைக் கைவிடாம கல்யாணம் பண்ணிக்க நினைக்கிற நான் எந்தவிதத்திலும் குறைந்தவன் இல்லை..." எகத்தாளமாய்க் கூறியவனை ஒன்றும் செய்ய முடியாமல் விழித்த கைலாஷ் தன் தம்பியிடம்,

"அடுத்தவனைக் காதலிக்கிற பொண்ணைக் கட்டிக்கிட்டு நீ என்ன சுகத்தைக் காண போறே...? இவளை விட எல்லாவிதத்திலும் சிறந்த பெண்ணை உனக்கு நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்..." என்று சந்தோஷை அழைத்துச் செல்ல முற்பட...

அவனோ ஹரிணியை ஏக்கமாய்ப் பார்த்துக் கொண்டு இருந்தான்... எத்தனை வருடங்களாய் உரு ஏற்றிய காதல் நொடி பொழுதில் கலைந்து போனதை கையாலாகாதவனாய் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான்... சித்தார்த்தை அடித்துத் துவைத்து எடுக்க வேண்டும் என்ற வெறி அவனுள் எழுந்தது... ஆனால் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அமைதி காத்தான்... அதற்குள் கைலாஷ் அவமானம் தாங்காமல் அவனை இழுத்துக் கொண்டு செல்ல வேறுவழியின்றி அண்ணனை பின் தொடர்ந்து சென்றான்...

ஹரிணியைச் சகுந்தலா வசம் ஒப்படைத்துவிட்டு சித்தார்த் அவளது பெற்றோரை அழைத்துக் கொண்டு மணமகன் அறையை நோக்கி நடந்தான் சித்தார்த்... அப்போது ஏதேச்சையாய் ஏதோ தோன்ற திரும்பி பார்த்தவன் சந்தோஷின் பார்வையைக் கண்டு உள்ளுக்குள் திடுக்கிட்டுப் போனான்...

சந்தோஷின் பார்வை ஒருவித வெறியுடன் ஹரிணியை வெறிப்பதை கண்டு அதிர்ந்து போனான்... அவனின் பார்வையில் என்ன இருந்தது என்பது புரியாவிட்டாலும் அவனின் பார்வை சரியில்லை என்பது மட்டும் சித்தார்த்துக்கு நன்கு புரிந்தது...

அதற்கு மேல் அவனை யோசிக்க விடாமல் அவனது பிரச்சினை அவனுக்காகக் காத்திருந்தது...

மணமகன் அறைக்குள் நுழைந்தவன் கதவை நன்கு தாளிட்டுவிட்டு அவர்கள் புறம் திரும்பியவன், "நான் சொல்ல போறதை நல்லா யோசிச்சிட்டு எங்க கல்யாணத்தை ஆதரிப்பதா வேண்டாமான்னு முடிவு பண்ணுங்க..." என்றவன் தனது அன்னையிடம் கூடச்

சொல்லாத, சொல்ல முடியாத தனது பக்கங்களைத் திறந்து ஒன்றுவிடாமல் அவர்களிடம் ஒப்புவித்தான் தன்னவளின் காதலுக்காக...

அவன் பேச பேச பத்மாவின் கண்கள் கண்ணீரை சொரிந்தது... ரங்காச்சாரி திக்பிரம்மை பிடித்தார் போன்று நின்றிருந்தார்...

"இதுக்கு மேலே எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை... என்னைப் பத்தி, என் அண்ணனை பத்தி எல்லாத்தையும் உங்க கிட்ட சொல்லிட்டேன்... இனி முடிவு எடுக்க வேண்டியது நீங்க தான்... உங்க அனுமதி இல்லாம ஹனி கழுத்துல என்னால தாலி கட்ட முடியும்... ஆனா அவளை வருத்தத்தில் ஆழ்த்திட்டு, கஷ்டப்பட வச்சிட்டு இதைச் செய்ய நான் விரும்பலை... நான் அவளைக் காதலிச்சது அவளைக் கஷ்டப்பட வைக்கிறதுக்காக இல்லை... வாழ்நாள் முழுசும் சந்தோசமாய் வச்சிக்கிறதுக்காகத் தான்... அவளுக்காக உங்க கிட்ட நான் கெஞ்சி கேட்டுக்கிறேன்... உங்க சம்மதம் எனக்கு வேணும்... அவள் கண்ணுல ஒரு சொட்டுக் கண்ணீர் வர்றதை கூட நான் விரும்பலை... விரும்பலைங்கிறதை விட அதைப் பார்க்க என்னால் முடியலை... இப்போ கூட அதைப் பார்க்க சகிக்காமல் தான் உங்க கிட்ட பேசிட்டு இருக்கேன்... ப்ளீஸ்..."

இருகரம் கூப்பி வேண்டியவனின் கையைப் பற்றிக் கீழே இறக்கினார் ரங்காச்சாரி... "வேண்டாம் அம்பி... உங்க பேச்சிலேயே தெரியுது நீங்க அவளை எந்தளவுக்கு விரும்புறீங்கன்னு... ஹரிணி எங்காத்து பொண்ணு இல்லே... இனி உங்காத்து பொண்ணு... ஏண்டி பத்து நீயும் சொல்லேன்டி..." மனைவியைப் பார்த்து சொல்ல...

அழுது வடிந்து கொண்டு இருந்த விழிகளைத் துடைத்துக் கொண்டே பத்மா, "ஆமாம் மாப்பிள்ளை அவர் சொல்றது சரி தான்... உங்களை விட என் மகளுக்கு ஏத்த வரன் லோகத்துல கிடையாது... தாராளமா நீங்க எங்க

பொண்ணைக் கல்யாணம் கட்டிக்கலாம்..." அவரும் தன் சம்மதத்தைத் தெரிவிக்க...

அத்தனை நேரம் இறுக்கம் தளர்ந்து சித்தார்த்தின் முகத்தில் புன்னகை நிறைந்தது...

"தேங்க்ஸ் அத்தை... மாமா..." என்று அவர்களை உறவு முறை சொல்லி அழைத்து உறவை பலப்படுத்திக் கொண்டான்...

அதன் பின் நடந்த காரியங்கள் மளமளவென்று நடந்தேறியது... ரங்காச்சாரி தன் மடியில் ஹரிணியை அமர்த்தித் தாரை வார்த்துக் கொடுக்கச் சித்தார்த் மன மகிழ்வுடன் மங்கல நாணை தன்னவளின் கழுத்தில் அணிவித்து அவளைத் தன்னில் பாதி என்பதை ஊரறிய பறை சாற்றினான்...

அப்போது சித்தார்த்தின் மனதில் சகோதரனின் நியாபகம் எழ காற்றில் அவனைத் தேடி இவனது கண்கள் துளாவியது... காற்றோடு கலந்துவிட்டவனை எங்கே போய்த் தேடுவது...? மனதில் வருத்தம் எழ வலியுடன் கண்களை மூடி கொண்டான்...

அந்த நேரம் பார்த்து மணமக்களை வாழ்த்தி எல்லோரும் பூமழை தூவி ஆசிர்வதிக்க அந்தப் பூக்களில் தனது சகோதரன் கலந்து இருப்பது போல் தோன்ற அவசரமாய்க் கண்களைத் திறந்து பார்த்தான்... அப்போது மெல்லிய தென்றல் காற்று பூக்களோடு பூக்களாக அவனை உரசிவிட்டுச் சென்றது... அது தனது சகோதரன் தான் என்பதை உணர்ந்தவனுக்கு மனதில் எல்லையில்லா நிம்மதி ஏற்பட்டது... அதே நிம்மதியுடன் அவன் தன் மனைவியைப் பார்த்தான்...

ஹரிணியும் மனநிறைவுடன் அவனின் கையால் மாங்கல்யத்தைக் கழுத்தில் வாங்கிக் கொண்டாள்... அவள் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை தனது தகப்பனார் தாரை வார்த்துக் கொடுக்கத் தன்னுடைய காதல் திருமணம் நடைப்பெறும் என்று... அதற்குக் காரணம்

அவளது காதலன் அன்றோ... கண்கள் கலங்க அவனை ஏறிட்டு பார்த்தவளின் பார்வையில் காதலும், நன்றி உணர்ச்சியும் சரிசமமாய்க் கலந்து இருந்தது... அவளின் பார்வையை உணர்ந்தார் போன்று அவனது கைகள் அவளின் கையை அழுந்த பற்றியது...

அமராவதியும், ஆராவமுதனும் வேண்டா வெறுப்பாய் அட்சதையைத் தூவ, பிருந்தா, தீபிகா மற்றும் பத்மா மூவரும் சந்தோசத்துடன் மணமக்களை வாழ்த்தினர்...

இதில் மேலும் இரண்டு ஜீவன்கள் இணைந்து கொண்டனர்... அவர்கள் வேறு யாரும் இல்லை... வேதாந்தம் மற்றும் அவரது துணைவியார் சகுந்தலா தான்... அவர்கள் இருவரும் ஹரிணியை யார் கண்ணிலும் படாமல் சகுந்தலாவின் ஒன்றுவிட்ட அக்கா வீட்டில் ஒளித்து வைத்திருந்து திருமணம் நடைப்பெறும் நேரத்தில் மட்டும் அவளை இங்கு அழைத்து வந்தனர்... இல்லாவிட்டால் எல்லாவற்றையும் மோப்பம் பிடிக்கும் கைலாஷின் கண்ணில் இருந்து ஹரிணி தப்பிக்க முடியுமோ...!!!

தன் காலில் விழுந்த மணமக்களை ஊர் உலகத்திற்காக இன்முகத்துடன் வாழ்த்திய அமராவதி மனதில் ஹரிணியின் மீது கடும் விசத்தை ஏற்றிக் கொண்டிருந்தார்... பாவம் அதைச் சித்தார்த் அறியவில்லை...

ஹரிணியைச் சித்தார்த்தின் வீட்டில் விட்டு விட்டு அவளது பெற்றோர் கிளம்பினர்... கண்ணீர் மல்க விடை கொடுத்தவளிடம்,

"அழாதேடி ஹரிணி... பெண்ணாய் பிறந்தால் இதை எல்லாம் அனுபவித்துத் தான் ஆகணும்... நானும் உன் தோப்பனாரும் அடிக்கடி வந்து பார்த்துக்கிறோம்... நீயும் மாப்பிள்ளையாண்ட சொல்லி அடிக்கடி நம்மாத்துக்கு வந்து போய் இரு..." கண்களைத் துடைத்துக் கொண்டு பத்மா ஆறுதல் சொல்ல...

"நீங்க எல்லாம் அடிக்கடி இங்கே வந்து எங்க கௌரவத்தைக் கெடுக்காதீங்க... வேணும்ன்னா உங்க பொண்ணை அங்கே அனுப்பறேன்... கொஞ்சிட்டு அனுப்புங்க... அனுப்ப இஷ்டம் இல்லைன்னா உங்க கூட வச்சிக்கிட்டாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை..." முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அமராவதி சொல்ல... அதில் ஆராவமுதன் மகிழ்ச்சி அடைந்தவராய் தாய்க்கும் மகனுக்கும் நடக்கும் யுத்தத்தை ஆவலுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தார்...

அதைக் கேட்டு பயத்துடன் ஹரிணி அன்னையின் கரத்தை பற்றிக் கொண்டாள்... பத்மாவோ ஆதரவாய் அவளின் கரத்தை தட்டி கொடுத்தவர் கண்ணால் மகளுக்கு ஆறுதல் கூறினார்...

சித்தார்த்துக்கு அனைவரின் முன் அன்னையை விட்டு கொடுக்கவும் முடியாமல் அதே சமயம் தன்னவளை அவர் பேசுவது கண்டு பொறுத்து கொள்ளவும் முடியாமல் இரு பக்கமும் போராடி தவித்தவன் இறுதியில் ஹரிணிக்காகக் களத்தில் இறங்கினான்...

"மாம்... ஹனி என்னுடன் வாழ வந்திருக்கா... அவள் வீட்டில் போய் இருக்க இல்லை... அப்படியே அவள் போனாலும் பின்னாடியே போய் நான் கூட்டிட்டு வந்திடுவேன்... அவள் இல்லாம என்னால் இருக்க முடியாது..." சிரியாமல் நகைச்சுவை போல் அவன் இதைக் கூறினாலும் அவனின் மனம் உலைக்களம் போல் கொதித்துக் கொண்டிருந்தது அன்னையின் பேச்சில்...

அதைக் கேட்டு முகத்தைத் திருப்பிக் கொண்ட அமராவதி அதன் பின் ஒன்றும் பேசவில்லை...

"ஹரிணி... நாங்க கிளம்பறோம்மா... இனி தான் உன் அக்கா ரெண்டு பேருக்கும் ஃபோன் பண்ணி விசயத்தைச் சொல்லணும்... அவாளை எல்லாம் சமாதானப்படுத்தணும்... இன்னும் நிறைய வேலை இருக்கு..." என்றவர், "நீ எதை நினைச்சும்

கவலைப்படாதே... உன் ஆத்துக்காரரோட சந்தோசமாய் இரு..." என்றபடி அவளின் பெற்றோர் கிளம்ப...

"அதில் எல்லாம் உங்க பொண்ணு விவரம்... என் பசங்களை நல்லா மயக்க தெரிஞ்சு இருக்கே..." அமராவதி நொடித்துக் கொள்ள...

அங்கிருந்தவர்கள் எல்லோரும் அவரவர் மனநிலையில் ஆழ்ந்து இருந்ததால் யாரும் இதைச் சரியாய் புரிந்து கொள்ளவில்லை...

மேலும் ஹரிணியைச் சமாதானப்படுத்திய ரங்காச்சாரி, பத்மா விடைப்பெற்று கிளம்பி சென்றனர்... தனித்து விடப்பட்ட ஹரிணியை அன்போடு அழைத்துத் தன் பக்கத்தில் வைத்து கொண்டாள் தீபிகா...

"சித்து எல்லாப் பெண்களிடமும்..." மேலே அவள் பேசும் முன் குறுக்கிட்ட சித்தார்த்,

"தீபி என் கூடக் கொஞ்சம் வா... உன் கிட்ட பேசணும்..." என்று அவளை அழைக்க...

தீபிகா புரியாமல் எழுந்தவள் அவனுடன் சென்றாள்... ஹரிணியை விட்டு சிறிது தொலைவு வந்ததும்,

"தீபி... அவள் கிட்ட என்னுடைய பழைய வாழ்க்கை எதையும் சொல்லிடாதே... ஏன்னா நானே அதை அவக்கிட்ட சொல்லலை... அவள் காதல் முன்னாடி என்னால என் வாழ்க்கை அசிங்கத்தைச் சொல்ல முடியலை தீபி... ப்ளீஸ் நீயும் சொல்லிடாதே..." தவிப்புடன் சொன்னவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் தீபிகா...

அன்று தன்னிடம் அவனின் பழக்க வழக்கத்தை அவ்வளவு அலட்சியத்துடன் 'நான் இப்படித்தான்' என்று கம்பீரமாக, தைரியமாகச் சொன்னவன் இன்று ஹரிணியிடத்தில் சொல்ல முடியாமல் தவிக்கின்றான் என்றால்...??? அந்தளவுக்கு அவள் மீது அவனுக்குக் காதலா...!!! ஹரிணி மேல் கொஞ்சம் பொறாமையாக இருந்தது அவளுக்கு...

"நான் சொல்ல மாட்டேன் சித்து... என்னை நம்பலாம்..." என்றவள், "ஹரிணி ரொம்ப லக்கி சித்து..." முதலில் அவள் சொன்ன வார்த்தை கேட்டு நிம்மதி அடைந்தவன் அடுத்து அவள் சொன்ன வார்த்தை கேட்டுப் புன்னகைத்தான்...

"லக்கி அவள் இல்லை தீபி... நான் தான்..." என்று சொன்னவனின் கண்களில் அத்தனை காதல் வழிந்தது...

"சித்து... நீங்க இப்போ பார்க்கிறதுக்கு அவ்வளவு அழகா இருக்கீங்க..." என்றவளை நோக்கி சுட்டு விரல் நீட்டி விளையாட்டாய் எச்சரித்தபடி,

"உன் லிமிட்டை நீ தாண்டுற... என்னைச் சைட் அடிக்க என்னோட ஆளு இருக்கா..." என்றவன் முகத்தில் உறைந்த புன்னகையுடன் ஹரிணியை நோக்கி சென்றான்...

செல்லும் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றவள் மனதில், 'இதே போல் உயிருக்கு உயிராய் காதலிக்கும் ஒருவனை நான் எப்போது சந்திப்பேன்...' என்ற கேள்வி எழாமல் இல்லை...

பிருந்தா ஹரிணியை அழைத்துக் கொண்டு உள்ளே செல்ல, அமராவதி தனது அறைக்கு ஓய்வு எடுக்கச் சென்றார்... தீபிகா மனசு சரியில்லாமல் தோட்டத்திற்குச் சென்றுவிட ஆராவமுதனும், சித்தார்த்தும் தனித்து விடப்பட்டனர்...

"என்ன மாப்பிள்ள... ஆயிரம் பொய் சொல்லி கல்யாணம் பண்ணுவாங்கன்னு கேள்விப்பட்டு இருக்கேன்... ஆனா நீங்க பொய் மேல பொய்யா சொல்லி கல்யாணம் பண்ணி இருக்கீங்களே... இந்தப் பொய் எத்தனை நாளைக்கோ...? என்னைக்காவது நீங்க சித்தார்த் இல்லை... நீங்க சைதன்யான்னு அந்தப் பொண்ணுக்கு தெரிய வந்தா உங்க கதி என்னவாகும்ன்னு கொஞ்சம் யோசிச்சு பாருங்க..." வேண்டும் என்றே நக்கல் குரலில் பேசியவரை கண்டு அதிர்ச்சி அடையாமல் அதே நக்கல் நிறைந்த குரலில்,

"தப்புச் செய்றவங்களை விடத் தப்புச் செய்யத் தூண்டுறவங்களுக்குத் தான் சட்டத்தில் அதிகத் தண்டனையாம்... அப்படிப் பார்த்தா என்னை விட உங்களுக்குத் தான் அதிகத் தண்டனை கிடைக்கும்... ஜெயிலில் களி திங்க நீங்க ரெடின்னா நானும் ரெடி... அப்புறம் என்ன சொன்னீங்க... நான் சைதன்யாங்கிறது அவளுக்குத் தெரிஞ்சா என்னாகும்ன்னு தானே நீங்க கேட்டீங்க... நான் சாகற வரை அது அவளுக்குத் தெரியாம நான் பார்த்துக்குவேன்... ஏன்னா சித்தார்த் இனி மேல் உயிரோடு வர மாட்டான்..." என்று சொன்ன சித்தார்த் அவரை ஆழ்ந்து பார்த்தான்...

அவன் எதிர்பார்த்தது போல் அவரின் உடல் நடுங்கியது... முகம் அப்பட்டமாய் அதிர்ச்சியைக் காட்டியது...

"என்ன மாமா எதுக்கு இவ்வளவு பெரிய அதிர்ச்சி...? இத்தனை மாசமா உயிரோட வராதவன் இனியா வர போறான்... அதைச் சொன்னேன்..." என்றவனைக் கண்டு தன் அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு,

"அப்போ அன்னைக்கு என்னைச் சொன்னது..."

"அது பிசினஸ்ல நீங்க பண்ணிய ப்ராடுத்தனத்தைச் சொன்னேன்... வேற எதை மாமா நீங்க நினைச்சீங்க...?" ஒன்றும் அறியாதவன் போல் அவன் வினவ...

"ஓ..." என்றவர் அவன் சுட்டி காட்டிய தவறை மறந்தவராய் வேறு ஏதோ யோசனையில் மூழ்கி இருக்க...

"என்ன மாமா யோசனை எல்லாம் பலமா இருக்கு... உங்க யோசனையைப் பார்த்தா இந்த ப்ராடு வேலையை விட வேற பெரிய வேலை எல்லாம் பண்ணின மாதிரி தெரியுதே..." வேண்டும் என்றே அவன் அவரை ஆழம் பார்க்க...

"அது ஒண்ணும் இல்லை மாப்பிள்ளை வேறு யோசனை..." என்று சமாளித்தவரை பார்த்தவன் வெளியில் அவரைப்

பார்த்துச் சிரித்தாலும் மனதில் எரிமலையாய் குமுறிக் கொண்டு இருந்தான்...

மாலை மங்கி இரவு வந்தது... நிலவு மகள் யாரின் அனுமதி வேண்டி நில்லாமல் சுதந்திரமாய் வானில் பவனி வந்தது...

இரவு உணவு முடிந்ததும் இயல்பு போல் ஹரிணியை அழைத்துக் கொண்டு சித்தார்த் தனது அறைக்குச் செல்ல... அவளோ நாணத்துடன் கால்கள் பின்ன அவனுடன் இணைந்து நடந்தாள்...

இத்தனை நாள் காதலனாய் தள்ளி நின்று ரசித்துப் பார்த்திருந்தவன் இன்று கணவனாய் வெகுஅருகில் இருப்பதைக் கண்டு எல்லையில்லா உவகை அடைந்தவள் மனதில் எழுந்த பரவசத்துடன் வானில் மிதப்பது போல் அவனோடு சென்றாள்...

அறைக்குள் நுழைந்து கதவை தாளிட்டவன் அவளிடம், "வா ஹனி..." என்க...

அவளோ வெட்கத்தைப் பூசி கொண்டு அங்கேயே நிற்க... அவள் தன்னோடு வராததை உணர்ந்து அவளைத் திரும்பி பார்த்தவன் அவளின் வெட்கம் கண்டு திகைத்துப் போனான்...

அவளின் நாணம் அவனின் உணர்வோடும் ஏதேதோ கதைகள் பேசி விளையாடியது... ஆனால் அந்தக் கதை எல்லாம் அவளிடம் சொல்ல முடியாத நிலையில் இருக்கும் தன் நிலையை அவன் அறவே வெறுத்தான்...

"ஹனி..." அவன் அழைப்பில் அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்...

அவளின் கண்களில் மின்னிய ஆர்வத்தைக் கண்டு வேகமாய் எழுந்த தன் ஆர்வத்தை முயன்று அடக்கி கொண்டு, "நீ டையர்டா இருந்தா தூங்கு... எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு..." என்றவனைக் கண்டு அவள் முகத்தில் ஏமாற்றம் கவிழ்ந்தது...

காதலித்துப் பெற்றோர் சம்மதத்துடன் கைப்பிடித்த காதல் கணவன், திருமணம் அன்று மட்டுமே வரும் முதல் இரவு, அத்தனை இருந்தும் எல்லாம் பாழாய் போனதில் அவளது வருத்தமும், ஏமாற்றமும் அதிகரித்தது… அதற்காகப் பெண்ணானவள் காதல் கணவனே என்றாலும் தாம்பத்தியத்தை அவ்வளவு எளிதில் ஆணிடம் யாசித்துவிட முடியாதே…

மனதின் ஏமாற்றத்தை புன்னகையின் பின்னால் மறைத்தவள், "ம்… சரி…" என்றபடி படுக்கைக்குச் செல்ல…

அவளது ஏமாற்றம் நிறைந்த முகம் அவனின் மனதை வாள் கொண்டு அறுக்க… அதைத் தாங்க இயலாதவனாய் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவன் தன் மடிகணினியை உயிர்ப்பித்து இல்லாத வேலையை உருவாக்கி கொண்டு விருப்பமே இல்லாமல் அதில் ஆழ்ந்தான்…

சுமார் மூன்று மணி நேரம் கணினியில் வேலை பார்த்தவன் பின்பு நியாபகம் வந்தவனாய் மனைவியைத் திரும்பி பார்த்தவன் அவள் நன்றாக உறங்கிவிட்டதை அறிந்து அவள் அருகில் சென்றான்…

அவளுக்குப் போர்வையைப் போர்த்தி விட்டவன் கள்ளங்கபடமற்ற அவளது குழந்தை முகத்தை வேதனையுடன் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றான்… பின் மெல்ல அவளது முன்நெற்றியில் தனது இதழை பதித்தவன்,

"சாரி ஹனி…" என்று முணுமுணுக்க…

அவனது அருகாமையில் அவள் சற்று அசைய அவன் பயந்து போய்ப் பின்னே நகர்ந்தான்… மறுபக்கம் திரும்பி படுத்தவள் மீண்டும் ஆழ்ந்த உறக்கத்திற்குச் செல்ல… நிம்மதி பெருமூச்சை வெளியிட்டவன் பால்கனிக்குச் சென்றான்…

கைகள் பழக்கதோசத்தில் அங்கு மேசை மீதிருந்த சிகரெட் பெட்டியை எடுத்தது... வானத்து இருளை வெறித்துக் கொண்டே சிகரெட்டை எடுத்து வாயில் வைத்தவன் அதைப் பற்ற வைக்கும் போது தான் தன்னை உணர்ந்தவனாய் லைட்டரை அணைத்தவன் சிகரெட்டை தூக்கி தூர எறிந்தான்...

சித்தார்த் போல் மாற வேண்டும் என்றால் அதற்குச் சித்தார்த் போல் எல்லாவற்றிலும் அவன் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்... அதில் முதன்மையானது ஒழுக்கம்... ஒழுக்கத்திற்கும் அவனுக்கும் சுட்டுப் போட்டாலும் ஒட்டாது... அப்படிப்பட்டவன் தன்னவளுக்காக ஒழுக்கமாக மாற விரும்பினான்... அந்த மாற்றம் மனதளவில், உடலளவில் இருக்க வேண்டும் என்றே விரும்பினான்...

அதை எல்லாம் விட அவனது சகோதரனுக்கு நடந்த அநியாயத்திற்கு நீதி கிடைக்க வேண்டும்... அந்த நீதி கிடைக்க அவனே நீதியை கையில் எடுக்க முடிவு செய்தான் அந்த நீதியின் பின்னே தன்னை மறைத்துக் கொண்டு... அதற்கு என்ன செய்வது என்று அவனது மனம் தீவிரமாக ஆராயத் தொடங்கியது...

அந்த ஆராய்ச்சியின் முதல் வெற்றியாய் மறுநாள் காலையில் அவனது மாமா வசம் இருந்த அவர்களது தொழில்களைத் தன்வசம் கொண்டு வந்தான்... தங்களது தொழிலில் அவர் செய்து வந்த பல மோசடிகளைப் பட்டியலிட்டு அதற்குப் பதில் அளிக்க வேண்டி வழக்கறிஞர் மூலம் ஒரு எச்சரிக்கை அறிக்கையை அவருக்கு அனுப்பி வைத்தான்...

அதைக் கேள்விப்பட்ட பிருந்தா கணவனிடம் கேள்வி மேல் கேள்வி கேட்க... அந்தக் கேள்வி எதற்கும் பதில் சொல்ல முடியாமல் ஆராவமுதன் தலையில் கையை வைத்துக் கொண்டு சோகமாய் அமர்ந்துவிட்டார்... மனிதருக்கு சூடு ஏறாமலேயே இரத்தம் உச்சக்கட்ட கொதிநிலையை அடைந்தது...

அவரின் நிலையைக் கேள்விப்பட்டவன் வாய்விட்டுச் சிரித்தான்... பின் மெல்ல மெல்ல அவனது முகம் ஆத்திரத்தில் விகாரமாய் மாறியது... அது கண்ணுக்கு தெரியாத அந்த எதிரியை நினைத்து...

அது யார்...??? அது தான் அவனது மனதில் இப்போது ஓடி கொண்டிருக்கும் விடை தெரியா வினா...!!!

நீயாவேன்...!!!

# நான் - 10

காலையில் எழுந்து குளித்து முடித்து அறையை விட்டு வெளியில் வந்த அமராவதியின் நாசி சாம்பிராணி புகையின் நறுமணத்தை நுகர்ந்தது...

'நம்ம வீட்டில் சாம்பிராணி புகை யார் போடுறது...?' என்று யோசித்தபடி வரவேற்பறைக்கு வந்தார்...

அவர் யோசிப்பதிலும் அர்த்தம் இருக்கிறது... ஏனெனில் இந்த வீட்டில் அவரைத் தவிர வேறு எவரும் பூஜை புனஸ்காரங்கள் செய்வது கிடையாது...

அந்நேரம் பூஜையறையில் அறையில் இருந்து இனிமையான குரலில் சுப்ரபாதம் ஒலித்தது... குரலை வைத்தே அது யார் என்று அவர் அடையாளம் தெரிந்து கொண்டார்... அவரது அருமை மருமகள் ஹரிணி தான் அது...

ஏனோ அவருக்கு ஹரிணியின் குரல் எரிச்சலை கொடுக்கக் கைகளால் காதை மூடி கொண்டு எரிச்சலுடன் சோபாவில் அமர்ந்தார்...

சிறிது நேரத்தில் பூஜையை முடித்துக் கொண்டு வந்த ஹரிணி அங்கே மாமியார் அமர்ந்து இருப்பதைக் கண்டு நேரே அவரிடம் சென்றாள்...

"காபி எடுத்துட்டு வரட்டுமா அத்தை..." என்று அவள் கேட்க...

கொஞ்சமும் எரிச்சல் குறையாமல் அவளின் முகத்தை ஏறிட்டவர் உச்சிவகிட்டில் குங்குமமும் நெற்றியில் திருநீறும் துலங்க மங்களகரமாக எந்தவித குறையும் சொல்ல முடியாமல் நிறையுடன் நின்ற மருமகளைக் கண்டதும் நியாயத்திற்கு அவரின் மனம் நிம்மதி அடைந்து இருக்க வேண்டும்... ஆனால் ஏனோ அவரது மனம் உள்ளுக்குள் பொருமியது...

"பூசாரி மகள்ங்கிறதை நிரூபிக்கிற... உங்கப்பனை மாதிரி மணியை ஆட்டிக்கிட்டு நேரத்தை ஓட்டாதே... உங்கப்பன்

வயித்துப் பொழைப்புக்கு மணி ஆட்டுறான்... உனக்கு இங்கே என்ன குறை... மூணு பொழுதும் கால் மேல் கால் போட்டுட்டு உட்கார்ந்து சாப்பிடு... ம்ஹூம் யாரோ சம்பாதிச்சு யாரோ அனுபவிக்கிறாங்க... இதுக்கு எல்லாம் நீ கொடுத்து வச்சிருக்கணும்... ஆனா நீ தான் எதுவுமே கொடுக்கலையே... ஒருவேளை என் மகனுக்குக் கொடுக்க வேண்டியதை கொடுத்து..." என்று இழுத்தவர், "அதனால தான் அவனை மயக்கி கைக்குள் போட்டுக்கிட்டியோ...?" வார்த்தை எனும் அமிலத்தை அவளது காதில் இரக்கமே இல்லாமல் பாய்ச்சினார்...

திருமணமான மறுநாளே மாமியாரின் இந்தப் பேச்சு ஹரிணியைச் சர்வாங்கமும் நடுங்க செய்தது... வந்த முதல் நாளே இப்படி என்றால் இனி வாழ்நாள் முழுவதும் எப்படித்தான் தாங்க போறோமோ...? என்று நினைத்தவளுக்கு அந்த நினைவே கதிகலங்க செய்தது...

கண்களில் கண்ணீர் வழிய தலையைக் குனிந்து நின்றவளை கண்டு அமராவதிக்குக் குதூகலமாக இருந்தது... ஒருவேளை அவள் எதிர்த்துப் பேசியிருந்தால் ஒதுங்கி போயிருப்பாரோ என்னமோ... அவள் கோழை போல் அழுவது கண்டு, 'ஒரு அடிமை சிக்கிவிட்டது...' என்று ஒரு மாமியாராய் மகிழ்ந்து போனார்...

"எதுக்குக் காலையிலேயே அழுது ஒப்பாரி வைக்கிற... போய் வேலையைப் பாரு... இனிமேல் நீ தான் இந்த வீட்டிலுள்ள எல்லா வேலைகளையும் பொறுப்பா பார்த்துக்கணும்..." வேலைகள் என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்து சொன்னவர், "எனக்குக் காபி எடுத்துட்டு வா..."

மௌனமாய்த் தலையை ஆட்டியபடி நகர்ந்தவளை கண்டு வெகுண்டவர், "வாயை திறந்து பேசினா முத்தா உதிர்ந்து போயிடும்..."

"சரி... சரிங்க அத்தை..." என்று அமைதியாய் சொன்னவள் நேரே சமையலறைக்கு விரைந்தாள்...

அவள் செல்வதை ஒருவித சிரிப்புடன் பார்த்துக் கொண்டு இருந்தவர் மனதில் பல திட்டங்கள் நொடி நேரத்தில் உருவானது...

அமராவதிக்கு காபி எடுத்துக் கொண்டு வந்து கொடுத்த ஹரிணியை அதற்கு மேல் நிற்க விடாமல் வேலைகள் தன்னுள் இழுத்துக் கொண்டது... அவளும் அந்த வேலைகளை வெறுக்காமல், கடமையாய் எண்ணாமல் மனமுவந்து செய்தாள்...

"மாம் ஹனி எங்கே...?" என்று கேட்டபடி வந்த மகனை கண்டவர்,

"ம்... என் கிட்ட கேட்டா அவளையே போய்க் கேளு..." கடுகடுவென்று பதில் சொன்னவர்,

'குத்துக்கல்லாட்டம் நான் ஒருத்தி இங்கே உட்கார்ந்து இருக்கிறது உன் கண்ணுக்கு தெரியலை... உன் பொண்டாட்டி ஹனியை மட்டும் தான் கண் தேடுதோ... அது எப்படித் தான் தெரியலை ஒருநாள் ராத்திரிக்குள்ள புருசனை கைக்குள் போடுற வித்தையை மட்டும் இந்தப் பொண்ணுங்க எங்க இருந்து தான் ட்ரெயினிங் எடுக்கிறாங்களோ...?' மனதில் குமைந்து போனார்...

"தெரியலைன்னா விடுங்க மாம்... அதுக்கு ஏன் இவ்வளவு கோபம்...?" சாதாரணமாகக் கூறியவன் உணவு மேசையை நோக்கி நடந்தான்...

தன் பின்னேயே வந்த அன்னையை ஆச்சிரியமாய்ப் பார்த்தவன் ஒன்றும் பேசாது நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு அமர்ந்தான்... ஏனெனில் இத்தனை மாதங்களில் அவர் உணவு பரிமாறி அவன் உண்டது கிடையாது... அவனும் பரிமாற வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டான்... அப்படி வளரவும் இல்லை அவன்...

அமராவதி தானும் அவனுடன் உணவு உண்ண அமர்ந்தவர் சமையலறை நோக்கி குரல் கொடுத்தார்...

"ஹரிணி..." ஓங்கி ஒலித்த அவரது குரலில் பயந்து ஓடி வந்தவள் அங்கே அமர்ந்திருந்த கணவனைக் கண்டதும் ஒரு கணம் திகைத்தவள் மறுகணம் நிம்மதி உற்றவளாய் அவனைக் கண்டு புன்னகை சிந்தினாள்...

பதிலுக்குப் புன்னகைத்தவனின் கண்கள் அவளை நிதானமாக அளவிட்டது... அவளைப் பார்த்த கணம் ஏதோ சரியில்லை என்று மட்டும் அவனது மனம் கண்டு கொண்டது... அவளது அழுது சிவந்திருந்த விழிகள் அவனது பார்வையில் இருந்து தப்பவில்லை...

"அங்கே என்ன பார்வை வேண்டி இருக்கு...? முதல்ல வந்து பரிமாறு..." அமராவதி இட்ட கட்டளைக்குப் பணிந்து வேகமாய் அவர்கள் அருகில் வந்தவள் பரிமாற ஆரம்பிக்க...

"நீயும் உட்காரு ஹனி..." என்று அவளைக் கையமர்த்தித் தடுத்தவன், "மாம் இது என்ன புதுப் பழக்கம்...? நமக்கு நாமளே பரிமாறி தானே பழக்கம்... இன்னைக்கு என்ன புதுசா...?" அவன் அன்னையைக் கடிய...

"இவ்வளவு நாள் மருமகள் இருந்தாளா என்ன...? இப்போ தானே இவள் வந்திருக்கா... இனி இது தான் சட்டம்..." என்று சட்டமாய் அவர் பதிலளிக்க... மனம் வெறுத்துப் போனது அவனுக்கு...

"நீ சாப்பிடு ஹனி..." என்று மனைவியின் கைப்பிடித்து அமர வைக்க முயல... அவளோ,

"வேணாம்ன்னா நான் பிறகு சாப்பிடறேன்... நீங்க சாப்பிடுங்கோன்னா..." என்றவள் அவனுக்குப் பரிமாற...

"உன்னைத் திருத்த முடியாது..." என்று அவளை அலுத்து கொண்டவன் உணவு உண்ண ஆரம்பித்தான்...

ஒரு தோசையுடன் எழ போனவனைத் தடுத்த ஹரிணி, "இன்னும் ஒண்ணு சாப்பிடுங்களேன் ராம்..." என்றபடி எழ போனவனின் கையைப் பிடித்து அமர வைத்தவள் அவனது தட்டில் இன்னொரு தோசையை வைத்தாள்...

அவளது அந்தக் கரிசனத்தில் அவனது மனம் நிறைய அவளைப் பார்த்துக் கொண்டு மீண்டும் அமர்ந்தவன் மனம் என்றும் இல்லாத திருநாளாய் இன்று நிறைந்து இருந்தது... எத்தனையோ வசதிகள் அவனுக்கு இருந்த போதிலும் இதுநாள் வரை அவனைப் பார்த்து யாரும் இப்படி அன்பாய்ச் சொன்னது இல்லை...

அன்னை சொல்வார் தான் ஏனோ அதில் இந்த உரிமை இருக்காது... ஒருவேளை அவனின் எதிலும் ஒட்டாத குணத்தினால் வந்த விலகலாய் கூட அது இருக்கலாம்... ஏதோ ஒன்று அன்னையிடத்தில் கூட அவனை ஒட்ட விட்டது இல்லை...

ஆனால் மனைவியாய் வந்தவளின் அன்பு அவனின் மனதை நெகிழச் செய்து அவளுடன் ஒன்ற செய்தது...

அந்நேரம் அவனது மகிழ்ச்சியைக் குலைக்கும் வண்ணம் அமராவதியின் குரல் ஓங்கி ஒலித்தது...

"இனிமேல் இவனைப் பேர் சொல்லி கூப்பிடும் வேலை எல்லாம் வச்சுக்காதே... ஏன்னா அவனது பேரில் பாதி உன் மாமனார் பேர் வருது..." 'ராம்' என்பது குடும்பப் பேர் என்று குறிப்பிட்டு சொல்லியவர்,

"பேர் சொல்லித்தான் புருசனை கூப்பிடுவேன்னு நீ சொன்னா... அவனைச் சை..." அவர் சொல்லும் போதே அவனுக்குப் புரையேறியது...

அதில் அமராவதியின் கவனம் கலைந்தது... "தண்ணியை எடுத்து குடி கண்ணா..." என்று அவர் அவனை அதட்ட...

மறுபேச்சு இல்லாமல் தொண்டையில் தண்ணியைச் சரித்தவன் படபடப்பு இன்னமும் அடங்கவில்லை... அன்னை தன் உண்மை பெயரை சொல்லியிருந்தால் என்னவாகி இருக்கும்...?

"என்ன புரிஞ்சதா...?" அமராவதி மருமகளைப் பார்த்து கேட்டு தான் அந்தப் பெயர் விசயத்தை மறக்கவில்லை என்று மகனுக்கு நினைவூட்டினார்...

'ஐயோ இந்த மாம் இருக்காங்களே... வாயை வச்சிக்கிட்டு சும்மா இருக்க மாட்டாங்க...' என்று மனதுக்குள் புலம்பியவன் அவரை முந்தி கொண்டு,

"ஹனி... நீ எப்போதும் போல ராம்ன்னே சொல்லு..." என்று சொல்ல...

"பரவாயில்லைன்னா... பெரியவங்க சொன்னா ஏதாவது அர்த்தம் இருக்கும்..." என்றவள் அமைதியாய் மாமியார் சொன்னதை ஏற்றுக் கொண்டாள்...

"ஹரிணி..." மகனை கூர்மையாய் அளவிட்டவாறு மருமகளை அழைத்தவர், "எனக்கு மாதுளம்பழ ஜூஸ் வேணும்... நீயே உறிச்சு நீயே சாறு எடுத்துக் கொண்டு வரணும்..." என்று உத்தரவிட...

"மாம்..." என்று சித்து அதுக்கு ஆட்சேபம் தெரிவிக்க...

"இதோ அத்தை..." என்றவள் கணவனை நிமிர்ந்து பார்க்காது சமையலறை நோக்கி செல்ல...

"அப்போ நீ சைதன்யாங்கிறது அவளுக்குத் தெரியாது...?" ஆழ்ந்து பார்த்துக் கொண்டே கேட்டவர் பார்வை அவனை ஆழம் பார்த்தது...

ஒரு கணம் அவனது முகம் இறுகியது... பின்பு வெகு சாதாரணமாய், "தெரியாது..." என்றான்...

அவன் கூறியதை கேட்டு அதிர்ச்சி அடைந்தார் அமராவதி... "இது தப்பு கண்ணா... சித்து விரும்பின பொண்ணை அவன் பேரை சொல்லி அவனாய் நீ கல்யாணம் பண்ணி இருக்கிறது ரொம்பத் தப்பு... நாளைக்கே சித்து வந்து கேட்டா என்ன பதில் சொல்லுவ...?" ஆற்றாமையா... கோபமா... எது அவரது குரலில் இருந்தது என்று தெரியவில்லை...

அன்னையின் பேச்சில் அவனது மனம் வேதனையில் ஆழ்ந்தது... 'நம்ம சித்து இனி வரவே மாட்டான்ம்மா...' என்று

மனதுக்குள் வலியுடன் நினைத்தவன் அதை அன்னைக்குத் தெரியாமல் மறைத்தவன்,

"இதில் என்ன தப்பு இருக்கு மாம்...? ஹனி காதல் சொன்னது என் கிட்ட... காதலிச்சது என்னை... சித்துவை இல்லை... அப்போ நான் தானே அவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்... நாம யாரை காதலிக்கிறோம்ன்னு முக்கியம் இல்லை... அவங்க நம்மளை காதலிக்கிறாங்களாங்கிறது தான் முக்கியம்... ஹனி சித்துவை காதலிக்கலை... என்னைத் தான் காதலிக்கிறாள்..."

"இது போர்ஜரி கண்ணா... சித்துவுக்குச் செய்ற துரோகம்..."

"எதும்மா போர்ஜரி, துரோகம்...? என்னைச் சித்துவா நடிக்கச் சொல்லி ஊரையே ஏமாத்துற உங்களை விடவா நான் போர்ஜரி பண்ணிட்டேன்... அது சித்துக்கு நீங்க பண்ற துரோகம் இல்லையா...?" பதிலுக்கு அன்னையைக் கேள்வி கேட்டு அவரின் கோபத்தை அதிகப்படுத்தினான்...

"ச்சீ வாயை மூடுடா... கேடு கெட்ட உன்னோட என்னைக் கம்பேர் பண்ணாதே... நீயும் நானுமாடா ஒண்ணு... நான் கூட நீ உண்மையா அவளை விரும்பி கல்யாணம் பண்ணி இருக்கேன்னு நினைச்சேன்... ஆனா இப்படிக் கூடப் பிறந்தவன் காதலிச்ச பொண்ணைப் போட்டிக்கு காதலிச்சுக் கல்யாணம் பண்ணி இருப்பேன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை... இதை முதல்லேயே சொல்லி இருந்தேன்னா இந்தக் கல்யாணத்தை எப்படியாவது தடுத்து நிறுத்தி இருந்திருப்பேன்... இப்ப சித்து வந்து கேட்டா நான் என்ன பதில் சொல்லட்டும்...?"

"அன்னைக்குச் சித்துக் கிட்ட என்ன பதில் சொன்னீங்களோ அதைச் சொல்லுங்க... அன்னைக்குச் சித்துவோட காதலுக்கு நீங்க சம்மதிக்கவா செய்தீங்க... எதிர்க்கத்தானே செய்தீங்க...? இப்போ என்ன திடீர்ன்னு மகன் மேல கரிசனம்..." அவனது எள்ளல் குரலில் அவரது ஆத்திரம் அதிகரித்தது...

"தேவையில்லாமல் பேசாதே கண்ணா... கடைசியில் உன் பொம்பளை பொறுக்கித்தனத்தைக் காண்பிச்சு இந்தப் பொண்ணையும் ஏமாத்திட்டே இல்லையா...?"

அவரின் வார்த்தைகள் அவனை மீண்டும் வேதனையில் ஆழ்த்தியது... கண்களை மூடி தன்னைச் சமன் செய்து கொண்டவன்,

"ஆமாம் அதுக்கு என்ன செய்யப் போறீங்க...? இல்ல உங்களால என்ன பண்ண முடியும்...? நீங்க இல்ல உங்க சீமந்த புத்திரன் வந்தாலும் என்னை ஒண்ணும் செய்ய முடியாது... ஏன்னா ஹனி என் மனைவி... என்னுடன் மனைவியாய் வாழ்ந்துவிட்டவள்... அவனோட காதலி இல்லை..." வேண்டும் என்றே திமிராய் அவன் பதில் சொன்னான்...

சித்தார்த் இறந்தது அன்னைக்குத் தெரிந்தால் அவரது மனம் என்னப்பாடுபடும் என்று அவனுக்குத் தெரியும்... அதனால் அந்த வேதனை தன்னோடு போகும் பொருட்டுத் தன்னுள் மறைத்து புதைத்துக் கொண்டான்... எப்போதும் எல்லோர் கண்ணுக்கும் வில்லனாய் தெரிபவன் இப்போது அன்னையிடமும் அதே போல் நடந்து கொண்டான்...

அதற்குள் ஹரிணி பழச்சாறை எடுத்துக் கொண்டு வர அங்கே அமைதி நிலவியது... அதுவரை சைதன்யாவாய் அன்னையிடம் வாதாடியவன் அவளைக் கண்டதும் சித்தார்த்தாய் மாற முயற்சித்து அதில் வெற்றியும் பெற்றான்...

அமராவதியின் கோபம் இளையமகனிடம் இருந்து மருமகளிடம் தாவியது... 'என்னோட ரெண்டு மகனையும் மயக்கும் அளவுக்கு அப்படி என்னத்தான் இருக்கோ இவள் கிட்ட...' அவரின் மொத்த எரிச்சலும் ஹரிணியை மையப்புள்ளியாய்க் கொண்டு அவள் மேல் குவிந்தது...

அவள் கொடுத்த பழச்சாறை கூடப் பருகாமல் எழுந்தவர் கையைக் கழுவி கொண்டு அங்கிருந்து செல்ல... அவரது

கோபத்தின் காரணம் தெரியாது அவள் விக்கித்துப் போய் நின்றாள்...

சித்தார்த்தும் தனது கைகளைக் கழுவி கொண்டு செல்ல முயன்றவன் மனைவியின் கலக்கம் நிறைந்த முகத்தைக் கண்டு தேங்கினான்... அவளது முகத்தை ஒற்றை விரலால் நிமிர்த்தியவன் அவளது முகத்தில் தன் பார்வையைச் செலுத்தினான்...

தொடர் வேலையாலோ என்னமோ அவளது முகத்தில் வியர்வைத்துளிகள் அரும்பி அது அவளது வகிட்டில் இருந்த குங்குமத்தை கலைத்து ஒழுகி அவளது நெற்றிப் பொட்டோடு ஒன்றாகக் கலந்து கீழே விழவா வேண்டாமா என்று பட்டிமன்றம் நடத்தி கொண்டு இருந்தது... அது கூட அவளுக்குக் கூடுதல் அழகு கொடுத்தது...

அவன் தனது கட்டை விரலால் அதை மென்மையாகத் துடைத்து விட அவனது ஸ்பரிசம் கொடுத்த கூச்சத்தில் அவளது தேகம் சிலிர்க்க அவனது அருகாமையில் அவளது விழிகள் விரிந்து அவனை அப்படியே உள்வாங்கிக் கொண்டது...

அதில் மூழ்கி போனவன் வெளிவர விருப்பம் இல்லாதவனாய் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்...

வீட்டின் தொலைப்பேசி ஒலித்ததில் இருவரது கவனமும் கலைந்து நடப்பு புரிய ஒருவரை ஒருவர் காண முடியாமல் வெட்கியவர்கள் அவன் வேறுபக்கம் பார்க்க அவளோ நிலம் பார்த்தாள்...

"நான் வரட்டுமா..." என்று அவளிடம் அனுமதி வேண்டி அவன் நிற்க அவளோ குனிந்த தலையை நிமிராமல் தலையை அசைக்க வேறு என்ன பேசுவது என்று தெரியாமல் அவன் கிளம்பினான்...

அவன் செல்வதை உணர்ந்து அவள் நிமிர்ந்து பார்க்கும் முன் அவன் அந்த அறையை விட்டுச் சென்றிருந்தான்...

அவளது ஒரே சந்தோசம் இனி அவன் மட்டும் தான்... ஆனால் காதலித்த அவனோ தன்னை நெருங்கி வர யோசிக்கின்றானே... ஏன்...? அவளது மனம் கேள்வி கேட்டது... அதன் விடை தான் அவளுக்குத் தெரியவில்லை...

மேசை மீதிருந்த பொருட்களை அப்புறப்படுத்த போது தான் பழச்சாறு அவளது கண்ணில் பட்டது... இதை ஏன் அவள் மாமியார் கொண்டு வர சொன்னார்...? ஏன் குடிக்காமல் சென்றார்...? எதுவுமே அவளுக்குப் புரியவில்லை... ஆனாலும் அவரது ஆளுமை குணம் அவளைப் பயமுறுத்தியது என்னமோ உண்மை... அவளது முகம் கலக்கத்தை அப்பட்டமாய்க் காட்டியது...

அந்நேரம் பார்த்து எங்கிருந்து தான் வந்தானோ அவளது கணவன்... அவசரமாய் அவளது முகத்தை நிமிர்த்தியவன் அவளது முன்னுச்சியில் இதழ் பதித்து,

"சாரிம்மா... நான் இருக்கேன் உனக்கு... எதைப் பத்தியும் கவலைப்படாதே..." என்று ஆறுதல் சொல்ல...

அவளது அத்தனை நேர கலக்கமும் அவனது வார்த்தையில் அப்படியே வடிய... தனது கவலை அகன்று அவனைப் பார்த்து பூவாய் மலர்ந்தவள் சரி என்பது போல் தலையை அசைத்தாள்...

"தட்ஸ் குட்..." என்றவன் அதற்கு மேல் நிற்காமல் கிளம்ப அவள் அவனுக்கு வாயில் வரை வந்து விடை கொடுத்தாள்...

அவளைப் பார்த்துக் கொண்டே காரை கிளப்பிய சித்தார்த்துக்கும் இந்த அனுபவம் புதுமையாக இருந்தது... அதே சமயம் மகிழ்ச்சியாகவும் இருந்தது...

சிறிது நேரத்திற்கு முன்பு மனைவியிடம் விடைப்பெற்று அவன் எப்போதும் போல் கிளம்பி வெளியில் வந்த பின் தான் மனைவியின் நிலை அவனுக்கே மெதுவாய் உறைத்தது... எப்போதும் கூச்சமே இல்லாமல் தன்னை நாடிய பெண்களைக் கையாள தெரிந்தவனுக்கு வெட்கம்

நிறைந்த மனைவியை எப்படிக் கையாளுவது என்று அவனுக்குத் தெரியாமல் தான் அவன் அவளை விட்டு விலகி வந்தது...

நேற்று அவளின் ஏமாற்றம் சுமந்த விழிகள் இன்று ஏக்கத்தைச் சுமந்து அவனை நோக்கி பின் நாணி நிலம் பார்த்தது என அவளது நிலை கோர்வையாய் படமாய் ஓட,

"எத்தனை பெண்கள் கூடப் பழகி என்னடா பிரயோஜனம்... கட்டின பொண்டாட்டியை கவனிக்கத் தெரியலையே... உன்னை எல்லாம்..." தனக்குத் தானே திட்டி கொண்டு பின்னந்தலையில் கையால் தட்டியவன் மீண்டும் வீட்டினுள் ஓடி வந்தான்...

அங்கே மனைவியின் கலக்கம் சுமந்த முகம் அவனை உருக்க நொடி பொழுதில் தன் தயக்கத்தை விட்டொழித்தவன் அவசரமாய் அவளின் நெற்றியில் இதழ் பதித்து விலகினான்... பொன்னும் பொருளும் அள்ளி கொடுத்தால் மட்டுமே முகம் மலரும் பெண்களை மட்டுமே கண்டவன் தனது ஒற்றை இதழ் ஒற்றலில் தன் மனைவி இத்தனை உவகையை அடைவாள் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லை...

தனது முத்தம் அவளுக்கு இத்தனை மகிழ்ச்சி அடைய செய்கிறது என்றால் தன்னுடனான வாழ்க்கை அவளுக்கு எத்தனை மகிழ்ச்சியை அளிக்கும்...? அவளின் சந்தோசத்திற்காகவாவது தனது கடமைகளைச் சீக்கிரம் முடிக்க எண்ணினான்... அந்தக் கணம் அவளின் காதலில் திளைக்க அவனது மனம் விரும்பியது...

மாமன் வசம் இருக்கும் தொழிற்சாலைக்கு நேரே தனது காரை செலுத்தினான்... அவனது மனம் அடுத்துச் செய்ய வேண்டிய வேலைகளை மளமளவென யோசிக்க ஆரம்பித்தது...

அங்கே சென்று அலுவலகத்தில் அமர்ந்தவன் அலைப்பேசியை எடுத்து ஆராவமுதனை தான் முதலில் அழைத்தான்... அந்தப் பக்கம் அவர் எடுத்ததும்,

"என்ன மாமா ஆபிசுக்கு கிளம்பிட்டு இருக்கீங்களா...? ஆனா அதுக்கு அவசியம் இல்லை மாமா... ஆமாம் இனி நீங்க பார்த்துக்கிட்டு இருந்த எங்க தொழில் எல்லாத்தையும் என் கைவசம் நான் எடுத்திட்டேன்... இனிமேல் இந்தப் பாரத்தை நீங்க தூக்கி சுமக்க வேண்டாம்... என் பாரத்தை நானே சுமந்துக்கிறேன்... அதுக்கு அப்புறம் உங்களுக்கு ஒரு லாயர் நோட்டீஸ் வரும்... நீங்க பண்ணின பண மோசடிக்குக் கேள்வி கேட்டு... பதில் உங்கி கிட்ட இருக்குல்ல... இல்லைன்னா இப்பவே அதுக்குத் தயார் பண்ணிக்கோங்க..." ஆராவமுதன் பேச இடம் கொடாமல் பேசி முடித்தவன் அழைப்பை துண்டித்து மேசை மீது வைத்தான்...

பாம்பின் பல்லை பிடுங்கியாயிற்று இருந்தாலும் இனி அவர் சும்மா இருக்க மாட்டார்... எப்படியும் படம் எடுத்தாவது அவனைப் பயமுறுத்துவார்... விசமற்ற பாம்பு படம் எடுத்து ஆடினால் சின்னக்குழந்தை கூடப் பயப்படாது... இதில் அவன் எங்கே பயப்படப் போகிறான்...?

அடுத்தக் கட்ட வேலையை மனதில் நிறுத்தியவன் தனது அலைப்பேசியை எடுத்து அந்த எண்ணை அழுத்தினான்... அவனது மாமன் வரும் நேரத்தையும் தான் செய்யப் போகும் நேரத்தையும் கணக்கிட்டு கொண்டவன் மனதில் சிரித்துக் கொண்டான்...

அவன் நினைத்தது போல் ஆராவமுதன் கொஞ்ச நேரத்தில் அங்கே வந்து சேர்ந்தார்... அவர் அங்கே வந்து சேர்ந்தது கூடப் பிருந்தாவின் புலம்பலை தாங்க முடியாமல் தான்...

சித்தார்த் பேசி முடிக்கவும் அவரது வீட்டிற்கு வக்கீலின் எச்சரிக்கை அறிக்கை வருவதற்கும் சரியாக இருந்தது... அதைப் படித்துப் பார்த்துத் திக்பிரம்மை பிடித்து அவர் அமர்ந்திருக்க அங்கே வந்த பிருந்தா அவரது நிலையைக் கண்டு அச்சமுற்றவராய் கணவன் சுதாரிப்பதற்குள் அந்த அறிக்கையை எடுத்துப் படித்துவிட்டார்... அவ்வளவு தான் பிருந்தா புலம்ப ஆரம்பித்துவிட்டார்...

"உங்களுக்கு எங்க வீட்டுல என்ன குறை வச்சாங்க...? எனக்குச் சீர் பண்ணி உங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலையா...? இப்ப வரைக்கும் மாப்பிள்ளைங்கிற முறுக்கோட எங்க அண்ணன் வீட்டுல மரியாதையை அனுபவிச்சிக்கிட்டு இருக்கீங்களே அதுக்கு நீங்க செய்ற மரியாதை இது தானா... உங்களுக்கு என்ன சொத்து இல்லையா...? சுகம் இல்லையா...? எதுக்கு என் பிறந்த வீட்டு சொத்துல கை வச்சீங்க...? பாவம் சின்னப்பையன் தனியா கிடந்து கஷ்டப்படுறானேன்னு உங்களைப் பார்த்துக்கச் சொன்னா நீங்க அடுத்தவன் மாதிரி இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வீங்களா...?" என்று புலம்ப...

"நான் என்ன உன் வீட்டு வேலைக்காரனா...? எனக்குத் தேவைப்பட்ட பணத்தை எடுக்க நான் யார் கிட்ட கேட்கணும்...? அவன் கிடக்கான் சின்னப்பய... அவனை எப்படிச் சமாளிக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்று மனைவியிடம் கத்திவிட்டு உடனே அலுவலகத்துக்குக் கிளம்பினார்...

அந்த வயதிலும் புயல் போல் அலுவலக அறைக்குள் நுழைந்தவரை வேண்டும் என்றே கண்டு கொள்ளாமல் சித்தார்த் தனது வேலையைச் செய்து கொண்டிருக்க...

"சைதன்யா..." என்று அவர் கத்த...

அதில் மெதுவே நிமிர்ந்து பார்த்தவன் சுற்றும் முற்றும் பார்த்தபடி, "சைதன்யா இங்க எங்கே இருக்கான் மாமா...? பதினெட்டு வயசில் ஊரை விட்டு ஓடி போனவன் இந்தப் பன்னிரண்டு வருசமா இங்கேயே வராதவன் இப்போ எங்கே இங்கே வந்தான்...? கனவு எதுவும் கண்டீங்களா...?" நிதானமாய் அவன் கேள்வி கேட்டதில் அவரது இரத்தம் கொதித்தது...

"டேய் என்னடா... என்கிட்டேயே கதை அளக்கிற... உன்னை இங்கே கூப்பிட்டதே நான் தானேடா... என் கிட்டேயேவா உன் ஜம்பத்தைக் காட்டுற... நீ சித்து இல்லை... சைதன்யா

தான்னு நான் நிரூபிக்கிறேன் பாரு... இல்லை என் பேரு ஆராவமுதன் இல்லை..."

"மாமா உங்க மூளை எதுவும் குழம்பி போச்சா...? நான் சித்தார்த் ராம் மாமா..." என்றவன் அந்நேரம் உள்ளே வந்த மேலாளரிடம்,

"மிஸ்டர். வத்சன்... நான் யார்...?" என்று கேட்க... வத்சனோ குழம்பி போய் நின்றவன்,

"நீங்க மிஸ்டர். சித்தார்த் ராம்... அதுல என்ன சந்தேகம்...?" என்றான்...

"உங்களுக்குச் சந்தேகம் இல்லை... ஆனால் என் மாமாவுக்குச் சந்தேகமா இருக்காம்... ஒருவேளை அவருக்கு மூளை ஏதும் குழம்பி போச்சோ..." என்று சித்தார்த் நக்கலடிக்க...

அதற்கு மேல் தாங்க முடியாமல் ஆராவமுதன் அவன் மேல் பாய்ந்துவிட்டார்... வத்சன் தான் அவரைத் தடுத்து வெளியில் போக வைத்தான்...

வெளியில் வந்தவருக்கோ அடி மேல் அடியாகப் பெரும் அடி விழுந்தது... ஆம் வருமானவரித் துறையில் இருந்து சோதனை செய்ய வந்திருந்த செய்தி தான் அது...

அவர் என்ன பண மோசடி மட்டுமா பண்ணி இருந்தார்...? என்ன என்ன தப்புக்கள் செய்து பணம் சம்பாதிக்க முடியுமோ அத்தனை தவறுகளையும் ராம் இன்டஸ்ட்ரீஸ் பெயருக்குப் பின் மறைந்து கொண்டு செய்து வந்துள்ளார்... ஏற்றமதி செய்கிறேன் பேர்வழி என்று அவர் செய்தது எல்லாம் அரசாங்கத்திற்குப் புறம்பான செயல்கள் அல்லவா... அத்தனை தவறுகளும் வெளிச்சத்துக்கு வருமானால் அவரின் கௌரவம் என்னவாகக் கூடும்...?

நிற்க முடியாமல் தள்ளாடியவர் மீண்டும் அலுவலக அறைக்குள் நுழைந்தார்... அவர் வருவதைக் கண்டு,

"என்ன மாமா திரும்ப வந்துட்டீங்க...? இன்னும் உங்க சந்தேகம் போகலையா...?" என்று கிண்டலடித்து அவரை வரவேற்ற சித்தார்த்தை வெறித்துப் பார்த்தவாறு அவன் முன் இருந்த நாற்காலியில் அமர்ந்தவருக்கு வியர்த்து வழிந்தது... அவரது இரத்தம் உயர் அழுத்தத்தில் உடல் முழுவதும் பாய்ந்து கொண்டிருந்தது...

"இப்போ நான் சொல்றதை கேட்டா நீங்க நம்புவீங்கன்னு நினைக்கிறேன்..." என்று இடைவெளி விட்டவன், "எங்கே என் கையால உன்னைக் கொல்லணுமோன்னு கவலையா இருந்தது... யாரோ ஒரு புண்ணியவான் அந்த வேலையைக் கூட எனக்கு வைக்காம பண்ணிட்டு போயிட்டான்... அவன் எங்கே இருந்தாலும் நல்லா இருக்கணும்... வரட்டுமா சித்தார்த்... இப்படித் துடிச்சு துடிச்சு இன்னும் கொஞ்ச நேரத்துல நீ சொர்க்கம் போயிருவ... நான் போய்க் காலையில் உங்கம்மாவை கூட்டிட்டு வர்றேன்..."

அவன் சொல்ல சொல்ல அவரது முகம் மாறியது... "நீ... நீ..."

அவர் செய்த தவறுக்கு ஒரே சாட்சி இறந்து போன சித்தார்த்... அவன் இவன் இல்லை எனும் போது... இவனுக்கு எப்படி அன்று நடந்தது தெரியும்...? ஒருவேளை இவன் அவன் தானோ...?

"நானே தான் மாமா... என்னைத் தெரியலை... எதுக்காக என்னைக் கொல்லணும்ன்னு நினைச்சியோ அதை இன்னைக்கு நான் நிறைவேத்தி வச்சிட்டேன்... தைரியம் இருந்தா இப்போ என்னைக் கொல்லு மாமா..." சீறியவனைக் கண்டு பயந்து பின்னால் நகர்ந்தவர் அப்படியே நாற்காலியோடு கீழே சாய்ந்தார்...

ஏற்கெனவே இரத்த கொதிப்பு உச்சத்தை அடைந்து இருந்தது... அதில் சித்தார்த்தின் வார்த்தைகள் அவரை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்க 'இவன் சித்தார்த்தா... இல்லை சைதன்யாவா...?' என்று குழப்பம் தந்த அச்சத்தில் அவரது உடலின் ஒரு பகுதியை பக்கவாதம் தாக்கியது...

கைகால்கள் இழுத்துக் கொண்டு வாய் ஒரு பக்கமாய்க் கோணி கொண்டு அவர் கிடந்த நிலையை யார் கண்டாலும் அவர் மேல் உடனே இரக்கம் வரும்... ஆனால் அவனுக்கு அத்தகைய இரக்கம் ஏதும் வரவில்லை போலும்...

அவரின் செயலிழந்த நிலையைக் கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்... பின் மெல்ல அவனது கண்கள் மின்னியது பழிவாங்கி விட்ட திருப்தியில்...

யாரும் பார்க்கவில்லை என்ற ஒரு காரணத்தாலேயே அவர் செய்த தவறு இன்று அவரின் உயிருடன் விளையாடுகிறது...

"உன்னைக் கண்டா இரக்கமாத்தான் இருக்கு... ஆனா நீ சித்துவுக்குச் செய்த துரோகத்தை நினைச்சா என் ரத்தம் கொதிக்குது... உன்னைத் துடிக்கத் துடிக்க வெட்டி சாய்க்கணும்ன்னு இருக்கு... ஆனா என் அத்தைக்காகத் தான் பொறுத்துக்கிட்டு இருக்கேன்... இல்ல உன்னை..." அவரின் சட்டையைப் பிடித்து உலுக்கி சொன்னவன் பின் வெறுப்புடன் அவரை விட்டு விலகினான்...

"இப்போ உன்னைக் காப்பாத்தறதா வேண்டாமா மாமா..." என்று தாடையைத் தடவியபடி யோசித்துக் கொண்டு கேட்டவனை ஒற்றைக் கையெடுத்து கும்பிட்டு அவர் கெஞ்சினார்...

அன்று சித்தார்த் உயிருக்கு போராடியபடி இதே போல் தானே அவரிடம் கெஞ்சினான்... "என்னைக் காப்பாத்துங்க மாமா..." என்று... அந்தக் காட்சி அவரது மனக்கண்ணில் விரிந்தது...

ஒருவன் உயிருக்கு போராடும் போது அவனுக்கு உதவாமல் போவதும் கொலை செய்வதற்குச் சமம் என்று புரிந்து கொண்டவர் அன்று செய்த பாவத்தின் கணக்கிற்கான சம்பளத்தை இன்று ஒட்டு மொத்த பாக்கி இல்லாமல் பெற்றவர் கண்ணில் கண்ணீர் வழிந்தது காலம் கடந்த தனது ஞானோதயத்தால்...

"இப்போ நீ அழுது புலம்பி என்ன பிரயோஜனம் மாமா... செத்து போன என் சித்துத் திரும்ப வருவானா...? சொல்லு... சொல்லுடா..." அவரது கண்ணீர் கண்டு வெறிக் கொண்டார் போல் அவன் கத்த... அவரோ செயலிழந்து போய்த் தரையில் இட்ட மீனாய் துடித்துக் கொண்டு இருந்தார்...

அவரைப் பார்க்க பிடிக்காமல் அறையை விட்டு வெளியேறியவன் வத்சனிடம், "மாமாவுக்கு ஸ்ட்ரோக் அட்டாக் ஆகியிருக்கு... ஆம்புலன்சுக்கு ஃபோன் பண்ணி வர சொல்லுங்க..." என்று திரும்பியும் பார்க்காமல் சொல்லிவிட்டுச் சென்றான்...

அவன் சொன்னது போல் வத்சன் ஆராவமுதனை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு அவரது குடும்பத்திற்குத் தகவல் சொல்லி அனுப்பினான்...

அன்று முழுவதும் சித்தார்த்துக்கு வேலை நெட்டி முறித்தது... சோதனை செய்ய வந்த அதிகாரிகள் அவர்கள் வேலையைச் செய்து முடிக்கும் வரை பொறுமையாகக் காத்திருந்து அதற்குக் காரணம் ராம் இன்டஸ்ட்ரீஸ் அல்ல ஆராவமுதன் என்கிற தனி நபர் தான் காரணம் என்று தெளிவாக அவர்களுக்கு உணர்த்திவிட்டு அதற்கு ஏற்ற ஆவணங்களை அவர்களிடம் காட்டி ஆராவமுதனை மாட்ட வைத்துவிட்டு அவன் ஒதுங்கி கொண்டான்...

இனி ஆராவமுதன் கைகளில் விலங்கு மாட்டுவது நிச்சயம்... அவருக்குச் சிறையில் களி உறுதி... அதை நினைத்தவனுக்குச் சிரிப்பு வந்தது...

அந்த மகிழ்ச்சியுடன் வீட்டிற்குக் கிளம்பியவனுக்கு வீட்டில் அவனது அன்னையின் கோபமான வரவேற்பு கிடைத்தது...

"நில்லுடா... என்ன காரியம் பண்ணிட்டு வந்திருக்கன்னு தெரிஞ்சு தான் பண்ணுனியா..." அவரது கோபத்திற்கு எல்லாம் அவன் அசரவில்லை...

"தெரிஞ்சு தான் பண்ணினேன்... இவ்வளவு நாள் தப்பான வழியில் போய்ட்டு இருந்தேன் இப்பத்தான் சரியான

வழியில் போய்க்கிட்டு இருக்கேன்..." அசராமல் பதிலளித்தவனைக் கண்டு அமராவதிக்கு எரிச்சல் வந்தது...

"அவர் உன்னோட மாமா... உங்கப்பாவோட தங்கச்சி புருசன்... அவரைப் போய் ரெய்டில் மாட்டிவிட்டுட்டு வந்திருக்கியே... இதனால பாதிக்கப்படுறது அவங்க குடும்பக் கௌரவம் மட்டும் இல்ல... நம்ம குடும்பக் கௌரவமும் தான்..."

"அது எனக்கு நல்லா தெரியும்... ஆனா தப்பு செஞ்சவன் தண்டனையை அனுபவிச்சே ஆகணும்... அதைத் தான் அவர் அனுபவிக்கிறார்..." கொஞ்சமும் அலட்டி கொள்ளாமல் சொன்னவனை எரித்து விடுவது போல் பார்த்தவர்,

"இப்போ என்ன ஏதோ ஆசைப்பட்டு இந்த மாதிரி செய்துட்டார்... அவரை மன்னிச்சு எல்லாக் கேசையும் வாபஸ் வாங்கிடு..."

"அவர் என்ன என்ன தப்பு செஞ்சாருன்னு உங்களுக்குத் தெரியாது மாம்... தெரிஞ்சா தாங்க மாட்டீங்க... இதை இத்தோடு விடுங்க போய்த் தூங்குங்க... குட் நைட் மாம்..." கொஞ்சம் கோபமாய் அதே சமயம் அழுத்தமாய்ச் சொன்னவன் அவரின் பதிலை எதிர்பார்க்காமல் தனது அறையை நோக்கி சென்றான்...

அவன் குளித்து முடித்துப் படுக்கைக்கு வரும் போது ஹரிணி அங்கே இருந்தாள்... அவளது கண்கள் அவனை அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது...

'என்ன இப்படிப் பார்க்கிறா...?' என்று யோசித்துக் கொண்டே அவள் அருகில் அமர்ந்தவன், என்ன என்பது போல் புருவத்தை உயர்த்த...

"உங்களுக்கு இவ்வளவு கோபம் வருமோன்னா..." மெல்லமாய்க் கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"இவ்வளவு இல்லை... அவ்வளவு கோபம் வரும்..." என்று கையை விரித்துக் காட்டியவனைக் கண்டு அவளின் பயம் கூடி கொண்டே போனது... அதை அப்பட்டமாய் அவளது விழிகள் அவனுக்கு எடுத்து சொல்ல... அவளது பயம் அவன் மனதை கரைக்க,

"இங்கே வா..." அவளைக் கனிவுடன் பார்த்தபடி இரு கைகள் நீட்டி அவளை அழைத்தான்...

வெட்கம் வந்து தடுத்த போதும் காதல் கணவனின் அழைப்பை தட்ட முடியாது அவனின் கைகளுக்குள் வாகாய் அடங்கினாள் அவள்...

முதன்முறையாய் கணவனாய் அவளை நோக்கியவன் மனைவியாய் அவளை இறுக அணைத்துக் கொண்டான்... அவளும் அவனோடு ஒன்ற... பல பெண்களை அறிந்த அவனோ மனைவியைப் பற்றியும் அறிய ஆவல் கொண்டான்... ஆனாலும் ஏதோ ஒன்று அவனைத் தடுத்தது...

அவளது தலையில் தன் தாடையைப் பதித்தவன் அவளது முகவடிவை கைகளால் அளந்து கொண்டே, "எனக்குக் கொஞ்சம் டைம் வேணும் ஹனி..."

"ம்..." சரி என்றாள் உடனே...

அவன் அவள் முகத்தை நிமிர்த்திப் பார்க்க காலையில் இருந்த கலக்கம் இப்போது அவளது முகத்தில் இல்லை... அவனின் மனதை அறிந்து கொண்ட நிம்மதி மட்டுமே அதில் இருந்தது...

"என் மேல் உனக்கு ஒண்ணும் கோபம் இல்லையே..." தவிப்புடன் அவன் கேட்டான்...

"இல்லேன்னா..." என்றவள், "நீங்க டையர்டா இருக்கேள்... தூங்குங்கோ..." அவனை விட்டு விலகி மறுபக்கம் சென்று அவள் படுக்கப் போக...

"வேணாம்..." என்று அவளைத் தடுத்தவன் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு படுத்தான்...

அந்தச் சிறு புரிதலில் இருவரின் மனதிலும் நிம்மதி நிறைந்து இருந்தது...

உடல் சார்ந்த காமம் மட்டுமே கணவன், மனைவி பிணைப்பை இறுக்குவது அல்ல... புரிதல் நிறைந்த மனம் சார்ந்த காதல் தான் கணவன், மனைவி பிணைப்பை இறுக்குகிறது... இதை அறியாத மானுடன் சதைபிண்டத்திற்கு ஆசைப்பட்டுப் பல பேருடன் உறவு கொள்கிறான்... இறுதியில் தானும் அதில் காதலை தான் தேடுகிறோம் என்பதை அறியாத முட்டாளாய் காதலை இதயத்தில் உயிரோடு கொன்று புதைத்துவிட்டு உயிரற்ற உடல் சதையில் அதைத் தேடி அலைகிறான் மூடன்...

மறுநாள் காலையில் ஹரிணி கோவிலுக்குச் செல்ல பிரியப்படச் சித்தார்த் தான் அவளுடன் செல்ல முடியாததால் ஓட்டுநரோடு காரை கொடுத்து அவளைக் கோவிலுக்கு அனுப்பி வைத்தான்...

ஹரிணி சாமி கும்பிட்டுவிட்டுப் பிரகாரம் சுற்றி வரும் போது அங்கே சந்தோஷ் அவளுக்காகக் காத்திருந்தான் புன்னகையுடன்...

நீயாவேன்...!!!

## நான் : 11

"ஹாய்..." என்றபடி ஹரிணியின் அருகில் வந்தான் சந்தோஷ்...

எதிர்பாராவிதமாக அவனைக் கோவிலில் கண்டதில் திடுக்கிட்டு போனவளின் கால்கள் மேலே நடக்க முடியாமல் அங்கேயே ஸ்தம்பித்து நின்றது...

தன்னைச் சமாளித்துக் கொண்டவள் கண்கள் யோசனையுடன் அவனை அளவிட்ட போதும் அதையும் மீறி அவளது கண்களில் லேசாகப் பயம் எட்டி பார்த்தது...

தான் சித்தார்த்தை மணந்தது குறித்துத் தன்னை அவமானப்படுத்துவது போல் வார்த்தைகள் வீசி தன்னை அவன் கடித்துக் குதறி விடுவானோ என்று அவள் மனதில் கிலி படர்ந்தது...

ஆனால் அடுத்த நொடி அவள் நிமிர்வுடன் அவனை நோக்கினாள்... அவள் என்ன கொலைக் குற்றமா செய்துவிட்டாள் அவனைக் கண்டு பயந்து நடுங்குவதற்கு... காதலித்தவனைக் கரம் பிடித்தற்காக இவனைக் கண்டு தான் ஏன் பயப்பட வேண்டும் என்ற எண்ணம் மனதில் உதிக்க அவளிடத்தில் தைரியம் தானாய் வந்து ஒட்டி கொண்டது...

அவளின் முகபாவனைகளைக் கவனித்துக் கொண்டு இருந்த சந்தோஷ் மனதிற்குள் ஆச்சிரியப்பட்டுப் போனான்... அன்று பார்த்த ஹரிணி இவள் இல்லை... அவளின் இந்தத் தைரியம், நிமிர்வு எல்லாம் அவனுக்குப் புதிதாக இருந்தது... ஆனால் அது அவனுக்கு மிகவும் பிடித்தவிதத்தில் இருந்தது தான் ஆச்சிரியம்...

அவள் இப்படி மாற வேண்டும் என்று தான் அவனும் ஆசைப்பட்டான்... அதே போல் அவள் மாறியது குறித்து அவனுக்குச் சந்தோசம் தான்... ஆனால் அது அவள் அடுத்தவனின் மனைவியாய் மாறிய பின் வந்த மாற்றம் எனும் போது அவனது காதல் மனதில் வலி எழுந்தது...

அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளைப் பார்த்து புன்னகைத்தவன், "என்ன ஹனி..." என்றவன் நாக்கை கடித்துக் கொண்டு, "சாரி பழக்கதோசம்... என் கிட்ட பேச மாட்டிங்களா...?"

அவனது சகஜமான பேச்சு அவளின் மனதை நிம்மதி அடைய செய்ய, "அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை..."

"என் மேல் கோபம் ஏதும் இல்லையே..." என்று கேட்டவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் அவள்...

தான் கேட்க வேண்டிய கேள்வியை அவன் கேட்பது குறித்து அவளுக்குப் பாவமாய் இருந்தது...

"ச்சேச்சே... உங்க மேல நான் எதுக்குக் கோபப்படணும்...? நீங்க என் மேல் கோபப்படாமல் இருந்தா சரி..." அவளும் சற்று சகஜமானாள்...

"தேங்க்ஸ் என் மேல் கோபம் இல்லைன்னு சொன்னதுக்கு... அதே மாதிரி உங்க மேல் எனக்கு எந்தக் கோபமும் இல்லை..." என்றவனைக் கேள்வியாய் அவள் பார்க்க...

"உண்மையாங்க... நீங்க அவரைக் காதலிக்கிற விசயத்தை முதல்லேயே சொல்லி இருந்தா நான் விலகி போயிருப்பேன்..." என்றவனிடம் என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் மௌனமாய் அவள் நடந்து வந்தாள்...

கோவிலின் வாயிலுக்கு வந்த போது ஹரிணி அவனிடம், "உங்க கல்யாண பத்திரிக்கையைக் கூடிய சீக்கிரம் அனுப்பி வைங்கோ..." என்றவளை வெறுமையுடன் பார்த்தவன்,

"அது இந்த ஜென்மத்தில் நடக்காதுங்க..." வேறு எங்கோ பார்த்தபடி சொன்னவனைக் கண்டு அவள் அதிர்ந்தாள்...

"ஏன்...?" அவளது குரல் நடுங்கியது அவனது பதில் என்னவாக இருக்கும் என்ற ஊகத்தில்...

"ஏன்னு உங்களுக்குத் தெரியாதா ஹரிணி...?" அவளைக் கூர்மையாய் பார்த்துக் கொண்டே கேட்டவன், "சரி அதை

விடுங்க... நீங்க சந்தோசமா இருங்க... எனக்கு அது போதும்..."

"இது நல்லது இல்லை... நீங்க கட்டாயம் கல்யாணம் பண்ணிக்கணும்... உலகத்துல நான் மட்டும் தான் பொண்ணு கிடையாது..."

'என் உலகமே நீதானடி பெண்ணே...' மனதில் காதலாய் நினைத்தவனால் அவள் மீதான காதலை அவ்வளவு எளிதில் அழிக்க முடியும் என்று தோன்றவில்லை...

"பார்க்கலாம்..." என்றான் அவளின் வருத்தத்தைக் கண்டு சமாதானமாக...

அதில் முகம் மலர்ந்தவள், "சரிங்க நான் வர்றேன்..." என்று அவனிடம் விடைப்பெற அவனும் தலையசைத்து விடை கொடுத்தான்...

ஓரடி முன்னே எடுத்து வைத்தவள் பின் நின்று அவனைத் திரும்பி பார்த்தவள், "என்னை எப்படி உங்களுக்குத் தெரியும்...?"

அவள் அருகில் வந்தவன், "அது ஒரு பெரிய கதை... இப்ப சொல்றதுக்கு நேரம் இல்லை... நான் ஆபிஸ் போகணும்... இன்னொரு நாள் மீட் பண்ணும் போது சொல்றேன்..." என்றவன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்...

அவனது அவசரத்தை உணர்ந்தவளாய், "சரிங்க நீங்க கிளம்புங்க..."

"அடுத்து மீட் பண்ணலாம்ன்னு சொன்னேனே... அதுக்கு நீங்க பதிலே சொல்லலை..."

அவனை எதற்கு மீண்டும் சந்திக்க வேண்டும்...? இதனால் அவளுக்கும் அவளது கணவனுக்கும் பிரச்சினை வந்துவிட்டால்...?

அன்று ஹோட்டலில் இருந்து சித்தார்த் அவளைக் கோபத்துடன் இழுத்துக் கொண்டு சென்றது நியாபகம் வர அவள் யோசனையுடன் நின்றிருக்க...

"ஒரு பிரெண்டா தான்ங்க கேட்கிறேன்..." என்றவனிடத்தில் அவளால் மறுத்து பேச இயலவில்லை...

"பார்க்கலாம்..." என்றவள் அங்கிருந்து கிளம்பினாள்...

போகும் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தவனின் உதட்டில் விசமப் புன்னகை வந்தமர்ந்தது... இனிவரும் நாட்களில் அவளை எப்படி எல்லாம் வளைக்கலாம் என்று நினைத்தவனின் மனதில் அவனது பெயரை போலவே சந்தோசம் பொங்கி வழிந்தது...

அந்தச் சந்தோசம் எதனால் வந்தது என்றால் அவள் தனக்கு மட்டுமே சொந்தமானவள் என்பதனால்...!!!

இதை எல்லாம் வேதனையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தது காற்றாய் மாறிப் போன அந்த அரூபம்...

சித்தார்த்துக்கு எப்போதும் போல் அலுவலகத்தில் வேலைகள் காத்திருந்தது... அதில் மூழ்கி போயிருந்தவன் வேதாந்தம் வருகையில் நிமிர்ந்தான்...

"என்ன அங்கிள்...?"

"தம்பி... நீங்க சொன்னது போல் செஞ்சாச்சு..."

"இப்போ எங்கே இருக்கான்...?"

"ஹாஸ்பிட்டல்ல உயிருக்கு போராடிக்கிட்டு இருக்கான்..."

"பார்க்க போகணுமே அங்கிள்..." என்றான் கண்களில் ஒருவித தீவிரத்துடன்...

"நீங்க எதுக்குத் தம்பி அங்கே எல்லாம் போயிட்டு..."

"இல்லை அங்கிள் நான் அவனைப் பார்க்கணும்... கேள்வி கேட்கணும் அங்கிள்..."

"சரி தம்பி ஏற்பாடு பண்ணிட்டு சொல்றேன்... ஏன்னா அவன் கூடவே யாராவது இருப்பாங்க அதான்..." என்றவரை பார்த்துச் சம்மதமாய்த் தலையசைத்தான்...

அடுத்த அரைமணி நேரத்தில் அவன் மருத்துவமனையில் இருந்தான்... மருத்துவமனை வராந்தா அந்த மதிய நேரத்தில் அங்கங்கு சில ஆட்களுடன் வெறிச்சோடி இருக்கச் சுதந்திரமாய் அவன் அங்கிருந்த ஒரு அறைக்குள் நுழைந்தான்...

அங்குக் கட்டிலில் உடல் முழுவதும் பலத்த அடியுடன் படுத்து இருந்தவனைக் கண்டு சித்தார்த்தின் மனம் கொதித்தது...

அடிப்பட்டவனுடன் கூட இருந்த அவனது அன்னையை வேதாந்தம் பேச்சு கொடுத்து அவரை அப்புறப்படுத்தி இருந்தார்...

சித்தார்த் அவனது அருகில் நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு அமர்ந்தவன் தனது கைகள் கொண்டு அவனது கன்னத்தில் பலமாய்த் தட்டினான்...

"சந்துரு... சந்துரு..." ஆம் அது அவனது சகோதரனின் முன்னாள் உதவியாளன் சந்துரு தான் அது...

சித்தார்த் சொன்னதன் பேரில் வேதாந்தம் தான் வேறு ஆட்களை வைத்து இந்த விபத்தை ஏற்படுத்தியது... சித்தார்த்துக்கும் இதற்கும் சிறிதும் தொடர்பு இருப்பதாய் யாருக்கும் தெரியாது...

'ஷ்' என வலியில் முனங்கியபடி மெல்ல கண் விழித்த சந்துரு அங்கே அமர்ந்திருந்த சித்தார்த்தை கண்டதும் அவனது முகம் வெளிறியது... கண்களில் மரணப் பயம் தோன்றியது...

"பே...ய்..." என்று அலறியவனைக் கண்டு பெரிதாய் சிரித்தான் சித்தார்த்...

"நான் பேயா நல்லா என்னை உத்து பாரு... எனக்குக் கை, கால் எல்லாம் இருக்கு... உன் கண் முன்னாடி தான் உட்கார்ந்து இருக்கேன்... நான் சாதாரண மனிதன் சந்துரு... என்னை எதுக்குப் பேய்ன்னு சொல்ற...?" புன்னகையுடன் கேட்டவனைக் கண்டு இன்னும் அச்சம் அடைந்தான் சந்துரு...

"நீ பண்ணின வேலைக்கு நான் ஏதாவது சட்டரீதியா நடவடிக்கை எடுத்தேனா... இல்லையே... உன்னைக் கூப்பிட்டு வார்ன் பண்ணித்தானே வேலையை விட்டு அனுப்பினேன்... ஏன்னா உன்னால உன்னைப் பெத்தவங்க பாதிக்கப்படக் கூடாதுன்னு தானே அப்படிச் செய்தேன்... ஆனா நீ அதுக்கு என்ன கைம்மாறு செஞ்ச...?" கண்ணில் பளபளப்புடன் சித்தார்த் கேட்டதும் சந்துருவின் மனம் அந்த நாளுக்குத் தாவியது...

அன்று சித்தார்த் அவன் செய்த தவறுக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் எச்சரித்து அனுப்பியது என்னமோ உண்மை தான்... ஆனால் அதை அவன் தனியாகக் கூப்பிட்டு கண்டிக்கவில்லையே... அலுவலகத்தில் எல்லோர் முன்னும் அவனைத் திட்டி அவமானப்படுத்தித் தானே அவனை வேலையை விட்டு வெளியில் போகச் சொன்னான்... அன்று அவன் பட்ட அவமானம் இன்றும் அவனது நெஞ்சில் தீயாய் எரிந்து கொண்டு இருந்தது...

அன்று அந்தத் தீயை அணைக்கத் தான் குடிவெறியில் சித்தார்த்தை பழிவாங்க அவனைத் தேடி அந்தக் கடற்கரை வீட்டிற்குச் சென்றான்... அங்கே சோபாவில் சாய்ந்து கண்களை மூடி தூங்கி கொண்டிருந்த சித்தார்த்தின் நெஞ்சில் கத்தியை ஆழ சொருகியவன் சித்தார்த்தின் கழுத்து தொய்ந்து கீழே விழுவதைக் கண்டு மனதில் எழுந்த திருப்தியுடன் அங்கிருந்து ஓடி வந்துவிட்டான்...

அன்று அவன் கொன்ன சித்தார்த் இன்று உயிருடன் வந்து கண் முன்னால் நின்றால் அவன் பயப்படாமல் என்ன செய்வான்....? பேய் என்று அலறாமல் வேறு எப்படி நினைப்பான்...?

"இ...ல்...ல... நீ... பே... ய்..." என்றான் மீண்டும் நம்பாமல்... பயத்தில் அவனது வாய் குழறியது...

"கொன்னவன் நீயே சொல்றப்போ நான் நம்பாமல் இருக்க முடியுமா சந்துரு... ஓகே நான் பேயாவே இருந்துட்டு போறேன்... என்னை ஏன் கொன்ன சந்துரு...?"

இறந்து போனவன் என்று எண்ணி இருந்தவன் மீண்டும் உயிர்த்து வந்து இந்தக் கேள்வியைக் கேட்டால் அவனுக்கு எப்படி இருக்கும்...?

பயத்தில் சந்துருவின் இதயம் தாறுமாறாய்த் துடித்தது... அதன் துடிப்பு நொடிக்கு நொடி அதிகரித்து ஒரு கட்டத்தில் இதயம் அதற்கு மேல் துடிக்க இயலாமல் தனது துடிப்பை நிறுத்தி கொண்டது...

மூச்சு விடச் சிரமப்பட்டவன் பின் துடித்துத் தனது இறுதி மூச்சை நிறுத்தி கொண்டதை சித்தார்த்தின் கண்கள் ஒரு நொடி பார்த்து ரசித்தது... மறுநொடி வேதனையுடன் கண்களை மூடி கொண்டது...

என்றில் இருந்து அவன் இப்படிக் கொடூரமானவன் ஆனான்... தான் போகும் பாதை சரி தானா என்று அவன் மனம் கேட்டது... அதற்கு மனம் ஆம் என்று பதில் சொன்னது...

'உன் சகோதரனை துடிக்கத் துடிக்கக் கொன்றவர்களைத் துடிக்க வைப்பதில் எந்தத் தவறும் இல்லை... நீ யாரின் உயிரையும் பறிக்கவில்லையே... அவர்கள் செய்த ஊழ்வினை பயனை இன்று அவர்கள் அனுபவிக்கிறார்கள்... அதற்கு நீ ஏன் வருத்தப்படுகிறாய்...? எழுந்திரு சைதன்யா... இன்னும் நீ செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கு... நீ போக வேண்டிய தூரம் வெகு தொலைவு இருக்கு... போ சைதன்யா முன்னை விட வேகமாய் முனைப்புடன் செயல்படு...' என்று மனம் அவனிடம் ஆணையிட உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் நிர்மலமான மனநிலையுடன் அங்கிருந்து எழுந்தவன் வேகமாய் வெளியேறினான்...

அன்று மாலை சந்துருவின் சொந்த ஊரில் நடைப்பெற்ற அவனது இறுதி ஊர்வலத்தில் ஏதும் அறியாதவன் போல் சித்தார்த் கலந்து கொண்டான்... சந்துருவின் உடலை மருத்துவமனையில் இருந்து கொண்டு வர வேதாந்தம் மூலம் எல்லா ஏற்பாடுகளையும் முன்னின்று செய்து கொடுத்தான்... சந்துருவின் பெற்றோருக்கு ஆறுதல்

அளித்தவன் வேதாந்திடம் சொல்லி அவர்களுக்கு மாதாமாதம் பணம் அனுப்பி உதவி செய்யச் சொல்லி உத்தரவிட்டான்...

அந்த வயதானவர்களைப் பார்க்கும் போது அவனது இதயம் கண்ணீர் வடித்தது... ஆனால் அவனது சகோதரனை எண்ணும் போது அவனது இதயம் இரத்த கண்ணீர் அல்லவா வடிக்கிறது... அதற்கு அவன் தகுந்த பரிகாரம் செய்ய வேண்டாமா...?

கைலாஷ் சந்துருவின் இறுதி ஊர்வலத்திற்குக் கூட வரவில்லை... ஒருகாலத்தில் அவன் மூலம் ஏகப்பட்ட நன்மைகளைப் பெற்று வந்தவன் அவனால் எந்தவித நன்மையும் இல்லை என்று தெரிந்ததும் கறிவேப்பிலை போல் அவனை ஒதுக்கி விட்டான்...

சந்துருவை ஊரில் இருந்து வரவழைத்தவன் அவனைத் திட்டி வேலையில் இருந்து நீக்கிவிடச் சந்துரு வயிற்று பிழைப்புக்காகச் சித்தார்த் கண்ணில் படாமல் சென்னையில் தங்கி வேறு வேலையைத் தேடி கொண்டு இருந்தான்... அப்போது தான் இந்த விபத்து நடந்தது...

அன்று இரவு மிகவும் தாமதமாக வீட்டிற்கு வந்த சித்தார்த் அங்கு அன்னை அவனுக்காகக் காத்திருப்பது அறிந்து அவர் முன் சென்று அமர்ந்தான்...

"இதைத் தான் சொன்னியா கண்ணா..." கையில் இருந்த பத்திரிக்கையை அவன் முன் நீட்டினார்...

அதன் முன் பக்கத்தில் ஆராவமுதன் செய்த சட்டவிரோத காரியங்களைப் பற்றிப் பத்தி பத்தியாய் எழுதி இருந்தது... ஒன்றும் பேசாது அதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மகனின் தோளில் ஆதரவாய் கை வைத்தவர்,

"அண்ணா இப்படிப் பண்ணுவார்ன்னு நான் நினைக்கலை கண்ணா... ஏதோ பண மோசடின்னு தான் நான் நினைச்சேன்... இப்போ புரியுது நீ பண்ணியது சரிதான்னு...

இதை வளர விட்டிருந்தா நம்மளுக்குத் தான் தொழிலில் வீண் அவப்பெயர்..."

அன்னை புரிந்து கொண்டு பேசியது அவனுக்கு அந்த நேரம் சற்று ஆறுதலாக இருந்தது... ஆனாலும் மாமன் செய்த தவறின் முழுப்பரிணாமமும் தெரியாமல் இருக்கும் அன்னையைக் கண்டு அவனுக்கு இரக்கம் தான் சுரந்தது...

மௌனமாய்த் தலையசைத்தவன் எழுந்து பேருக்கு உணவை கொறித்துவிட்டு தனது அறைக்கு வந்தான்...

தன் பின்னோடு வந்த மனைவியைக் கண்டவன், "ஹனி... நாளையில் இருந்து நீ காலேஜ்க்கு போ..."

அவனது வார்த்தை அவளுக்கு ஆச்சிரியத்தைக் கொடுக்க, "உண்மையாவான்னா..." என்றாள் முகம் மலர...

"உண்மையா தான்..." என்றவன் வியப்பில் விரிந்த அவளது கண்களைப் பார்த்தவாறு அவளைத் தன் அருகில் இழுத்து கொண்டவன் அவளை இமைக்காமல் பார்த்தான்...

அன்னையின் கெடுபிடியில் இருந்து மனைவியைத் தப்பிவிக்கத் தான் அவன் அவளைக் கல்லூரிக்கு போகும்படி பணித்தது... அந்தக் கொஞ்ச நேரமாவது அவள் நிம்மதியாய் இருக்கட்டுமே என்று அவன் நினைத்தான்... அன்னையை எப்படி விட்டு கொடுக்க முடியாதோ அதே போல் எந்தச் சூழ்நிலையிலும் மனைவியை அவனால் விட்டு கொடுக்க முடியாது... அவளைக் கஷ்டப்பட வைக்கவும் முடியாது...

"அத்தை ஏதும் சொல்வாங்களோன்னா..." அவனது சட்டை பொத்தானை திருகியபடி கவலையுடன் கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன் மாமி... உனக்கு எதுக்குத் தேவையில்லாத கவலை..." என்றான் அவளது முன் நெற்றியில் தன் நெற்றியால் முட்டியபடி...

"ம்... அப்படின்னா நேக்கு ஓகே..." தன்னைப் பார்த்து சிரித்தபடி கள்ளங்கபடமற்று கூறியவளை கண்டு அவனின் பார்வை மாறியது... அவனின் பார்வை அவளை விழுங்கி கொண்டு இருந்ததை அறியாமல் அவள் மேலே பேசி கொண்டு போனாள்...

"இன்னைக்குக் கோவில்ல அவரைப் பார்த்தேன்னா..." என்றவளின் வார்த்தையில் தனது பார்வையை மாற்றிக் கொள்ளாமல்,

"எவரை...?" என்றவனின் பார்வை மேலும் மேலும் அவளைக் கபளீகரம் செய்து கொண்டிருந்தது...

"அதான் அந்தச் சந்தோஷ்..."

சந்தோஷ் என்ற வார்த்தையில் அவனின் மயக்கம் முற்றிலும் தெளிந்தது...

அன்று அந்தச் சந்தோஷ் ஹரிணியைப் பார்த்துக் கொண்டு சென்ற பார்வை இன்று சித்தார்த்துக்கு நியாபகம் வந்தது... அதன் அர்த்தம் இப்போது அவனுக்குப் புரிந்தது...

'ஹரிணியை யாருக்கும் விட்டு கொடுக்க மாட்டேன்...' என்ற தீவிரம் அந்தப் பார்வையில் இருந்ததை அவன் இப்போது உணர்ந்தான்...

"என்ன சொன்னான்...?"

"சும்மா பேசிட்டு இருந்தார்ன்னா..." அதற்கு மேல் அதைப் பற்றி அவள் விளக்கி சொல்லவில்லை....

சந்தோஷை பார்த்து பேசியதை கணவனிடம் இருந்து மறைக்க எண்ணம் இல்லாதவளாய் அதை அவனிடம் கூறியவளுக்கு அதைப் பற்றிப் பேச வேறு ஒன்றும் இல்லை என்றே தோன்றியது...

"ஓ..." என்றவன் அடுத்த நொடி தாமதிக்காமல் அவளது முகத்தைக் கையில் ஏந்தியவன் அவள் முகம் முழுவதும் தனது இதழை பதித்து முன்னேறியவன் இறுதியில் அவளது இதழில் வந்து இளைப்பாறினான்...

திடீரென்று அவன் தாக்கிய இதழ் யுத்தத்தில் முதலில் திகைத்து நின்றவள் பின் மெல்ல மெல்ல அவனது முத்தத்தில் மயங்கி அவனது இதழ் யுத்தத்தில் தன்னை இழந்து தோற்க தொடங்கினாள்...

நீயாவேன்...!!!

## நான் : 12

சகோதரனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்க வேண்டும், தான் முற்றிலும் முழுவதுமாக ஹரிணிக்கு ஏற்ற கணவனாக, நல்லவனாக மாற வேண்டும் என்ற எண்ணங்கள் எல்லாம் சித்தார்த்துக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டுத் தன்னவளை தன்னுடன் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற பயமே அவனை இயக்க அவன் கணவன் என்ற உரிமையை மெல்ல மெல்ல அவளிடத்தில் நிலை நாட்ட துவங்கினான்...

அவளும் நல்ல மனைவியாய் அவனுடன் ஒத்துழைக்கத் துவங்கினாள்... அவனின் ஒதுக்கம் அவளுக்கு வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் கொடுத்தது என்றால் இப்போது அவனின் அணைப்பு அவளைச் சந்தோசத்தில், பரவசத்தில் ஆழ்த்தியது...

அவசரகதியில் எங்கே அவளை இழந்துவிடுவோமோ என்ற பயத்தில் அவன் கூடிய கூடல் அதே அவசரத்தில் சீக்கிரத்தில் முடிவுக்கு வந்தது...

தன் நெஞ்சில் முகம் புதைத்து படுத்திருந்தவளின் தலையை வருடி கொடுத்தவனின் முகம் எல்லையில்லா வேதனையில் ஆழ்ந்து இருந்தது...

எதையும் ஆழ்ந்து அனுபவித்து வாழ்ந்தவன் அவன்... அப்படிப்பட்டவன் இன்று மனைவியுடன் முழுமனதுடன் ஒன்ற முடியாமல் தவித்தான்... தவறு மேல் தவறாகச் செய்து கொண்டே போகிறோமோ என்று உள்ளுக்குள் கவலை கொண்டான்...

அதை எல்லாம் விட அவள் தன்னைப் பற்றிய உண்மை தெரிந்து தன்னை விட்டு சென்றுவிட்டால்...??? அந்தக் கேள்வி தான் அவனின் மனதை குடைந்து எடுத்தது...

அவனைப் பற்றி உண்மை தெரிந்தவர்கள் இரண்டே பேர்... அதில் மாமா பேச்சு வராமல் முடங்கிப் போய்விட்டார்... இன்னொருவர் அவனது அன்னை... அவரிடம் அவன்

விசயத்தை எடுத்துச் சொன்னால் அவரும் இது பற்றி யாரிடமும் மூச்சு விடப் போவது இல்லை... இருந்தாலும் அவனின் மனதை ஏதோ ஒன்று அரித்து அவனைக் கொல்லாமல் கொன்றது...

"ஹனி..."

"ம்..."

"என்னை உனக்குப் பிடிச்சிருக்கா...?" அவனது கேள்வியில் அவனை அண்ணாந்து பார்த்தவள் களுக்கென்று சிரித்தாள்...

அவளது சிரிப்பை கண்டு அவன் கேள்வியாய் அவளைப் பார்க்க...

"இப்போ போய் ஏன்னா இந்தச் சந்தேகம்...?" அவளது வார்த்தையை அவன் உணர்ந்ததாய் தெரியவில்லை...

"ப்ளீஸ் ஹனி... நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு..." என்றவனின் குரலில் இருந்த தவிப்பை உணர்ந்தவள் எழுந்து அமர்ந்து அவனது தலையைக் கோதி கொடுத்தாள்...

அன்று கோவிலில் அவன் கேட்ட போது அவனது முகத்தில் இருந்த தவிப்பை இன்றும் அவனது முகத்தில் பார்த்தாள்... அன்றாவது காதல் நிறைவேறுமோ ஆகாதோ என்ற பயத்தில் அவன் அப்படிக் கேட்டு இருக்கலாம்... ஆனால் இன்று அவன் இப்படிக் கேட்பதற்கு என்ன காரணம்...? யோசித்தவளுக்கு விடை தெரியவில்லை... ஆனாலும் அவனது கலக்கம் அவளை வருத்தியது...

"உங்களை ரொம்ப ரொம்பப் பிடிக்கும்ன்னா... உங்களைப் பிடிக்காமலா பெத்தவாளை எதிர்த்துண்டு உங்களைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சேன்..." என்றவள் தனது வெட்கம் மறந்து அவனது நெற்றியில் இதழ் பதித்தாள்...

அவளது அந்தச் செய்கையில் அவனது மனதின் அலைப்புறுதல் சற்றுக் குறைந்தது... அவளை நோக்கி

தனது வலக்கையை நீட்டினான்...

"என்னன்னா...?"

"எந்தச் சூழ்நிலையும் என்னை விட்டு போக மாட்டேல்ல..."

கணவனின் இந்தப் பரிதவிப்பு தேவை இல்லாத ஒன்றோ என்று அவளுக்குத் தோன்றிய போதும் அவனுக்காக அவனது கரத்தின் மீது தனது கரத்தை வைத்தவள்,

"என் உயிர் போனாலும் உங்களை விட்டு போக மாட்டேன்னா..." என்றவளுக்குத் தெரியவில்லை தன் வாக்கை தான் காப்பாற்ற போவது இல்லை என்று...

அவளது கரத்தை பிடித்து இழுத்து அவளைத் தன் நெஞ்சில் சாய்த்து கொண்டவன் மனம் நிம்மதி அடைந்தது அவளது வார்த்தையால்...

இது போதும் அவனுக்கு... அவளது வாக்கு கொடுத்த நம்பிக்கையில் மலையைக் கூடப் புரட்டி போடும் அளவுக்குப் பலம் வந்தது அவனுக்கு...

எந்தச் சூழ்நிலையிலும் அவள் தன்னை விட்டு பிரிய மாட்டாள் என்ற எண்ணம் வலு பெற்றதும் அவனது நினைவில் இருந்து சந்தோஷ் மறைந்து சகோதரனை கொன்றவர்களைப் பழிவாங்கும் எண்ணம் மட்டுமே நிறைந்து இருந்தது...

மாமன், சந்துரு என்று வரிசையாகப் பழிவாங்கியாயிற்று... ஆனால் இன்னும் யார் யார் இதில் அடங்கி இருக்கிறார்கள் என்று யோசித்தவனுக்குக் கைலாஷ் மற்றும் அந்த மூன்று பேர் நினைவில் வந்தார்கள்... இவர்களில் யார் முக்கியக் குற்றவாளி என்று அவனால் உறுதியாகக் கூற முடியவில்லை...

இவர்களில் யார் குற்றவாளியாக இருந்தால் என்ன அந்த நால்வருக்கும் அவனது நீதிமன்றத்தில் தண்டனை நிச்சயம்...

மறுநாள் காலையில் சித்தார்த் இயல்பு போல் அலுவலகம் கிளம்பி கொண்டு இருந்தான்... நேற்றைய உறவின் மிச்சத்தின் தாக்கம் எதுவும் அவனுக்கு இல்லை போலும்... ஏதோ யோசனையில் கிளம்பி கொண்டிருந்தவனை ஓரக்கண்ணால் நோக்கியபடி ஹரிணி கல்லூரிக்கு கிளம்பி கொண்டு இருந்தாள்...

"போகலாமான்னா...?" அவளது குரலில் யோசனையைக் கைவிட்டவன்,

"ம்..." என்றபடி முன்னே நடந்தான்...

அவனது அந்த ஒதுக்கம் அவளுக்கு என்னவோ போலிருந்தது... நேற்றைய உறவிற்குப் பின் அவனிடம் இருந்து சின்னச் சின்னச் செல்ல சீண்டல்களை எதிர்பார்த்தது அவளது மனம்... ஏன் இப்படி இருக்கிறார் என்ற கேள்வி மட்டும் அவளது மனதை குடைந்து கொண்டிருந்தது...

மகனுடன் மருமகளும் கிளம்பி வருவதைக் கண்டு அமராவதி கேள்வியாய் மகனை பார்த்தார்...

"ஹனி காலேஜ்க்கு போறாள் மாம்..." அறிவிப்பாய் சொன்ன மகனை ஆத்திரமாய்ப் பார்த்தார்...

"அதுக்கு என் கிட்ட பெர்மிசன் கேட்கணும்ன்னு உனக்குத் தோணலை என்ன...?"

"என் வொய்ப்பை படிக்க அனுப்ப நான் எதுக்கு உங்க கிட்ட பெர்மிசன் கேட்கணும்...?"

புரிந்து கேட்கிறானா இல்லை புரியாமல் கேட்கிறானா என்று தெரியாமல் மகனை உறுத்து விழித்தவர் மருமகளிடம்,

"அவன் கேட்கலைன்னா கூடப் பரவாயில்லை... ஆனா உனக்குக் கூடக் கேட்கணும்ன்னு தோணலையா...? பெரியவங்கங்கிற மரியாதை இருக்கா இல்லையா...? உங்கம்மா இதை எல்லாம் சொல்லி கொடுத்து

வளர்க்கலையா...?" தன் கோபத்தை எல்லாம் அவளிடம் காட்டினார்...

அமராவதியின் குத்தல் பேச்சு பழகி போயிருந்த போதும் அன்னையைக் குறை சொன்னதை அவளால் தாங்கிக்க முடியவில்லை... கண்களில் கண்ணீர் மல்கியது...

"என்ன மாம் இது... அவளைப் படிக்கத்தானே அனுப்பறேன்... ஊரை சுத்தவா அனுப்பறேன்... அவ படிச்சா தானே நாளைக்கு நம்ம கம்பெனியை பார்த்துக்கிற அளவுக்கு வர முடியும்... வீட்டுக்குள்ளேயே அவளைப் பூட்டி வச்சா எப்படி மாம்...? என் வொய்ப் எல்லாத்திலேயும் திறமையா இருக்கணும்ன்னு நான் நினைக்கிறேன்..." உறுதியாய் கூறியவனை அழுத்தமாய்ப் பார்த்தவர்,

"யாரோட தொழிலை யார் பார்த்துக்கிறது...? இவ பார்த்துக்கிறது பதிலா பேரனை பெத்துக் கொடுக்கச் சொல்லு... வருங்காலத்தில் அவன் பார்த்துக்குவான்..."

"ஒருவேளை நான் இல்லாமல் போய்ட்டா... உங்க பேரன் சின்னவனா இருந்தா... என்ன பண்ணுவீங்க மாம்..."

"ஏன்னா..."

"கண்ணா..."

அமராவதி மற்றும் ஹரிணி இருவரின் குரலும் ஏக காலத்தில் அதிர்ந்து ஒலித்தது...

"நெருப்புன்னா வாய் வெந்துடாது..." என்று இருவருக்கும் பொதுவாய் சொன்னவன் அன்னையிடம் திரும்பி, "உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை மாம்... பெண்ணுக்குக் கல்வி எத்தனை முக்கியம்ன்னு உங்களுக்கே நல்லா தெரியும்..." இதற்கு மேல் தான் ஒன்றும் சொல்ல இல்லை என்பதைக் குறிப்பால் உணர்த்தியவன் மனைவியை அழைத்துக் கொண்டு சென்றான்...

கணவனின் கடுமைக்குப் பயந்து அவன் பின் சென்ற போதும் ஹரிணி தன் மாமியாரை திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே சென்றாள்...

அமராவதியின் உள்ளமோ கொதித்துப் போயிருந்தது அது மகனின் வார்த்தையால் மற்றும் இன்றி மருமகளுக்கு மகன் கொடுத்த முக்கியத்துவத்தை எண்ணி... அவளைக் கடித்துக் குதறுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்... அவரது நல்ல நேரமோ இல்லை ஹரிணியின் கெட்ட நேரமோ அந்தச் சந்தர்ப்பம் அன்று மாலையே அவருக்குக் கிடைத்தது...

ஹரிணியைக் கல்லூரியில் இறக்கிவிட்டு விட்டு நேரே அலுவலகத்திற்கு வந்த சித்தார்த் அந்தத் துப்பறியும் நிறுவனத்திற்கு அழைத்தான்...

"நான் கேட்ட தகவல்களை நீங்க இன்னும் அனுப்பலையே...?" மறுபக்கம் என்ன பதில் சொன்னார்களோ அலைப்பேசியை அணைத்தவன் வேதாந்தை அழைத்தான்...

"அங்கிள்... டிடெக்ட்டிவ் ஏஜென்சியில் இருந்து ஏதும் ஃபைல் அனுப்பி இருந்தாங்களா...?"

"ஆமாம் தம்பி... நீங்க ஒரு வாரமா ஆபிசுக்கு வராம இருந்தப்போ அனுப்பி இருந்தாங்க... உங்க கிட்ட கூடச் சொன்னேனே..."

அவர் எந்த ஒரு வாரத்தைப் பற்றிக் கூறுகிறார் என்பதை உணர்ந்தவனாய் அவன் அமைதி காத்தான்...

"இதோ இங்கே இருக்கு தம்பி..." அருகில் இருந்த மேசையில் இருந்து அந்தக் கோப்பை எடுத்து அவன் கையில் கொடுத்தார் அவர்...

"தேங்க்ஸ் அங்கிள்..." என்றபடி அதை வாங்கியவன் அவசரமாய்ப் பிரித்துப் பார்க்க... அவனுக்கு வேண்டிய தனிமையைக் கொடுத்துவிட்டு வேதாந்தம் வெளியில் வந்தார்...

அன்று அந்த மூன்று பேர் வந்த காரின் எண்ணை குறித்து வைத்து கொண்டவன் மறுநாளே துப்பறியும் நிறுவனத்திடம் கொடுத்து அவர்கள் யார்...? எவர்...? என்று விசாரிக்கச் சொல்லி இருந்தான்... இடையில் சகோதரன் இறப்பு குறித்து அதிர்ச்சி அடைந்தவன் அதை அப்படியே மறந்தும் போனான்...

வெகு கவனமாய் அவன் அந்தக் கோப்பை ஆழ்ந்து படித்தான்...

மூவருமே பணக்கார வீட்டின் தறுதலை வாரிசுகள்... ஒருவன் அரசியல்வாதி வீட்டு வாரிசு மற்ற இருவரும் பிரபல தொழிலதிபர்களின் வாரிசுகள்...

அளவுக்கு மிஞ்சிய பணம் அவர்களைத் தன்னிலை அறியாமல் ஆட்டம் போட வைத்தது... அவர்களின் ஒரே பொழுதுபோக்கு மது, மாதுவுடன் ஊர் சுற்றுவது... அவர்களின் அந்தரங்க லீலைகள் பெரும்பாலும் அரங்கேறும் இடம் அந்தக் கடற்கரை வீடு என்று குறிப்பிட்டு இருந்ததைப் படித்தவன் மூளை சுறுசுறுப்பு அடைய அந்த வீட்டின் முகவரியை ஊன்றி படித்தான்...

அவன் சந்தேகப்பட்டது சரியாய்ப் போனது அந்த வீடு இவர்களது கடற்கரை வீடு இருக்கும் தெருவில் தான் இருந்தது...

கோப்பை தள்ளி வைத்துவிட்டு இவர்களை எப்படி அணுகுவது என்று நீண்ட நேரம் யோசித்தவன் பின் முகம் தெளிய நிதானமாகத் திட்டம் தீட்ட துவங்கினான்...

மாலையில் ஹரிணி கல்லூரி விட்டு வீட்டுக்கு வரும் போது அமராவதியின் தோழிகள் சிலர் வீட்டில் குழுமி இருந்தனர்... அவளைக் கண்டதும் அவர்களது முகத்தில் எள்ளல் எட்டி பார்த்தது...

"ஆனாலும் அம்ரு உன்னை மாதிரி பெரிய மனசு எங்க யாருக்கும் வராது... ஒரு பூசாரி மகளை மருமகளாக்கிக்கிற பக்குவம் உனக்குத் தான் இருக்கு..." ஹரிணியைக்

கிண்டல் பண்ணுவது போல் அமராவதியையும் அவர்கள் நக்கல் அடிக்க...

அதில் அமராவதி கோபம் சுறுசுறுவென ஏறியது... "நான் எங்கே இவளை பிடிச்சேன்... ஊரு உலகத்துல இல்லாத ரதின்னு என் மகன் இல்ல தேடி போய் இவளை பிடிச்சிட்டு வந்திருக்கான்..." என்று அவர் நொடித்துக் கொள்ள...

"நீ சொன்னாலும் சொல்லைன்னாலும் உன் மருமக ரதி மாதிரி தான் இருக்கா..." என்று நிறுத்திய தோழியின் உதட்டில் விசம புன்னகை வந்தமர்ந்தது... அவரின் முகபாவத்தில் எல்லோரும் சுவாரஸ்யமாய் அவரின் முகத்தை ஆர்வத்துடன் பார்க்க...

"சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டாலும் இவ அப்பா, அம்மா இவளை சும்மா தளதளன்னு தக்காளி மாதிரி வளர்த்து இருக்காங்களே... எதுக்குத் தெரியுமா இந்த மாதிரி பணக்காரங்க பசங்களை மயக்கி கைக்குள் போட்டுக்கத்தான்..." இளக்காரமாய் அவர் சொல்ல அதில் ஹரிணி உடல் குனிக்குறுகி போனாள்...

"நானா இருந்தா செருப்பைக் கழட்டி அடிச்சி வீட்டை விட்டு துரத்தி இருப்பேன்... அம்ரு உனக்குச் சாமர்த்தியம் போதாது... என்னத்தான் நமக்குக் கௌரவம் முக்கியம்ன்னாலும் இந்த மாதிரி கழிசடைகளை மருமகளா ஆக்கிக்கிறதும் நமக்குக் கௌரவக் குறைச்சல் தான்... பேசாம அவளை அடிச்சு பத்திட்டு சித்துவுக்கு நல்ல இடத்தில் பெண் பார்த்து கட்டி வை... உனக்கு இஷ்டம்ன்னா சொல்லு என் தங்கை பொண்ணையே சித்துக்குப் பேசி முடிக்கிறேன்..." வேறு தோழி அவருக்கு அறிவுரை கூற...

அவரின் பேச்சு கேட்டு அமராவதி குளிர்ந்து போனார் என்றால் ஹரிணி சூடாகி போனாள்... கணவனைத் தன்னிடம் இருந்து பிரிக்க நினைக்கும் அவருக்குப் பதிலடி கொடுக்க நினைத்தவள் வேக வேகமாய் அவர் அருகில் வந்தவள்,

"முதல்ல எழுந்திருங்கோ மாமி..." என்று அவரின் கைப்பிடித்து எழுப்பி விட... திடீரென்று அவளின் இந்தச் செய்கை அவரை அதிர்ச்சிக்குள்ளாக்க தன்னையும் அறியாமல் அவர் எழுந்து நிற்க,

"இன்னொரு தடவை இந்த மாதிரி பேசினேள் நான் மனுசியா இருக்க மாட்டேன்... என்னை அடிச்சு பத்த என் மாமியாருக்கு கூட ரைட்ஸ் இல்லை... அதுக்கு என் ஆத்துக்காருக்கு மட்டும் தான் தகுதி இருக்கு... அவர் சொல்லட்டும் நான் போறேன்... அதுக்கு முன்னாடி நீங்க எல்லோரும் இடத்தைக் காலி பண்ணுங்கோ..." வாயிலை நோக்கி அவள் கையை நீட்ட...

அவளின் பேச்சை கேட்டு திகைத்தவர்கள் அமராவதியிடம், "உன் வீடு தேடி வந்ததுக்கு உன் மருமக நல்லா மரியாதை கொடுத்திட்டா... இனி நாங்க வந்தா எங்களை என்னன்னு கேளு..." என்று வெறுப்புடன் கூறியவர்கள் ஹரிணியை முறைத்துக் கொண்டு சென்றனர்...

அவர்கள் சென்றதும் அமராவதி ஹரிணியைப் பார்த்து, "எவ்வளவு தைரியம் இருந்தா என் பிரெண்ட்ஸ் கிட்ட நீ இப்படிப் பேசுவ...?" என்று கோபமாய்க் கத்த...

அவளோ அமைதியாய் அவரைத் திரும்பி பார்த்தவள், "என் கண் முன்னாடி என் காது பட என் ஆத்துக்காரருக்கு வேற பொண்ணைக் கல்யாணம் செஞ்சு வைக்கிறது பத்தி பேசுறா அந்த மாமி... அதைப் பார்த்திட்டு நான் சும்மா இருந்தா தான் தப்பு... புருசனை நேசிக்கிற எந்தப் பொண்ணும் என்னை மாதிரி இப்படித்தான் நடந்துக்குவா..."

அதில் அவரது கோபம் அதிகரிக்க, "என்ன பெருசா புருசனை நேசிக்கிறேன் நேசிக்கிறேன்னு அலட்டிக்கிற... யாரை காதலிச்ச யாரை கல்யாணம் பண்ணிக்கிட்டு இருக்கேன்னே உனக்குத் தெரியலை இந்த லட்சணத்துல புருசனை நேசிக்கிறாளாம்... முதல்ல நீ காதலிச்சவன் யாருன்னு கண்டுபிடி... அதுக்கு அப்புறம் உன்னோட

புருசன் யாருன்னு கண்டுபிடி... அதுக்கு அப்புறம் கோபப்படு..." என்றவரை குழப்பமாய்ப் பார்த்தவள்,

"நீங்க என்ன சொல்றீங்க...?"

அன்று காரின் மீது சாய்ந்து நின்று கொண்டு புகைத்துக் கொண்டிருந்த சித்தார்த்தின் தோற்றமும், முன்பு கோவிலில் காதல் சொன்ன சித்தார்த் தோற்றமும் அவள் மனக்கண்ணில் வலம் வந்தது... மீண்டும் அவள் மனம் குழம்பி போய்த் தவித்தது...

'பெத்த அம்மாவே இப்படிச் சொல்றார்ன்னா... அன்னைக்கு நான் நினைச்சது சரி தானா...' குழப்பத்துடன் அவள் நின்றிருக்க...

அமராவதி அவளின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தனது அறைக்கு அவளை அழைத்துச் சென்று கதவை தாளிட்டவர் அங்கிருந்த அலமாரியில் இருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து அவள் முன் நீட்டினார்...

"இதுல உன் புருசன் யாரு...? உன்னைக் காதலிச்சவன் யாருன்னு உன்னால சொல்ல முடியுமா...?"

அதை வாங்கிப் பார்த்தவளுக்கு உலகே தலைகீழாய்ச் சுழன்றது... அதில் இருந்த இரட்டையரில் யார் தனது கணவன் என்று அவளது மனம் குழம்பி போனது... ஏனெனில் இருவருமே அச்சில் வார்த்தார் போன்று ஒரே மாதிரி இருந்தனர்... எந்தவொரு வித்தியாசமும் அவர்களிடத்தில் இல்லை...

அவளின் முகத்தில் தோன்றி தோன்றி மறைந்த உணர்வுகளைக் கையைக் கட்டி கொண்டு பார்த்துக் கொண்டு இருந்த அமராவதி முகம் திருப்தியை வெளியிட்டது... மருமகளைக் காயப்படுத்தும் வேண்டும் என்று அவர் கூறிய உண்மை அவரையே திருப்பி வந்து தாக்க போகிறது என்பதை அறியாத பேதையாக அவர் நின்றிருந்தார்...

"அத்தை... இதுல அவர் யார்...? கூட இருக்கிறது யாரு...?"

"இது இரண்டும் நான் பெத்த இரட்டை பசங்க... இதுல இருக்கிற ஒருத்தன் உன் காதலன், இன்னொருத்தன் உன் புருசன்..." அவர் கூறியதை கேட்டு அதிர்ச்சி அடைந்தவளாய் அவரை நோக்கியவள்,

"பெருமாளே இது என்ன சோதனை..." என்று நெஞ்சில் கை வைத்தபடி சுவரில் சாய்ந்து கொள்ள...

"அது யார் யார்ன்னு நான் சொல்றதை விட உன் புருசன் கிட்டேயே கேளு... அவன் விளக்கமா சொல்வான்..." மருமகளை வெற்றிக் கொண்ட மமதையுடன் அவர் கூற...

அதற்கு மேல் அவருடன் பேச இயலாதவளாய் தங்களது அறைக்கு வந்தவள் அங்குச் சுவற்றில் மாட்டியிருந்த அவர்களது திருமணப் புகைப்படத்தைப் பார்த்து அதன் அருகில் வந்தாள்... அதில் இருந்தவனைச் சொந்தத்துடன் தடவி கொடுத்தாள்...

ஏனெனில் அவன் அவளது கணவன் ஓருயிர் ஈருடலாய் அவளுடன் வாழ்ந்துவிட்டவன்... அந்த உரிமை கொடுத்த தைரியம்...

"ஏன்னா அத்தை என்னென்னமோ சொல்றா... எல்லாம் உண்மையான்னா...? நேக்கு பயமாயிருக்குன்னா... சீக்கிரம் வாங்கோ வந்து உண்மை எதுன்னு என் கிட்ட சொல்லுங்கோன்னா..." என்று கண்களில் கண்ணீர் வழிய அவனைப் பார்த்து சொன்னவள் கையில் இருந்த புகைப்படத்தை வெறித்துப் பார்த்தவள் அதைத் தூக்கி அருகில் இருந்த மேசை மீது போட்டுவிட்டு அந்தத் திருமணப் புகைப்படத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவள் அதை நெஞ்சோடு அணைத்து கொண்டாள்...

அவள் மனம் முழுவதும் கேள்வி... கேள்வி... கேள்வி மட்டுமே...

அன்று மாலை அந்த நண்பர்கள் மூவரும் கடலில் குளித்துக் கும்மாளம் போட்டுக் கொண்டு இருக்க அந்த வழியாய் ஒரு

அபலை பெண் சென்றாள்...

கையில் பையும் கண்களில் மிரட்சியுமாய் இருந்த அவளின் தோற்றமே அவள் ஊருக்கு புதிது என்று சொல்லாமல் சொல்லியது...

யாருமற்ற அந்தக் கடற்கரையும் மாலை மங்கி இருள் கவிழும் நேரமும் துணை நிற்க நிர்கதியாய் நின்றிருந்த அவளைக் கண்ட அந்த நண்பர்கள் மூவருக்கும் போதை ஏற்றாமலேயே போதை ஏறியது...

"டேய் கிளி தனியா வந்து வசமாய் மாட்டிக்கிச்சுடா..." என்று ஒருவன் சொல்ல மற்றவர்கள் அதை ஆமோதித்தபடி அவளை நெருங்கினார்கள்...

"என்ன குட்டி ஊருக்கு புதுசா...?" என்று கேட்டவர்களின் பார்வையும் பேச்சும் பயத்தைக் கொடுக்க அந்தப் பெண் பின்னால் நகர்ந்தவள் சட்டென்று அங்கிருந்து ஓட துவங்க...

அவள் தங்களை ஏமாற்றி விட்டு செல்வதை ஏற்றுக் கொள்ள முடியாமல் அவர்களும் அவளைத் துரத்தி கொண்டு ஓடினர்...

நீண்ட தூரம் மூச்சு வாங்க ஓடி வந்தவள் அந்தக் குப்பம் வந்ததும் தைரியம் வரப் பெற்றவளாய், "என்னைக் காப்பாத்துங்க..." என்று அலற... அவள் குரல் கேட்டு அந்தக் குப்பத்தில் இருந்த மக்கள் எல்லோரும் அவர்கள் மூவரையும் சூழ்ந்து கொண்டனர்...

அவளைத் துரத்தி கொண்டு வந்ததில் எங்கே செல்கிறோம் என்று தெரியாமலேயே அந்தக் குப்பத்தை நோக்கி தாங்கள் வந்துவிட்டதை அப்போது தான் கவனித்தனர் மூவரும்...

அவர்களிடம் இருந்து தப்பிக்க எண்ணிய போதே அவர்கள் மூவர் மீதும் சராமாரியாக அடி விழுந்தது... அவர்கள் அடித்த அடியில் அவர்கள் மூவரின் உயிரும் அங்கேயே பிரிந்தது...

காமக் களியாட்டத்தில் மட்டுமல்ல உயிரையும் ஒன்றாய் விட்டுத் தாங்கள் உயிர் நண்பர்கள் என்று நிரூபித்தனர்

அந்த அயோக்கியர்கள்...

காவல்துறை வந்து அவர்களின் உடல்களை அப்புறப்படுத்தி இதைச் செய்தது யார் எவரென்று விசாரிக்க...? அடித்த நூறு பேரில் இதைச் செய்தது யார் என்று யாருக்கு தெரியும்...? நூறு பேரையும் கைது பண்ணவா முடியும்...? அதுவும் அவர்கள் என்ன நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த தியாகச் செம்மல்களா... இல்லையே ஒரு பெண்ணை மானபங்கப்படுத்த போய்க் கேவலமாய் உயிரை விட்ட பெண் பித்தர்கள்...

அதனால் பெரிய இடத்து பிள்ளைகளாய் அவர்கள் இருந்தபோதும் அவர்கள் மரணம் குறித்து யாரையும் கைது பண்ண காவல்துறையால் முடியவில்லை... அதைவிட அந்தக் குப்பத்து மக்கள் மீது கை வைக்கவும் பயந்தனர் அவர்களின் குணம் அறிந்து...

சிறிது நேரம் கழித்து அங்கு வந்த சித்தார்த் முன் வந்து நின்றார்கள் சிலர்... அவர்களிடம் பணத்தை அவன் அள்ளி கொடுக்க ஒரு நன்றியுடன் அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர்...

அந்தப் பெண்ணை நடிக்க வைத்தது சித்தார்த்... அதே போல் அந்த மூவரையும் பொதுமக்கள் அடிக்கும் போது ஆட்களை ஏவி விட்டு அவர்களின் உயிருக்கு உலை வைத்ததும் அவன் தான்...

சிறிது நேரம் அங்கேயே நின்ற சித்தார்த் இருட்டில் ஆர்ப்பரித்துக் கொண்டு இருந்த கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனின் அடுத்த இலக்குக் கைலாஷ்... தான் நிர்ணயித்த இலக்கை நோக்கி தான் சரியாகச் செல்கிறோம் என்ற நிம்மதி அவன் மனதில் முதன்முதலாய் இன்று தான் தோன்றியது... அந்த நிம்மதி கொடுத்த சந்தோசத்துடன் அவன் வீடு நோக்கி சென்றான்...

வீட்டினுள் நுழையும் போதே அங்கிருந்த அமைதியை கண்டு அவன் மனம் துணுக்குற்றது... எப்போதும்

அவனுக்காகக் காத்திருக்கும் மனைவியைக் காணாது குழம்பியவன் நேரே தன் அறைக்குச் சென்றான்...

அறைக்குள் நுழைந்த கணவனைக் கண்டதும் ஹரிணிக்கு அழுகை முட்டி கொண்டு வர அவனது நெஞ்சில் முகம் புதைத்து ஆறுதல் தேட எண்ணி அவனை நோக்கி ஒரு எட்டு எடுத்து வைத்தவள் பின் குழம்பியவளாய் தடுமாறி போய் நின்றாள்...

அவளின் தடுமாற்றத்தை அவன் கவனிக்கவில்லை... தொடர் அழுகையில் கன்றி சிவந்து இருந்த அவனது முகத்தைக் கண்டு பதறியவன் வேகமாய் அவள் அருகில் வந்து அவளது நெற்றியில் கை வைத்து,

"உடம்பு சரியில்லையா ஹனி...?" என்று கவலையுடன் கேட்டவனிடம் அவள் அந்தப் புகைப்படத்தை எடுத்து நீட்டினாள்...

யோசனையாய் அதை வாங்கிப் பார்த்தவன் உயரழுத்த மின்சாரத்தைத் தொட்டது போல் அதிர்ந்து போனான்...

"இது யாரு உனக்குக் கொடுத்தது..." பதட்டமாய்க் கேட்டவனைக் கண்டு அவளுக்கு மேலும் மேலும் அழுகை பொங்கியது...

"உங்கம்மா தான்... அவா ஏதேதோ பேசுறா... சொல்றா... நேக்கு ஒண்ணுமே புரியலை... உண்மையைச் சொல்லுங்க நீங்க தானே நான் காதலிச்ச ராம்... உங்கம்மா சொல்றா நான் காதலிச்சது வேற ஆள்... கல்யாணம் பண்ணியது வேற ஆள்ன்னு சொல்றா... எனக்குப் பயமாயிருக்குன்னா... உண்மையில் நீங்க யாருன்னா...? சொல்லுங்கோ..." என்று கேட்டவள் அவனிடத்தில் உரிமையாய் சட்டையைப் பிடித்துக் கூடக் கேள்வி கேட்காமல் தள்ளி நின்று கேள்வி கேட்டதிலேயே அவளது மனம் அவனுக்குப் புரிந்து போனது...

அந்தக் கண நேர அவளது விலகல் கூட அவனைத் தவிக்க வைக்க அந்தத் தவிப்புத் தாங்காமல் அவளை அருகில்

இழுத்து காற்று கூடப் புகாமல் அவளை இறுக அணைத்து கொண்டவன்,

"உன்னைக் காதலிச்சதும் நான் தான்டி... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதும் நான் தான்டி... அவங்க ஏதோ கோபத்துல சொன்னதை வச்சு என்னைச் சந்தேகப்படுறியா ஹனி..."

அவன் அவளை உயிருக்கு உயிராய் நேசித்துத் திருமணம் செய்து கொண்டது உண்மை தானே... அவன் சித்தார்த்தாய் நடித்தாலும் அவனது காதல் மெய்யன்றோ...!!!

அவனின் குரல் அவளை ஏதோ செய்ய, "இல்லேன்னா..." என்றவள் தாங்க மாட்டாமல் அவனின் நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

அவன் கூறியதை நூறு சதவீதம் உண்மை என்று அவள் நம்பினாள்... அந்தளவுக்கு அவனை நேசித்தாள்...

சிறிது நேரம் அமைதியில் கழிய அவனை அண்ணாந்து பார்த்தவள், "அப்போ உங்க கூட இருக்கிறது யாருன்னா...?"

கேள்வி கேட்டவளின் முகத்தை ஆழ்ந்து பார்த்தவன், "அவன் என் தம்பி சைதன்யராம்..." என்று தன்னைத் தானே வேறொருவனாய் அடையாளம் காட்டினான்...

"அச்சு அசல் உங்களைப் போலவே இருக்கார்..."

"ம்..." என்றவன் அதைப் பற்றி அவளிடம் பேச விரும்பவில்லை...

ஏனோ அவன் மனம் அவளை நாடியது... நேற்று போல் மீண்டும் அச்சம் அவனைத் தாக்க அவளைத் தன்னிடம் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய போராட்டத்தை மீண்டும் அவளிடம் ஆரம்பித்தான் அவன்...

அவனது இதமான அணைப்பிலும், அன்பிலும் தன்னை மறந்தவள் அவனை முற்றிலும் நம்பி தன்னை அவன் வசம் ஒப்படைத்தாள்...

ஆழ்ந்து உறங்கும் அவளைச் சிறிது நேரம் பார்த்து கொண்டிருந்தவன் அன்னையைத் தேடி சென்றான்...

அவரது அறையில் விளக்கு எரிவதை கண்டவன் அவர் இன்னும் தூங்கவில்லை என்று எண்ணி கதவை தட்டினான்... அவரின் அனுமதி கிடைத்ததும் ஆவேசமாய் உள்ளே நுழைந்தவன்,

"உங்களுக்கு என்ன மாம் கெடுதல் பண்ணினேன்... ஏன் இப்படி என் வாழ்க்கையோடு விளையாடுறீங்க...?" கோபமாய்க் கத்தியவனை நிதானமாய்ப் பார்த்த அமராவதி,

"யாருடா யார் வாழ்க்கையில் விளையாடறது...? நீதான்டா உன் அண்ணன் வாழ்க்கையில் விளையாடுறே... நான் என்னமோ பொய் சொன்ன மாதிரி இந்தக் குதி குதிக்கிற... அவன் வந்து கேட்டா என்ன பதில் சொல்லுவ...?"

அன்னையின் பேச்சு அவனது ஆத்திரத்தை அதிகரிக்கப் போதுமானதாய் இருந்தது...

"நான் யார் வாழ்க்கையிலும் விளையாட நினைக்கலை... நீங்க எல்லோரும் ஆரம்பிச்சு வச்ச விளையாட்டில் நான் தான் மாட்டிக்கிட்டு தவிக்கிறேன்..." என்று ஆற்றாமையுடன் சொன்னவன்,

கலங்கிய கண்களோடு அன்னையை ஏறிட்டவன், "நீங்க நினைக்கிற மாதிரி நம்ம சித்துத் திரும்ப வர மாட்டான் மாம்... திரும்ப வர முடியாத இடத்துக்கு அவன் போய் ரொம்ப நாளாச்சு மாம்..." என்றவன்,

அன்னையின் முன் வந்து நின்று, "மாம் நம்ம சித்துச் செத்து போய்ட்டான் மாம்..." என்று சிறுபிள்ளையாய்க் கதறினான் சிறுவயது முதல் தோழனாய் உடன் வளர்ந்த சகோதரனின் இழப்பை நினைத்து...

நீயாவேன்...

# நான் : 13

இளையமகன் கூறியது கேட்டு அமராவதி சிறிது நேரம் ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டார்... அவன் கூறிய செய்தி அவர் செவி வழி இறங்கி அவரின் உயிரை கொல்லாமல் கொன்றது...

"தனு கண்ணா நீ சொல்றது உண்மையா...? எல்லாத்திலேயும் விளையாடுற மாதிரி இதிலேயும் விளையாடாதே..." இன்னமும் அவரால் நம்ப முடியவில்லை... அவனின் விளையாட்டு குணமும் தெரிந்தபடியால் நம்பிக்கை இன்மையுடன் அவர் கேட்க...

அன்னையின் 'தனு கண்ணா' என்றழைப்பில் அவன் முற்றிலும் உடைந்து போனான்... எத்தனை வருடங்கள் ஆயிற்று இந்த அழைப்பை கேட்டு...

தங்கள் அந்தஸ்துக்கு ஒத்து வராத பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டானே என்ற கோபத்தில் தான் அவர் அவனைக் கடிந்து பேசியது... மற்றப்படி அவனுக்கும் அவருக்கும் இடையில் எந்தவித மனஸ்தாபமும் இல்லை...

"மாம்... என்னைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா மாம்... நான் எதில் விளையாண்டாலும் நம்ம சித்து விசயத்தில் விளையாடுவேனா மாம்... அவன் எனக்கு எந்தளவுக்கு முக்கியம்ன்னு உங்களுக்குத் தெரியாது..."

"மாம் நான் பொய் சொல்ல மாட்டேன்னு உங்களுக்குத் தெரியாதா மாம்... அப்படிப்பட்ட நான் என் மனைவிக்கிட்ட நான் யார்ங்கிற உண்மையை மறைத்து வாழ்ந்துட்டு இருக்கேன்னா... அதுக்கு என்ன காரணம்ன்னு யோசிக்க மாட்டீங்களா...? சித்துக் காதலிச்ச பொண்ணை எனக்கு எப்படித் தெரியும்...? என் கண் முன்னாடி அவளைக் கொண்டு வந்து நிறுத்தியது யாரு...? நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நினைச்சது யாரு...? இப்போ யாருக்காக அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழ்ந்துட்டு இருக்கேன்...?" விடாமல் கேள்வி கேட்டவன்,

"மாம் என்னைப் பத்தி உங்களுக்கு நல்லாவே தெரியும்... என் வாழ்க்கை முறை பத்தியும் தான்... அப்படிப்பட்ட நான் கல்யாணம், மனைவின்னு குடும்பப் பந்தத்தில் நுழைஞ்சு இருக்கேன்னா அதுக்கு என்ன காரணம்ன்னு யோசிக்க மாட்டீங்களா...? ரெண்டு தடவை எனக்கும் தீபிக்கும் கல்யாணம் பேசும் போது அசம்பாவிதம் நடந்துச்சே அது ஏன் யோசிச்சு பாருங்க மாம்..."

"என்ன கண்ணா சொல்ற...? அப்போ நம்ம சித்து... சித்து..." அவன் சொன்ன செய்தி அவருக்கு உணர்த்திய விசயத்தை அவரால் ஏற்றுக் கொள்ள முடியாமல் கண்களில் கண்ணீர் கரகரவென வழிந்தது...

"ஆமாம் மாம்... இதுக்கு எனக்கு வழிகாட்டியது எல்லாம் நம்ம சித்துத் தான் மாம்... அவனோட ஆன்மா தான் என்னை வழி நடத்தியது..." என்றவன் சித்தார்த் அவனை வழி நடத்தியது எல்லாவற்றையும் கூறியவன்,

"அவன் காதலிச்ச பொண்ணுன்னு தெரிஞ்சு இருந்தும் அவளைக் கல்யாணம் பண்ணும் அளவுக்கு நான் மோசமானவன் இல்ல மாம்... என் கிட்ட ஹனி முக்கியமா... சித்து முக்கியமான்னு கேட்டா நான் சித்துவை தான் முக்கியம்ன்னு சொல்லுவேன்... அப்படிப்பட்ட நான் அவனுக்காகத் தான் மாம் இதை எல்லாம் செய்தேன்..."

அவனின் வார்த்தைகள் அமராவதியின் காதில் விழுந்தாலும் அவரின் மனமோ தனது இன்னொரு மகனை தேடியது... சின்ன மகனின் பேச்சில் இருந்த உண்மையை அவர் உணர்ந்து கொள்ள ரொம்ப நேரம் பிடிக்கவில்லை... ஆனால் அவனின் வார்த்தைகள் கொடுத்த அதிர்ச்சியைத் தான் அவரால் தாங்க முடியவில்லை...

கை கால்கள் துணிகள் போல் துவள நிற்க முடியாமல் அவர் தள்ளாட, "மாம்..." என்று பதறியவன் அவரை அழைத்து வந்து கட்டிலில் அமர வைத்தான்...

'சித்து எங்கே கண்ணா இருக்க...? என் கண் முன்னாடி வாடா...' அவரது கண்கள் தவிப்புடன் காற்றில்

துளாவியது...

"சித்துக் கண்ணா... அம்மாவை பார்க்க வர மாட்டியா..." மனதின் அழுத்தம் தாங்காமல் அமராவதியின் வாய் சத்தமாய் ஓலமிட்டது...

"மாம்..." சித்தார்த்தாய் மாறியிருந்த சைதன்யா அவரை உலுக்க...

அவரைப் பொருத்தவரையில் காணாமல் போன மகன் எங்கோ உயிரோடு இருக்கிறான் என்று நம்பி கொண்டு இருந்தாரே... அந்த நம்பிக்கையைச் சிதைக்க அந்தக் கடவுளுக்கு எப்படி மனம் வந்தது...

காணாமல் போன அன்று அவன் தன்னிடம் சண்டை போட்டுக் கொண்டு சென்றது அவரது நியாபகத்திற்கு வர... அன்று அவனைத் தான் எடுத்தெறிந்து பேசிய வார்த்தைகள் அவரின் மனதை வாள் கொண்டு அறுத்தது...

“தனு கண்ணா... அன்னைக்கு நான் அவன் காதலுக்குச் சம்மதம் சொல்லி இருக்கணும்டா... அப்படிச் சம்மதம் சொல்லி இருந்தா என் சித்து என்னை விட்டுப் போயிருக்க மாட்டான்... நான் தான் அவனை உயிரோடு கொன்னுட்டேன்... நான் தான் அவனைக் கொன்னுட்டேன்... என் மகனை உயிரோடு கொன்னுட்டு நான் உயிரோடு இருக்கேனே... நான் சாகணும்... நான் சாகணும்...” என்று தலையில் அடித்துக் கொண்டு அழுத அன்னையின் அருகில் அமர்ந்தவன் அவரின் கைகளைப் பிடித்துத் தடுத்துவிட்டு அவரை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்...

தந்தை இறந்த போது கூட அவர் கல்லாய் இறுகி போய் இருந்ததாய் சித்துச் சொல்ல கேட்டு அவன் அறிந்து இருந்தான்... கட்டிய பாசத்தை விடத் தொட்டில் பாசம் அதிகம் என்பதை அவன் புரிந்து கொண்டான்... சகோதரனின் இறப்பை அவனாலேயே ஜீரணிக்க முடியாத போது அன்னையால் மட்டும் எப்படி ஜீரணிக்க முடியும்...

“மாம் நம்ம சித்துவை நீங்க கொல்லலை…” என்றவனைப் புரியாமல் பார்த்தவர்,

“என்னடா சொல்ற…?”

“ஆமாம் மாம்… நம்ம சித்துவை வேணும்ன்னே கொலை பண்ணிட்டாங்க…” என்றவனின் முகத்தில் அத்தனை ரௌத்ரம் தெரிந்தது…

“யாரு அதைச் செய்தது…? அவன் ஈ எறும்புக்கு கூடத் துரோகம் பண்ணாதவன் தனு… அவனை யார் இரக்கம் இல்லாமல் கொன்னது…?”

மகன் கொலை செய்யப்பட்டது கேள்வியுறுவது ஒருவித தவிப்பு என்றால், உயிர் விடும் போது அவன் என்ன மாதிரி துடித்தானோ என்று நினைத்து மருகுவது இன்னொரு வித பரிதவிப்பு… இந்த இரண்டு தவிப்பும் அவரை வாட்ட அவரது நெஞ்சில் வலி மிக அவரது கண்கள் கண்ணீர் மழை பொழிந்தது.

கண்களில் கண்ணீர் வழிய பரிதாபமாய்த் தன்னை நோக்கி கேட்ட அன்னையை மீண்டும் ஆறுதலாய் அணைத்துக் கொண்டான் சித்தார்த்தாய் உருமாறி இருக்கும் சைதன்யா…

“அன்னைக்கு என்ன நடந்ததுன்னா…” என்றவன் தான் அன்று கண்காணிப்புக் கேமிராவில் பார்த்த அனைத்தையும் அவரிடம் சொல்ல துவங்கினான்.

சொல்ல சொல்ல அமராவதியின் முகம் சொல்லொண்ணா வேதனையைத் தத்தெடுத்தது…

“அண்ணா இப்படிப் பண்ணுவாருன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை… கடைசியில் பாலுக்குப் பூனையைக் காவல் வச்ச மாதிரி சித்துச் சாவுக்குக் காரணமான அவர் கிட்டேயே அவனைத் தேட சொன்னேனே… என்னை மாதிரி ஒரு முட்டாள் இந்த உலகத்துல கிடையாது… எப்படிடா இதைச் செய்ய அவருக்கு மனசு வந்துச்சு… தூக்கி வளர்த்த பையன்னு கொஞ்சம் கூடவா பாசம் இல்லாம போச்சு…

கேவலம் பணத்துக்காக என் மகனோட உயிரோட விளையாண்டுட்டாரே…”

ஆராவமுதனின் இன்னொரு பக்கத்தை அறிந்த அவரால் ஜீரணிக்க முடியவில்லை… மகனை கொன்ன அவரிடமே அவனைத் தேட சொல்லி கேட்ட தன் மடமையை எண்ணி எண்ணி உள்ளுக்குள் உடைந்து போனார்…

என்ன அழுது புலம்பி என்ன மாண்டவன் மீண்டும் உயிருடன் வர போவது இல்லையே… அதுக்குத் தான் முக்கியக் காரணமாய் இருந்ததை நினைத்து நினைத்து அவர் நொறுங்கி போனார்…

“என் மகனை கொன்னவங்களை நீ பழிவாங்கியது ரொம்பச் சரி கண்ணா… மீதம் இருக்குறவங்களையும் நீ சும்மா விடாதே…” ஆவேசம் வந்தவர் போல் அவர் கேட்க அவன்…

"நிச்சயம் மாம்…” உறுதியுடன் கூறியவன் கண்களில் பழிவெறிப் பளபளத்தது…

“டேய் கண்ணா… உன் கிட்ட பேசின மாதிரி சித்துவை என் கிட்டேயும் பேச சொல்லுடா…” மகனிடம் கெஞ்சியவர்,

“சித்து என் கிட்ட பேசுடா… இந்த அம்மா மேல கோபமா கண்ணா…” சுற்றும் முற்றும் பார்த்தபடி காற்றுடன் கலந்து விட்ட தன் மகனை தேடினார்…

“அவன் வர மாட்டான் மாம்…” அருகில் இருந்தவன் அன்னையை ஆறுதலாய் அணைத்துக் கொள்ள…

அந்நேரம் வரை தாயின் தவிப்பை கண்டு ஆறுதல் கூற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த அந்த அரூபம் தன்னை வெளிப்படுத்த முடியாமல் தவித்தது.

ஏனெனில் அது மீண்டும் சைதன்யாவின் உடலுக்குள் சென்று அவனது உணர்வோடு கலப்பது என்பது இயலாத காரியம்…

ஹரிணியின் கணவனாக வாழ்ந்து கொண்டு இருப்பவனின் உணர்வுடன் தன் உணர்வை கலக்க அது விரும்பவில்லை... அது சகோதரனின் காதலுக்குச் செய்யும் துரோகம் மட்டும் அல்லாது அது ஹரிணியின் தூய்மையான காதலுக்குச் செய்யும் துரோகமும் ஆகும்...

அதனால் தான் சந்தோஷால் ஹரிணிக்குப் பிரச்சினை வரும் என்று தெரிந்தும் சைதன்யாவின் உணர்வில் கலக்க முடியாமல் வேதனையுடன் நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தது...

ஆனால் அன்னையின் வேதனையைக் கண்டு அதுவால் சும்மா இருக்க முடியவில்லை... அது துயரத்துடன் சுழன்றடித்துக் கொண்டு அன்னையின் அருகே வந்து அவரைத் தென்றலாய் தழுவி சென்றது.

“மாம்..." சித்தார்த் சகோதரனை பற்றிச் சொல்ல வாய் திறக்க...

“நீ எதுவும் சொல்ல வேண்டாம் கண்ணா... நான் என் மகனை உணர்றேன்...” என்றவர் கண் மூடி தனது மகனின் ஸ்பரிசத்தை உணர தொடங்கினார்...

“மாம்...”

“நீ போ கண்ணா... நான் என் மகனோடு இருக்கிறேன்...” கண்களை மூடியவாறு படுக்கையில் சாய்ந்தவரை மேலும் தொந்திரவு செய்ய மனம் இல்லாமல் சித்தார்த் போர்வையை எடுத்து அன்னைக்குப் போர்த்தி விட்டு அறையை விட்டு வெளியில் வந்தான்...

தனது அறைக்குச் செல்ல மனம் இல்லாதவன் வரவேற்பறையில் இருந்த சோபாவில் அமர்ந்தான்... அவனது மனதில் பழைய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாய் அணிவகுத்தது... அவமானம் மிகுந்த அந்தப் பக்கத்தை அவன் எப்போதுமே புரட்டி பார்க்க விரும்பியது கிடையாது... ஆனால் இன்று அதைப் புரட்டி பார்க்க ஆசைப்பட்டான்... அவனது சகோதரனின் அன்பிற்காக...

அங்கே அமராவதி அம்மாவும் பழைய நினைவுகளை நினைத்துக் கொண்டு படுத்து இருந்தார்.

அவரது துயரத்தை ஆற்றும் வகையறியாது அவரது அருகில் அமர்ந்து ஊமையாய் கண்ணீர் வடித்தது அந்த அரூபம்.... அதன் நினைவிலும் பழைய பசுமையான நினைவுகளின் தாக்கமே...

****************************

"அம்மா..." "மாம்..." மகன்களின் உரத்த அழைப்பை கேட்டு வாயிலுக்கு விரைந்து வந்தார் அமராவதி...

ஒன்று போலிருந்த தங்களது இரட்டை மக்களைக் கண்டதும் எப்போதும் மனதில் எழும் மகிழ்ச்சி, பெருமிதம் இப்போதும் எழ அவர்களை வாத்சல்யத்துடன் பார்த்தவர் சைதன்யாவின் கையில் இருந்த நாய்க்குட்டியை கண்டதும் அவரின் முகம் மாறியது...

"என்னடா இது...?"

"பாவம்மா... ரோட்டுல அடிப்பட்டுக் கிடந்தது..." என்ற பதினைந்து வயது சைதன்யாவிடம்,

"உனக்கு எத்தனை தடவை சொல்றது தனு... அம்மான்னு சொல்லாதே மாம்ன்னு சொல்லுன்னு... சொன்ன பேச்சு கேட்கிறதே இல்லை... சித்துவை பாரு... எப்படிச் சொன்ன பேச்சு கேட்டுட்டு இருக்கான்... நீ மட்டும் ஏண்டா இப்படி...?" ஆற்றாமையுடன் வந்தது அவரது வார்த்தைகள்...

உருவத்தில், குணத்தில், பண்பில், திறமையில் என்று எல்லாவற்றிலும் ஒன்றாய் இருந்த மகன்களை வித்தியாசப்படுத்திக் காட்டுவது சித்துவின் கண்களில் தெரியும் அமைதியும், சைதன்யாவின் கண்களில் தெரியும் குறும்பும் மட்டுமே...

இருவரும் ஒரே மாதிரி முகபாவனையை வைத்து கொண்டாலும் அவர்களின் கண்கள் அவர்களில் யார்

சித்து, யார் தனு என்று காட்டி கொடுத்துவிடும்... இது அவர்களது பெற்றோர் மட்டுமே அறிந்த ரகசியம்...

"அம்மா..." அன்னையின் முறைப்பில், "ஓகே ஓகே.. மாம்... பாருங்க எப்படி ரத்தம் வருதுன்னு...? நாம வளர்க்க வேண்டாம் பர்ஸ்ட் எய்டாவது செய்யலாமே..." அந்தக் குட்டி நாயின் வலியை தனது முகத்தில் தேக்கியபடி சொன்ன தம்பியை பார்த்த சித்தார்த் அன்னையிடம்,

"தனு குட்டி சொல்றதும் சரி தானே மாம்... பாவமா இருக்கு மாம்..."

"சித்து எப்போதும் அவனுக்குச் சப்போர்ட் பண்ணி பேசாதே... உங்கப்பா பார்த்தார்ன்னா அவ்வளவு தான்..." அமராவதி சொல்லி கொண்டு இருக்கும் போதே ராஜாராமின் கார் வந்து நின்றது...

அதில் இருந்து இறங்கிய ராஜாராம் பேருக்கு ஏற்றார் போன்று ராஜா போன்று கம்பீரமாக நடந்து வந்தார்... சென்னையில் உள்ள ராம் இன்டஸ்ட்ரீஸை உருவாக்கியவர்... முன்னோர்கள் வளர்த்துவிட்ட தொழில் ஸ்தாபனத்தை அவர்களை விடப் பல மடங்கு வளர்ச்சியுடன் உருவாக்கி காட்டியவர்...

பருத்தி வேட்டி, சட்டையில் பார்ப்பதற்கு எளிமையாகக் கடவுள் பக்தி உடையவராக இருந்தாலும் மனதிற்குள் எல்லாவற்றிற்கும் அந்தஸ்து, கௌரவம் பார்க்க கூடியவர்... ஒரு பார்வையில் எதிராளியின் அந்தஸ்தை கணித்து அவரை எட்ட நிறுத்திவிடுவதில் வல்லவர்...

"என்ன ரெண்டு பேரும் படிக்காம இங்கே நிக்கிறீங்க...?" கேட்டபடி வந்தவர் கண்ணில் சைதன்யாவின் கைகளில் இருந்த அந்த நாய்க்குட்டி விழ அடுத்த நொடி அதைத் தூக்கி தரையில் எறிந்தார்...

"கண்ட கண்ட தெருநாயை எல்லாம் வீட்டுக்கு தூக்கிட்டு வந்ததோட இல்லாம அதைக் கட்டி பிடிச்சிட்டு வேற நிக்கிறியா..." என்று மகனை கடிந்தவர் மனைவியிடம்,

"முதல்ல இவனை டெட்டால் போட்டுக் குளிக்கச் சொல்லு..." என்று கத்தியபடி உள்ளே செல்ல...

கீழே தூக்கி வீசப்பட்டதில் அலறிய நாய்க்குட்டியை பதறி போய்ச் சைதன்யா தூக்க சித்தார்த் என்ன செய்வது என்று தெரியாமல் முழிக்க மகனது செயலில் அவனைத் திரும்பி பார்த்த ராஜாராம்,

"இதைத் தூக்கிட்டு வீட்டுக்குள்ள வராதே... நீ மட்டும் வாரது இருந்தா வா... இல்லை நீயும் அதோடு தெருவுல போய் இரு..." சத்தம் போட்டு விட்டுச் சென்றுவிட்டார்...

"தனு டாட்க்கு பிடிக்கலைன்னா விட்டுட்டு வந்திடேன்... ஏன் பிடிவாதம் பிடிக்கிற...?" சித்துச் சகோதரனை வேண்ட... அமராவதியும் அதையே சொல்ல சைதன்யாவோ நாய்க்குட்டியை அணைத்தபடி அசையாது நின்றிருந்தான்...

"நீங்க போங்கம்மா... தம்பியை நான் என் வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்..." இதை எல்லாம் ஓரமாய் ஒதுங்கி நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்த வேதாந்தம் சொல்ல...

"அவர் கேட்டா..." கைகளைப் பிசைந்தார் அமராவதி...

"நீங்க ஒண்ணும் சொல்லாதீங்க... அவருக்கும் தெரிய போறது இல்லை..." என்றவர் சைதன்யாவை தன்னுடன் அழைக்க அவனுடன் அவனின் இணைப் பிரியாத சகோதரன் சித்தார்த்தும் உடன் வர இருவரையும் அழைத்துச் சென்றார்...

ஏனோ ராஜாராம் வேதாந்திடம் மட்டும் அந்தஸ்து பார்ப்பது இல்லை... அவரிடம் மட்டும் ஒருவித நட்பு இருக்கும்... அது வேதாந்தின் நேர்மையாலா இல்லை சகுந்தலாவின் பாசத்தாலா ஏதோ ஒன்று வேதாந்திடம் மட்டும் சற்று நெருங்கி பழகுவார்...

வேதாந்தம் இருவரையும் அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்கு வந்தார்...

"ஆன்ட்டி..." என்றபடி சித்தார்த் சகுந்தலாவின் காலில் விழ...

"அத்தை..." என்று சைதன்யா அவரின் கழுத்தை கட்டி கொண்டான்...

"இன்னைக்கு என்ன பண்ணினே தனு..." இது வழக்கமாய் நடக்கும் ஒன்று என்பதால் அவர் சிரித்தபடி கேட்க...

அவன் வேதாந்தின் கைகளில் இருந்த நாய்க்குட்டியை சுட்டி காட்டினான்...

"ஓ... இது தானா காரணம்..." என்றவர் அந்த நாய்க்குட்டி பசிக்கு பால் கொண்டு வர... வேதாந்தம் அதற்கு மருத்துவ உதவி செய்யச் சின்னவர்களின் முகம் மலர்ந்தது...

"கண்ணகி அக்கா ஃபோன் பண்ணாங்களா...?" பெரிய மனிதன் போல் கேட்ட சைதன்யாவை பார்த்து சிரித்தபடி,

"பண்ணினா... உங்க ரெண்டு பேரையும் ரொம்பக் கேட்டா..." வேதாந்தம் பதில் சொன்னார்... கண்ணகி அவரது ஒரே மகள்... திருமணமாகி பெங்களூரில் இருக்கிறாள்...

"ம்... ம்..." என்று அவரிடம் கூறியபடி சாம்பாரில் தோய்த்த தோசையை முழுங்கி கொண்டிருந்தான் சைதன்யா...

அடுத்து வந்த வருடங்கள் உருண்டோட சித்து, தனு இருவரும் பன்னிரெண்டாம் வகுப்பு எழுதி முடித்துத் தேர்ச்சி முடிவிற்காகக் காத்து இருந்தனர்...

நினைத்தது போல் இருவரும் நல்ல மதிப்பெண்ணில் தேர்ச்சி பெற்றனர்... அன்று மதியம் சைதன்யா பள்ளியில் இருந்து வரும் போது உடன் ஒரு பெண்ணை அழைத்து வந்திருந்தான்... அழுது அழுது அந்தப் பெண்ணின் முகம் வீங்கி இருந்தது...

யார் என்று கேட்ட அமாரவதியிடம், "மாம் இது என்னோட பிரெண்ட் மது... அவளுக்கு ஒரு சப்ஜெக்ட்ல போயிருச்சு மாம்... அவங்க மாம்மும், டாட்டும் அவளைத் திட்டிட்டாங்க... அதான் இப்படி அழறா... ரொம்ப டிப்ரஷ்டா இருக்கா மாம்... அதான் அவளை இங்கே கூட்டிட்டு வந்தேன்..." என்ற

சைதன்யாவை கண்டு அவருக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை...

"ஏண்டா நீ மட்டும் புதுசு புதுசா பிரச்சினையைக் கூட்டிட்டு வர்ற... நாய்க்குட்டி கூட்டிட்டு வந்ததுக்கே உங்கப்பா அந்தச் சத்தம் போட்டார்... இப்போ இந்தப் பொண்ணுக்கு என்ன சொல்ல போறாரோ...? என்னமோ பண்ணி தொலை..." என்றபடி அவர் நகர்ந்துவிட...

சைதன்யா அவரின் வார்த்தையைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளாமல் மதுவுடன் தோட்டத்தில் அமர்ந்து பேசி கொண்டு இருந்தான்.... தான் தோல்வியுற்றதை தாங்க முடியாமல் மது அழுது கொண்டிருக்க அவன் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தான்...

மதிய உணவுக்கு வந்த ராஜாராமின் கண்களில் இந்தக் காட்சி விழுந்தது... ரௌத்திரத்திடன் காரில் இருந்து இறங்கியவர் நேரே சைதன்யா முன் வந்து நின்றார்...

"என்னடா கண்றாவி இது...? தோட்டத்துல உட்கார்ந்துட்டு ஒரு பொண்ணு கையைப் பிடிச்சு பேசிட்டு இருக்க... என்ன காதலா...?" என்று கோபத்துடன் கேட்க...

"ஒரு பையனும் பொண்ணும் பேசிட்டு இருந்தா அது லவ் தானா டாட்... இவ என்னோட பிரெண்ட்... அழுதுட்டு இருந்தா அதான் பேசிட்டு இருந்தேன்..."

"தப்பு செஞ்சிட்டு என்னையவா எதிர்த்து பேசுற உன்னை... இந்த வயசுல காதலா கேட்குது உனக்கு..." என்றவர் அவனை அடிக்க ஏதும் இல்லாத காரணத்தால் ஆத்திரத்தில் தனது காலில் கிடந்த செருப்பைக் கழற்றி எடுத்து அவனை விலாசி தள்ளிவிட்டார்...

புரிந்து கொள்ளாமல் அடிக்கும் தந்தையின் செயல் வேதனையைத் தந்தது என்றால்... தோழி மற்றும் வேலைக்காரர்கள் அனைவர் முன்னிலையில் செருப்பால் அவனை அடித்தது அவனது நெஞ்சில் ஆறா வடுவாய்

படிந்து அந்த வலி அவனது மனதில் நிரந்தரமாய்த் தங்கிவிட்டது...

இந்தக் காட்சியைக் கண்ட மது அழுதபடி தனது வீட்டிற்குச் செல்ல... உள்ளே வேலையாய் இருந்த அமராவதி விரைந்து வர... எல்லோருக்கும் குடிக்கப் பழச்சாறு எடுக்கப் போயிருந்த சித்து அதை அப்படியே போட்டுவிட்டுச் சகோதரனிடத்தில் ஓடி வந்தான்...

"டாட் தனு பாவம் விடுங்க டாட்..." என்று சித்துக் கதற...

"விடுங்க..." என்று கணவரின் கையைப் பிடித்துத் தடுத்தார் அமராவதி...

அதில் எல்லாம் ராஜாராமின் ஆத்திரமோ தீரவில்லை... அடங்கவில்லை... தொடர்ந்து அவனை அடிக்க...

சைதன்யாவோ அதை வாங்கிக் கொண்டு அமைதியாய் நின்றிருந்தான்... அவனது மனம் போல் உடலும் மரத்துப் போயிருந்தது...

மறுநாள் மது பரீட்சையில் தோல்வி அடைந்ததால் அந்த அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டாள்...

நீயாவேன்...

## நான் : 14

அந்தப் பரந்து விரிந்து இருந்த மைதானத்தில் அங்கும் இங்கும் ஓடி லாவகமாய்ப் பந்தை உதைத்து தன் அணியின் பக்கமாய்ச் செலுத்தி கொண்டு இருந்த சைதன்யாவை பார்த்து,

"கமான் தனு..." என்று கத்தி அவனை உற்சாகப்படுத்தினான் சித்தார்த்...

இறுதி கோலை அடித்துத் தனது அணியினருக்கு வெற்றிவாகை சூடிய சைதன்யாவை அவனது அணியினர் தலை மேல் தூக்கி வைத்து கொண்டாடினர்... அதை எல்லாம் அவன் ஏற்றுக் கொண்டாலும் அவனது கண்கள் தனது சகோதரனான நண்பனை தேடியது...

சித்துவை கண்டதும் உற்சாகம் பொங்க கையை ஆட்டியவன் தனது நண்பர்களிடம் விடைப்பெற்று அவனை நோக்கி ஓடி வந்தான்...

அப்போது எங்கிருந்தோ ஓடி வந்த அந்த வெள்ளைக்கார பெண் அவனை ஆரத்தழுவி அவனது கன்னத்தில் முத்தமிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவள், "மை நேம் இஸ் ஜூலி..." என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள...

சைதன்யாவோ அவளில் கவனம் இல்லாதவனாய், "ஹாய்..." என்றதோடு போய்விட்டான்... போகும் அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தவளின் உதடுகள் முணுமுணுத்தது...

"இன்ரஸ்ட்டிங் கைய்..."

"தனு... யார்டா அந்தப் பொண்ணு...?" கேலியாய் கேட்ட சித்தார்த் கை முஷ்டியை மடக்கி சகோதரனின் வயிற்றில் செல்லமாய்க் குத்த...

"யாருன்னு தெரியலையே சித்து...?" தாடையைத் தடவியபடி புரியாத பாவனையை முகத்தில் காட்டிய சைதன்யாவை

பார்த்து,

"நம்பிட்டேன் ப்ரோ..." என்று நமட்டுச் சிரிப்புச் சிரித்தான் சித்தார்த்...

"உண்மையா தான்டா..." என்று கண்களை அகல விரித்த சைதன்யா, "அதை விடு சித்து... இன்னைக்கு நான் எப்படி விளையாண்டேன்..." கண்களில் ஆர்வம் பொங்க கேட்டவனிடம்,

"சூப்பர்டா..." என்று அணைத்துக் கொண்டான் சித்தார்த்...

"வீட்டுக்கு போகலாம்..." என்று இருவரும் கிளம்பினர்...

இருவரும் கல்லூரி படிப்பிற்காக இலண்டன் மாநகரம் வந்திருந்தனர்...

அன்று தந்தை அடித்தப்பின் சைதன்யா அவரிடம் முகம் கொடுத்து கூடப் பேசவில்லை... தந்தைக்கு ஆதரவாகப் பேசி அவனைக் கடிந்த அன்னையிடமும் அவன் பாராமுகம் காட்டினான்...

மறுநாள் காலையில் அவனது தோழி மது இறந்தது கேட்டதும் அவன் உள்ளுக்குள் ஒடிந்து போனான்... ஒருவேளை தான் ஆறுதல் வார்த்தைகள் கூறி தேற்றி இருந்தால் அவள் உயிருடன் இருந்திருப்பாளோ என்று மனதுக்குள் அதையே எண்ணி எண்ணி வெம்பி போனான்...

அந்தக் கோபம் எல்லாம் தந்தையிடம் திரும்பியது... வீட்டில் சித்தார்த்திடம் மட்டும் பேசுபவன் வேறு எவரிடமும் வாயை திறக்க மாட்டான்... அவனின் அழுத்தமான குணம் அமராவதிக்குத் தெரியுமாதலால் அவரும் அவனிடம் இருந்து ஒதுங்கி இருந்தார்... ஒதுங்கினார் என்பதை விட அவருக்கு மகனை விடக் கவனிப்பதற்கு வேறு நிறைய விசயங்கள் இருந்தது...

இந்தச் சமயம் தான் கல்லூரியில் சேர வேண்டிய நாளும் வந்தது... அன்று சித்தார்த்திடம் சென்ற சைதன்யா,

"சித்து எனக்காக ஒரு ஹெல்ப் பண்ணுவியா...?" கண்கள் கலங்க கேட்டவனைக் கண்டு சித்துவுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது...

"என்னடா ஹெல்ப் அது இதுன்னுட்டு... என்ன செய்யணும் சொல்லு...?"

"எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கலைடா... தள்ளி தூரமா எங்கேயாவது கண் காணாத இடத்துக்குப் போகணும்ன்னு இருக்குடா... யார் முகத்திலும் முழிக்கப் பிடிக்கலை... ஒரே அவமானமா இருக்கு சித்து..."

சைதன்யாவின் உணர்வுகளை அவனின் சகவயது தோழனாய் சித்துவால் புரிந்து கொள்ள முடிந்தது...

"சரி தனு... இதுக்கு நான் என்ன செய்யணும்...?"

"நம்ம மதன் லண்டன் போய்ப் படிக்கப் போறானாம்... நானும் அங்கே போகலாம்ன்னு இருக்கேன்..." என்றவனை அதிர்ச்சியுடன் பார்த்தான் சித்தார்த்...

"தனு... என்னை விட்டு போறியாடா...?" கேட்கும் போதே சித்துவுக்குக் கண்கள் கலங்கியது...

"ச்சேச்சே... என்னடா பேசற சித்து... உன்னை விட்டுட்டு நான் மட்டும் எப்படிடா போவேன்..." என்று அவனை அணைத்துக் கொண்ட சைதன்யா, "எனக்காக என் கூட லண்டனுக்கு வர்றியாடா...?"

"கட்டாயம் தனு... உனக்காக நான் எங்கேன்னாலும் வருவேன்..." என்ற சித்துப் பேசியே தனது பெற்றோர்களைக் கரைத்து சகோதரனுடன் இலண்டனுக்குக் கிளம்பினான்...

ராஜாராமும், அமராவதியும் அதைக் கூடத் தங்களது கௌரத்தின் அடையாளமாகக் கருதி அவர்களைப் படிப்பிற்காக இலண்டனுக்கு அனுப்பி வைத்தனர்...

சித்தார்த் நிர்வாகப் படிப்பை தேர்ந்தெடுக்க, சைதன்யா கணினி படிப்பை தேர்ந்தெடுத்தான்... வகுப்பு நேரம் போக

மீதி நேரம் எல்லாம் ஒன்றாகவே இருந்தனர்... அதனால் அந்த ஊர் கலாச்சாரம் அவர்களைப் பெரியதாய் பாதிக்கவில்லை...

ஒரு வருடம் முடிந்து விடுமுறைக்கு ஊருக்கு செல்வதற்காகச் சித்தார்த் தயாராகிக் கொண்டு இருக்கச் சைதன்யாவோ யோசனையுடன் அமர்ந்து இருந்தான்...

"தனு... டிக்கெட் என்ன டேட்ல போடட்டும்..." மடிகணினியில் கண்களைப் பதித்தபடி சித்தார்த் கேட்க...

"சித்து... நான் வரலை... நீ மட்டும் போய்ட்டு வாடா..." என்று சைதன்யா மறுத்தான்...

"ஏன்...?" மடிகணினியை தள்ளி வைத்துவிட்டு அவன் அருகில் வந்து அமர்ந்தான் சித்து...

"ஏன்னு உனக்குத் தெரியாதா சித்து... எனக்கு அங்குப் போகவே அவமானமா இருக்குடா..." முன்பு போல் சைதன்யாவின் கண்கள் கலங்கவில்லை... அதற்குப் பதில் அவனது முகம் இறுகி போயிருந்தது...

"மாம், டாட் எதிர்பார்ப்பாங்க தனு..."

"ஐ ஹேட் தெம்..." என்றான் சைதன்யா வெறுப்பாய்...

அவனது வெறுப்பு கண்டு முதலில் திகைத்து போன சித்தார்த் பின் அவனின் மனவுணர்வுகளைப் புரிந்து கொண்டவனாக அவனது முதுகில் தட்டி கொடுத்தவன்,

"சரி படிப்பு முடிஞ்சதும்... நீ அங்கே வந்திரணும்..." என்க...

அதற்குப் பதில் பேசாமல் அமர்ந்து இருந்த சைதன்யாவின் மனதில் அதற்கான பதில் உடனே எழுந்தது... அவனது எதிர்காலம் என்ன என்பது பற்றி அப்போது தான் அவனது மனதில் உறுதியான எண்ணம் தோன்றியது...

தனியே வந்த சித்தார்த்தை கண்டதும் ராஜாராமின் மொத்த கோபமும் சைதன்யாவின் மேல் திரும்பியது...

அவனைத் தொலைப்பேசியில் அழைத்து, "எங்களைப் பார்க்க வர விருப்பம் இல்லாதவன் ஏண்டா என் பணத்தில் படிக்கிற...? அவ்வளவு ரோசம் இருக்கிறவன் உன் சொந்த காசில் படிச்சிக்கோ... உனக்கே அவ்வளவு வீம்பு இருக்கிறப்போ உன்னைப் பெத்த எனக்கு எவ்வளவு வீம்பு இருக்கும்... நான் செத்தாலும் என் முகத்தில் நீ முழிக்காதே..." என்றவர் அந்த அழைப்பை துண்டித்தது போல் அவனுடான பந்தத்தையும் துண்டித்து விட்டார்...

அவரைப் பொருத்தவரையில் சைதன்யா சொல் பேச்சு கேட்காத வீட்டிற்கு அடங்காத தறுதலை... அதனால் அவனின் இன்னொரு பக்கத்தை அவர் தெரிந்து கொள்ள முயற்சி எடுக்கவே இல்லை... அது அவர் தேவை என்றும் நினைக்கவில்லை...

அழுது புலம்பிய அமராவதியிடம், "உனக்கு நான் முக்கியமா... இல்லை அவன் முக்கியமா...?" என்று சத்தம் போட...

"எனக்கு ரெண்டு பேரும் முக்கியம் தான்... என்ன இருந்தாலும் அவன் என் மகன்ங்க..." நிலைமையின் விபரீதத்தைக் காலத் தாமதமாய்ப் புரிந்து கொண்டவர் கணவனிடம் மன்றாடினார்...

"நேத்து முளைச்ச பய அவனுக்கு அவ்வளவு திமிரா... அப்படி நான் என்ன செஞ்சிட்டேன்... அவன் தப்பு செஞ்சப்போ கண்டிச்சேன்... ஒரு தகப்பனா நான் அது கூடச் செய்யக் கூடாதுன்னா அப்போ நான் எதுக்கு அவனுக்கு... இதுக்கு மேல அவனைப் பத்தி பேசறதா இருந்தா நீயும் அவன் கூடவே போயிரு..." என்று திட்டவட்டமாகக் கூறிய கணவனை எதிர்த்து பேச அமராவதியால் முடியவில்லை...

சித்தார்த்தாலும் இந்தப் பனிப்போரில் தலையிட முடியவில்லை...

மீண்டும் சித்தார்த் இலண்டன் வந்த போது சைதன்யா முற்றிலும் மாறி இருந்தான்...

"தனு... அந்த ஜூலிக்கும் உனக்கும் இடையில் என்ன உறவு...?" சகோதரனை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு சித்தார்த் கேட்க... அவனின் கண்களைச் சந்திக்க முடியாமல் தனது பார்வையை வேறு புறம் திருப்பினான் சைதன்யா...

"நீ அவளை லவ் பண்றியா தனு...?"

சித்தார்த் சொன்னதைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்தான் சைதன்யா...

"நானா லவ்வா... நோ சான்ஸ் சித்து..." சிரித்துச் சிரித்து அவனுக்குப் புரையேறியது...

அவன் குடிப்பதற்குத் தண்ணீரை எடுத்து கொடுத்த சித்தார்த், "நேத்து அவள் நீன்னு நினைச்சிட்டு என்னை..." எப்படிச் சொல்வது என்று தெரியாமல் நிறுத்தியவன், "அவளோட வீட்டுக்கு கூப்பிட்டாள்..."

"ஓ..." என்ற சைதன்யா வேறு வார்த்தையை உதிர்க்கவில்லை...

"தனு... இந்தப் பழக்கம் எல்லாம் உனக்குத் தேவையாடா...? வேண்டாம் தனு இதை எல்லாம் விட்டிரு... என் தனு எப்பவுமே நல்லவன்..."

"இல்லை சித்து... நீ நினைக்கிற மாதிரி நான் நல்லவன் இல்லை... ஏன்னா நம்ம அப்பாவே சொல்லிட்டாரே நான் பொம்பளை பொறுக்கின்னு... அதை உண்மைன்னு நான் ப்ரூவ் பண்ண வேண்டாம்... அவர் சொன்ன மாதிரி இப்போ நான் மாறிட்டேன்... அன்னைக்கு அவர் அடிச்சப்போ இருந்த வலி, அவமானம் இன்னைக்கு எனக்கு இல்லை... அன்னைக்கு நான் தப்பு செய்யலை எனக்கு வலிச்சது... இப்போ தெரிஞ்சே தப்பு செய்றேன் எனக்கு வலியே இல்லை..." என்று கூறியவன்,

"என்னோட வலி, அவமானத்தை நான் மறக்கணும்ன்னா இனி நான் இப்படித்தான் வாழ போறேன்..." எந்தவித

உணர்வும் இல்லாமல் கூறியவன் சகோதரனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் அங்கிருந்து அகன்றான்...

சித்தார்த் வேதனையுடன் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்...

ராஜாராம் கூறியது போல் சைதன்யா அவரிடம் இருந்து படிப்பிற்காக எந்தவித உதவியையும் எதிர்பார்க்கவில்லை... தானே சம்பாதித்துத் தனது படிப்பு செலவை பார்த்துக் கொள்ள... அதை அறிந்த சித்தார்த் தானும் உழைத்து சகோதரனின் படிப்பிற்கு உதவி செய்தான்...

ஐந்து ஆண்டுகள் வேகமாய் உருண்டோட இருவரும் படிப்பு முடிந்து ஊருக்கு கிளம்பும் நேரம் வர சைதன்யா அங்கேயே ஒரு வேலையை வாங்கிக் கொண்டு சித்தார்த் முன் வந்து நின்றான்...

"அப்போ நீ இந்தியா பக்கமே வர மாட்ட என்ன...?"

"ம்..." ஆமோதிப்பாய் தலை அசைத்தான் சைதன்யா...

"என்னோட நினைவு உனக்கு இல்லவே இல்லையா தனு..." சித்துவின் வார்த்தையில் கண்கள் கலங்க அவனை அணைத்துக் கொண்ட சைதன்யா,

"என்னடா பேசறே... உன்னை எப்படிடா மறப்பேன்..."

"அப்போ என் கூட வா... மாம், டாட் கூட இருக்க விருப்பம் இல்லைன்னா தனியா வீடு எடுத்து இரு..." என்று சித்துக் கூற...

"வேணாம் சித்து... நான் அங்கே வந்தா எல்லோரும் என்னை முன்ன மாதிரியே பார்ப்பாங்க... ஒரு முறை முத்திரை குத்தப்பட்டுட்டா சாகிற வரை அந்த அவப்பெயர் போகாதுடா... என்னை என் போக்கில் விட்டிரு... உனக்கு என்னைப் பார்க்கணும் போலிருந்தா எப்ப வேணும்ன்னாலும் இங்கே வந்து பாரு..." என்று உறுதியாய்

கூறியவனை மேலும் வற்புறுத்த முடியவில்லை சித்தார்த்தால்...

தனியே திரும்பி வந்த சித்தார்த்தை கண்டு அமராவதி மனம் ஊமையாய் அழுதது சைதன்யாவை நினைத்து... ஆனால் கணவருக்காக எதையும் அவர் வெளியில் காட்டி கொள்ளவில்லை...

இருபத்து மூன்று வயதில் சித்தார்த் தொழிலை கையில் எடுத்தான்... ராஜாராம் நல்ல தகப்பனாக இருந்து அவனுக்கு வழிகாட்டியவர் அடுத்து சில வருடங்களில் இயற்கை எய்தினார்...

ராஜாராம் கூறியது போல் அவரது இறப்பிற்குக் கூடச் சைதன்யா இந்தியா பக்கம் வராமல் வீம்பாய் அங்கேயே இருந்தான்... தந்தையின் இறப்பு செய்தி கேட்டு அவன் மனம் ஒரு நொடி வேதனையில் ஆழ்ந்தது... மறுநொடி அசால்ட்டாய் தோளை குலுக்கியவன் தன் வேலையைப் பார்க்க சென்றுவிட்டான்...

தந்தை மறைவுக்குப் பின் எல்லாப் பொறுப்பும் சித்தார்த்தின் தலையில் விழுந்தது... அதுவரை அவ்வப்போது தனது சகோதரனை சென்று பார்த்துக் கொண்டு இருந்தவனால் முன்பு போலப் போக முடியவில்லை... தொழில் பாரம் அந்தளவுக்கு அவனை அழுத்தியது...

தொழில் ரீதியாய் அவன் வெளிநாடு செல்லும் போது மட்டுமே சைதன்யாவை காண முடிந்தது... மற்ற நேரங்களில் இருவரும் தொலைத் தொடர்பு சாதனங்கள் உதவியுடன் பாசத்தைப் பகிர்ந்து கொண்டனர்... அமராவதியும் அவனுடன் சேர்ந்து சின்னவனிடம் பேசுவார்... ஏனோ அவர் அந்த வீட்டை தாண்டி வெளிநாடு சென்று மகனை பார்க்க விரும்பவில்லை...

அதனால் இங்குள்ளவர்களுக்குச் சைதன்யா என்ற ஒருவன் இருப்பது தெரியாமல் போனது... தெரியாமல் போனது என்பதை விட அவனை மறந்து போயினர்...

இந்தியா வர விரும்பாமல் அவன் எங்கோ வெளிநாட்டில் இருக்கிறான் என்று மட்டும் தெரியும்...

முதலில் இலண்டனில் வேலை பார்த்த சைதன்யா அதன் பின்னர் ஆஸ்திரேலியா போனான்... அவனின் பெண்கள் சகவாசமும் நாளுக்கு நாள் கூடி கொண்டே போனது... கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறையை அவன் நன்றாக அனுபவித்து வாழ்ந்தான்...

சில சமயம் அவனையும் அறியாமல் மனதில் வெறுமை எழத்தான் செய்யும்... தாயின் அரவணைப்பிற்கும், சகோதரனின் அன்பிற்கும், அறிவுரைக்கும் அவன் மனம் ஏங்கும்... அந்தச் சமயம் இழந்ததை எண்ணி கண்ணீர் கூட வடித்து இருக்கிறான்... எல்லாம் கொஞ்ச நேரம் தான் பின் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு மனதின் இழப்பை மறைக்கும் பொருட்டு அன்று அவன் செய்யும் தவறுகள் சற்று அளவுக்கு அதிகமாகவே இருக்கும்...

சித்தார்த்தின் வாழ்க்கையோ தெளிந்த நீரோடை போல் சென்றது... தனது சகோதரனின் வாழ்க்கை முறை பற்றி அறிந்ததாலோ என்னவோ அவன் ஒழுக்கத்தில் அந்த ஸ்ரீராமனை போன்று உயர்ந்த குணவானாய் இருந்தான்...

எந்தப் பெண்ணிடத்திலும் பெரிதாய் விருப்பம் இருந்தது இல்லை... தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்தவனை ஹரிணி தனது அமைதியான அழகால் அடியோடு சாய்த்துவிட்டாள்...

அவளின் குடும்பப்பாங்கான அழகில் பார்த்த நொடி அவன் விழுந்துவிட்டான்...

அவன் அவளைக் காதலித்த போதும் அவனால் அவளுக்கு என்று தனி நேரத்தை உருவாக்கி கொள்ள முடியவில்லை... சொல்லாத காதல் என்றுமே நிறைவேறாது என்பதை அறிந்தவனாய் மாதம் ஒரு முறை அவளைச் சென்று சந்தித்தான்... அதுவும் அவளை முதன்முதலில் சந்தித்த அவனது பிறந்தநாளாம் ஆறாம் தேதியில்...

மாதத்தில் அந்த ஒரு நாள் மட்டும் அவளைச் சந்திப்பவன் அடுத்து யாரையும் சந்திக்க விருப்பம் இல்லாமல் தனிமையில் கடற்கரை வீட்டில் போய் இருப்பான்... தனிமையில் அவளது நினைவுகளை அசை போடுவது அவனுக்கு மிகவும் பிடித்தமானதாய் இருக்க அவன் அதைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்தான்...

ஏனோ தன் காதலை சைதன்யாவிடம் இருந்து மறைத்துவிட்டான்... ஹரிணி தன் காதலை ஏற்றுக் கொள்ளும் முன் தன்னுடன் அவளை இணைத்து வைத்து பேசுவது தவறு என்று கருதி அதை அவன் சகோதரனிடம் கூறவில்லை...

அமராவதி அவனைச் சந்தேகப்பட்டுக் கேள்வி கேட்க, "மாம் எல்லா நாளும் கஷ்டப்படுற எனக்கு ஒரே ஒரு நாள் எனக்காகக் கொடுக்கக் கூடாதா...?"

அவனது கேள்வியில் இருக்கும் நியாயம் அமராவதிக்கு புரிய அதன் பின் அவர் அதைப் பற்றிப் பேசவில்லை...

ஹரிணியை அவளது கல்லூரியில் சந்திக்கும் சித்தார்த் அவளிடம் நேரிடையாய் சென்று எதுவும் பேச மாட்டான்... ஆனால் அவனது பார்வை அவளைத் தொடர்ந்த வண்ணம் இருக்கும்... அவன் தனது அந்தஸ்தையோ, தான் யார் என்பதையோ அவளுக்குச் சற்றும் காட்டினான் இல்லை... மிகச் சாதாரணமாய்த் தான் அவளைச் சென்று பார்ப்பான்...

முதலில் அவனைக் கண்டு கொள்ளாத ஹரிணி அவன் தன்னைத் தான் பின் தொடர்கிறான் என்பதை உணர்ந்தவள் பயந்து போனாள்... அவனைக் கண்டாலே தலையைக் குனிந்து கொண்டு வேகமாய்ச் சென்றுவிடுவாள்...

ஒவ்வொரு முறையும் அவன் கண்களில் எதிர்பார்ப்புடன் அவள் முன் வந்து நிற்க அவளோ அவனை விட்டு விலகுவதில் குறியாய் இருந்தாள்... இப்படியாக ஒரு வருடம் ஓடி சென்றது... சித்தார்த்தின் மௌனமான காதலுக்கு அவளிடத்தில் இருந்து கிடைத்தது மௌனம் மட்டுமே...

அதற்காக அவன் தளர்ந்துவிட வில்லை... விடாமல் அவளைத் தொடர்ந்தான்...

அப்போது அவள் இளங்கலை முடித்து முதுகலை செல்வதற்காக அதே கல்லூரியில் விண்ணப்ப படிவம் வாங்க வந்திருந்தாள்... அந்நேரம் சித்தார்த் அவளைக் காண வந்ததைக் கண்டு அச்சம் அடைந்தவள் விண்ணப்ப படிவம் வாங்காமல் சென்றவள் அவனுக்குப் பயந்து அடுத்த ஒரு மாதத்தில் வேறு ஒரு கல்லூரியில் முதுகலை படிப்பிற்குச் சேர்ந்தாள்...

அன்று ஆறாம் தேதி வழக்கமாய்த் தன்னைக் காண வரும் சித்தார்த்தை காணாமல் நிம்மதியுற்ற ஹரிணி பேருந்து நிலையத்தை நோக்கி நடக்க அவள் சற்றும் எதிர்பாராத நேரத்தில் அவள் முன் வந்து நின்றான் சித்தார்த்...

கோபத்தில் முகம் சிவக்க தன் முன் நின்றவனைக் கண்டு அவள் அச்சத்தில் விழிவிரிக்க...

"எனக்குப் பயந்துட்டு தான் காலேஜ் மாறினியா...?" அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் அவள் தலையைக் குனிந்து கொண்டாள்...

"என்னைப் பார்த்தா உனக்கு எப்படித் தெரியுது... ரோட் சைட் ரோமியோ மாதிரி இருக்கா...? நான் உன் கிட்ட எதிர்பார்த்து வந்தது காதலை தான்... உன் மனசை தான்... ஆனா நீ என்னை... ச்சே..." என்றவன்,

"இன்னையில் இருந்து சரியாய் ஒரு மாசம் கழிச்சு இதே நாள் இங்கே வந்து உனக்காக நான் காத்திட்டு இருப்பேன்... நீ உன் முடிவை சொல்லணும்... இந்த ஒரு மாசமும் உனக்கு யோசிக்கிறதுக்கான டைம்... நல்லா யோசிச்சு உன் முடிவை சொல்லு..."

அவனின் பேச்சு கேட்டு குனிந்த தலையை நிமிராமல், "எப்போ வந்து கேட்டாலும் என் பதில் இதுவா தான் இருக்கும்..." என்றவளை கண்டு அவனுக்கு வருத்தமாய் இருந்தது... ஆனாலும் மனதில் நம்பிக்கை எழ,

"அதை ஒரு மாசம் கழிச்சு வந்து சொல்லு..." என்றவன் அவளைத் திரும்பி பார்க்காமல் சென்றான்...

அவன் செல்வதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தவளின் மனதில் அப்போதே அவனின் காதலுக்கான போராட்டம் ஆரம்பித்துவிட்டது...

நீயாவேன்...!!!

# நான் : 15

அன்று காலையில் எழுந்தில் இருந்து ஏனோ சித்தார்த்துக்குப் படபடப்பாய் இருந்தது... நாளை ஹரிணி அவனின் காதலுக்கு முடிவு சொல்லும் நாள்... அன்று போல் இப்போதும் அவள் முடியாது என்று பதில் அளித்து விட்டால்...? அந்த நினைவே அவனுக்குக் கசந்தது...

முகத்தை அழுந்த கோதி கொண்டவனுக்கு மனதின் ஓரம் ஏனோ நம்பிக்கை இருந்தது அவள் தன்னைக் காதலிப்பாள் என்று... சில சமயம் தன்னைத் தேடி அலைப்புறும் அவளது விழிகள் அவளது மனதை அவனிடம் தெளிவாகக் காட்டி கொடுத்து எட்டப்பன் வேலையைச் செய்துவிட்டதை அவள் அறிய மாட்டாளே...

அவளது மனம் அவன் பக்கம் சாயத் தொடங்கி வெகுநாட்கள் ஆகிவிட்டது... அதை அவள் தான் உணரவில்லை... அதை உணரத்தான் அவன் கால அவகாசம் அளித்துவிட்டு வந்திருந்தான்... ஒருவேளை அவள் பெற்றோருக்கு ஏதும் பயப்படுகிறாளோ என்று நினைத்தான்... அப்படி மட்டும் அவள் பயந்தால் அவளது பெற்றோர் சம்மதத்துடன் அவர்களது பூரண ஆசிர்வாதத்துடன் அவளை அவன் கைப்பிடிப்பது உறுதி என்று மனதில் உறுதி எடுத்துக் கொண்டான்...

அலுவலகத்தில் வேலையில் அமர்ந்தவன் அதில் மூழ்கிவிட்டான்... அப்போது ஒரு முக்கியமான கோப்பு தேவைப்பட்டதால் அவனது உதவியாளர் சந்துருவை அழைக்க அடுத்த நொடி அவனது அறைக்கு வந்த சந்துரு அந்தக் கோப்பை நீட்ட அதை வாங்கியவன் அவனைப் போகச் சொன்னான்...

அவன் சென்றதும் கோப்பை புரட்டி கொண்டு வந்தவனை அதில் இருந்த ஒரு காகித உறை அவனது கண்ணைக் கவர்ந்தது... ஒருவேளை சந்துரு அவனது வீட்டிற்கு அனுப்புவதற்காக வைத்து இருப்பானோ என்று நினைத்தவன் அதைத் தூக்கி தள்ளி வைத்துவிட்டு தனது

வேலையில் மூழ்கி போனான்... அதைச் சந்துருவிடம் கொடுக்க வேண்டும் என்று நினைத்தவன் வேலைப்பளுவில் அதை மறந்தும் போனான்...

மாலையில் அன்று வந்த தபால்களை எடுத்துக் கொண்டு வந்த வேதாந்தம் அதைச் சித்தார்த்துக்குப் பிரித்துப் படித்துக் காட்ட துவங்கினார்... என்னத்தான் உதவியாளராய் சந்துரு இருந்த போதிலும் சில முக்கிய வேலைகளை வேதாந்தம் தான் செய்து வந்தார்...

அப்படிப் படிக்கும் போது அந்தக் காகித உறையையும் மறந்தார் போல் அவர் பிரித்துப் பார்க்க அதைப் பார்த்தவர் அதிர்ச்சியில், "தம்பி..." என்று கூவிவிட்டார்...

"என்ன அங்கிள்...?" என்று கேட்டபடி அவரைப் பார்த்தவன் அவரது முகம் சரியில்லாததை உணர்ந்து அவரது கையில் இருந்த காகிதத்தை வாங்கிப் படிக்க ஆரம்பித்தான்...

அதில் இருந்ததைப் படித்தவன் முகம் ஆத்திரத்தை தத்தெடுத்தது... நாற்காலியில் இருந்து கோபமாய் எழுந்தவன் நேரே சந்துருவை தேடி போனான்...

"தம்பி... அமைதியா ஹேண்டில் பண்ணுங்க..." பதறியவராய் வேதாந்தம் சித்தார்த்தை பின் தொடர்ந்தார்...

"சந்துரு..." சித்தார்த் கத்திய கத்தலில் மொத்த அலுவலகமும் அவர்களைத் திரும்பி பார்த்தது...

"சார்..." சித்தார்த்தின் ருத்ரதாண்டவத்திற்குக் காரணம் அறியாது திகைத்த சந்துரு தனது நாற்காலியில் இருந்து பவ்யமாக எழுந்து நின்றான்...

"இது என்ன...?" சித்தார்த் தன் கண் முன் காட்டிய அந்தக் காகிதத்தைப் பார்த்தவன் முகம் பயங்கரமாய் மாறியது... பயத்தில் எச்சிலை கூட்டி விழுங்கினான்... தனது சாயம் வெளுத்து போனதை அறிந்து அவனது முகம் வெளுத்துப் போனது...

அந்தக் காகிதத்தில் இருந்தது சித்தார்த் அடுத்து எடுக்கப் போகும் டென்டரின் மொத்த தொகை குறிப்பிட்டு இருந்தது... அதன் கீழே சித்தார்த் அடுத்துச் செய்யப் போகும் அனைத்துக் காரியங்களைப் பற்றியும் விரிவான குறிப்புகள் இருந்தது...

"இதை யாருக்கு அனுப்ப இருந்த...?" சந்துருவின் சட்டையைக் கொத்தாகப் பிடித்து உலுக்கி கேட்ட சித்தார்த்தின் இந்த முகத்தை யாரும் பார்த்திராத காரணத்தால் எல்லோரும் நடப்பதை பயத்துடன் பார்த்திருந்தனர்...

"சார்... அது வந்து..." மென்று முழுங்கிய சந்துருவின் முகத்தில் ஓங்கி அறைந்த சித்தார்த், "சொல்லுடா நாயே..." என்று கர்ஜிக்க அவன் மௌனம் சாதிக்க...

சித்தார்த் அலுவலகப் பாதுகாவலர்களை அழைத்து வந்து சந்துருவை அடித்து விசாரிக்கச் சந்துரு அந்த உண்மையைக் கக்கினான்...

சித்தார்த்தின் தொழில் போட்டியாளரான கைலாஷிடம் அவன் விலை போனது அவனுக்குத் தெரிய வந்தது...

"இந்த நிமிசமே நீ ரெசிக்னேசன் லெட்டரை எழுதி கொடுத்துட்டு வேலையை விட்டு நீயே நின்னுக்கிற... இல்லை நானா ஏதாவது செய்யணும்ன்னு நினைச்சா அதோட விளைவுகள் விபரீதமா இருக்கும்..." என்று சத்தமிட்ட சித்தார்த்,

"இப்போ கூட உன்னை ஒண்ணும் செய்யாம இப்படி விடறதுக்குக் காரணம் உன் அப்பா, அம்மா... அந்த அம்மா கையால எத்தனையோ முறை சாப்பிட்டு இருக்கேன்... அவங்க போட்ட உப்புக்கு நான் விசுவாசமா இருக்க நினைக்கிறதால தான் நான் உன்னை இத்தோடு விடறேன்... அதே மாதிரி உனக்குக் கொஞ்சமாவது விசுவாசம் இருந்தா என் முகத்தில் இனி விழிக்காதே..." என்று சந்துருவை பார்த்து எச்சரித்தவன் அவனை

வேதாந்தம் வசம் ஒப்படைத்து விட்டு அலுவலகத்தை விட்டு வெளியில் வந்தான்...

சந்துரு நடந்து கொண்டதை அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை... ஒரு சகோதரன் போல் பாசம் காண்பித்து அவனுக்கு எல்லாமுமாய் இருந்த தனக்கு எப்படிப்பட்ட துரோகத்தை அவன் பரிசளித்துவிட்டான்...

பாசத்தை விடப் பணம் பெரியதாய் போய்விட்ட கலி காலத்தைச் சபித்தபடி காரை எடுத்தவனின் மூளையில் அப்போது தான் மின்னல் வெட்டியது...

நெடுநாளாய் வேதாந்தம் அவனை எச்சரித்துக் கொண்டு இருந்தது அவனது நியாபகத்தில் வந்தது... அது அவனது மாமன் கணக்கு வழக்குகளைச் சரிவரக் கொடுக்க மாட்டேங்கிறார் என்பது தான்...

ஆராவமுதன் கவனித்து வரும் தொழிற்சாலைக்கு நேரே தன் காரை விரட்டினான்... அந்த மாலை நேரத்திலும் ஆட்கள் சுறுசுறுப்பாய் வேலை செய்தது மெச்ச கூடிய விசயம் என்றாலும் அது சந்தேகத்திற்கு உரிய விசயமும் கூட...

லாரியில் ஏற்றுவதற்காக வைக்கப்பட்டு இருந்த பொருட்களைச் சென்று பார்வையிட்டான்... அங்கு வைக்கப்பட்டு இருந்த பொருட்கள் எல்லாம் அரசாங்கம் தடை செய்த பொருட்கள்... ராம் இன்டஸ்ட்ரீஸ் பேரில் மூலப்பொருளாய் வேறொன்றை காட்டி ஆராவமுதன் சட்ட விரோதமாய் இந்தப் பொருட்களை ஒளித்து வைத்து ஏற்றுமதி செய்கிறார்... என்றாவது இது வெளிச்சத்துக்கு வருமானால் பாதிக்கப்படுவது சித்தார்த் தான்... அதைத் தெளிவாய் உணர்ந்து அவர் செய்ததை அந்த நேரத்திலும் அவனால் மெச்சாமல் இருக்க முடியவில்லை...

அங்கு வேலை செய்த தொழிலாளர்கள் அவனைக் கண்டு பெரியதாய் அலட்டி கொள்ளவில்லை... மருமகனுக்குத் தெரியாமலா மாமன் இந்தச் சட்ட விரோத காரியங்களில்

ஈடுபடப் போகிறார் என்று அலட்சியமாக எண்ணி அவனைக் கண்டு கொள்ளவில்லை...

கோபமாய் அலுவலக அறைக்குள் நுழைந்தவன் அங்கிருந்த வத்சனிடம் கணக்கு வழக்குகளைக் கொண்டு வர செய்து அங்கேயே அமர்ந்து பார்க்க ஆரம்பித்தான்... சிறிது நேரத்தில் ஆராவமுதன் செய்த தில்லுமுல்லுகள் சித்தார்த்துக்கு ஒவ்வொன்றாய் தெரிய ஆரம்பிக்க இதைத் தான் ஒருவன் மட்டும் பார்க்க முடியாது என்று எண்ணியவன் வேதாந்தை அழைத்தான்...

வேதாந்தம் வரும் போது விசயம் கேள்விப்பட்டு ஆராவமுதனும் வேகமாய் உள்ளே நுழைந்தார்...

"மாப்பிள்ளை நமக்குள்ள எதுக்குக் கணக்கு வழக்கு பார்த்துக்கிட்டு... முதல்ல எழுந்திருச்சு வீட்டுக்கு போங்க..." சிரித்தபடி பசப்பியவரை கண்டு ஏமாற அவன் ஒன்றும் முட்டாள் இல்லையே...

"மாமனாய் இருந்தாலும் கணக்கு வழக்குகளில் சரியாய் இருக்கிறது நல்லது இல்லையா..." என்றவன் அவரது பேச்சை கேட்காதவாறு வேலையில் மூழ்க... வேதாந்தம் அவனுக்கு உதவியாய் கணக்குகளை ஆராயத் துவங்கினார்...

இருவரையும் முறைத்தபடி அமர்ந்திருந்த ஆராவமுதன் குள்ளநரி மூளை இதை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தது...

சுமார் நான்கு மணி நேரம் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்தவன் மாமனை நோக்கி கோப்புகளைத் தூக்கி போட்டான்...

"இதுல எல்லாம் நீங்க என்ன என்ன தப்பு செஞ்சீங்கன்னு இருக்கு... இதுக்கு எல்லாம் எனக்கு விளக்கம் வந்தாகணும்... அதே போல் நீங்க செய்ற சட்டவிரோத செயல்களுக்கு நீங்க போலீசில் விளக்கம் கொடுத்துக்கோங்க... அதுக்கும் எனக்கும் சம்பந்தம்

கிடையாது... நாளைக்கே போலீஸ்ல கம்ப்ளைண்ட் பண்ண போறேன்..." என்றவன் அவரின் பதிலை எதிர்பாராது வேதாந்தை அழைத்துக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான்...

அவன் பேசியது ஆராவமுதனை ஆத்திரப்படுத்திய போதும் அவசரப்பட்டு எதையும் செய்யாமல் நிதானமாய்ச் சித்தார்த்தை வீழ்த்த திட்டம் தீட்டினார்...

வேதாந்தை அவரது வீட்டில் விட்டு விட்டு சித்தார்த் தனது வீட்டிற்கு வருவதற்குள் ஆராவமுதன் அவனுக்காக அங்கே காத்திருந்தார்...

அவரது வரவை கண்டு மனதிற்குள் துணுக்குற்றவன் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது, "வாங்க மாமா..." என்றபடி சோபாவில் அமர...

"சித்து அண்ணா ஒரு சந்தோசமான விசயத்தோடு இங்கே வந்திருக்கிறார்... உனக்கும் தீபிக்கும் கல்யாணம் பண்றதை பத்தி பேச அண்ணா வந்திருக்கிறார்... நீ என்ன சொல்ற சித்து...?"முகத்தில் மகிழ்ச்சி கொப்பளிக்கப் பேசிய அன்னையைக் கண்டு அவனுக்குப் பாவமாய் இருந்தது...

"மாப்பிள்ளை சின்னப்பையன் தங்கச்சி... அவருக்குப் பதிலா நீ தான் முடிவு எடுக்கணும்..." என்றவர் சித்தார்த்தை பார்த்து அர்த்தத்துடன் புன்னகைத்தார்...

தனது மகள் தீபிகாவை சித்தார்த்துக்குத் திருமணம் செய்து வைப்பதன் மூலம் தனது தவறுகளை மறைக்க நினைத்தார்... தனது மகளுக்காக அவன் தனது தவறுகளை மன்னித்து விட்டு விடுவான் என்று தப்பு கணக்கு போட்டார்...

"மாம்... தீபியை எப்படி மாம்...? அவள் என் தங்கை போல... அவளைப் போய் நான் எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும்..." என்று அத்தை மகளை மறுத்தவன் தனது மனதை எப்படி எடுத்துரைப்பது என்று தெரியாமல் சிறிது நேரம் தவித்தவன் பின் முடிவுக்கு வந்தவனாய்,

"நான் ஒரு பொண்ணைக் காதலிக்கிறேன் மாம்..." என்றான் தைரியமாக...

அதைக் கேட்டு ஆராவமுதன் அதிர்ச்சி அடைந்தாலும் அமராவதி பெரியதாய் அதிர்ச்சி அடையவில்லை... காதல் திருமணம் என்பது இப்போதைய சமூகத்தில் நடக்கும் வழக்கமான ஒன்று தான் என்பதால் அவர் அதிகம் அதிரவில்லை...

"பொண்ணு யாரு...? நம்ம அந்தஸ்துக்கு ஏத்த இடமா...?" இது மட்டுமே அமராவதியின் கேள்வியாய் இருந்தது...

'அட லூசு தங்கச்சி... காதலிக்கிறேன் சொல்ற பையனை எதிர்க்காம அந்தஸ்தை பத்தி கேள்வி கேட்டுட்டு இருக்கிறதை பாரு...' மனதுக்குள் ஆராவமுதன் பொருமினார்...

ஹரிணியைப் பற்றி எல்லாவற்றையும் சொல்ல இருந்தவன் மாமனை கண்டு வாயை மூடி கொண்டான்...

"இல்லை மாம்... ஆனா அவள் எனக்கு ஏத்தவள்... எனக்குன்னு பிறந்தவள்... அவளைத் தான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன்..." மாமனை ஓரக்கண்ணால் பார்த்தபடி அன்னையுடன் உறுதியாய் அவன் கூற...

"என்னது நம்மளுக்கு ஈக்குவல் ஸ்டேட்டஸ் இல்லையா... அப்படின்னா நான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டேன்..." என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு சொன்ன அன்னையைக் கண்டு எரிச்சல் வந்தது சித்தார்த்துக்கு...

"அவள் தான் என் மனைவி... அதில் எந்த மாற்றமும் இல்லை..." இருவருக்கும் பொதுவாய் உரைத்தவன் தனது அறைக்குச் செல்ல...

ஆராவமுதன் அமராவதியிடம், "தங்கச்சி நீ உன் பிடிவாதத்தைத் தளர்த்திக்காதே... கண்ட கழிசடையும் நம்ம வீட்டு மருமகளா வந்தா நல்லாவா இருக்கும்... இதே இது என் பொண்ணு தீபி வந்தா எவ்வளவு பாந்தமா

மரியாதையா இருக்கும்..." என்று அமரவதிக்குத் தூபம் போட்டுவிட்டே ஆராவமுதன் தனது வீட்டிற்குச் சென்றார்...

அந்நேரம் சித்தார்த் செய்த ஒரே தவறு ஆராவமுதனை பற்றித் தனது தாயிடம் எதுவும் சொல்லாதது தான்... அது தான் பின்னால் பல விளைவுகளை அவனுக்கு ஏற்படுத்தியது...

மறுநாள் காலையிலேயே அமராவதி தனது புலம்பலை ஆரம்பித்து விட, "மாம்... நீங்க என்ன சொன்னாலும் சரி ஹரிணி தான் என் மனைவி..." என்று உறுதியாய் இறுதியாய் கூறியவன் அன்று ஹரிணியைச் சந்திக்க வேண்டிய நாள் என்பதால் அவளைக் காண கிளம்பினான்...

ஹரிணியின் கல்லூரி முன் அவன் வந்து காத்திருக்க அவளோ அங்கு வரவில்லை... கல்லூரி விடும் வரை காத்திருந்தவன் அவள் வராததால் தனது காதலில் தோற்று போனவனாய் காரை கிளப்பினான்...

அவன் மனம் முழுவதும் 'அவள் ஏன் வரவில்லை...?' என்ற கேள்வியே வியாபித்து இருந்தது... அவனது உள்ளம் காதல் தோல்வியில் துவண்டது...

அவனது மனம் அமைதியை நாட அவனது கைகள் அவனின் அனுமதி இன்றிக் காரை கடற்கரை வீட்டிற்குச் செலுத்தியது...

வீட்டின் முன் காரை நிறுத்தியவன் வழக்கம் போல் காவலாளியை வீட்டிற்கு அனுப்பிவிட்டு வீட்டினுள் நுழைந்தான்...

நேரே படுக்கறைக்கு நுழைந்தவன் மனதின் பாரம் முழுவதையும் யாரிடமும் சொல்லி அழ முடியாமல் அங்கிருந்த நாட்காட்டியில் தனது வேதனையை வார்த்தைகளாய் வடித்து ஆறுதல் தேடினான்...

அதில் முன்பு காதலை அனுபவித்து எழுதியவன் இப்போது காதலின் கண்ணீர் கதையையும் மனம் நொந்து

எழுதினான்...

அப்போது அலைப்பேசி அடிக்க அவனது அன்னை தான் அவனை அழைத்திருந்தார்... அவன் அதை எடுக்காமல் துண்டிக்க... விடாமல் அழைத்த அன்னையின் அழைப்பில் மனம் வெறுத்தவனாய் அதை அணைத்துப் படுக்கையில் போட்டவன் அறையை விட்டு வெளியில் வந்தான்...

மனதின் கவலையை மறக்க சிறிது நேரம் காற்றாட நடந்து வர தீர்மானித்தவன் வீட்டை விட்டு வெளியில் வந்தான்... அங்காங்கு சில வீடுகள் மட்டுமே அந்தப் பகுதியில் இருந்தது... இப்போது தான் வளர்ந்து கொண்டு இருந்தது அந்தப் பகுதி...

சித்தார்த் வேண்டிய அமைதி இங்குக் கிடைத்ததால் அவன் இந்த வீட்டை வாங்கினான்...

அவனது மனதின் அலைப்புறுதலை அந்தக் கடல் காற்றால் கூடத் தணிக்க முடியவில்லை...

'ஹனி ஏன் இப்படிப் பண்ணினே...?' அவனது மனம் முழுவதும் ஹரிணியின் நியாபகங்களே...

அவனது இதயம் ஒவ்வொரு முறை துடிக்கும் போதும் 'ஹரிணி' என்று அவளது பெயரை சொல்லித்தான் துடித்தது...

அப்போது தான் அவன் அந்தச் சத்தத்தைக் கேட்டான்... ஒரு பெண் வீல் என்று அலறும் சத்தம் அவன் உடலை பதற செய்யச் சுற்றும் முற்றும் பார்த்தான்...

சத்தம் வந்த இடத்தைக் கணித்துக் கடற்கரையை நோக்கி அவன் ஓடினான்... அங்கே ஒரு படகின் மறைவில் அவன் கண்ட காட்சி அவனது இரத்தத்தை உறைய செய்தது...

மூன்று இளைஞர்கள் சேர்ந்து ஒரு பெண்ணைப் பலாத்காரப்படுத்திக் கொண்டு இருந்தனர்...

"டேய்... அந்தப் பொண்ணை விடுங்கடா..." என்று சித்தார்த் அவர்களைத் தாக்க...

தங்களது வேலைக்கு இடையூறாக வந்தவனைக் கண்டு அவர்களுக்கு வெறியேறியது உள்ளே சென்றிருந்த மதுவின் உபயத்தால்...

சித்தார்த்தை அவர்கள் மூவரும் தாக்க துவங்க போதையில் தடுமாறியவர்களை எளிதில் சமாளித்த சித்தார்த் அவர்களை அடித்துவிட்டு அந்தப் பெண்ணின் அருகில் சென்றான்... அவளது கன்னத்தில் தட்டி அவளை எழுப்ப முயல... அவளோ தனது உயிரை விட்டு சில நிமிடங்களாகி இருந்தது...

"ஐயோ..." என்று பதறி விலகியவன் அந்த மூவரை கண்டு, "அநியாயமா ஒரு பொண்ணைக் கொன்னுட்டீங்களேடா..." சத்தமிட...

அந்தப் பெண் இறந்துவிட்டாள் என்ற செய்தியில் அவர்களது போதை முற்றிலும் வடிய ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

"உங்களை எல்லாம் சும்மா விடக் கூடாது..." என்ற சித்தார்த் மீண்டும் அவர்களைத் தாக்க துவங்க...

போதை தெளிந்த அவர்களோ மிக மூர்க்கமாய் அவனைத் தாக்க துவங்கினர்... அவர்களது தாக்குதலில் இருந்து தப்பிக்க நினைத்து சித்தார்த் தனது வீடு நோக்கி ஓட துவங்கினான்...

தாங்கள் செய்த கொலைக்கு ஒரே சாட்சியான அவனை உயிருடன் விட அவர்கள் விரும்பவில்லை...

ஒருவன் அங்கிருந்த ஒரு இரும்புத்தடியை கையில் எடுத்துக் கொள்ள மற்ற இருவரும் அர்த்தமான பார்வையைப் பரிமாறி கொண்டனர்...

வீட்டினுள் நுழையப் போன சித்தார்த்தை அவனது பின் பக்கமாய்த் தலையில் ஓங்கி அடித்தான் ஒருவன் அந்த இரும்புத்தடியினால்...

மற்ற இருவரும் கைகளால் தாக்க துவங்கினர்... சித்தார்த் தன் நினைவு மங்கி மயங்கி அங்கிருந்த சோபாவில் விழ அவன் இறந்துவிட்டான் என்று முடிவு செய்து அவர்கள் மூவரும் அவசரமாய் வெளியேறினர்... ஏனென்றால் இறந்த பெண்ணின் உடலை அப்புறப்படுத்த வேண்டுமே...

அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் சந்துரு அங்கு வந்தான்... நல்ல குடி போதையில் இருந்தவனின் கண்கள் பழிவாங்கும் வெறியில் பளபளத்தது...

அவனுக்குத் தெரியும் சித்தார்த் ஒவ்வொரு மாதமும் இங்கு வருவது... அவனைப் பழிவாங்க எந்தக் காவலும் இல்லாத இந்த நாளை தேர்ந்தெடுத்தான் அவன்...

சோபாவில் கண் மூடி படுத்திருந்த சித்தார்த்தை கண்டதும் மெல்ல ஓசை இல்லாமல் அவன் அருகில் வந்தவன் நொடி நேரம் கூடத் தாமதிக்காமல் அவனது நெஞ்சில் தான் கொண்டு வந்த கத்தியை ஆழமாய்ச் சொருகினான்...

எந்தவித சத்தமும் எழுப்பாமல் சித்தார்த்தின் தலை தொங்கியதை கண்டு உள்ளுக்குள் ஆச்சிரியப்பட்டாலும் அதைக் கவனித்து யோசிக்கும் அவகாசம் இல்லாததால் தான் நினைத்ததை நடத்தி முடித்த திருப்தியில் அவன் அந்த இடத்தை விட்டு வேகமாய் வெளியேறினான்...

அதே நாளை ஆராவமுதனும் தனது சதிக்கு ஏற்ற நாளாய்த் தேர்ந்தெடுத்தது தான் கொடுமையின் உச்சம்...

சித்தார்த்தின் வீட்டிற்குள் சுவாதீனமாய் உள்ளே நுழைந்தவர் அங்கே சோபாவில் கத்தி குத்துப்பட்டுக் கிடந்த சித்தார்த்தை கண்டு அதிர்ந்து போனார்...

"மாப்பிள்ளை... மாப்பிள்ளை..." என்று அவனது கன்னம் தட்டி எழுப்ப...

ஆழ்ந்த மயக்கித்தில் இருந்த சித்தார்த்துக்குச் சிறிது சொரணை வந்து கண்களைத் திறந்தான்... இடது பக்க நெஞ்சில் தாங்க முடியாத வலி எடுப்பதைக் கண்டு அங்கே

கை வைத்து பார்த்தவனுக்கு அங்குக் குத்தி இருந்த கத்தி தட்டுப்பட உயிர் பயத்தில் அவனது முகம் வெளிறியது...

"யார் மாப்பிள்ளை உன்னைக் கத்தியால் குத்தினது...?" பரிதாபமாய்க் கேட்ட ஆராவமுதனை கண்டு கண்களில் நம்பிக்கை ஒளியேற,

"மாமா... சீக்கிரம் ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போங்க மாமா..." என்று சொன்னவனை ஆத்திரம் பொங்க உறுத்து விழித்தவர்,

"உன்னை நான் எதுக்கு ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போகணும்... நீ உயிரோடு இருந்தா என்னோட கௌரவம் போயிருமே... அதனால உன்னோட உயிர் போறது தான் எனக்கு நல்லது..." என்றவரை அவன் அதிர்ச்சியுடன் நம்ப முடியாமல் பார்த்தான்...

"மாமா..."

"என்னடா மாமா...? நீ பண்ணின வேலைக்கு நானே உன்னைக் கொல்லணும்ன்னு தான் நினைச்சேன்... எங்கே என் கையால உன்னைக் கொல்லணுமோன்னு கவலையா இருந்தது... யாரோ ஒரு புண்ணியவான் அந்த வேலையைக் கூட எனக்கு வைக்காம பண்ணிட்டு போயிட்டான்... அவன் எங்கே இருந்தாலும் நல்லா இருக்கணும்... வரட்டுமா சித்தார்த்... இப்படித் துடிச்சு துடிச்சு இன்னும் கொஞ்ச நேரத்துல நீ சொர்க்கம் போயிருவ... நான் போய்க் காலையில் உங்கம்மாவை கூட்டிட்டு வர்றேன்..." என்று கொஞ்சமும் இரக்கம் இல்லாமல் சொன்னவர் அங்கிருந்து வெளியேற போக...

"என்னைக் காப்பாத்துங்க மாமா..." என்று கெஞ்சிய சித்தார்த்தின் குரல் காற்றோடு கலந்தது...

இதற்கு எல்லாம் உச்சக்கட்டம் என்ன என்றால் அவரைத் தொடர்ந்து சித்தார்த்தின் வீட்டிற்குள் அந்த உருவம் நுழைந்தது... முகத்தை மூடியிருந்த அந்த உருவத்தை யாராலும் அடையாளம் காண இயலாது...

நேரே சித்தார்த்தின் முன் வந்து நின்ற அந்த உருவம் அவனது நிலையைக் கண்டு எக்காளமிட்டுச் சிரித்தது... பின்பு தனது கைகளால் அவனது கழுத்தை நெறித்து அவனைத் துடிக்கத் துடிக்கக் கொன்றது...

ஒரு உயிர் துடித்துப் பிரிவதை ஆசையுடன் பார்த்துக் கொண்டு இருந்தது அந்த உருவத்திற்குள் ஒளிந்து இருந்த எமன்...

இரும்புத்தடி தாக்கியும், கத்தியால் குத்தியும் போகாத சித்தார்த்தின் உயிர் அந்தக் கொடூரனின் கரங்களால் அவனது உடலை விட்டுப் பிரிந்தது...

சித்தார்த்தின் கடைசி மூச்சு நிற்கும் போதும் அவனது இதயம் ஹரிணிக்காகத் தான் துடித்தது...

'ஹனி... ஐ லவ் யூ ஹனி... உன்னை விட்டு போக மனசு இல்லாமல் போறேன் ஹனி...' என்று எண்ணியபடி அவனது உயிர் பிரிந்தது...

சித்தார்த்துக்கு நடந்த கொடுமைகளுக்கு மௌன சாட்சியாய் இருந்து அந்தக் காட்சிகளை எல்லாம் தன்னுள் மௌனமாய்க் கிரகித்துக் கொண்டது அந்தக் கண்காணிப்பு கேமிரா...

நீயாவேன்...!!!

## நான் : 16

"ஹரிணி... உன் கவனம் எங்கே இருக்கு...?" பத்மா ஹரிணியை அதட்டவும் அவள் தன் நினைவில் இருந்து களைந்தவள்,

"என்னம்மா...?"

"என்னம்மாவா... இங்கே பாரு நீ பண்ணி இருக்கிற காரியத்தை..."

அன்னை சொன்னதும் தான் கவனித்தாள் தான் செய்த குளறுபடியை... அன்னையுடன் சேர்ந்து துணிகளை மடிக்க அமர்ந்தவள் அதை மடித்து வைக்காமல் அவர் மடித்து வைத்த துணிகளை ஒவ்வொன்றாய் எடுத்து தான் கலைத்து போட்டு இருப்பதைக் கண்டு வெட்கியவள்,

"அம்மா... அது..." என்ற மகளின் முகம் தெளிவில்லாமல் இருப்பதை உணர்ந்து அவளின் கழுத்தில் கை வைத்து பார்த்த பத்மா அவளது உடல் கொதிப்பதை உணர்ந்து,

"என்னடி ஜூரம் இப்படிக் கொதிக்கிறது...? மாத்திரை எடுத்தாறேன் போட்டுட்டு படு..." என்றவர் உள்ளே சென்று மாத்திரையோடு சூடாய் காபியையும் கொண்டு வந்து கொடுக்க அதைப் போட்டுக் கொண்டு அறைக்குள் சென்று படுத்தாள்...

வெளியில் அவள் அமைதியாக இருப்பது போல் தெரிந்தாலும் மனதுக்குள் தவியாய் தவித்துக் கொண்டு இருப்பது அவளுக்கு மட்டுமே தெரியும்...

'இந்நேரம் ராம் வந்திருப்பாரோ... என்னைத் தேடி காணாமல் தவித்து இருப்பாரோ... என்னைப் பத்தி தப்பா நினைச்சு இருப்பாரோ...' ஒவ்வொரு நொடியும் மனதுக்குள் ராமை நினைத்து கலங்கினாள்...

கடைசியாய் பார்த்த போது கோபப்பட்ட ராமின் முகமே அவளின் நினைவில் இருந்து அவளைத் துன்பத்தில் ஆழ்த்தியது... கனிவான ராமின் முகத்தில் அன்று அவள்

கண்ட கோபம் அவளது மனதை வெகுவாய்ப் பாதித்தது என்னவோ உண்மை...

அன்று கோவிலில் பார்த்ததற்குப் பின் தனது கல்லூரி வாயிலில் மீண்டும் அவனைக் கண்ட போது உடனே அவனை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது அவளால்...

அவனைக் கண்டதும் அன்று அவன் தொட்ட வலது காலில் அவளையும் அறியாமல் குறுகுறுப்பு எழுந்தது... ஓரக்கண்ணால் அவனை அவள் பார்த்த போது அவனோ ஒன்றும் பேசாது, சிரிக்காது, நின்றிருந்தவனின் கண்கள் மட்டும் ஒருவித எதிர்பார்ப்புடன் அவளைப் பார்த்து கொண்டிருந்ததை அவள் உணர்ந்தாள்...

இரு கைகளையும் கட்டி கொண்டு தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்தவனைக் கண்டு அவளுக்கு முதலில் பயம் தான் எழுந்தது... தனது பேருந்து வரவும் வேகமாய் அதில் ஏறி சென்றுவிட்டாள்... அதன் பின் வந்த நாட்கள் அவனைக் காணவில்லை என்றதும் அவளுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது...

அடுத்து சிறிது நாட்கள் கழித்து மீண்டும் சந்தித்தவனைக் கண்டு அவள் யோசனையில் ஆழ்ந்தாள்... அவன் தன்னைத் தொந்தரவு செய்யாதவரை நிம்மதி என்று இருந்தவள் அவனைக் கண்டு கொள்ளாது இருக்கப் பழகிவிட்டாள்...

ஒவ்வொரு மாதமும் ஆறாம் தேதி தன்னைப் பார்க்க வந்தவனைக் கண்டு முதலில் குழம்பியவள் பின் அதற்கான காரணத்தை அறிந்த போது திகைத்து போனாள்... அது அவன் தன்னை முதன்முதலில் சந்தித்த நாள்... அவன் விளையாட்டுக்குத் தன்னைப் பின் தொடரவில்லை... உண்மையாகவே தன்னைக் காதலிக்கிறான் என்பதை உணர்ந்தவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை...

அதற்கு அச்சாரமாய் அன்று ஒரு நிகழ்ச்சி நடந்தது... அன்று ராம் அவளைச் சந்திக்க வந்த போது திடீரென்று நல்ல மழை பெய்ய ஆரம்பித்ததும் அவனும் அவளுடன் பேருந்தில் ஏறிவிட்டான்... அவன் தன் அருகில் நின்று கொண்டு இருந்ததை அவள் உணர்ந்தாலும் அவனை நிமிர்ந்து பார்க்க பயந்து வேறு பக்கம் திரும்பி நின்றிருந்தாள்...

அவளது தோழிகளில் ஒருத்தி, "அந்தக் கிருஷ்ணன் காதலிக்கிறதா சொல்லி நம்ம மகாவை ஏமாத்திட்டானாம்... நேத்து வந்து அவள் ஒரே அழுகை... இந்தப் பசங்க எல்லாமே இப்படித்தான்... ஏமாத்துக்காரங்க..." என்று பொரிந்து தள்ள...

ராம் அவர்களிடையே குறுக்கிட்டான்... "கேர்ள்ஸ் எல்லாப் பசங்களும் நீங்க நினைக்கிற மாதிரி கிடையாது... காதலுக்காக உயிரையே கொடுக்கிறவங்க இருக்காங்க... இறுதி மூச்சு இருக்கிறவரை காதலிக்காக வாழ்வாங்க..." என்றவனின் பார்வை அழுத்தமாய் அவளின் மீது படிந்து மீண்டது...

அவனின் வார்த்தைகள் அவளின் உயிர் வரை தீண்டி சென்று அவளைச் சிலிர்க்க செய்யத் தனது மனமாற்றத்தை எண்ணி பயந்து போனவள், 'பெருமாளே... இந்தக் காதல் கர்மாந்திரம் எல்லாம் நேக்கு வேண்டாம்... அம்மா இதைக் கேட்டா என்னைத் தொலைச்சுடுவா தொலைச்சு...' அன்னையை மனதில் நிறுத்தி உள்ளே நுழைய இருந்த காதலை அவசரமாய் விரட்டி அடித்தாள்...

அவனது பேச்சை கேட்டு அவளது தோழிகள் அவனை மெச்சுதலாய் பார்த்து ஏக்க பெருமூச்சு விட்டதை உணர்ந்தவளுக்கு உள்ளுக்குள் புசுபுசுவென இருந்தது... ஆனால் வெளியில் எதையும் காட்டி கொள்ளாமல் நின்றாள்...

தோழிகள் ஒவ்வொருவராய் இறங்கி சென்றுவிட அவள் மட்டுமே தேங்கி நிற்க அவன் தனது அலைப்பேசியை எடுத்து, "என்னோட நம்பர் சொல்றேன் குறிச்சுக்கோங்க..."

என்றவன் அவளது முகத்தை ஆராய்ந்தபடி தனது அலைப்பேசி எண்ணை சொல்ல அவளது மனம் அவள் அறியாமல் குறித்து வைத்துக் கொண்டது...

ஆனால் வெளியில் 'உங்க ஃபோன் நம்பர் நேக்கு எதுக்கு...?' என்று முறுக்கி கொண்டது அவளது மனம்...

அதன் பின் இளங்கலை முடித்து முதுகலை அதே கல்லூரியில் படிப்பதற்காக விண்ணப்ப படிவம் வாங்க வந்த போது மீண்டும் ராமை சந்தித்த போது அவளது மனதில் எழுந்த இனம் புரியாத உணர்வை கண்டு அவளே பயந்து போனாள்... இனியும் இதை வளர விடுவது தவறு என்று எண்ணியவள் அவனைக் காணாமல் தவிர்ப்பதற்காகத் தான் அவள் வேறு கல்லூரியில் சேர்ந்தாள்... ஆனால் அங்கேயும் அவன் வந்து நிற்பான் என்று கனவிலும் அவள் நினைக்கவில்லை...

இரண்டு முறை அவளைக் காணாவிட்டால் அவன் கருத்தில் இருந்து அவள் விலகி போய் விடுவாள் என்று அவள் தப்புக்கணக்கு போட்டுவிட்டாள்...

அங்கும் அவளைத் தேடி வந்து கோபமாய்ப் பேசிவிட்டு போனவனைக் கண்டு அவள் மனதில் சிறு தடுமாற்றம் எழுந்தது... தன் மீதான அவன் நம்பிக்கை கண்டு அவன் மீதான நம்பிக்கையை அவளுள் ஆழ விதைத்தது...

அடுத்து வந்த நாட்களில் ஒவ்வொரு முறை அவள் கல்லூரிக்குள் நுழையும் போதும் அவளையும் அறியாமல் அவளது கண்கள் அவன் வழக்கமாய் நிற்கும் இடத்தைத் தழுவி செல்லும்... தான் நினைப்பது, செய்வது தவறு என்று புரிந்தாலும் அவளின் அலைப்பாயும் மனதை அடக்க அவளால் முடியவில்லை...

அவன் கெடு கொடுத்துச் சென்றிருந்த கடைசி நாளும் வந்துவிட்டது... அன்று விடியற்காலையில் பரபரப்பாய் எழுந்து கல்லூரிக்கு செல்ல இருந்தவள் தனது மன பரபரப்பிற்கான காரணத்தை அறிந்த போது அதிர்ந்து போனாள்...

'அவனைக் காணவா இந்த மனம் இப்படிப் பரபரக்கிறது...? இதற்கு என்ன அர்த்தம்...? இது தான் காதலா...? இல்லை இது காதல் இல்லை... எனக்குக் காதல் வராது... என் குடும்ப மானத்தைச் சந்தி சிரிக்க வைத்துவிட்டு எனக்கு என் சுகம் பெரிதல்ல... இந்தக் காதல் வேண்டாம்... அவன் யாரோ எவரோ அவனுக்காக நான் ஏன் என் பெற்றோரை, உறவினரை பகைக்கணும்...?' என்று நினைத்தவள் கல்லூரிக்குச் செல்லாமல் விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டில் இருந்துவிட்டாள்...

நேரம் ஆக ஆக அவளின் தவிப்பு கூடி கொண்டு போனதே தவிரக் குறையும் வழியில்லை... தன்னை எதிர்பார்த்து ஏமாந்து போயிருப்பானோ என்று அவனது ஏமாற்றத்தை எண்ணி கலங்கியது அவளது நெஞ்சம்... இது தான் காதல் என்பதை அறியாமல் அவனுக்காக அவள் வருந்தினாள்...

இரவு உணவு அருந்த அன்னை அழைத்த போது பேருக்கு கொறித்துவிட்டுப் படுக்கையில் வந்து விழுந்தவள் மாத்திரையின் உபயத்தில் நன்கு உறங்கி போனாள்...

நல்ல தூக்கத்தின் நடுவில் அந்தக் கனவு வந்தது... அவளது ராம் துடிதுடித்து உயிரை விடுவது போல்...

"ராம்..." அலறிக் கொண்டு எழுந்தவள் தரையில் படுத்திருந்த அன்னையைக் கண்டதும் கப்பென்று வாயை மூடி கொண்டாள்...

கண்ட கனவின் தாக்கத்தைத் தாங்க முடியாமல் அவளது கண்களில் கரகரவெனக் கண்ணீர் வழிந்தது... எழுந்த விம்மலை அடக்கி கொண்டு புழக்கடை பக்கம் ஓடியவள் அங்கிருந்த குளியலறைக்குள் சென்று வேகமாய்க் கதவை மூடி தாளிட்டாள்...

அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை திமிறிக் கொண்டு, "ராம்..." என்று பெரும் கேவலாய் வெளிவந்தது...

அவள் அவனது காதலை மறுத்ததினால் அவன் தன் உயிரை விட்டு விட்டானோ என்று பயந்து போனாள்...

அந்தப் பயம் மனதை அழுத்த அவளுக்கு மேலும் மேலும் அழுகை முட்டி கொண்டு வந்தது...

அந்தக் கனவை வெறும் கனவு என்று எண்ணி அவளால் ஒதுக்கத் தள்ள முடியவில்லை... உண்மையில் அவன் உயிர் பிரிந்தால் என்ன மாதிரி உணர்வாளோ அது போல் அவனது இழப்பு அவள் உயிர் வரை சென்று வலித்து அவளை வேதனையில் துடிக்க வைத்தது...

அது நாள் வரை காதல் இல்லை இல்லை என்று மனதை கட்டுப்படுத்தி இருந்தவள் அவனின் உயிருக்கு ஆபத்து என்று தெரிந்ததும் தான் தவியாய் தவிப்பதை உணர்ந்து அந்தத் தவிப்பு காதல் தான் என்பதை அந்தக் கணம் உறுதியாய் உணர்ந்தாள்...

"ராம்... ஐ லவ் யூ ராம்..." என்று கதறியவளின் கதறல் அங்கு உயிரை விட்டுக் கொண்டு இருந்த சித்தார்த்தின் ஆன்மாவிற்குக் கேட்டது...

அவனது உயிர் பிரியும் வேதனையையும் மீறி அவனது உதட்டில் கீற்றாய் புன்னகை எழுந்தது அவனது காதல் வெற்றி அடைந்த சந்தோசத்தில்...

வெகுநேரம் அழுகையில் கரைந்தவள் பின் கண்களைத் துடைத்துக் கொண்டு வந்தவளுக்கு மனதில் பாரமேறியது போன்று ஒரு உணர்வு... ஏனோ அவளால் அதை வெறும் கனவு என்று ஒதுக்கி தள்ள முடியவில்லை...

அங்கிருந்த அலைப்பேசியை எடுத்துக் கொண்டு மீண்டும் குளியலறைக்குள் புகுந்து அன்று ராம் சொன்ன அவனது எண்ணை அழுத்தினாள்... ஒரு எண் கூட மறக்காமல் அது அவளது நியாபகத்தில் இருந்தை கண்டு அவளே வியந்து போனாள்... அவன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விசயமும் அவளுக்குத் துல்லியமாக நியாபகத்தில் இருக்கிறது என்றால் இது காதல் இல்லாமல் வேறு என்ன...? தாமதமாய்த் தன் காதலை உணர்ந்த தன் மடத்தனத்தை இப்போது எண்ணி மருகினாள்...

மறுபக்கம் அவனது அழைப்பு எடுக்கப்படாமல் அணைத்து வைக்கப்பட்டு இருந்ததை எண்ணி அவள் தவித்துப் போனாள்...

'உண்மையில் ராமுக்கு ஏதும் ஆபத்தோ...?' தவித்தவளின் தவிப்பை தேற்றும் வகையறியாது பரிதவிப்பாய் நின்று கொண்டிருந்தது ராமின் ஆன்மா...

அவனது உயிர் பிரிந்தும் அது அவனது உயிரை தேடி வந்துவிட்டது... இவ்வளவு நாள் காதலை உணராதவள் இப்போது காதலை உணர்ந்ததை எண்ணி அது வேதனை கொண்டது... முன்பு போலவே அவள் தன் காதலை உணராமல் இருந்திருக்கக் கூடாதா என்று மருகியது...

இப்போது தான் உயிரோடு இல்லாதது தெரிந்தால் அவள் உயிரை விட்டு விடுவாளோ என்று அச்சம் கொண்டு அது அவளைச் சுற்றி வந்தது...

அது உண்மை என்பது போல் அடுத்தடுத்து வந்த நாட்களில் உண்ணாமல் உறங்காமல் தனக்குள் துடித்துக் கொண்டு ஏதோ பறி கொடுத்தவள் போல் வேதனையில் மூழ்கி இருந்தவளை கண்டு அது செய்வதறியாது திகைத்தது...

சித்தார்த் இறந்த மறுநாள் அமராவதியை அழைத்துக் கொண்டு வந்த ஆராவமுதன் அங்குச் சித்தார்த் உடலை காணாது திகைத்தவர்,

"என்ன தங்கச்சி... மாப்பிள்ள இங்கே தான் இருப்பாருன்னு சொன்ன இங்கே காணோம்...?" ஒன்றும் அறியாதவராய் சொன்னவரை கண்டு அமராவதியின் கண்கள் கலங்கியது...

நேற்று வீட்டை விட்டு போனவன் இன்று வரை வீடு திரும்பவில்லை என்றதும் அவருக்குக் குற்றவுணர்வு உந்த ஆராவமுதனை அழைத்துக் கொண்டு சித்துவை காண வந்துவிட்டார்... சித்துவை சமாதானம் செய்து அழைத்துப் போய்விட்ட பின் அவனது திருமணம் பற்றிப் பிறகு பேசலாம் என்று முடிவு செய்து இருந்தார்...

வந்த இடத்தில் மகனை காணோம் என்றால் அவருக்குச் சற்றுப் பயமாக இருந்தது... அவனது படுக்கையறைக்குச் சென்றவர் அங்கு அநாதையாய் கிடந்த அவனது அலைப்பேசியைக் கண்டார்... எங்குச் சென்றாலும் இதை எடுக்காமல் அவன் செல்ல மாட்டான்... அப்படிப்பட்டவன் இதை அணைத்துவிட்டு எங்கே சென்றுவிட்டான்...?

ஒருவேளை காதல் நிறைவேறாத கோபத்தில் வேறு எங்கேயாவது சென்று விட்டானோ இல்லை வேறு ஏதேனும் விபரீத முடிவை எடுத்துவிட்டானோ...? அதை நினைத்தவர் அடுத்தக் கணம் மயங்கி கீழே சரிந்தார்...

ஆராவமுதன் தான் அவரை மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்து தான் நல்லவன் என்று அமராவதியிடம் காட்டி கொண்டார்...

கண் விழித்த அமராவதி கேட்ட முதல் கேள்வி, "சித்துக் கிடைத்தானா...?"

மறுப்பாய் தலையசைத்தவரை கண்டு மனதில் பயம் ஆட்டுவிக்க, "அண்ணா... தனுவை உடனே வர சொல்லுங்கண்ணா... எனக்கு அவனைப் பார்க்கணும் போலிருக்கு..." என்று கெஞ்ச...

ஆராவமுதன் வேறுவழியின்றிச் சைதன்யாவை தொடர்பு கொண்டு அமராவதியின் நிலையைக் கூறினார்... அன்னையின் நிலையை விடச் சைதன்யாவை அதிகம் பாதித்தது சித்தார்த் காணவில்லை என்பது தான்...

அலுவலக விசயமாய்ச் சிங்கப்பூர் வந்திருந்தவன் உடனே சென்னைக்கு வந்தான்... அவன் வரவு பிருந்தாவுக்கோ, தீபிகாவுக்கோ தெரியாது... அவன் வரவு யாருக்கும் தெரிவதை அவனும் விரும்பவில்லை...

"வந்துட்டியா கண்ணா..." அவனது கரத்தை பிடித்துக் கன்னத்தோடு வைத்துக் கொண்டு கேட்ட அன்னையின் நிலை அவனை வருந்த செய்தது...

அந்நேரம் அங்கு வந்த மருத்துவர், "மிஸ்டர். சித்தார்த் உங்கம்மாவுக்கு ஒண்ணும் இல்லை... பிரசர் கொஞ்சம் கூடி இருக்கு அவ்வளவு தான்..." அவனின் வருத்தம் கண்டு தோளில் தட்டி ஆறுதல் சொன்னவர் அமராவதியின் உடல்நிலையைக் கவனிக்க ஆரம்பித்தார்...

மறுத்து சொல்ல வாய் திறக்க போனவனைப் பார்த்து வேண்டாம் என்பது போல் தலையசைத்தார் அமராவதி...

"மாம் என்ன இது...?" என்று படபடத்தவனின் கைகளை இறுக பிடித்துக் கொண்டு,

"கண்ணா இதை உன் காலா நினைச்சுக் கேட்கிறேன்... சித்து வரும் வரை அவன் இடத்தில் நீ இருந்து தொழிலை நடத்து... இப்போ அவன் காணாமல் போன விசயம் வெளியில் தெரிஞ்சா அது நம்ம தொழிலை பாதிக்கும்... ஷேர் மார்க்கெட்ல பெரிய சரிவை உண்டாக்கும்... தொழில் பத்தி உனக்குத் தெரியாதது இல்லை..."

"ஆனா மாம்..." ஏதோ சொல்ல வந்தவனைத் தடுத்து,

"இது எல்லாம் சித்து வரும் வரை தான்... அதுக்கு அப்புறம் நீ உன் விருப்பம் போல் இரு... அண்ணா சீக்கிரம் சித்துவை கண்டுப்பிடிச்சு கொடுத்திடுவாரு..." என்ற அமராவதியை பார்க்க முடியாமல் தலை குனிந்தார் ஆராவமுதன்...

அப்போது அவரின் தலையைக் குடைந்து கொண்டுருந்தது அந்தக் கேள்வி... ‘இறந்த சித்தார்த்தின் உடல் எங்கே...?’

சைதன்யா அன்னையையும், மாமனையும் நம்பி அவர்கள் சொன்னதுக்குத் தலை அசைத்தான்...

அமராவதி மறந்தும் சித்தார்த்தின் காதல் கதையைச் சைதன்யாவிடம் சொல்லவில்லை... அதனால் தான் அவன் காணாமல் போனான் என்றும் சொல்லவில்லை... ஏனெனில் சைதன்யாவின் குணம் அவர் அறிந்ததே... அண்ணன் காதலுக்குத் தான் எதிர்ப்பு தெரிவித்ததை அறிந்தால் அவனது கோபம் தன் மீது பாயும் என்று...

சித்தார்த்தாவது பேசுவதற்கு முன் ஆயிரம் முறை யோசிப்பவன் ஆனால் சைதன்யா பேசியதற்குப் பின் கூட ஆயிரத்தில் ஒரு முறையாவது கூட யோசிக்க மாட்டான்... அந்தளவுக்குக் கோபக்காரன், அழுத்தக்காரன்...

இது ஏதும் அறியாத சைதன்யா சித்தார்த்தாய் மாறி தொழிலை கையில் எடுத்தான் அன்னையின் வார்த்தைக்காக என்பதை விடச் சகோதரனுக்காக, அவனது பெயர் கெடக்கூடாது என்பதற்காக...

தனது இடத்தில் தம்பியை கண்ட சித்தார்த்தின் ஆன்மா மகிழ்ந்தது... ஆம் ஹரிணியின் காதலுக்குப் பொருத்தமானவன் தன் தம்பியே என்று எண்ணி அது மகிழ்ந்தது... ஆனால் அவள் ஓரிடத்தில் அவன் வேறிடத்தில் இருக்கும் போது இந்தக் காதலை எப்படி உணர்த்துவது...? எப்படி உணர்வது...? என்று புரியாமல் அவன் தவித்துக் கொண்டு இருந்த போது தான் சைதன்யா, தீபி நிச்சயதார்த்த புகைப்படங்களைப் பார்த்து ஹரிணியே சைதன்யாவிற்கு அலைப்பேசியில் அழைத்தாள் அவன் சித்தார்த் என்று எண்ணி...

என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த சித்தார்த்தின் ஆன்மா அந்தக் கணம் சைதன்யாவின் உணர்வில் கலந்து ஹரிணியின் காதலை அவனுக்கு உணர்த்தியது...

அதன் பின் ஹரிணி தன் காதலை சைதன்யாவிடம் சொல்ல இப்போது அவளது உணர்வுகளில் சித்தார்த்தாய் மாறியிருந்த சைதன்யாவின் உணர்வுகள் கலக்க துவங்கியது...

காதலை சொல்லாத ராமின் உணர்வுகளையே உணர்ந்தவளுக்குக் காதலை சொன்ன சைதன்யாவின் உணர்வுகளை உணர்வதற்கு அதிகக் காலம் எடுக்கவில்லை... அந்தளவுக்கு அவளது காதல் உறுதி வாய்ந்ததாய், உணர்வில் கலந்ததாய் இருந்தது...

சைதன்யாவிடம் அவள் தன் காதலை சொன்ன போது அவன் சித்தார்த் என்று எண்ணி நம்பிக்கையுடன் சொன்னவளின் நம்பிக்கையைக் காப்பாற்ற தான் சித்தார்த்தின் ஆன்மா பாடுபட்டது... கடைசியில் அந்த நம்பிக்கையைத் திருமணத்தில் கொண்டு வந்து நிறுத்தியது சித்தார்த் ஆன்மா...

சைதன்யா, ஹரிணி திருமணம் நடைப்பெறும் நேரத்தில் அவளது பெற்றோர் தடையாக இருக்கச் சைதன்யா தன்னைப் பற்றி, தனது சகோதரனை பற்றி எல்லாவற்றையும் கூறியவன் ஹரிணிக்காக அவளை ஏற்றுக் கொள்ள இருப்பதையும் கூற... எங்கிருந்தோ வந்தவன் தங்களது மகளின் நலனை முக்கியம் என நினைக்கும் போது அவர்களும் மனம் மாறி அவளைச் சைதன்யாவிற்கு மணம் முடிக்கச் சம்மதித்தனர்...

பழைய நினைவுகளின் தாக்கத்தில் சிக்கி தவித்த சைதன்யாவிற்கும், அமராவதிக்கும் தூக்கம் கண்களைச் சுழற்றி அப்படியே தூங்கி போயினர்...

ஆனால் அந்த அரூபமான சித்தார்த்தின் ஆன்மா நிம்மதி இன்றி அங்கும் இங்கும் தவித்துக் கொண்டு இருந்தது...

கொலைக்காரன் யார் என்று தெரிந்தும் அவனை ஒன்றும் செய்ய முடியாமல் கையைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்க்கும் தன் நிலையை அது அறவே வெறுத்தது...

கொலைக்காரனை பழிவாங்க வேண்டும் என்றால் அது சைதன்யாவின் உணர்வுகளில் கலக்க வேண்டும்... அதைச் செய்ய அதற்கு விருப்பம் இல்லை... ஏற்கெனவே அவன் செய்த செயல்களைக் கண்டு அது பயந்து போயிருந்தது... எங்கே சகோதரன் தேவையில்லாத பிரச்சினையில் மாட்டி கொள்வானோ என்று... இப்போதும் அவனைக் கொலைக் குற்றவாளியாய் சட்டத்தின் முன் நிற்க வைக்க அது விரும்பவில்லை...

வேறு என்ன செய்ய என்று அது யோசிக்க ஆரம்பித்தது... ஆனால் அதற்கு அவசியமே இல்லை என்பது போல்

இருந்தது அடுத்தடுத்து செய்த சைதன்யாவின் செயல்கள்...
நீயாவேன்...!!!

## நான் : 17

காலையில் எழுந்து குளித்து முடித்துக் கீழே வந்த ஹரிணிக்கு நேற்று இரவு அம்மா, மகன் பேசியதோ, கணவன் வரவேற்பறையில் உறங்கியதோ எதுவும் தெரியாது... அவள் எழும் முன் எழுந்த சித்தார்த் (இனி சைதன்யா சித்தார்த் என்றே அழைக்கப்படுவான்...) அவள் அறியா வண்ணம் நடைப் பயிற்சிக்காக வெளியில் சென்றுவிட்டான்...

வழக்கம் போல் தன் வேலைகளைப் பார்த்துக் கொண்டு இருந்த ஹரிணிக்கு இன்னமும் மாமியார் எழும்பாமல் இருந்தது கண்டு யோசனையாய் இருந்தது... ஆனால் அவரின் அறைக்குச் சென்று பார்க்க சற்றுப் பயமாக இருந்தது... அதுவும் நேற்று அது போல் நடந்து கொண்டவரின் முன் சென்று நிற்கவே அச்சமாக இருந்தது...

பிறகு மனம் கேட்காமல் அவரின் அறைக்குக் காபியை எடுத்துக் கொண்டு சென்றவள் அறையின் வெளியில் நின்று கொண்டு கதவை தட்டலாமா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டு இருக்கும் போதே சித்தார்த் வந்து விட்டான்...

“ஹனி இங்கே நின்னு என்ன யோசிச்சிட்டு இருக்க...?”

“அத்தே... இன்னமும் எழுந்திரிக்கலைன்னா...”

கையில் காபி கோப்பையை ஏந்தியபடி நின்று இருந்த மனைவியைக் கண்டதும் அவனது கண்களில் கனிவு வந்தது... நேற்று தன் அன்னை அவளை அந்த மாதிரி பேசிய போதும் அதை எல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாமல் இன்று அவருக்காக மனம் பதறும் மனைவியின் சுயநலம் இல்லா அன்பு அவனை மேலும் மேலும் அவள் பால் ஈர்த்தது...

“வா போய்ப் பார்க்கலாம்...” என்றவன் அறைக் கதவை திறந்து கொண்டு உள்ளே செல்ல அவளும் அவனைப் பின்

தொடர்ந்தாள்…

“மாம்…” அவனது அழைப்பில் சிரமப்பட்டுக் கண்களைத் திறந்த அமராவதி,

“கண்ணா…” என்றபடி மெதுவாக எழுந்து அமர்ந்தார்…

அழுது அழுது முகம் வீங்கி போயிருந்தவரை கண்டு மனம் துணுக்குற்றவன், “என்ன பண்ணுது மாம்…?” அவரது அருகில் அமர்ந்து அவரைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டான்…

அவனது அன்பில் அக்கறையில் அவரது மனம் நெகிழ்ந்தது… ஒரு ஆணான மகன் காட்டும் அன்பும், அக்கறையும் கூடப் பெண்ணான தாயான தான் அவனிடத்தில் காட்டியது இல்லையே என்று மனதுக்குள் வருந்தியவர் அவனின் முகத்தைப் பாசத்துடன் வருடி,

“கண்ணா இந்த அம்மாவை மன்னிச்சுருடா…” என்றவரின் கண்கள் கலங்கியது…

“மாம்…” அவரது அன்பில் அவனது கண்களும் பனித்தது…

என்றோ அவன் எதிர்பார்த்த தாயின் அன்பு இன்று கிடைத்ததை நினைத்து சந்தோசப்படுவதா இல்லை அதற்காக அவர்கள் கொடுத்த விலையை நினைத்து வேதனைப்படுவதா என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தான்…

இருவரின் பாச பிணைப்பை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள் ஹரிணி… எதனால் என்று தெரியாவிட்டாலும் அவர்கள் ஒன்று பட்டு இருப்பது அவளுக்குச் சந்தோசமாய் இருந்தது…

“நான் பண்ணியது எல்லாம் தப்பு தான் கண்ணா…” மேலே பேச போனவரை வாய் மூடி தடுத்தவன்,

“மாம்… ஹனி…” மனைவி அங்கு இருப்பதைச் சுட்டி காட்டினான்…

அப்போது தான் மருமகளைக் கவனித்த அமராவதி, "என்னை மன்னிச்சிரும்மா..." அவளின் கையைப் பிடித்து மன்னிப்பு வேண்டினார்...

"ஐயோ என்ன அத்தை இது... பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிண்டு..." பதறி போனவளை கண்டு அவரின் மனம் நிறைந்தது...

அப்போது புரிந்தது அவருக்குத் தனது இரண்டு மகன்களுமே அவளிடம் ஏன் காதலில் விழுந்தனர் என்று... எதிராளி செய்த தவறை மன்னிக்கும் பக்குவம் அவ்வளவு எளிதில் யாருக்கும் வாய்த்து விடாது... அத்தகைய உயர்ந்த குணம் உடையவள் தனது மருமகள் என்று நினைக்கும் போதே அவருக்குப் பெருமிதமாக இருந்தது...

அவரது உடல் சூட்டை அப்போது தான் உணர்ந்தாள் ஹரிணி... பதற்றத்துடன் அவரது நெற்றியில் கைவைத்து பார்த்தவள் அவருக்குக் காய்ச்சல் அடிப்பதை உணர்ந்து கணவனிடம்,

"ஏன்னா அத்தைக்குக் காய்ச்சல் இப்படிக் கொதிக்கிறதே..." மனைவி சொல்லவும் தான் அவனும் கவனித்தான்...

"டாக்டரை வர சொல்லவா மாம்...?"

"இல்லை வேணாம் கண்ணா... டேப்லட் போட்டு தூங்கி எழுந்தா எல்லாம் சரியா போயிரும்..."

"வெறும் வயித்துல டேப்லட் போட வேணாம்... நான் போய்ப் பால் எடுத்துட்டு வர்றேன்..." என்ற ஹரிணி அறையை விட்டு வெளியேற...

"அருமையான பெண்... நான் தான் புரிந்து கொள்ளாமல் ஏதேதோ பேசிட்டேன்... நேத்து நான் பேசியதுக்கு மன்னிப்பு கேட்கணும் கண்ணா..." அவள் போன திசையைப் பார்த்துக் கொண்டு சொன்ன அமராவதியை கண்டு மறுப்பாய் தலையசைத்தான் சித்தார்த்...

"ஏன் கண்ணா...?" புரியாமல் அவனைப் பார்த்தார் அவர்...

“நான் பேசி சமாளித்து விட்டேன் மாம்…”

“அப்போ…” குழப்பமாய்ப் பார்த்த அன்னையை நேர்பார்வை பார்க்க தயங்கி அவன் வேறு பக்கம் பார்த்தான்…

“அவளைப் பொருத்தவரை நான் சித்தார்த்… அதில் எந்த மாற்றமும் இல்லை… அதை மாற்ற நானும் விரும்பவில்லை…”

“கண்ணா உன் அடையாளத்தை மறைத்து… எத்தனை நாள் கண்ணா இதைத் தொடர முடியும்…? என்றாவது ஒரு நாள் அவளுக்கு மட்டும் அல்ல ஊருக்கும் சித்தார்த் இறந்த விசயத்தைத் தெரிவிப்பது தான் எல்லோருக்கும் நல்லது…”

“நிச்சயம் அது ஹனிக்கு நல்லது இல்லைம்மா… ஏன்னா சித்தார்த் உயிரோடு இல்லைன்னு தெரிஞ்சா அவள் தன்னோட உயிரை விட்டுருவா…” வேதனையில் முகம் கசங்க கூறிய மகனை கண்டு அவரும் வேதனையில் வாடியவர்,

“கண்ணா…” என்று அணைத்துக் கொண்டார்…

“மாம்… கடைசி வரைக்கும் அவள் கிட்ட நீங்க உண்மையைச் சொல்ல கூடாது மாம்… எனக்குப் பிராமிஸ் பண்ணுங்க…” அவன் தன் கையை நீட்ட தயங்காமல் அவன் கை மீது தன் கையை வைத்த அந்தத் தாயின் கண்களில் கண்ணீர் வழிந்தது…

“நம்ம பிசினெஸ்க்காகச் சித்தார்த்தா மாறின நான்… என் மனைவிக்காக அதை அப்படியே தொடர போறேன்… எனக்கு அவளோட காதல் வேணும்… அன்பு வேணும்… அரவணைப்பு வேணும்… நான் வாழ்க்கையில் மிஸ் பண்ணின அன்பு அனைத்தையும் அவளால் மட்டுமே எனக்குக் கொடுக்க முடியும்… எந்தக் காரணத்தைக் கொண்டும் அவளை இழக்க நான் விரும்பல… அவளை என்னுடன் இருத்தி வைக்க என்னுடைய அடையாளம் தடையா இருக்கும்ன்னா அதையும் துறக்க நான் தயாரா

இருக்கேன்...” என்று சொன்னவன் வார்த்தையில் இருந்த தீவிரம் அவனது முகத்திலும் தெரிந்தது...

காதலுக்காகத் தன்னையே இழக்க தயாராக இருக்கும் மகனின் காதல் அந்த அன்னையின் மனதை அசைத்துப் பார்த்தது...

“நிச்சயம் கண்ணா... நீ நினைப்பது எல்லாம் நடக்கும்... நானும் அவளிடம் எதையும் சொல்ல போவது இல்லை...” அவர் சொல்லும் போதே ஹரிணி வந்துவிட அவர்களின் பேச்சு நின்றுவிட்டது...

அமராவதியை பால் அருந்த செய்து மாத்திரையைப் போட்டுக் கொள்ளச் செய்து படுக்க உதவிய மனைவியை விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டு இருந்தான் சித்தார்த்...

தங்கள் அறைக்குள் வந்ததும் அவளைத் தன் கையணைவுக்குள் கொண்டு வந்தவன் அவளது முகத்தை இமைக்காமல் பார்த்தான்...

கணவன் மனைவியாய் வாழ்ந்த போதும் எப்போதும் அவனிடத்தில் சிறிது ஒதுக்கம் இருக்கும்... ஆனால் இன்று அவனது பார்வை அவளது உயிரில் ஊடுருவி சென்று அவளுள் ரசாயன மாற்றத்தை உண்டு பண்ணியது... முகம் சிவக்க அவன் கண்களைக் காண முடியாமல் நாணம் தடுக்க அவள் தலை குனிய... அவனோ விடாக்கண்டனாய் ஒற்றை விரலால் அவளின் முகத்தை நிமிர்த்தியவன் அவளை இன்னமும் ஆழ்ந்து பார்க்க,

“போங்கோன்னா...” என்று சிணுங்கியவள் அடைக்கலம் தேடி அவன் நெஞ்சிலேயே புக...

“என்னடி மாமி போங்கோன்னா சொல்ற.... அந்த எதிர்த்த வீட்டு பொண்ணு ரொம்ப நாளா எனக்கு ரூட் விட்டுட்டு இருக்கா அவ கிட்ட போகட்டுமா...?”

வெகுநாட்கள் கழித்து அவனது குறும்பு தலை தூக்கியது... தன் மனதின் துயரை யாரிடமும் சொல்லி அழ முடியாமல்

தவித்துக் கொண்டிருந்தவன் நேற்று அன்னையிடம் அதைச் சொல்லியதில் அவனுக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது…

இன்னொரு புறம் சகோதரனை கொன்னவர்களைப் பழிவாங்கிக் கொண்டு இருப்பதால் அவன் மனதில் இருந்த குற்றவுணர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைந்து கொண்டு இருந்தது… இப்போது அவனின் மனைவியை நெருங்க அவனுக்கு எந்தவித தடையும் இல்லை…

“ம்… போவீங்கோ போவீங்கோ… போற காலை இழுத்து வச்சு நறுக்கிற மாட்டேன்…” என்று அவனின் சட்டை காலரை கொத்தாய் பிடித்து இழுத்துக் கொண்டு கோபமாய்க் கோபமாய்ச் சொன்னவளின் அவளது கோபம் அவனுக்கு இன்பத்தைக் கொடுக்க…

“ஓய் நீ மாமியா…? இல்லை கேடியா…?” ஒற்றைப் புருவத்தைத் தூக்கி கொண்டு நக்கலாய் கேட்டவனை முறைத்தவள்,

“ஆம்படையான் விசயத்துல எந்தப் பொண்ணும் கேடி தான்…” என்றவள், “உண்மையாவா சொல்றேள்…” அவளின் குரல் நலிந்து ஒலித்தது…

“உண்மையான்னா நீ என்ன செய்வ…?”

அவன் கூறியது கேட்டுக் கண்கள் கலங்க அவனை ஏறிட்டு பார்த்தவள், “உண்மையாவா…?” கண்களின் நம்பிக்கையும், அவநம்பிக்கையும் போட்டி போட கேட்டவளின் கலக்கம் அவனை ஏதோ செய்ய அவளைத் தன் கைகளில் அள்ளியவன்,

“இங்கே புதுப் பொண்டாட்டியை கொஞ்சவே நேரம் இல்லை… இதில் எதிர்த்த வீட்டு பொண்ணு, பக்கத்து வீட்டு பொண்ணுங்க வேறயா…? போடி லூசு மாமி…” என்றவன் அவளைக் கட்டிலில் அவளைக் கிடத்தியபடி, “நான் உன் மேல எந்தளவுக்கு ஆசை வச்சுக்கிறேன்னு இப்ப காட்டுறேன் பாருடி மாமி…” என்றவன் தன் மனதின்

காதலை தனது முத்தத்தாலும் அணைப்பாலும் அவளுக்கு உணர்த்த ஆரம்பித்தான்...

இரு முறை அச்சத்துடன் அவளைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டி போராட்ட மனதுடன் அவளுடன் இணைந்தவன் இப்போது முதன் முறையாய் மனதில் எழுந்த காதலுடன் அவளுடன் இணைந்தான்...

இதுநாள் வரை கூடலில் காமத்தை மட்டுமே அறிந்தவன் இன்று காதலையும் அறிந்தான்... காதல் என்ற ஒற்றைச் சொல் எத்தனை இன்பம் அளிக்கக் கூடியது என்பதை உணர்ந்தவனின் தேடல் ஒரு முறையோடு நிற்கவில்லை...

கணவனது இதமான அணுகல் அவளையும் பரவசப்படுத்த அவளும் முழுமனதுடன் தன்னை ஒப்பு கொடுத்தாள் அவனது கரங்களில்...

***********************************************

அன்று அலுவலகம் வந்த சித்தார்த்தின் மனம் என்றும் இல்லாமல் நிறைந்து இருந்தது... அவனது முக மலர்ச்சியைக் கண்டு வேதாந்தம் மனமும் மகிழ்ந்தது...

“தம்பி எப்பவும் நீங்க இந்த மாதிரி சந்தோசமா இருக்கணும்...” என்று அவர் சொல்ல...

“நிச்சயமா அங்கிள்... என்றவன், “அதுக்கு முன்னாடி ஒரு வேலை பாக்கி இருக்கு அங்கிள்...” என்றவன்,

“அந்தக் கைலாஷை உடனே கொல்ல கூடாது அங்கிள்... கொஞ்சம் கொஞ்சமாய் ஸ்லோ பாய்சன் போல் கொல்லணும்...” தனது திட்டத்தை அவரிடம் சொல்லலானான்...

“இது கொஞ்சம் பழைய டெக்னிக் தான் இருந்தாலும் இப்போதைக்கு இதைத் தவிர அவனுக்குப் பெரிய நஷ்டத்தை நம்மளால ஏற்படுத்த முடியாது... அவன் ஒண்ணும் இல்லாதவனாய் நடுத்தெருவில் நிக்க வச்சு... அதுக்கு அப்புறம் அவனைக் கொல்லணும் அங்கிள்...

அவன் யாருமில்லாத அநாதை பொணமா அடையாளம் தெரியாம சாகணும் அங்கிள்...” என்று ஆக்ரோசத்துடன் கர்ஜித்தவனின் கூற்றைத் தலையசைத்து ஆமோதித்த வேதாந்தம்,

“சொல்லிட்டீங்கல்ல இன்னைக்கே அதைச் செஞ்சு முடிச்சிர்றேன் தம்பி...” என்றவர் அன்று இரவுக்குள் அவன் சொன்னதைச் செய்து முடித்தார் கொடுக்க வேண்டிய இடத்தில் கூலியை அதிகமாய்க் கொடுத்து... பணத்திற்கு மயங்காதவர் உலகில் எவரும் உண்டோ...!

மறுநாள் காலையில் எல்லாப் பத்திரிக்கையிலும் முதன்மை செய்தியாய் அந்தச் செய்தி வந்திருந்தது... ‘மின் கசிவினால் சிவா இன்டஸ்ட்ரீஸ் குடோனில் பெரும் தீவிபத்து... பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் நாசம்...’ என்ற செய்தியை கண்டு சித்தார்த்தின் முகத்தில் வெற்றி புன்னகை வந்தமர்ந்தது...

“இது ஆரம்பம் தான் கைலாஷ்... இனி நீ போக வேண்டிய தூரம் இன்னமும் இருக்கு... அனுபவிக்க வேண்டியதும் நிறைய இருக்கு...” முணுமுணுத்தவனின் முகம் பயங்கரமாய் மாறியது...

அன்று வெள்ளிக்கிழமை மாலை வழக்கம் போல் ஹரிணி கோவிலுக்குச் சென்றாள்... அங்கே அவளுக்காகக் காத்திருந்த சந்தோஷை கண்டதும் விகல்பம் இல்லாமல் அவள் நட்பாய் சிரிக்க அவனும் பதிலுக்குச் சிரித்தவன் அவள் அருகில் வந்தான்...

“இங்கே நீங்க அடிக்கடி வருவீங்களோ...” அன்று அவள் காலையில் வந்த போதும் வந்திருந்தவன் இன்று மாலையில் அவள் வந்த போதும் வந்ததை அவள் சிறிதும் இணைத்து யோசித்துப் பார்க்கவில்லை...

“ஆமாம்...” என்றவன் அவளின் வெள்ளை மனதை மனதில் மெச்சி கொண்டவன் அதைத் தனக்குச் சாதகமாக்கி கொள்ள நினைத்தான்...

மேலே என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்தவள், “அப்போ நான் கிளம்பறேன்…” என்றபடி அவள் கிளம்ப ஆயத்தமாக…

“இன்னைக்கு என்னோட காதல் கதையைச் சொல்லலாம்ன்னு வந்தேன்… பரவாயில்லை இன்னொரு நாள் சொல்றேன்…” என்று அவன் விடைப்பெற…

தன்னைப் பற்றிய எல்லா விசயமும் அவனுக்கு எப்படித் தெரியும்? என்ற ஆவல் அவள் மனதை உந்த,

“சொல்லுங்கோ கேட்கிறேன்…” என்றவள் அங்கிருந்த பிரகாரத்தில் அமர்ந்தாள்…

அவனும் அங்கே சற்று தள்ளி அமர்ந்தவன், “நீ ப்ளஸ் டூ படிக்கும் போது இருந்து உன்னை எனக்குத் தெரியும்…” என்றவன் முதன் முதலில் அவளைப் பார்த்த விசயத்தைக் கண்களில் ரசனை பொங்க சொல்ல ஆரம்பித்தான்…

அதே சமயம் சித்தார்த்துக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது… அவன் ஆவலுடன் எதிர்பார்த்த ஜெர்மனி கம்பெனியில் இருந்து தான் அந்த மின்னஞ்சல் வந்திருந்தது…

மகிழ்ச்சி பொங்க அதை உற்சாகத்துடன் திறந்து பார்த்தவன் அதில் இருந்த விவரத்தை படித்ததும் அவனது முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாய்ப் பிரதிபலித்தது…

அதில் இருந்த சாராம்சம் இது தான்…

“தங்கள் கம்பெனியுடன் நாங்கள் ஒப்பந்தம் போட முடியாமல் போனதற்கு வருந்துகிறோம்… இரண்டு மாதத்திற்கு முன்பு ஈரோப் சுற்றுப் பயணம் வந்திருந்த சிவா இன்டஸ்ட்ரீஸ் ஓனர் மிஸ்டர். கைலாஷ் கேட்டு கொண்டதன் பேரில் அவரின் கம்பெனியுடன் நாங்கள் அந்தத் தொழில் ஒப்பந்தம் செய்து விட்டோம்… அடுத்தமுறை தங்களுடன் ஒப்பந்தம் போடுவதைப் பற்றி யோசிக்கிறோம்… சாரி…”

அந்தச் செய்தியை கண்டு அவன் அதிர்ச்சி அடையவில்லை… ஆனால் ஒப்பந்தம் செய்ததாக அவர்கள்

கூறி இருந்த தேதி தான் அவனை அதிர்ச்சியில் ஆழ்த்தியது...

அந்த ஒப்பந்தம் கையெழுத்தான நாளும் அவனது சகோதரன் இறந்த நாளும் ஒரே நாள்... அன்று ஜெர்மனியில் கைலாஷ் இருந்தது உண்மை என்றால் இங்கே அவனின் உடன் பிறந்தவனைக் கொன்றது யார்...?

ஒருவேளை அவன் கைலாஷ் ஏவிட்ட ஆளா... இல்லை இது வேறு ஒருவனா...?

நீயாவேன்...

## நான் : 18

"நான் இன்ஜினியரிங் படிச்சு முடிச்சு மேல்படிப்புக்காக யுஎஸ்க்கு கிளம்பிய நேரம் அது... என் சித்தப்பா பொண்ணை ஸ்கூல்ல விடுறதுக்காக வந்திருந்தேன்... அங்கே தான் முதன் முதலா உன்னைப் பார்த்தேன்... பார்த்த அந்தக் கணம் காதல்ல விழுந்துட்டேன்... அப்போ நீ என்னைக் கூப்பிட்ட மாதிரி இருந்தது... நானும் சந்தோசமா காரில் இருந்து இறங்கினேன்... அப்புறம் பார்த்தா நீ உன் பிரெண்ட்டை கூப்பிட்டேன்னு தெரிஞ்சுக்கிட்டேன்... என் பைத்தியக்காரத்தனத்தை நினைச்சு சிரிச்சிக்கிட்டே காரை எடுத்துட்டுப் போய்ட்டேன்... அன்னைக்கு முழுக்க அதை நினைச்சு நினைச்சு சிரிச்சுக்கிட்டே இருந்தேன்..." கண்களில் கனவு மிதக்க முகம் எல்லாம் பூரிக்க ஹரிணியை முதன்முதலாய் சந்தித்த கதையைச் சந்தோஷ் கூறிக் கொண்டு இருந்தான்...

அவனின் முகபாவம், அவன் முகத்தில் இருந்த மென்மை, குரலில் இருந்த கனிவு எல்லாம் ஹரிணிக்கு அச்சத்தைக் கொடுத்தது... தேவையில்லாமல் அவனிடம் கதை கேட்க உட்கார்ந்து விட்டோமோ என்று மனதுக்குள் பயந்து கொண்டே அமர்ந்திருந்தாள்...

வேறு ஒருவனின் மனைவியாக, நெஞ்சு நிறையக் கணவன் மேல் காதல் கொண்டு இருக்கும் அவளுக்குச் சந்தோஷின் காதல் கேட்பதற்கு நெருடலாகவும், ஒவ்வாத விசயமாகவும் இருந்தது... அவனிடம் கதை சொல்லுமாறு கேட்டுவிட்டு எப்படிப் பாதியில் எழுந்து செல்வது என்று அவளுக்கு யோசனையாக இருந்தது... சொல்ல இயலாத தவிப்புடன் அமர்ந்து இருந்தவளின் உணர்வுகள் அவனுக்குப் புரியவில்லை போலும்... அவன் பாட்டிற்குப் பேசி கொண்டு போனான்...

"யுஎஸ்க்கு போறதுக்கு முன்னாடி இடையில் இருந்த அந்த ரெண்டு மாத இடைவெளியில் உன்னைப் பத்தி எல்லா விசயத்தையும் நான் தேடி தேடி தெரிஞ்சுக்கிட்டேன்... அப்படித்தான் உனக்குச் சாக்லெட், பிங்க் கலர் ரோஸ்

பிடிக்கும்ங்கிறது முதற்கொண்டு எல்லாம் தெரிஞ்சுக்கிட்டேன்... அப்பவே என் லவ்வை உன் கிட்ட சொல்லணும்ன்னு துடிச்சேன்... ஆசைப்பட்டேன்... ஆனா உன்னோட வயசு, படிப்பு இது எல்லாத்தையும் மனசுல வச்சு விலகி இருந்தேன்... பதினேழு வயசு பொண்ணு மனசை காதல் சொல்லி கெடுக்கக் கூடாதுன்னு தான் அமைதியா இருந்தேன்... அதுக்குள்ள யுஎஸ் போக வேண்டிய நாள் நெருங்கி நானும் கிளம்பி போய்ட்டேன்... ஆனா உன்னை விட்டு போக மனசு இல்லாம தான் போனேன்... ஒவ்வொரு வருசமும் இங்கே வரும் போது உன்னை உனக்குத் தெரியாம பார்த்துட்டுத்தான் போவேன்... இப்படியே மூணு வருசம் ஓடி போயிருச்சு... நீயும் யூஜி முடிச்சி பிஜி ஜாயிண்ட் பண்ணியிருந்த..." நிறுத்தியவனின் முகத்தில் அத்தனை வேதனை நிரம்பி இருந்தது...

சட்டெனத் தன் உள்ளத்து உணர்வுகளை அவளுக்குக் காட்டாமல் மறைத்தவன் அவளைப் பார்த்து புன்னகைத்தவன், "அதுக்கு அப்புறம் அண்ணா கிட்ட சொல்லி உன்னைப் பெண் கேட்டு வந்தது... அதுக்கு அப்புறம் நடந்தது எல்லாம் உனக்கே தெரியுமே..."

அடுத்து இருவரிடத்திலும் கனத்த மௌனம் நிலவியது... இருவருமே அவரவர் உணர்வில் தவித்துக் கொண்டு இருந்தனர்...

அவன் அவளுடனான காதல் எட்டாக்கனியாய் மாறியதை நினைத்து வருந்தி கொண்டு இருக்க... அவள் அவன் காதலை நினைத்து வருந்தி கொண்டு இருந்தாள்... தன்னால் ஒருவன் மனத்துன்பம் அடைவது கண்டு மென்மை மனம் கொண்ட அவளால் அதைத் தாங்கி கொள்ள முடியவில்லை...

"நீங்க கல்யாணம் பண்ணிக்கோங்க எல்லாம் சரியாகும்..." என்றவளை வலியுடன் பார்த்தவன் ஒன்றும் பேசாது அமைதி காத்தான்...

"சரி எனக்கு நேரமாச்சு... அவர் வந்திருப்பாரு..." என்றவள் கிளம்புவதற்காக எழ அவளுடன் எழுந்தவன்,

"சரி போய்ட்டு வாங்க..." என்றபடி விடை கொடுத்தான்...

தலையசைத்து விட்டு போகும் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தவனின் முகத்தில் அத்தனை நேரம் இருந்த வேதனை மறைந்து அதில் ஆத்திரம் வந்து குடியேறியது...

'என் காதலை அவ்வளவு சீக்கிரத்தில் விட்டு கொடுக்க நான் என்ன முட்டாளா...? நான் கல்யாணம் பண்ணிக்கணுமா... நிச்சயம் பண்ணிக்குவேன்... ஆனால் பெண் யார் தெரியுமா...? நீ தான் ஹனி... நீயே தான்... பிகாஸ் ஐ லவ் யூ ஹனி... நீ அவனை விட்டுட்டு என் கிட்ட வர போற நாளை நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்...' மனதுக்குள் எண்ணியவனின் கண்களில் அவளை அடையும் ஆசை அளவுக்கு அதிகமாய் மின்னியது...

ஹரிணியை அவன் மாற்றான் மனைவியாய் நோக்கவில்லை... இன்னமும் அவளைத் தன் காதலியாய் தான் அவன் பார்த்தான்...

அவளை அவள் கணவனிடம் இருந்து பிரிப்பதற்காகத் தான் அவளை அவன் அடிக்கடி சந்திப்பதே... அதன் நோக்கம் விரைவில் வெற்றி பெறும் என்று நம்பிக்கையுடன் காத்திருந்தான்...

சந்தோஷ் மனதில் திட்டமிட்டபடி ஹரிணியைப் பின் தொடர்ந்தான்... எதிர்பாராதது போல் அவளைச் சந்தித்ததாய் அவளிடம் காட்டி கொள்பவன் அவளிடம் எதைப் பற்றியாவது பேசி நேரத்தை கடத்தினான்...

அவளும் வெகுளியாய் அவனது உள்குத்து அறியாதவளாய் அவனிடம் பேசிவிட்டு சென்றாள்... இது அனைத்தையும் கணவனிடம் சொல்ல மறந்து போனாள்... இல்லை சொல்லும் அளவிற்குச் சந்தோஷை முக்கியமானவாய் அவள் நினைக்கவில்லையோ என்னமோ...!

அன்றும் அப்படித்தான் அவள் கோவிலுக்குச் சென்று இருக்க வீட்டிற்கு நேரத்துடன் வந்த சித்தார்த் மனைவி இன்னும் கோவிலில் இருந்து வராததை அறிந்து அவளுக்கு இனிய அதிர்ச்சி கொடுக்க எண்ணி நேரே கோவிலுக்குச் சென்றான்...

கோவிலுக்கு வெளியில் காத்துக் கொண்டிருந்த அவர்களின் காரை கண்டதும் அதை ஓட்டி வந்த ஓட்டுநரிடம் வீட்டிற்குச் செல்ல சொல்லி பணித்தவன் நேரே கோவிலுக்குள் நுழைந்தான்...

தன்னைக் கண்டதும் ஆச்சிரியத்தில் முகம் மலரும் மனைவியின் முகத்தை மனக்கண்ணில் கண்டு ரசித்தவன் கால்களை எட்டி வைத்து குதூகல மனநிலையுடன் சென்றான்...

அங்கே பிரகாரத்தில் அமர்ந்து இருந்த மனைவியைக் கண்டதும், "ஹனி..." என்றபடி அவள் அருகில் செல்ல...

"ராம்..." அவனைக் கண்டதும் முக மலர்ச்சியுடன் எழுந்தவளை கண்டு அவனது முகமும் மலர்ந்தது...

பிரசாத தட்டில் இருந்து திருநீறை எடுத்த ஹரிணி கணவனைப் பார்க்க அவளது நோக்கம் புரிந்து அவனும் குனிந்து தன் நெற்றியை காண்பித்தான்... அவனது செயலை கண்டு உதட்டில் புன்னகை உறைய திருநீறை அவனது நெற்றியில் பூசிவிட்டாள்...

இருவரின் அந்நியோன்யத்தையும் மனம் கனக்க பார்த்துக் கொண்டு இருந்த சந்தோஷின் கண்கள் வெறுப்பை உமிழ்ந்தது...

"போகலாமா ஹனி..." என்று கேட்ட கணவனிடம்,

"இவர்..." என்று சந்தோஷை சுட்டி காட்டி அவள் இழுக்க...

அப்போது தான் சித்தார்த் சந்தோஷை கண்டான்... அவனது கண்கள் யோசனையுடன் இடுங்கியது...

'இவன் எங்கே இங்கே...?' மனதுக்குள் குழம்பியவன் அதை மனைவியிடம் காட்டாது,

"அவருக்கு என்ன ஹனி... சொல்லிட்டு வா... கிளம்பலாம்..." என்றான் சந்தோஷின் மீது பார்வையைப் பதித்துக் கொண்டு...

"நாங்க கிளம்பறோம்..." என்றவளை கண்டு சந்தோஷ் வேண்டும் என்றே,

"திரும்ப எப்போ பார்க்கலாம்..." அவளிடம் தனக்கு உள்ள நெருக்கத்தைச் சித்தார்த்திடம் காட்ட நினைத்தான்...

சந்தோஷ் அவ்வாறு கேட்டது அவளுக்குமே பிடிக்கவில்லை... இதைக் கேட்கும் யாரும் அவளையும், அவனையும் இணைத்து வைத்து சந்தேகப்பட மாட்டார்களா...? உள்ளுக்குள் அவளுக்குத் திக்கென்று இருந்தது... இந்தச் சந்தோஷ் புரிந்து தான் பேசுகிறானா இல்லை புரியாமல் பேசுகிறானா என்று சந்தேகமாக இருந்தது...

அவள் அச்சத்துடன் கணவனைப் பார்த்தாள்... அவன் உணர்ச்சி துடைத்த முகத்தில் இருந்து அவளால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை...

கார் சாவியை அவளிடம் கொடுத்த சித்தார்த், "நீ போய்க் காரில் உட்காரு... நான் இப்போ வர்றேன்..." என்றவனைக் கண்டு தயக்கமாய் அவள் பார்க்க...

"சொல்றேன்ல போ..." என்று அழுத்தமாய்ச் சொன்னவனை மறுத்து அங்கு இருக்கும் தைரியம் அவளுக்கு இல்லை... உடனே அங்கிருந்து அவசரமாய் அகன்றாள்...

சித்தார்த்தின் இந்தக் கோபம் சந்தோஷ்க்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது... அவன் நமட்டு சிரிப்புடன் சித்தார்த்தை ஏளனமாய்ப் பார்த்தான்...

"இதனால நீ என்ன சொல்ல வர்ற...?" கூர்ந்து பார்த்த சித்தார்த்தின் பார்வை அவனைத் துளைத்து எடுத்தது...

"ஏன்னு உனக்குத் தெரியாதா...? பெரிய பிசினஸ் மேக்னெட் நீ... உனக்குத் தெரியாதது உலகத்தில் உண்டோ...?" கேலியாய் கேட்டவனை அடித்துத் துவம்சம் செய்யும் ஆத்திரம் வந்தது சித்தார்த்துக்கு... சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அடக்கி கொண்டான்...

"நீ சொல்றதை கேட்டு நான் என் மனைவியைச் சந்தேகப்படணும்... அவள் கூடச் சண்டை போடணும்ன்னு நினைக்கிறியா..." என்றவனைக் கண்ணில் மெச்சுதலுடன் பார்த்தான் சந்தோஷ்...

"அது மட்டும் இந்த ஜென்மத்தில் நடக்காது... என் ஹனியை பத்தி எனக்கு நல்லா தெரியும்... அதை நீ சொல்லி நான் தெரிஞ்சிக்கணும்ன்னு அவசியம் எனக்கு இல்லை... உன் கூடப் பேசுறதால அவள் என் மனைவி இல்லைன்னு ஆகிறாது... அதே போல் என் மேல் அவளுக்குக் காதல் இல்லைன்னும் சொல்ல முடியாது... இயலாதவன் தான் மனைவியைச் சந்தேகப்படுவான்... கோபப்படுவான்... நான் அந்த மாதிரி ஆள் இல்லை..."

சித்தார்த்தின் புரிதலான காதல் கண்டு சந்தோஷின் முகம் கறுத்தது...

"உன்னால முடிஞ்சதை பார்த்துக்கோ..." என்ற சித்தார்த் செல்வதற்காகத் திரும்ப...

"என் ஹனியை என் கிட்ட எப்படிக் கொண்டு வரணும்ன்னு எனக்குத் தெரியும்..." சந்தோஷ் ஆத்திரத்தில் அறிவிழந்து போய்க் கத்தினான்...

"டேய்..." சித்தார்த் அவனின் சட்டையைப் பிடித்துக் கொண்டு ஆக்ரோசமாய் நின்றான்...

"யாருக்கு யாருடா ஹனி...? இன்னொரு தடவை அவளை ஹனின்னு சொல்லி பாரு சொல்ல உனக்கு வாய் இருக்காது..." ஆத்திரத்தில் சித்தார்த் உறும...

"வேறு யாருக்கு எனக்குத் தான்... அவள் என்னோட ஹனி... நேத்து வந்த உனக்கே இவ்வளவு கோபம் வந்ததுன்னா...

அவளைக் கிட்டத்தட்ட நாலு வருசமா லவ் பண்ற எனக்கு எவ்வளவு கோபம் வரணும் உன் மேல..." வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து சொன்ன சந்தோஷ் தனது குரலை கொஞ்சமும் உயர்த்தவில்லை...

சந்தோஷின் நாலு வருட காதல் கதையைக் கேட்டதும் சித்தார்த்தின் கைகள் தளர்ந்தது... அவனது பிடியில் இருந்து தனது சட்டையை உருவி கொண்ட சந்தோஷ் அதன் கசங்கல்களை நீவி கொண்டே,

"நீ அவளைச் சந்தேகப்படலைன்னா என்ன சித்தார்த்... அவளை உன்னைச் சந்தேகப்பட வைக்க என்னால் முடியும்... உங்க ரெண்டு பேரையும் பிரிச்சு ஹனி கழுத்துல நான் தாலி கட்டலை என் பேரு சந்தோஷ் இல்லை... என் ஹனி அவளாவே என் கிட்ட வருவா... வரவழைப்பேன்..." உறுதியாய் கூறியவனைக் கண்டு,

"உன்னால முடிஞ்சதை நீ பார்த்துக்கோ... என் மனைவி மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்ற சித்தார்த் அவனை முறைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்...

சித்தார்த்தின் மனம் கொதிநிலையில் இருந்தது... அதே மனநிலையில் காரை கிளப்பியவன் அருகில் இருந்த மனைவியை மறந்து போனான்...

தொழிலில் கைலாஷ் அவனைப் படுத்தி எடுத்தான் என்றால் சொந்த வாழ்க்கையில் அவனது தம்பி பிரச்சினையைக் கொடுக்கிறானே இதற்கு என்ன தீர்வு என்று யோசித்துக் கொண்டிருந்தவன் மனைவியைத் திரும்பியும் பார்த்தான் இல்லை...

புருவங்களை நெறித்தபடி ஏதோ யோசனையில் இருந்த கணவனிடம் பேச அஞ்சிய ஹரிணியும் அமைதியாய் வந்தாள்...

வீடு வந்ததும் எதுவும் பேசாது சென்றுவிட்ட கணவனைப் பின் தொடர்ந்து உள்ளே வந்தவள் தானும் வாயை

திறக்கவில்லை…

இரவின் தனிமையில் அவளை நாடாமல் அப்போதும் யோசித்துக் கொண்டு படுத்து இருந்தவனிடம் தானாகச் செல்ல தயங்கியவள் அவனின் மறுபக்கம் சென்று படுத்து தூங்கி விட்டாள்…

காலையில் கணவனிடம் பேசலாம் என்று எண்ணி கண் விழித்தவள் அங்கு அவன் இல்லாததைக் கண்டு திகைத்து போனாள்… ஏனோ மனதுக்குள் கலக்கமாக இருந்தது…

அலுவலகத்திற்கு வந்த சித்தார்த்துக்கோ தலைக்கு மேல் வேலை இருந்தது… அவனது வேலைகளை விட அந்தக் கைலாஷை இல்லாமல் ஆக்குவதற்காக அவன் பாடுபட வேண்டிய வேலைகள் தான் அதிகம் காத்திருந்தது…

ஆம்… அவனது சகோதரன் இறப்பிற்குக் காரணம் அந்தக் கைலாஷ் தான் என்பதில் அவன் உறுதியாக இருந்தான்… இங்கே ஆள் வைத்து கொலை செய்யச் சொல்லிவிட்டு ஒன்றும் அறியாதது போல் ஐரோப்பிய கண்டத்திற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு இருக்கிறான்…

அவன் கொலை செய்ததற்குச் சாட்சி இல்லை என்ற இறுமாப்பில் இருப்பவனை அந்தக் கடவுள் சாட்சியாய் அழிக்க வேண்டாமா…? மனசாட்சி இல்லாமல் நடந்து கொள்பவனிடம் சித்தார்த்தும் தனது மனசாட்சியை அடகு வைத்துவிட்டு அவனை இல்லாது ஒழிப்பதில் தீவிரமாய் இறங்கினான்…

அடுத்து வந்த நாட்களில் கைலாஷிடம் ஒப்பந்தம் போட வந்த பல வெளிநாட்டு நிறுவனங்களைப் பேச வேண்டிய விதத்தில் பேசி தங்கள் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட வைத்தான்… அதே போல் டெண்டர் விசயத்திலும் அவன் கைலாஷுடன் நேரிடையாக மோதினான்… அதில் வெற்றியும் பெற்றான்…

முதலில் இதைச் சாதாரணமாக எடுத்துக் கைலாஷ் ஒரு கட்டத்தில் சித்தார்த் வேண்டும் என்றே இப்படிச் செய்வதை உணர்ந்தவன் நேரே சித்தார்த்தின் அலுவலகத்திற்கு வந்தான்...

கைலாஷை அங்கே கண்டதும் சித்தார்த்தின் அலுவலக ஊழியர்கள் பரபரப்பாயினர்... ஆனால் எந்தவித பரபரப்பும் இல்லாமல் சித்தார்த் அவனை எதிர் கொண்டான்...

"வெல்கம்... வெல்கம்... மிஸ்டர். கைலாஷ்... வராதவங்க வந்து இருக்கீங்க... என்ன குடிக்கிறீங்க...? ஹாட் ஆர் கூல்..." என்று பணிவுடன் கேட்டவன், "இப்போ நீங்க ரொம்ப ஹார்ட்டா இருப்பீங்கன்னு நினைக்கிறேன்... அதனால கூலா ஜூஸ் கொண்டு வர சொல்றேன்..." வார்த்தைக்கு வார்த்தை நக்கலுடன் கூறியவனை வெறித்துப் பார்த்தான் கைலாஷ்...

"சித்தார்த் நீ பண்றது கொஞ்சமும் சரியில்லை... ஏன் என் விசயத்தில் குறுக்கே வந்துட்டு இருக்க...? உனக்கும் எனக்கும் போட்டி எப்பவும் இருக்கிறது தான்... அதுக்காக ஏன் இப்படி வெறித்தனமான போட்டி போடுற...?" என்று கேட்டவனைக் கூர்ந்து பார்த்த சித்தார்த்,

"ஏன்னு உனக்குத் தெரியாது...?"

"அதைத் தானே நானும் கேட்கிறேன்... ஏன்னு...?"

"ஓ... உனக்கு ஒண்ணும் தெரியாது இல்லையா... சரி அப்படியே இருந்துட்டு போகட்டும்... ஆனால் இனித்தான் நம்மிடையே உண்மையான போட்டி வர போகுது... உன்னால முடிஞ்சா உன் பேரை, தொழிலை காப்பாத்திக்கோ..." என்று அலட்சியமாகக் கூறியவனை எதுவும் பேசாமல் இயலாமையுடன் பார்த்த கைலாஷ் அடுத்த நொடி அங்கிருந்து வெளியேறினான்...

செல்லும் அவனைப் பார்த்த சித்தார்த்தின் முகத்தில் அத்தனை கோபம் படிந்திருந்தது...

அந்த நேரத்தில் சித்தார்த் ஒன்றை மறந்து போனான்... அன்று சந்துருவிடம் பேசிய கைலாஷ் 'கொலை செய்யப்பட்ட சித்தார்த் எப்படி உயிருடன் வந்தான்...?' என்று கேட்டானே ஒழிய சித்தார்த்தை கண்டு அவன் பயப்படவில்லை... இப்போதும் சித்தார்த்தை நேராய் வந்து சந்தித்துப் பேசிவிட்டு சென்றானே தவிர அவனைக் கண்டு பயந்து ஒதுங்கவில்லை... கைலாஷ் சித்தார்த்தை கொலை செய்து இருந்தால் இவனைக் கண்டதும் பயந்து போயிருக்க வேண்டும் அல்லவா... இதில் இருந்தே தெரிய வேண்டாம் கொலைக்காரன் வேறு ஒருவன் என்று...

கைலாஷை தவிர வேறு யாரும் அவனது சகோதரனை கொன்று இருக்க முடியாது என்று சித்தார்த் உறுதியாக நம்பினான்... ஆனால் அப்படி வேறு ஒருவன் இருக்கிறான் என்றால் என்ன செய்வானோ...?

அன்று இரவு வெகுநேரம் கழித்து வந்த சித்தார்த் தூங்கும் மனைவியின் அருகில் அவளது உறக்கம் கலையாமல் அவளை அணைத்துக் கொண்டு படுத்தவன் அடுத்த நொடி உறங்கிவிட்டான்...

காலையில் எழுந்த ஹரிணி தன்னை அணைத்துக் கொண்டு உறங்கும் கணவனைக் கண்டு இனிய அதிர்ச்சி அடைந்தாள்... எத்தனை நாள் ஆயிற்று அவன் அவள் அருகில் வந்து...

உறங்கும் அவனின் அழகை ரசித்தவள் அவனது நெற்றியில் தன் இதழை பதிக்க அதில் உறக்கம் கலைந்தவனின் கைகள் தன்னவளை இழுத்து அணைத்துக் கொண்டது... அவனது இதழ்களோ தாபத்துடன் அவளின் இதழை முற்றுகை இட்டது...

வெகு நாட்கள் கழித்து அந்த அதிகாலை நேரத்தில் மனநிறைவுடன் கூடிய கூடல் இருவரையும் பரவசப்படுத்த இருவரும் அந்த மோன நிலையில் இருந்து வெளிவராமல் கண்களை மூடி அதை எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டு இருந்தனர்...

"ஏன்னா..."

"ம்..."

"என் மேல் கோபமான்னா..." அவளது வார்த்தையில் கண்களைத் திறந்தவன் கேள்வியாய் பார்த்தான்...

"இல்ல நாலைஞ்சு நாளா நீங்க என் கூடச் சரியா பேசலை... அதான் கேட்டேன்..."

அப்போது தான் அவனுக்கும் உறைத்தது... கடந்த ஐந்து தினங்களாக அவன் தன் வேலைகளில் மூழ்கி அவளை மறந்துவிட்டது... அதற்கு மன்னிப்பு கோர அவன் வாய் திறக்கும் முன்,

"நான் இனிமே அவர் கிட்ட பேசலைன்னா... அதுக்காகத் தான் கோபமா இருக்கேள்ன்னா என்னை மன்னிச்சுக்கோங்க..."

முதலில் அவள் பேசியது புரியாமல் அவளைப் பார்த்தவன் பின்பு அது புரிந்ததும் அவனது இதழில் புன்னகை வந்து அமர்ந்தது...

"ஹனி... நான் அதுக்காக எல்லாம் கோபப்படுவேன்... உன்னைச் சந்தேகப்படுவேன்னு நினைக்கிறியா...?" அவளது கண்களைப் பார்த்தவாறு கேட்டவனின் கண்களில் கோபம் இல்லை...

"அப்படி இல்லைன்னா..." அவள் மறுத்து கூறும் முன்,

"நீ யார் கூடப் பேசினாலும் உன் கிட்ட கோபமோ, சந்தேகமோ பட மாட்டேன்... ஏன்னா என் ஹனி எந்தளவுக்கு என்னைக் காதலிக்கிறாள்ன்னு எனக்குத் தெரியும்... இப்ப கொஞ்ச நாளா நான் அப்படி இருந்ததுக்குக் காரணம் கொஞ்சம் வொர்க் டென்சன் அவ்வளவு தான்..." என்றவனைக் கண்டு நிம்மதியானாள் அவள்...

"நான் பயந்து போயிட்டேன்னா..." என்றவளை அவன் வாஞ்சையுடன் அணைத்துக் கொள்ள...

"நேரமாச்சுன்னா நான் எழும்பறேன்..." என்றவளை எழ விடாமல் தன்னுடன் இறுக்கி கொண்டவன்,

"உண்மையைச் சொல்லுடி என் மாமி... எதுக்கு என்னைத் தேடுன... இதுக்குத் தானே... அப்புறம் எங்கேடி ஓடுற..." என்றவனின் உதடுகள் தனது தேவை என்ன என்பதை அவளுக்கு உணர்த்த துவங்கியது...

"ஐயோ இதுக்கு இல்லைன்னா... வேண்டாம் விடுங்கோ... ப்ளீஸ்..." அவனது இதழ்கள் செய்த மாயாஜாலத்தில் மனம் மயங்கியவள் அவனது மீசை ரோமம் உராய்ந்த குறுகுறுப்பில் தன்னை முற்றிலும் தொலைத்தவளாய் அவனுள் புதைந்தாள்...

"இது என் மாமிக்கு அழகு... வாடி என் மடிசார் மாமி..." என்று அவளை அள்ளி கொண்டவனின் மனதில் அவளின் காதலை தவிர வேறு எண்ணம் ஏதுமில்லை...

அடுத்து வந்த வெள்ளியன்று கோவிலுக்கு வந்த ஹரிணி ஏற்கெனவே அங்கு நின்றிருந்த சந்தோஷை கண்டதும் முகம் சுருங்கி போனாள்... இதுநாள் வரை எழாத சந்தேகங்கள் அவள் மனதில் எழ ஆரம்பித்தது... இவன் வேண்டும் என்றே தன்னைச் சந்திக்கிறானோ என்று எண்ணம் தோன்ற கடவுளை தரிசனம் செய்தவள் அவனைக் காணாதவாறு அங்கிருந்து வெளியேறினாள்...

அவளின் புறக்கணிப்பில் நெஞ்சம் வலிக்க நின்றிருந்தான் சந்தோஷ்...

அவனது சகோதரன் சித்தார்த்தின் நடவடிக்கையைக் கூறிக் கவலைப்பட்ட போது கூட வராத ஆத்திரம் இப்போது ஹரிணி அவனுடன் பேசாது சென்றதில் சித்தார்த்தின் மீது எழுந்தது...

'என் ஹனியை என்னிடம் இருந்து பிரிக்கப் பார்க்கிறியா... அதுக்கு நான் விட மாட்டேன்டா...' மனதில் ஆங்காரமாய் நினைத்தவன் அதைச் செயலாற்ற வேண்டி தனக்குள் திட்டம் தீட்டினான்...

மறுநாள் சனிக்கிழமை ஹரிணி அந்தச் சூப்பர் மார்க்கெட்டிற்குள் நுழைந்தவள் வீட்டிற்குத் தேவையான காய்கறிகள், பலசரக்குகள் வாங்கிக் கொண்டு இருந்தாள்...

அவளுடன் தனிமையில் பேசுவதற்காகச் சமயம் பார்த்து காத்து இருந்த சந்தோஷ் அவள் இங்கு நுழைவது கண்டு அவள் பின்னே வந்துவிட்டான்...

"ஹரிணி..." 'ஹனி' என்று அழைக்க வந்த நாவை கட்டுப்படுத்திக் கொண்டு அவளின் முழுப்பெயரை சொல்லி அழைத்தான்...

அவனது அழைப்பில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் சந்தோஷை கண்டு திடுக்கிட்டு போனாள்... அவனிடம் பேசாமல் அவள் செல்ல...

"ஏன் என் கூடப் பேச மாட்டேங்கிறீங்க...?" என்றவனைத் திரும்பி பார்த்தவள்,

"ஏன் பேசணும்...? நீங்க அடிக்கடி இப்படி வந்து பேசறது நேக்கு பிடிக்கலை... பேசுறதுக்கு உங்களுக்கும் நேக்கும் இடையில் என்ன இருக்கு...?"

அவளின் வெட்டு ஒன்று துண்டு இரண்டு பேச்சு அவன் மனதை ரணமாக்க அந்த ரணத்தின் வலி எல்லாம் சித்தார்த்தின் மீது கோபமாய்ப் பாய்ந்தது... நன்றாகத் தன்னிடம் பேசி கொண்டு இருந்தவளை பேச விடாமல் செய்தவனுக்குத் தகுந்த தண்டனை கொடுக்காவிட்டால் அது சந்தோஷ் இல்லையே...

"ஏன் இல்லை... உன் கணவனைப் பற்றியது என்றாலும் கூடவா...?"

அவனது வார்த்தையில் திடுக்கிட்டு திரும்பியவள் அவனை யோசனையாய் பார்த்தாள்...

"அவரைப் பத்தி நீங்க பேச என்ன இருக்கு...?"

"நீ நினைப்பது போல் அவன் சித்தார்த் இல்லை... அவனோடு பிறந்த இரட்டை சைதன்யா... அதாவது

சித்தார்த்தின் தம்பி இவன்..." அழுத்தமாய்க் கூறிவனின் வார்த்தைகள் அவளுள் இடியாய் இறங்கியது...

மனம் அதிர நின்றவளின் கண்களில் அவளையும் அறியாது கண்ணீர் வழிந்தது... அன்று அவள் சந்தேகப்பட்டது, அதன் பின் மாமியார் கூறியது இதோ இன்று இந்தச் சந்தோஷ் கூறுவது எல்லாம் ஒரே ஒரு விசயத்தை உறுதியாய் சொல்லியது... அது அவளது கணவன் சித்தார்த் இல்லை சைதன்யா என்று... ஆனாலும் பாழாய் போன காதல் மனதால் கணவனைத் தவறாக நினைக்க முடியவில்லை...

"இல்லை நீங்க பொய் சொல்றீங்கோ...?" என்றவள் கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்து கொண்டாள்...

"பொய் சொல்றதால எனக்கு என்ன லாபம் ஹரிணி... ஏதோ நீங்க என்னோட பிரெண்ட் ஆச்சேன்னு உண்மையைச் சொல்ல வந்தேன்..." என்றவனை நம்பாமல் பார்த்தவளை கண்டு,

"எல்லாத்தையும் இங்கேயே பேசணுமா... அந்தக் காபி ஷாப்பில் போய்ப் பேசலாமா...?"

வேறொரு சமயமாய் இருந்து இருந்தால் அவள் மறுத்து இருப்பாள்... ஆனால் கணவனைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமா இல்லை கணவன் தவறாவன் கிடையாது என்று சந்தோஷிடம் நிரூபித்து விட வேண்டும் என்ற நினைவோ ஏதோ ஒன்று அவளை உந்த அவனுடன் சென்றாள்...

காபி ஷாப்பில் ஓரமாய் இருந்த மேசையில் சென்று அமர்ந்தார்கள்...

'சொல்லுங்க...' என்பது போல் ஹரிணி விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்...

"என்ன சொல்றது உங்க கணவன் சைதன்யா தான்... சித்தார்த் இல்லை..."

"மறுபடியும் மறுபடியும் பொய் சொல்லாதீங்கோ..."

"நான் சொல்றது உண்மை ஹரிணி..." என்றவன் அவள் முன் சில காகிதத்தாள்களை வைத்தான்...

"எடுத்து படிச்சு பாருங்க... இப்போ உங்க கணவனா இருக்கிறது சைதன்யாங்கிறதுக்கான ஆதாரம்..."

எல்லாவற்றையும் எடுத்து பார்த்தவள் கைகள் நடுங்கியது... எல்லாமே அவன் சித்தார்த் இல்லை சைதன்யா என்று நிரூபித்தது... அவனது கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்), அவன் இந்தியா வந்ததற்கான ஆதாரம், அவன் ஆஸ்திரேலியா குடியுரிமை எல்லாச் சான்றிதழ்களும் பக்காவாக அதில் இருந்தது...

"ஒருவேளை அவர் இங்கே வந்துட்டுப் போயிருக்கலாம்... அதுக்காக இவர் சைதன்யா ஆகிற முடியாது... நீங்க பொய் சொல்றேள்..." ஏனோ கணவனைப் பொய்யோடு இணைத்து பார்க்க முடியவில்லை அவளால்...

அவள் தன் கணவன் மீது கொண்ட நம்பிக்கை சந்தோஷிற்கு ஆத்திரத்தை எழுப்ப தனது பொறுமையைக் கைவிட்டவனாய்,

"ஏன்னா உங்களைக் காதலிச்ச அந்தச் சித்தார்த் இப்ப உயிரோடு இல்லை... இப்பவாச்சும் நான் சொல்றதை நம்புவீங்களா...?" கத்தாமல் ஆனால் அதே சமயம் வார்த்தைகளை அழுத்தி சொன்னவனை அதிர்ந்து போய்ப் பார்த்தவள்,

“என்ன சொல்றேள்...?”

“உண்மையைத் தான் சொல்றேன்...”

சந்தோஷின் வார்த்தையில் அவளது மனக்கண்ணில் அன்று புன்னகையுடன் காதலை சொன்ன சித்தார்த்தின் முகம் வந்து போனது... அதே சமயம் முகம் எல்லாம் பரவசத்துடன் உள்ளத்தில் எழுந்த எல்லையில்லா

காதலுடன் தன்னை நாடி குழையும் கணவனது முகமும் நியாபகத்தில் வந்து அவளை அலைக்கழித்தது...

"பெருமாளே...” வேதனையுடன் கண்களை மூடி கொண்டவள், “அவரை யார், எதுக்காகக் கொல்லணும்...?" இன்னமும் அவன் கூறுவதை அவளால் நம்ப முடியவில்லை... அதை விட ஏற்றுக் கொள்ள முடியவில்லை...

"வேறு யார் உங்க கணவன் தான்... உங்களைக் கல்யாணம் பண்றதுக்காக, இந்தச் சொத்துகளுக்காக உடன் பிறந்தவனைக் கொன்னுட்டான்..." புதுக்கதையை அவளிடம் புனைந்தான்...

அதைக் கேட்டவளுக்குத் தலை சுற்றியது எது உண்மை? எது பொய்? என்று தெரியாமல்...

"இது உண்மையா...?" தலையைப் பிடித்துக் கொண்டு கேட்டவளை கண்டு அவனது உதட்டில் புன்னகை வந்தமர்ந்தது...

"உண்மை தான்..." அவளிடம் கூறியவன்,

'ஏன்னா அந்தச் சித்தார்த்தை கொன்னதே நான் தானே... அன்னைக்கு என் காதலுக்குத் தடையா இருந்த சித்தார்த்தை கொன்ன மாதிரி இன்னைக்குத் தடையா இருக்கிற சைதன்யாவை கொல்ல எனக்கு ஒரு நிமிசம் ஆகாது... ஆனா நான் ஏன் பொறுமையா இருக்கேன் தெரியுமா...? அப்போ உனக்கு அவன் மேல் காதல் இல்லை... ஆனா இப்போ நீ அவனைக் காதலிக்கிற... இப்போ நான் உன்னை வலுக்கட்டாயமாய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டா நீ என்னை வெறுத்திடுவ... உன் வெறுப்பைத் தாங்கிக்கிற சக்தி எனக்கு இல்லை... அதுக்குப் பதிலா நீயே உன் கணவனை வெறுத்து ஒதுக்கி என் கிட்ட வரணும்... அதுக்காகத் தான் அமைதியா பொறுமையா இருக்கேன்... இல்லை எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு அந்தச் சைதன்யாவை...' மனதுக்குள்

நினைத்தவன் முகத்தில் சைதன்யாவை கொன்றுவிடும் ஆத்திரம் பிரதிபலித்தது…

நீயாவேன்…

# நான் : 19

“இந்த விஷயம் எல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்...?” அந்தக் குழப்ப நிலையிலும் தெளிவாய் கேட்ட ஹறிணியைக் கண்டு சந்தோஷுக்கு எரிச்சலாக இருந்தது...

“இங்கே பாருங்க... நான் சொல்றதை நம்புறதும் நம்பாததும் உங்க இஷ்டம்... ஆனா ஒண்ணு மட்டும் உறுதி... இப்போ உங்க கணவனா இருக்கிறது சித்தார்த் இல்லை... சைதன்யா தான்... அது மட்டும் என்னால் உறுதியா சொல்ல முடியும்... இதை அவர் கிட்டேயே கேட்டுக் கன்பார்ம் பண்ணிக்கோங்க... எனக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை... ஏதோ பிரெண்ட் ஆச்சே ஹெல்ப் பண்ணலாம்ன்னு சொன்னேன்... ஒரு கொலைக்காரன் கூடக் குடும்பம் நடத்துறதும் நடத்தாததும் உங்க விருப்பம்... நான் வர்றேங்க...” என்ற சந்தோஷ் அங்கிருந்து கிளம்பி சென்றான்...

ஹறிணி தன் முன் வைக்கப்பட்டு இருந்த அந்தக் காகிதத்தாள்களை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்...

காரை கிளப்பிய சந்தோஷின் முகம் எரிச்சல், ஆத்திரத்தை தத்து எடுத்து இருந்தது...

‘எத்தனை சொல்லியும் நம்ப மறுக்கிறாளே முட்டாள்...’ என்று ஹறிணியைத் திட்டியவன் மனதில் அவளை இழந்து விடுவோமோ என்ற பயம் மெல்ல எட்டி பார்த்தது...

நேரே வீட்டிற்குக் காரை விட்டவன் வீடு வந்ததும் இறங்கியவன் கேள்வி கேட்ட அண்ணியிடம் தலைவலி என்று கூறிவிட்டு தனது அறைக்குப் போனவன் கட்டிலில் விழுந்து விட்டத்தை வெறித்தான்...

அவனது மனம் சித்தார்த்தை கொன்ற நாளுக்குத் தாவி சென்றது...

சந்தோஷ் அமெரிக்கா சென்று ஒரு வருடம் கழித்து இந்தியா வந்த போது அவ்வளவு சந்தோசமாக வந்தான்... ஏனெனில் தன் காதலியை ஒரு வருட காலத்துக்குப் பின் சந்திக்கப் போவதால் ஏற்பட்ட குதூகலம் தான் அது...

வந்த அன்றே தன் களைப்பை கூடப் பொருட்படுத்தாமல் ஹரிணியைச் சந்திக்கக் கிளம்பி விட்டான்... கல்லூரியில் அவளைக் கண் குளிர பார்த்து ரசித்தவனுக்கு ஏனோ அவளிடம் நேரில் போய்க் காதலை சொல்லும் தைரியம் வரவில்லை... சொல்லாத காதல் செல்லாது என்பது ஏனோ அந்த மடையனுக்குத் தெரியாமல் போய்விட்டது...

அதே போல் தொடர்ந்த இரண்டு வருடமும் அவளுக்குத் தெரியாமல் அவளைப் பார்த்தவன் மூன்றாம் வருடம் அவளது படிப்பு முடிந்தது தெரிந்து எப்படியாவது தன் காதலை அவளிடம் சொல்லி விட வேண்டும் இனியும் தள்ளி போடுவது சரியல்ல என்று நினைத்து அவளைச் சந்திக்க நேரில் கிளம்பி வந்தான்...

அவளுக்குப் பிடித்த இளம்சிவப்பு நிற ரோஜா பூங்கொத்தும், சாக்லேட்டும் வாங்கிக் கொண்டு தன் காதலை சொல்வதற்காகச் சந்தோசத்துடன் வந்தவனின் மகிழ்ச்சி எல்லாம் அவளிடம் பேசி கொண்டிருந்த சித்தார்த்தை கண்டதும் அப்படியே வடிந்தது...

அவர்களை நெருங்கி வந்தவன் சித்தார்த் ஹரிணியிடம் பேசியது அனைத்தையும் கேட்டவன் ஆத்திரத்தில் கைகளில் இருந்த அந்தப் பூங்கொத்தையும், சாக்லேட்டையும் கசக்கி எறிந்தான்...

ஹரிணிக்கு காலக்கெடு வைத்து விட்டு போகும் சித்தார்த்தை கண்டு அவனுக்கு உள்ளுக்குள் கொலை வெறி எழுந்தது... அதை விடக் கலக்கத்தைச் சுமந்து கொண்டு நிற்கும் தன்னவளை கண்ட போது அவனுக்கு நெஞ்சு துடித்தது... இதற்கு எல்லாம் காரணமான சித்தார்த்தை சும்மா விட அவனுக்கு மனம் வரவில்லை...

தனது காதலுக்குக் குறுக்கே வந்தவன் என்ற கோபம் ஒரு புறம் இருந்தாலும், ஹரிணியைக் கலங்க வைத்த அவனைக் கலங்க வைக்க அவன் திட்டமிட்டான்...

ஹரிணியின் கலக்கத்தைக் கண்டவன் அந்த நொடி முடிவு செய்தான்... தன் காதலை சகோதரனிடம் சொல்லி பெரியவர்கள் பார்த்து நிச்சயித்த திருமணமாக மாற்ற வேண்டும் என்று... ஏனெனில் அவளைக் கலங்க வைக்கிற எதையும் செய்ய அவனுக்கு விருப்பம் இல்லை... அது தன் காதலே என்றாலும் கூட...

அந்தக் காதலுக்குத் தடையாக இடையில் முளைத்த வில்லனான சித்தார்த்தை பழி தீர்க்க எண்ணினான் அவன்... அப்போது அவன் நினைக்கவில்லை கடைசியில் தான் தான் வில்லனாகப் போகிறோம் என்று... விதி கோரமாய்த் தன்னைப் பார்த்து சிரிப்பதை அந்தக் கணம் அவன் உணரவில்லை...

அதன் பின் அவன் அமெரிக்கா போகவில்லை... இங்கே இருந்து சித்தார்த்தின் நடவடிக்கையைக் கண்காணிக்க ஆரம்பித்தான்... அவன் தன் அண்ணனுக்குத் தொழில் எதிரி என்று தெரிந்தது... அண்ணனுக்குத் தொழிலில் என்றால் இவனுக்கு வாழ்க்கையில் அல்லவா எதிரி அவன்...

சித்தார்த்தை பழி தீர்க்க எண்ணியவனுக்குச் சரியாக ஒரு மாதம் கழித்துச் சந்தர்ப்பம் கிடைத்தது... ஆம் கடற்கரை வீட்டிற்குத் தனியாக வந்த சித்தார்த்தை பின் தொடர்ந்து வந்தவன் தனது முகத்தை மறைத்துக் கொண்டு யாரும் கண்டு விடாதபடி தன் அடையாளத்தை மறைத்தான்...

சித்தார்த் உள்ளே சென்றதும் அவன் செய்த முதல் வேலை வாசலில் இருந்த கண்காணிப்பு கேமிராவை உயிரிழக்க செய்தது தான்... அதைச் செய்தவன் வீட்டினுள் இருந்த கேமிராவை கவனிக்கத் தவறிவிட்டான்...

ஏனெனில் எல்லோர் வீட்டிலும் வாசலில் தான் கண்காணிப்பு கேமிரா இருக்கும் என்ற அவனது கணிப்பு

சித்தார்த் விசயத்தில் பொய்த்துப் போனது... காதல் தோல்வியில் துவண்டு இருந்த சித்தார்த் தனக்கு நெருங்கி கொண்டு இருந்த ஆபத்தைக் கொஞ்சமும் உணரவில்லை... சாதாரணமாய் மற்ற நாட்களாய் இருந்தால் அவன் அதை உணர்ந்து இருப்பானோ என்னமோ...!

அப்போது வெளியில் நடந்து வந்த சித்தார்த்தை தாக்க சந்தோஷ் தயாரான போது ஏதோ ஒரு பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு திடுக்கிட்டவன் இருளில் தன்னை மறைத்துக் கொண்டான்... அதன் பின் நடந்தது எல்லாம் தனக்குச் சாதகமாக நடப்பதை கண்டு மறைந்து இருந்து அந்தச் சித்தார்த் உயிர் விடுவதைக் கண் குளிர கண்டு ரசித்துக் கொண்டு இருந்தான்...

சித்தார்த்துக்கு இத்தனை எதிரிகளா என்று அவனுக்கே சற்று ஆச்சிரியமாக இருந்தது... சித்தார்த்தின் மாமா போன பின் இவன் உள்ளே சென்றான்...

சித்தார்த் உயிருக்கு போராடுவதைக் கண்டு கண்களில் ரசனையுடன் பார்த்தவன் அந்தச் சந்தோசத்தைத் தாங்க முடியாமல் வாய் விட்டுச் சிரித்தான்...

‘என் ஹனியை காதலிக்கும் எவனும் உயிரோடு இருக்கக் கூடாது... எவ்வளவு தைரியம் இருந்தா என் ஹனியை காதலிப்ப... அவள் எனக்குச் சொந்தமானவள்... அவள் எனக்கு மட்டுமே உரிமையானவள்... நீன்னு இல்லை அவளைக் காதலிக்கிறேன்னு யார் வந்தாலும் அவங்க உயிர் என் கையில் போவது உறுதி...’ மனதில் சொல்லி கொண்டவனுக்குச் சித்தார்த் உயிரை விடும் வரை கூடப் பொறுமை இல்லை...

‘இன்னும் கொஞ்ச நஞ்ச உயிரை வைத்துக் கொண்டு என் காதலுக்கு வில்லனாய் நீ வர எனக்கு விருப்பம் இல்லை சித்தார்த்... சாரி பாஸ்...’ மனதில் நினைத்தபடி சித்தார்த் அருகில் சென்றான் அந்தக் கயவன்...

ஏற்கெனவே மூச்சு விடச் சிரமப்பட்டுக் கொண்டு மரணப் போராட்டம் நடத்தி கொண்டு இருந்த சித்தார்த்தின் கண்கள் இவனைக் கண்டதும் அச்சத்தில் விரிந்தது…

அவனது அச்சத்தை மெய்ப்பிக்கும் வகையில் சந்தோஷின் கரங்கள் சித்தார்த்தின் குரல்வளையை நெறிக்க ஆரம்பித்தது… நிமிட நேர போராட்டத்துக்குப் பின் சித்தார்த்தின் உயிர் அவனது உடலை விட்டுப் பிரிந்தது…

சித்தார்த்தின் தலை தொங்கவும் தன் கைகளை விலக்கியவன் அவனது உடல் சாய்வதைக் கண்டு சித்தார்த்தின் உயிர் பிரிந்து விட்டதை உறுதி படுத்தியவன் அடுத்து என்ன செய்வது என்று நிதானமாக யோசித்தான்…

ஏதோ ஒரு வேகத்தில் சித்தார்த்தை கொன்று விட்டாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தான் எப்படித் தப்புவது என்ற யோசனை தான் அவனுள் ஓடியது… அண்ணனின் தொழிலில் அடியாளாய் வேலை பார்க்கும் வேலாயுதம் நியாபகத்தில் வர அவனைத் தனது அலைப்பேசியில் அழைத்தான்…

வாசலிலேயே காத்திருந்தவனை மேலும் சோதிக்காமல் அடுத்த அரை மணி நேரத்தில் அங்கே வந்த வேலுவிடம் எல்லாவற்றையும் விளக்கி சொன்னான் சந்தோஷ்… நிலைமையைப் புரிந்து கொண்ட அவனும்,

“நீங்க போங்க சார்… நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன்…”

“இதை அண்ணா கிட்ட சொல்ல வேண்டாம்… தெரிஞ்சா வருத்தப்படுவாரு…”

“அதெல்லாம் சொல்ல மாட்டேன் சார்… உங்க அண்ணன் தயவால தான் நான் வாழ்ந்துட்டு இருக்கேன்… யார் கிட்டேயும் இதைப் பத்தி மூச்சு விட மாட்டேன்… நீங்க தைரியமா போங்க…” என்றவன் உள்ளே செல்ல எத்தனிக்க…

“பிங்கர் பிரிண்ட்ஸ் ஏதும் இருந்தா…” சந்தோஷ் மனதில் கொஞ்சமே கொஞ்சம் பயம் எழுந்தது… ஏனெனில் அவனுக்கு அவனுடைய ஹனியுடன் ஆயுசு முழுவதும் சந்தோசமாய் வாழ வேண்டும் என்ற ஆசை அளவுக்கு அதிகமாய் இருந்தது…

“இப்படி ஒரு கொலை நடந்ததுன்னு தெரியாத மாதிரி செட் பண்ணிடலாம் சார்… ஊரு உலகத்தைப் பொருத்தவரை அவன் காணாமல் போன மாதிரி நம்ப வச்சிரலாம்… நான் பார்த்துக்கிறேன்…”

“எப்படிப் பாடியை டிஸ்போஸ் பண்ண போற…?” மாட்டி கொண்டு விடுவோமோ என்ற சந்தேகம் அவனுக்கு இன்னமும் தீரவில்லை…

தவறு செய்யும் போது வராத பயம் தவறு செய்த பின் அதில் மாட்டி கொள்ளக் கூடாது என்று நினைக்கும் போது பெரும் பயமாக உருவெடுக்கிறது…

“அதோ அந்தக் கடல் நடுவுல கொண்டு போய் மீனுக்கு இரையா போட்டா யாருக்கும் தெரியாது… இல்லாட்டி அநாதை பொணம்ன்னு எதாவது சுடுகாட்டுல காசு கொடுத்து எரிச்சிட்டா போச்சு… இதைப் பத்தி எல்லாம் நீங்க கவலைப்படாதீங்க… என் கிட்ட பொறுப்பைக் கொடுத்திட்டீங்கல்ல… எந்த எவிடன்சும் இல்லாம நான் பண்ணிர்றேன்..” என்றவன் சொன்னது போல் அதைச் செய்தும் காட்டிவிட்டான்…

அடுத்த ஒரு வாரத்திற்குள் சந்தோஷ் மீண்டும் அமெரிக்கா சென்றுவிட்டான்…

உற்றார் உறவினர் முன்னிலையில் சகோதரன் கொள்ளி வைக்கப் போக வேண்டிய சித்தார்த்தின் உடல் யாருமற்ற அநாதை பிணமாய் நகரத்தை விட்டு தள்ளி இருந்த அந்த இடுகாட்டில் பணத்திற்கு ஆசைப்பட்ட அந்த வெட்டியானின் கைகளால் எரிந்து சாம்பலானது…

தனது நிலையை எண்ணி பரிதவித்தபடி அங்கே நின்று இருந்தது சித்தார்த்தின் ஆன்மா... தன்னைக் கொன்றவன் யார் என்று அறிந்த போதும் அதுவால் எதுவும் செய்ய முடியவில்லை...

இப்போதும் சந்தோஷ் பேசியதை கேட்டு ஹரிணி குழம்பியதை எண்ணி அவளின் குழப்பத்தைத் தீர்க்கும் வகையறியாமல் அதைத் தனது சகோதரனிடம் சொல்லும் வழியறியாமல் தவிப்புடன் நின்று இருந்தது...

உயிர் துறந்தும் நிம்மதியில்லாமல் அங்கும் இங்கும் அல்லாடி கொண்டு இருந்தது அது...

எல்லாவற்றையும் நினைத்து பார்த்த சந்தோஷின் மனம் ஹரிணியின் நம்பாத தன்மையையே நினைத்துக் கொண்டு இருந்தது... ஒருவேளை ஹரிணி அவன் சொன்னதை நம்பாமல் கணவனை நம்பி அவனைப் பிரியாமல் இருந்து விட்டால்...? அதை நினைக்கும் போதே அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

‘அப்படி ஒண்ணு நடந்ததுன்னா அந்தச் சித்தார்த்தை மேலே அனுப்பியது போல் இந்தச் சைதன்யாவையும் மேலே அனுப்பிற வேண்டியது தான்... எனக்கு என் ஹனி வேணும்... அதுக்காக நான் எதையும் செய்யத் தயாரா இருக்கேன்... எந்த எல்லைக்குப் போகவும் நான் ரெடி...’ மனதில் நினைத்தவன் சைதன்யாவிற்கு நாள் குறிக்க ஆரம்பித்தான்...

வீட்டிற்கு வந்த ஹரிணிக்கு எந்த வேலையும் ஓடவில்லை... எப்படி இதைக் கணவனிடம் கேட்பது...? அப்படியே கேட்டாலும் அவன் இதை ஒத்து கொள்வானா என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது...

‘ஒத்து கொள்ளாவிட்டால் என்ன... ஒத்துக் கொள்ள வைப்பேன்...’ என்று உறுதியுடன் நினைத்தவள் கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்...

“ஹனி...” என்றபடி உற்சாகமாக வந்த சித்தார்த் புதுக் கணவனாய் தாபத்துடன் அவளை அணைத்துக் கொள்ள...

அவனது அணைப்பில் குழைந்த மனதையும், உடலையும் முயன்று அடக்கியவள் தன் மனதை சமன்படுத்திக் கொண்டு,

“உங்க தம்பி எங்கே இருக்கார்...?” அவளது கேள்வியில் அவளை விட்டு விலகியவனது முகம் யோசனையைத் தத்தெடுக்க,

“ஏன்... அவனுக்கு என்ன?”

“கேட்டதுக்குப் பதில் சொல்லுங்கோ...?” அவளின் பிடிவாதம் அவனுக்குப் புதிதாய் இருந்தது... இருந்தாலும் அவள் கேட்டதுக்குப் பதில் சொன்னான்...

“ஆஸ்திரேலியாவில் இருக்கான்...?”

“அப்போ இதுக்கு என்ன அர்த்தம்...?” என்று கேட்டவள் அவன் முன் சந்தோஷ் கொடுத்த காகிதங்களை நீட்டினாள்...

அவன் சிங்கப்பூர் வழியாக இந்தியா வந்தற்கான ஆதாரம் அவனைப் பார்த்து கண்சிமிட்டி எக்களித்துச் சிரித்தது...

“இது...” என்று இழுத்தவனை,

“வந்தவர் எப்போ திரும்பி போனார்...?” அதற்குப் பதில் சொல்லாமல் அவளை உறுத்து விழித்தவன்,

“இப்போ உனக்கு என்ன தெரியணும்...? அதை முதல்ல கேளு... அதை விட்டுட்டு இப்படிச் சுத்தி வளைக்காதே...” என்றான் நேரிடையாக...

“ஏன் பதில் சொல்ல முடியலையோ...?” என்று அவனைப் பார்த்து கிண்டலாய் கேட்டவள்,

“நீங்க தானே சைதன்யா... உண்மையைச் சொல்லுங்கோ...” அவளது பேச்சில் அவனுக்குக் கோபம் வந்தது...

“உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சு இருக்கு…? என்னைப் பார்த்து சைதன்யாவான்னு கேட்கிற… யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க…” அவளுக்கு எப்படி இந்த உண்மை தெரியும் என்று உள்ளுக்குள் யோசித்துக் கொண்டு இருந்தவன் வெளியில் காட்டி கொள்ளாது அவளிடம் பேசினான்…

“ஆமாம்… நேக்குப் பைத்தியம் தான் பிடிச்சு இருக்கு…” என்றவள் அதுவரை ஒளித்து வைத்திருந்த கத்தியை எடுத்து மணிக்கட்டில் வைத்து அழுத்தி கொண்டே,

“இப்போ உண்மையைச் சொல்லலைன்னா நான் கையை அறுத்துட்டு செத்துருவேன்… நீங்க யாருன்னு தெரியாம என்னால தினம் தினம் சாக முடியாது… நீங்க யாரு என் கிட்ட காதல் சொன்ன சித்தார்த்தா… இல்லை என்னைக் கல்யாணம் பண்ணிண்ட சைதன்யாவா…?”

அவள் நின்ற நிலையைக் கண்டு பதறி போனவன், “ஏய் மாமி கத்தியை கீழே போடுடி…” என்று அலறினான்…

“ம்ஹூம்… மாட்டேன்… உண்மையைச் சொல்லுங்கோ… அன்னைக்கு உங்க அம்மா உண்மையைச் சொன்னப்போ இதே போல் தான் ஏதேதோ சொல்லி சமாளிச்சேள்… மறுநாளே என்ன மாயாஜாலம் பண்ணினேளோ உங்க அம்மாவும் உங்க கூடச் சேர்ந்துண்டு நன்னா பொய் பேசறா… ரெண்டு பேரும் எதுக்கு இப்படி நாடகம் ஆடறேள்… நீங்க தானே அவரைக் கொன்னது… அதுக்கு அவரும் உடந்தையா…?”

“அப்படின்னு எந்த மடையன்டி உன் கிட்ட வந்து சொன்னான்…?” சித்தார்த்துக்குப் பொறுமை எல்லை கடந்து கொண்டு இருந்தது…

“சந்தோஷ் தான் சொன்னார்…” அவளின் வார்த்தையில் அவன் புருவங்கள் முடிச்சிட குழப்பத்துடன் அவளைப் பார்த்தான்… இதில் அந்தச் சந்தோஷ் எங்கே இருந்து வந்தான் என்று…

“அவர் தான் சொன்னார் இந்தச் சொத்துக்காகவும், எனக்காகவும் தான் நீங்க உங்க அண்ணாவை கொலை பண்ணிட்டீங்கன்னு...” பேசி கொண்டு போனவளுக்கு அடுத்து என்ன நடந்தது என்று தெரியாது அடுத்த நொடி அறையின் ஒரு மூலையில் விழுந்து கிடந்தாள்... அவள் கையில் இருந்த கத்தி இன்னொரு மூலையில் விழுந்து கிடந்தது...

அவளின் காதில் நொய்ங் என்ற சத்தம் விடாமல் எழுந்தது... அவளது இடது கன்னம் தீ சுட்டது போல் நெருப்பாய்க் காந்தியது... அப்போது தான் அவளுக்கே புரிந்தது கணவன் தன்னை அடித்து இருக்கிறான் என்று...

“என்னடி சொன்ன...?” ஆக்ரோசமாய் விஸ்வரூபம் எடுத்து அவள் முன் வந்து நின்ற சித்தார்த்தின் தோற்றம் அவளுக்குப் பயத்தை உண்டு பண்ண சுவரோரமாய் ஒன்றினாள்...

“கேவலம் சொத்துக்காக என் கூடப் பிறந்தவனைக் கொல்ற அளவுக்கு நான் ஒண்ணும் மோசமானவன் இல்லை... அப்புறம் என்னடி சொன்ன உன்னை அடையறதுக்காகக் கொன்னேன்னா... ஆமாம் நீ பெரிய உலக அழகி பாரு... நீ கிடைக்கலைங்கிறதுக்காக என் கூடப் பிறந்தவனைக் கொல்றதுக்கு... ஓங்கி அடிச்சேன் அப்புறம் உன் உடம்பில் உயிர் தங்காது... வாய் இருக்குதுங்கிறதுக்காக என்ன வேணும்ன்னாலும் பேசுவியா நீ...”

“அந்த மடையன் சொன்னான்னா உனக்கு எங்கேடி போச்சு அறிவு... அவன் கதை சொன்னானாம் இவள் கேட்டு வந்து என் கிட்ட சண்டை போடுவாளாம்... இது என்ன சினிமாவாடி அவனை மாதிரி நான் வேஷம் போட... நான் சித்தார்த்... உன் கிட்ட காதல் சொன்னவனும் நானும் தான்... உன் கழுத்தில் தாலி கட்டியவனும் நான் தான்... அதுல எந்தச் சந்தேகமும் உனக்கு வேண்டாம்...” என்று கொஞ்சமும் தயங்காது உறுதியாய் கூறியவனைக் கண்டு,

“அப்போ உங்க தம்பி எங்கே...?”

“இருக்கான் இப்போதைக்கு அவ்வளவு தான் என்னால சொல்ல முடியும்...”

“எங்கே...?” அவள் விடாப்பிடியாய் அதிலேயே நிற்க...

“அது உனக்குத் தேவையில்லாதது...” என்றவனை வெறுப்புடன் பார்த்தவள்,

“உங்களால சொல்ல முடியாதுன்னா... ஏன்னா நீங்க தான் அவரைக் கொலை பண்ணிட்டேளே...” என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதவளிடம்,

“என்னடி மாத்தி மாத்தி பேசற... கொஞ்ச நேரம் முன்னாடி நான் சித்துவை கொலை பண்ணினேன்னு சொன்ன... இப்போ நான் தனுவை கொலை பண்ணி இருப்பேன்னு சொல்ற... நான் என்ன கொலை பண்றதை தொழிலாவா செஞ்சிக்கிட்டு இருக்கேன்... பைத்தியம் மாதிரி பேசாதே...” அவனுக்கு எரிச்சல் வந்தது கேட்பார் பேச்சு கேட்டு ஆடும் மனைவியை நினைத்து...

“ஒரு கொலைக்காரனோட என்னால குடும்பம் நடத்த முடியாது... நான் போறேன்...” என்று அழுதபடி எழுந்தவள் முன் வந்து கை நீட்டி அவளைத் தடுத்து நிறுத்தியவன்,

“எங்கே...?”

“என் அம்மா வீட்டுக்கு...” என்றவளை கூர்ந்து பார்த்தவன்,

“ஏன்...?”

“நீங்க சித்தார்த்தா இல்லை சைந்தன்யாவான்னு நித்தம் நித்தம் மனதுக்குள் போராட்டம் போராடியபடி என்னால் உங்களோட வாழ முடியாது... ஒருத்தரை காதலிச்சிட்டு வேறு ஒருத்தரை கல்யாணம் பண்ணிண்டு... அதைக் கூடத் தெரியாம நான் வாழ்ந்துண்டு இருக்கேன்னா நான் என்ன மாதிரி பொண்ணுன்னா... என்னை நினைச்சு எனக்கே கேவலமா இருக்குன்னா... ஏதோ வேசித்தனம் பண்ற மாதிரி உடம்பு எல்லாம் கம்பளிபூச்சி ஊர்ற மாதிரி அருவருப்பா இருக்கு... என் உடம்பை தீயில் போட்டுப்

பொசுக்கினா கூடப் பரவாயில்லையோன்னு தோணுது… இதை எல்லாம் விட நேக்கு உங்க கூட இருக்கப் பயமா இருக்குன்னா…" அச்சமும் வெறுப்பும் குளித்து வந்த அவளது வார்த்தைகள் அவனை உயிரோடு கொன்றது…

அவளது வார்த்தையில் ஒளிந்து இருந்த 'உன்னோடு வாழ்வது எனக்கு வேசித்தனமாய் இருக்கிறது…' என்ற அர்த்தம் குத்தீட்டிகளாய் மாறி அவனைப் பதம் பார்த்து உயிர் துடிக்கச் செய்தது… அவனைக் கொலைக்காரன் என்ற போது கூடப் பொறுத்துக் கொண்டவனால் அவளது இந்த வார்த்தைகள் உயிர் போகும் வலியை தந்தது…

அவளுக்காகத் தனக்குத் தானே சமாதி கட்டி கொண்டவன் அவன்… ஆனால் அவளோ செய்யாத தவறுக்காக அவனைச் சிலுவையில் அறைந்ததோடு அல்லாமல் அவனை வலிக்க வலிக்க வார்த்தையால் அடித்து உயிரோடு கொல்கிறாளே…

வேதனை நெஞ்சை நிறைக்க இதயம் இரண்டாய்ப் பிளந்தது போல் வலித்து உயிர் போகும் துன்பத்தைக் கொடுத்தது அவனுக்கு… கண்களை மூடி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் ஒன்றும் பேசாது,

"வா நானே கொண்டு போய் விடறேன்…" என்றான் அப்போதும் அவளின் மீது அக்கறை கொண்ட நல்ல கணவனாய்…

போறேன் என்றதும் போ என்று சொன்ன கணவன் மீது அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது… தன் மனம் என்ன நினைக்கிறது என்று அவளுக்கே புரியவில்லை… அந்த இயலாமையைக் கூட அவனிடம் காட்ட முடியாமல்,

"நேக்கு வழி தெரியும்…" அவன் முகம் பாராமல் சொன்னவளை கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது…

'யார் இட்ட சாபம் என் வாழ்க்கையை ஆரம்பத்தில் இருந்து இப்படி அலைக்கழிக்கிறது… என் வாழ்க்கையில் சந்தோசம், நிம்மதி என்பதே கிடையாதா? கடைசியில் காதலும்

என்னைக் கைவிட்டு போகிறதே…’ துயரத்துடன் மனதுக்குள் புலம்பியவன் அதை அவளுக்குத் தெரியாமல் மறைத்தபடி,

“அது எனக்கும் தெரியும்… வா என் கூட…” என்றவன் அவளின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான்…

அவளது விருப்பப்படி அவளது அன்னை வீட்டில் கொண்டு போய் விட்டவன் அவளது பெற்றோரிடம்,

“அவளை எதுவும் கேள்வி கேட்காதீங்க… ஏதோ மனக்குழப்பம் அதான் இங்கே வந்திருக்கா… நல்லா ரெஸ்ட் எடுக்கட்டும்… அவளே என்னைத் தேடி வருவாள் அதுவரை பொறுமையா இருங்க… அப்புறம் முக்கியமான விசயம் அவளைத் தனியா வெளியில் எங்கும் போக விடாதீங்க…” என்றவனைக் கண்டு அந்தப் பெற்றோரால் தலையை மட்டும் அசைக்க முடிந்தது… மருமகனுக்கும் மகளுக்கும் இடையில் நடக்கும் பிரச்சினை தெரிந்தாலும் அவர்களால் மௌனம் மட்டுமே காக்க முடிந்தது…

அடுத்து அவன் மனைவி இருந்த அறைக்குள் நுழைய அவளின் பெற்றோர் சிறியவர்களுக்குத் தனிமை கொடுத்து வெளியில் திண்ணையில் சென்று அமர்ந்தனர்… அவர்களின் மனம் கனத்துப் போயிருந்தது…

ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தவளை பார்த்தபடி கதவை தாளிட்டவன் நிதான நடையுடன் அவளை நெருங்கினான்… அவன் வரவை உணர்ந்து திரும்பி பார்த்தவள் அச்சத்துடன் ஜன்னல் கம்பியோடு ஒன்ற,

“என்னடி மாமி வில்லனை பார்க்குற மாதிரி என்னைப் பார்க்கிற… நான் உன் புருசன்டி…” என்றவன், “இல்லை இல்லை உன் ஆம்படையான்… என்ன அது மறந்து போச்சா…? இல்லை கொஞ்சம் நியாபகப்படுத்தவா…?” என்றவன் அவளின் இருபுறமும் கையை அணைவாக வைத்துக் கொண்டு அவள் தப்பிச் செல்லாதபடி அவளை நெருங்கி நின்றான்…

தன் மீது சாய்ந்து கொண்டு நெருக்கமாய் நின்ற கணவனைக் கண்டு அச்சத்தில் அவளது கண்கள் விரிந்தாலும் அந்தக் கண்களில் அச்சத்தை மீறி சிறு எதிர்பார்ப்பு எட்டி பார்த்தது...

அவனைக் கண்டு பயந்தாலும் அவளின் மனதில் இருந்த அவன் மீதான காதல் அவனிடம் காதல் யாசகம் கேட்டது...

அதை உணர்ந்தவன் முகம் மென்மையுற்றது... அத்தனை நேரம் அவன் மனதை அலைக்கழித்த எண்ணங்கள் வேரோடு அறுந்து விழ அவளது காதலில் அவனது மாண்ட உயிர் மீண்டும் உயிர்த்து எழுந்தது... ஆனால் அடுத்த நொடி அது பொய்யோ எனும்படி அவனது முகம் கடினமுற்றது...

“என்னடா அம்மா வீட்டுக்கு போறோம்ன்னு சொன்னா உடனே கொண்டு வந்து விட்டுட்டானேன்னு நீ என்னைத் தப்பா நினைக்கலாம்... என்னைச் சந்தேகப்படலாம்... நான் எப்பவும் உன் விருப்பப்படி நடக்கிறவன்... இப்பவும் அதைத் தான் செய்துட்டு இருக்கேன்... உன் மனசை கஷ்டப்படுத்த என்னால் முடியாதுடி... ஏன்னா நான் உன்னை அந்தளவுக்குக் காதலிக்கிறேன்...”

கணவனது வார்த்தையில் கண்கள் கலங்க அவனைப் பார்த்தவள் எதுவும் பேசாது நிற்க, அவளின் நிலையை ஆயாசத்துடன் பார்த்தவன் பெருமூச்சு ஒன்றை வெளியிட்டபடி,

“அவன் சொல்றதை நம்புற... ஆனா புருசன் நான் சொல்றதை நம்ப மாட்ட இல்ல...?” வருத்தத்துடன் கேட்டவன், “ஆனா ஒண்ணு இப்போ நீயா தான் இங்கே வந்து இருக்க... அதே போல் நீயா தான் என்னைத் தேடி வரணும்... வருவ... எனக்கு நம்பிக்கை இருக்கு... ஆனா நான் வந்து கூப்பிடுவேன்னு மட்டும் கனவுல கூட நினைக்காதே...”

“வரட்டுமா...” என்று அவள் கண்களை நோக்கியபடி கூறியவன் விலக எத்தனித்த அந்த நொடியில் அவள்

கண்ணில் தெரிந்த ஏக்கத்தில், வலியில் அவன் தான் அதிகம் துடித்துப் போனான்...

“நான் சித்தார்த் தான்டி... ஏண்டி என்னை நம்ப மாட்டேங்கிற...”

ஒற்றை விரலால் அவளது முகத்தை நிமிர்த்திக் கேட்டவன் அலைப்பாயும் அவளது விழி கடலில் தத்தளிக்கும் மீனாய் தவித்த கருவிழிகள் சொன்ன காதலை படித்தவன் அந்தக் காதல் கொடுத்த வலியை உணர்ந்தவனாய் அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டான்...

அந்த அணைப்பில் அவன் விரும்பிய காதல் கிடைத்ததா இல்லை அந்தக் காதல் ரணத்தைக் கிண்டி விட்டு வேடிக்கை பார்த்ததா எது என்று தெரியாது அடுத்த நொடி அவளை விடுவித்தவன் திரும்பியும் பார்க்காது அந்த அறையை விட்டு வெளியேறினான்...

நீயாவேன்...

## நான் : 20

ஹரிணியை அவள் வீட்டில் விட்டு விட்டு தனது வீட்டிற்கு வந்த சித்தார்த் அங்குத் தனது அன்னை இல்லாததை உணர்ந்து நிம்மதி பெருமூச்சுவிட்டவனாய் தனது அறைக்கு வேகமாய் ஓடினான்...

அதே வேகத்தில் தனது மடிகணினியை உயிர்ப்பித்தான்... அது அவனின் மனதை போல் வேகமாய் இயங்காமல் மெதுவே கண்சிமிட்டி உயிர்ப்பித்து அவன் பொறுமையைச் சோதித்தது...

உயிர் பெற்ற கணினி கடவுச்சொல்லை கேட்க ஒரு நொடி வேதனையுடன் கண்களை மூடி திறந்த சித்தார்த்தின் கைகள் அடுத்த நொடி 'ஹரிணிசித்தார்த்' என்று வேகமாகத் தட்டச்சுச் செய்யக் கணினி முழுமையாய் உயிர் பெற்று அவனை வரவேற்றது...

ஆம் அது இறந்து போன அவனது சகோதரனின் மடிகணினி... அதுநாள் வரை சகோதரனின் கணினியை தொடாமல் இருந்தவன் அன்று அந்தக் கண்காணிப்பு கேமிராவை பார்ப்பதற்காக இதை உயிர்பித்த போது அது கடவுச்சொல் கேட்க பலவாறு யோசித்துக் குழம்பியவன் கடைசியில் ஹரிணியின் பெயரை மாற்றி மாற்றிப் போட்டுப் பின் சித்தார்த் பெயருடன் இணைத்து போட்ட பின்பே அது உயிர் பெற்றது...

அதில் இருந்த கண்காணிப்பு கேமிராவின் பதிவு செய்யப்பட்ட காணொளியில் சித்தார்த் கொலை செய்யப்பட்ட நாளில் எடுக்கப்பட்ட காணொளியை தேடி எடுத்தவன் அதை ஓட விட்டான் கனத்த மனதுடன்...

ஒரு முறை சகோதரன் இறந்ததைப் பார்த்த போதே அவன் பல முறை இறந்துவிட்டான்... மீண்டும் இன்று அந்தத் துயரமான காட்சியைக் காண மனம் வெறுத்தவனாய் நொந்தவனாய் அமர்ந்திருந்தவன் மனதில் அந்தச் சந்தோஷை பழிவாங்க வேண்டும் என்ற வெறி மட்டும் அளவுக்கு அதிகமாய் நிறைந்து இருந்தது...

அன்று தான் பார்த்த இடம் வரை அதாவது சித்தார்த்தின் கழுத்தை ஒருவன் நெறிப்பது வரை பார்த்தவன் உடன் பிறந்தவன் உயிருக்கு போராடுவதைக் காண சகிக்காமல் வேதனையுடன் அதை அப்படியே நிறுத்திவிட்டான்... இன்று அந்த இடம் வரை ஓட்டியவன் பொறுமையாகக் காத்திருந்தான் அடுத்து என்ன வருகிறது என்று...

ஒன்றும் நடவாமல் வெறுமனே ஓடி கொண்டு இருந்த காணொளியை மேலும் சுமார் அரை மணி நேரம் ஓட்டியவன் கண்கள் அப்போது அங்கு உள்ளே நுழைந்தவனைக் கண்டு கூர்மை பெற்றது... உன்னிப்பாய் நடப்பதை கவனிக்க ஆரம்பித்தான்...

வந்தவன் சித்தார்த்தின் உடலை அப்புறப்படுத்தி விட்டு அந்த இடத்தை நிதானமாய்ச் சுத்தம் செய்துவிட்டு சென்ற காட்சியைக் கண்டு அவனது இரத்தம் கொதித்தது... கொஞ்சமும் குற்றவுணர்ச்சி இல்லாமல் ஒரு கொலையை

மறைத்ததோடு இல்லாமல் கொலையுண்டவனின் அடையாளத்தையும் ஆதாரம் இல்லாமல் ஆக்கிவிட்டார்களே என்று மனதுக்குள் குமுறினான்...

இவன் வெறும் அம்பு தான்... எய்தவன் சந்தோஷ் அன்றோ... சந்தோஷை நினைத்தவன் கண்கள் அடக்கப்பட்ட ஆத்திரத்தில் ரத்தமெனச் சிவந்தது...

ஆம் இப்போது அவன் உறுதியாய் நம்பினான் தனது சகோதரனை கொன்றது சந்தோஷ் தான் என்று...

யாருக்கும் தெரியாத ரகசியத்தைக் கண்டுபிடித்ததோடு நில்லாமல் அதை ஹரிணியிடம் சொல்லி அவனுக்கு எதிராய் திருப்பி விட்டு இருக்கிறான் என்றால் அதற்குக் காரணம் என்ன...? ஒரே ஒரு காரணம் தான் அவன் கண்முன் வந்து நின்றது அது அவனின் மனைவி ஹரிணி...

அன்று அவனது சகோதரன் காதலிக்கிறான் என்று அவனைக் கொலை செய்து இருக்கிறான் அந்தச் சந்தோஷ்... இப்போது ஹரிணி திருமணம் செய்ததால் அவளைத் தன்னிடம் இருந்து பிரித்து அவளுக்கு வாழ்க்கை கொடுக்க எண்ணுகிறான் அதே சந்தோஷ்... அந்த மட்டும் சந்தோஷின் ஒரே குறிக்கோள் ஹரிணியை அடைவது தான் என்று நன்கு புரிந்து கொண்டான்...

காதலியை காதலித்ததற்காக அண்ணனை கொன்றவன் அவளைத் தான் திருமணம் செய்ததற்காகத் தன்னை ஏன் இன்னும் உயிருடன் விட்டு வைத்து இருக்கிறான் என்று சித்தார்த்துக்குச் சந்தோஷை நினைத்து பெரும் வியப்பாய் இருந்தது...

ஏற்கெனவே ஒரு கொலை செய்துவிட்டு எங்கே மாட்டி கொள்வோமோ அதனால் ஹரிணியுடன் இணைவதற்குப் பங்கம் வந்துவிடுமோ என்று அச்சத்தில் இருக்கும் சந்தோஷ் மீண்டும் இவனைக் கொன்று சிக்கலில் மாட்டிவிடுமோ என்று தான் அமைதியாய் இருக்கிறான் என்பது சித்தார்த்துக்குத் தெரியவில்லை...

அந்த அமைதி கூட இப்போது ஹரிணியின் நடவடிக்கையில் பெரும் புயலை சந்தோஷின் மனதில் கிளப்பி விட்டு இருக்கிறது என்பதைச் சித்தார்த் அறிய வாய்ப்பு இல்லை...

சந்தோஷ் ஏதோ சதி திட்டம் தீட்டுகிறான் தான் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று எண்ணியவன் அதற்கு முன் தான் முந்தி கொள்ள ஏதும் வாய்ப்பு இருக்கிறதா என்று யோசிக்க ஆரம்பித்தான்...

வெகுநேரம் யோசித்தவன் அந்த வாய்ப்பை தானே ஏற்படுத்திக் கொண்டு சந்தோஷை நேரடியாய் மோதுவதற்கான நாள் குறிக்க ஆரம்பித்தான்...

எல்லாவற்றையும் திட்டமிட்டு முடித்தவன் பின் படுக்கையில் விழுந்தான்... அவ்வளவு நேரம் மனதை அழுத்தாத மனைவியின் நினைவுகள் அவனின் மனதை பாரமாய் அழுத்தியது...

எப்போதும் அவள் படுக்கும் பகுதியை தடவி கொடுத்தவன் முகத்தில் எல்லை இல்லா வேதனை நிரம்பி இருந்தது...

'கடைசியில் நீயும் என்னைப் புரிஞ்சிக்காம பேசிட்டியே ஹனி... என் கூட வாழ்ந்தது உனக்கு அந்தளவுக்கா கேவலமா இருந்தது...' மனதில் நினைத்தவன் மனக்கண்ணில் அவளுடன் காதலுடன் உறவாடி பொழுதுகள் வலம் வந்தது...

அதில் அவள் அவமானப்படும்படியாகவோ அல்லது அருவருப்பு அடையும்படியாகவோ தான் எந்த நேரத்திலாவது அவளிடம் நடந்து கொண்டோமா என்று அலசி ஆராய்ந்தவனுக்குக் கிடைத்த விடை இல்லை என்பதே... அந்த நேரத்தில் அவன் தன்னவளை மகாராணியாகத் தாங்கி அவனல்லவா அவளுக்குச் சேவகனாகச் சேவகம் புரிந்தான்...

அதை நினைத்து நினைத்து வேதனை அடைந்தவனின் கண்கள் கசிந்தது அவள் மீதான அதீத காதலால்...

அவனுக்கே தன் நிலை கண்டு ஆச்சிரியமாய் இருந்தது... நினைத்த நேரத்தில் பல பெண்களுடன் உறவாடி நாடோடி வாழ்க்கை வாழ்ந்த தான் இன்று ஒரு பெண்ணின் காதலுக்குக் கட்டுண்டு ஒரு கூட்டிற்குள் அடங்கி வாழ விருப்பப்படுவதை உணர்ந்தவன் அதற்குக் காரணமான மனைவியின் காதலுக்கு அந்நேரம் நன்றி உரைக்காமல் இருக்க முடியவில்லை... அதே சமயம் அதே காதல் அவனுள் கர்வத்தையும், பெருமையையும் ஒருங்கே தோற்றுவித்தது...

மறுநாள் காலையில் அலுவலகம் கிளம்புவதற்காகத் தயாராகி வந்த சித்தார்த்தை கண்டு, "ஹரிணி எங்கே கண்ணா...?" என்று கேட்டார் அமராவதி...

நேற்று அவர் நேரத்துடன் உறங்க சென்றுவிட்டதால் அவருக்கு நடந்த விசயம் எதுவும் தெரியாது...

"அவள் அம்மா வீட்டுக்கு போயிருக்கா மாம்..." அன்னையின் முகத்தைப் பாராமல் சொன்னான்...

"திடீர்ன்னு ஏன்...?" திகைத்துப் போய்க் கேட்டார் அவர்...

"திரும்பவும் அவள் மனசில சந்தேகம் வந்திருச்சு நான் சித்தார்த்தா இல்லை சைதன்யாவான்னு...?"

"கண்ணா..." இப்போது அதிர்ந்து போனார் அவர்...

அன்னையின் அதிர்வை கண்டு அவரின் கை மீது ஆறுதலாய் கை வைத்தவன், "இது சும்மா தற்காலிகமான பிரிவு தான் மாம்... அவளே என்னைத் தேடி வருவா... இல்லை என் காதல் அவளை வரவழைக்கும் மாம்... நீங்க இதை நினைத்து கவலைப்படாதீங்க..."

ஏற்கெனவே ஒரு மகனை பறி கொடுத்த துக்கத்தில் இருக்கும் தாயை மேலும் துன்பப்படுத்த அவனுக்கு மனம் இல்லை...

தன்னைக் கவலைப்படாதே என்று சொல்லும் மகனின் முகத்தில் இருந்த வருத்தம் அந்த அன்னையின் மனதை

வாட்டியது...

"என்னைச் சொல்லிட்டு நீ கவலைப்படுறியே கண்ணா... நான் வேணும்ன்னா அவள் கிட்ட பேசட்டுமா...?"

அவரைப் பார்த்து விரக்தியாய் புன்னகைத்தவன், "என்னன்னு பேசுவீங்க மாம்... உண்மையா இல்லை பொய்யா...? நீங்க எது சொன்னாலும் இப்போ அது பிரச்சினையைத் தான் கிளம்பும்... ஏன் என்னால் அவளிடம் பேசி புரிய வைக்க முடியாதா மாம்... நான் ஏன் அதைச் செய்யலை...? இப்ப புரிய வைக்கலாம் ஆனால் எப்பவும் சொல்லி சொல்லி புரிய வைக்க முடியாது மாம்... இது அவளே புரிந்து உணர்ந்து இந்த ராம் இல்லைன்னா அவளுக்கு வாழ்க்கை இல்லை, நான் தான் அவள் உயிர்ன்னு தெளிஞ்சு என்னைத் தேடி வரணும்... வருவா மாம்... எனக்கு நம்பிக்கை இருக்கு..."

இத்தனை நாள் மனைவியுடன் வாழ்ந்த காதல் வாழ்க்கை கொடுத்த நம்பிக்கையில் அதை விட அவள் தன் மீது கொண்ட காதல் மீதான நம்பிக்கையில் அவனது வார்த்தைகள் உறுதியுடன் வந்தது...

மகனது நம்பிக்கை கண்டு அவருக்குச் சற்று நிம்மதியாய் இருந்தது...

"மாம் உங்க கிட்ட சில விசயங்கள் பேசணும்..."

"சொல்லு கண்ணா..."

அன்னை கேட்டதும் தனது எண்ணங்களைக் கூறியவன் அவரின் பதிலுக்காக அவரைப் பார்த்தான்... மகனது கண்களில் தெரிந்த எதிர்பார்ப்பை கண்டு அவரும்,

"நீ நினைக்கிற மாதிரி செய் கண்ணா... இனி நீ எது செய்தாலும் எனக்குச் சம்மதம் தான்... கௌரவம் பார்த்துக் கொண்டு அகந்தையாய் இருந்த அந்த அமராவதி செத்துட்டா... இப்போ இருக்கிறது என் மகனின் அம்மா... அவனுக்காக எதையும் செய்யத் தயாரா இருக்கும் ஒரு

பாசமுள்ள ஒரு அன்னை... உன் சந்தோசம் தான் கண்ணா எனக்கு முக்கியம்..."

"மாம்..." அன்னையின் வார்த்தையில் கண்கள் கலங்க அவரை அணைத்துக் கொண்டான்...

அன்று அலுவலகம் சென்ற சித்தார்த் வேதாந்திடம் அந்தக் காணொளியை போட்டுக் காண்பித்தான்... அதில் அவனது சகோதரனின் உடலை அப்புறப்படுத்தவனை அடையாளம் தெரியுமா என்று கேட்டான்...

அந்தக் காட்சியைக் கண்டு கண்கள் கலங்கிய வேதாந்தம் அவனது கேள்வியில் அதில் இருந்தவனை உற்று நோக்கினார்... பின் முகம் எல்லாம் பிரகாசமாக,

"இவன் கைலாஷோட கையாள் வேலாயுதம்... அவனுடைய அன்டர்கிரவுண்ட் வேலை எல்லாம் இவன் தான் செய்றான் தம்பி..." என்றவரை பார்த்த சித்தார்த்,

"இவன் எனக்கு வேணும் அங்கிள்... அதுக்கு எவ்வளவு விலை கொடுத்தாலும் பரவாயில்லை..." என்று கூறியவனின் முகம் தீவிரமாய் மாறியிருந்தது...

"பேசி பார்க்கிறேன் தம்பி..."

"பேசி பார்க்கிறேன் இல்லை அங்கிள் காரியத்தை முடிச்சிட்டு வர்றீங்க... அதுக்கு விலையா என் சொத்து முழுவதையும் தர நான் தயாரா இருக்கேன்..." என்றவனின் வார்த்தையில் இருந்த தீவிரம் அவருக்கு அப்போது தான் புரிந்தது...

"சரி தம்பி நீங்க சொன்ன மாதிரி செஞ்சிடறேன்..." என்று சொல்லிவிட்டு அவர் கிளம்ப...

'டேய் சந்தோஷ் இனி தான்டா உனக்கு இருக்கு...' மனதில் வன்மமாய் நினைத்தவன் தன் காரியம் வெற்றி அடைய என்ன செய்ய வேண்டும் என்று தன் வியூகத்தைக் கச்சிதமாய்த் திட்டமிட்டான்...

"ஹரிணி... ஒரு வாய் சாப்பிடுடி... இப்படிப் பட்டினி கிடந்து படுத்தாதேடி..." பத்மா மகளிடம் கெஞ்சி கொண்டு இருந்தார்...

"நேக்கு பசிக்கலைம்மா..." எங்கோ வெறித்துக் கொண்டு கூறிய மகளைக் கண்டு அந்தத் தாய் உள்ளம் ரத்தக் கண்ணீர் வடித்தது...

ஹரிணி கணவனைப் பிரிந்து வந்து ஒரு நாள் ஆகிவிட்டது... இதுவரை எதுவும் உண்ணாமல் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு சித்தபிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்து இருக்கும் மகளின் நிலை அவருக்குப் பயத்தை அளித்தது...

"ஏண்டி உன் மனசுல என்னத்தான்டி நினைச்சுண்டு இருக்க... உன் அக்கா அவா வீட்டுக்காரங்க எல்லாரையும் பகைச்சுண்டு உனக்குக் கல்யாணம் பண்ணி கொடுத்தது எதுக்கு இப்படி நீ வாழா வெட்டியாய் இங்கே வந்து உட்காரவா...? அப்படி என்னடி மாப்பிள்ளை மேல கோபம்...?"

பிரச்சினையின் ஆணிவேர் தெரிந்து இருந்தாலும் பத்மா அதைத் தவிர்த்து மகளிடம் கேட்டார்... ஆனால் அதற்குப் பதில் பேசாது அமர்ந்து இருந்த மகளைக் கண்டு அவருக்கு ஆற்றாமையாக இருந்தது...

வெளியில் சென்று இருந்த ரங்காச்சாரி வந்ததும் அவரிடம் பத்மா மகளின் நிலையைச் சொல்ல அவரும் மகளிடம் கெஞ்சி பார்த்தார்...

"நான் உயிரோட இருந்து என்ன பண்ண போறேன்ப்பா...?" விரக்தியாய் வந்த அவளது வார்த்தையில் அவருக்கும் பயம் பிடித்துக் கொண்டது...

அந்த இரவு நேரத்திலும் மருமகனுக்கு அழைத்து விசயத்தைச் சொல்ல அடுத்தப் பதினைந்து நிமிடத்தில் சித்தார்த் அங்கே வந்து சேர்ந்தான்...

"எங்கே இருக்கா...?" பத்மாவிடம் அவன் கேட்க...

"ரூமில்..."

"சரி நான் போய்ப் பார்க்கிறேன்..." என்றவன், "நீங்க போய்ச் சாப்பாடு எடுத்துட்டு வாங்க... அப்புறம் இந்த டேப்லெட்டை பாலில் கலந்து கொண்டு வாங்க..." என்று தன் கையில் இருந்த மாத்திரையை அவரிடம் நீட்டினான்...

"இது..." பத்மா யோசனையாய் இழுக்க...

"தூக்க மாத்திரை தான்... ரெண்டு டேப்லெட் கலந்து கொடுக்கிறதால ஒண்ணும் ஆகிடாது..." என்றவன் மனைவியைத் தேடி சென்றான்...

அங்கிருந்த கட்டிலில் அமர்ந்து கொண்டு மேலே விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தவளின் கண்களில் கண்ணீர் மட்டும் நிற்காமல் வழிந்தோடி கொண்டு இருந்தது...

மனைவியின் நிலை அவன் மனதை கொல்லாமல் கொல்ல அவள் அருகில் சென்று அமர்ந்தான்... அவன் வந்ததைக் கூட உணராமல் இருந்தவளை கண்டு அவனுக்கு வேதனையாய் இருந்தது...

"ஹனி..." என்று மென்மையாய் அழைத்தவனின் குரல் மட்டும் அவளது மூளையை எட்டியதோ என்னமோ சட்டென்று திரும்பி பார்த்தவள் அங்கே அவனைக் கண்டதும் முகம் மலர்ந்தவள் பின் ஏதோ நினைத்தவளாய் முகம் கூம்பி போய்த் தலையைக் குனிந்தாள்...

அவளின் மனநிலையைக் கணித்தவன் ஒன்றும் பேசாது இருந்தான்... ஏனெனில் அவனுமே அந்த மாதிரி ஒரு மனநிலையில் தான் இருந்தான்...

அவளைக் கண்டதும் அள்ளி அணைத்துக் கொள்ள மனம் துடித்தாலும் அவள் பேசிய வார்த்தைகள் நெஞ்சை வாள் கொண்டு அறுக்கத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதி காத்தான்...

அதற்குள் உணவு எடுத்து வந்த பத்மாவிடம் இருந்து அவன் தட்டை வாங்க அவர் கொடுத்துவிட்டு அங்கிருந்து அகன்றார்...

அதில் இருந்த தோசையைப் பிட்டு எடுத்து அவள் வாயருகில் அவன் கொண்டு செல்ல வாயை திறக்காமல் அழுத்தமாய் இருந்தவள்,

"இதுக்குப் பதிலா துளி விசம் கொடுங்கோ... சாப்பிட்டு நிம்மதியா போய்ச் சேர்ந்திர்றேன்..."

அவளது வார்த்தையில் அவனது நெஞ்சம் பதறியது... 'என்ன வார்த்தை சொல்லிவிட்டாய் படுபாவி...' என்று உள்ளம் துடித்துப் போனான்...

"அதை எனக்குக் கொடுடி மாமி... நான் நிம்மதியா போய்ச் சேர்றேன்... நீ வேற யாரையாவது கல்யாணம் பண்ணிட்டு சந்தோசமா இரு..." தனது மனதின் வலியை தாங்க முடியாமல் வார்த்தைகளால் அவளை வலிக்கச் செய்தான்...

"ஏன் இப்படி எல்லாம் பேசறேள்...?" ஆற்றாமையும் அழுகையும் கலந்து வந்தது அவளது குரலில்...

"நீ மட்டும் பேசலாம்... நான் பேச கூடாதா... இது எந்த ஊர் சட்டம் மாமி... உன்னைப் பிரிஞ்சு இருக்கிறது எனக்குக் கஷ்டமாத்தான் இருக்கு... நீ அனுபவிக்கிற வலியை விட நான் அதிகமான வலியை அனுபவிக்கிறேன்... உன்னால வாய் திறந்து சொல்ல முடியுது... ஆனா என்னால சொல்ல முடியலை அவ்வளவு தான் வித்தியாசம்... உனக்கு என்னடி அப்படி ஒரு பிடிவாதம்...? நான் யாரா இருந்தா என்னடி...? சித்தார்த்தா, சைதன்யாவான்னு கேள்வி கேட்கிறேயே... உனக்கு என்னுடைய பேரு தான் முக்கியமா... எனக்குள்ள இருக்கிற மனசு முக்கியம் இல்லையா...? ஹனி ஹனின்னு சாதாசர்வகாலமும் உன்னை நினைச்சு துடிக்கிற என் இதயம் உனக்கு முக்கியம் இல்லையா... அதில் இருக்கிற காதல் முக்கியம் இல்லையா... இது எதுவும் உனக்கு முக்கியம் இல்லை... என்னோட பேர் தான் உனக்கு முக்கியம் என்ன...?"

கோபமும் இயலாமையும் போட்டி போட மனதில் இருந்ததை எல்லாம் அவளிடம் கொட்டி விட்டான் அவன்...

அவன் கூறிய வார்த்தைகளில் இருந்த அர்த்தங்கள் அவளுக்கும் புரியத்தான் செய்தது... ஆனாலும் யார் எவரென்று தெரியாமல் தன் வாழ்க்கையை அவன் கைகளில் ஒப்படைக்க இனியும் அவள் தயாராக இல்லை... அதற்காக அவனை வெறுக்கவும் அவளால் இயலவில்லை... வேதனையில் யோசனையாய் அமர்ந்திருந்தவளை பார்த்தவன் மனம் இரங்கியது அவளுக்காக...

தவறு எல்லாம் தன் பக்கம் இருக்க மீண்டும் மீண்டும் தான் அவளை அளவுக்கு அதிகமாய் வாட்டுகிறோமோ என்ற எண்ணம் அவன் மனதை அலைக்கழிக்க அவளைச் சமாதானப்படுத்தும் விதமாக மீண்டும் உணவை எடுத்து அவள் வாயருகில் கொண்டு சென்றான்... அப்போதும் வாயை திறக்காமல் அமர்ந்திருந்தவளிடம்,

"நீ சாப்பிடலைன்னா நானும் சாப்பிட மாட்டேன்..." என்றவனைக் கேள்வியாய் பார்த்தவளை கண்டு,

"இன்னைக்கு முழுவதும் நானும் சாப்பிடலைடி... உனக்கு மட்டும் தான் மனக்கஷ்டம் இருக்குமா...? உனக்கு மட்டும் தான் பிரிவு துயர் இருக்குமா...? எனக்கும் இருக்குடி உன்னை விட அதிகமாய்..." என்று சொன்னவனின் வார்த்தையில் இருந்த காதல் அவளை உருக செய்து கண்களைக் கலங்க செய்தது...

"நீங்க சாப்பிடுங்கோன்னா..." என்றவள் அவனுக்கு ஊட்டிவிட வர...

"லேடிஸ் பர்ஸ்ட்..." என்றவன் முதலில் அவளின் வாயில் உணவை திணித்தான்... அடுத்து அவளது முறையாயிற்று...

ஒருவழியாய் இருவரும் உண்டு முடித்த பின் இருவரின் மனமும் நிறைந்து இருந்தது...

அடுத்துப் பத்மா கொடுத்த பாலை அவளைப் பருக செய்தவனிடத்தில் அவள் அதை நீட்ட...

"எனக்கு வேண்டாம்... நீ தான் ரொம்ப வீக்கா இருக்க..." என்றவன் அவளை முழுவதும் குடிக்கச் செய்தான்...

"படு..." என்று தன் மடியை காட்டியவனைக் கண்டு அவள் தயங்க அவளது தயக்கத்தில் அவன் முகம் கசங்கியது வேதனையில்...

எந்தக் கணவனுக்கும் தன் நிலை வர கூடாது என்று நினைத்தவன் ஒன்றும் பேசாது அமைதியாய் அமர்ந்து இருந்தான்... அவளும் அமைதியாய் தன் கைவிரல்களை ஆராய்ந்து கொண்டு இருக்கச் சிறிது நேரத்தில் அவளுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது...

கணவன் அருகில் இருக்கிறான் என்பதையும் மறந்து அவள் தலையணையில் சாய்ந்துவிட்டாள்...

கண்களை மூடி படுத்து இருக்கும் அவளை வேதனையுடன் பார்த்துக் கொண்டு இருந்தவன் மெல்ல எழுந்தான்... போர்வையை எடுத்து அவள் புறமாய்ப் போர்த்தி விட்டவனின் சட்டையை அவள் இறுக பற்றி இருந்தாள்...

திடுக்கிட்டு போய் அவன் அவளைப் பார்க்க அவளோ தூக்க கலக்கத்தில், "நீங்க என்னோட ராம் தானே..." அவனின் சட்டையைப் பற்றி அருகில் இழுக்க... அவள் இழுத்த வேகத்தில் அவள் முகத்தோடு முகம் மோதி நின்றான் அவன்...

அவனது அருகாமையை அவளது மனம் உணர்ந்தது, அவனின் பிரத்யேக நறுமணத்தை அவளது நாசி நுகர்ந்தது... அது எல்லாம் அடித்துச் சொல்லியது 'உன்னோடு காதலோடு உறவாடியது இவன் தான்' என்று...

"நீங்க என்னோட ராம் தான்..." என்றவள் அவன் எதிர்பாரா நேரத்தில் அவனை இறுக தழுவி இருந்தாள்...

அவளது செயலில் அதிர்ந்து போனவன் அவசரமாய்த் திரும்பி கதவை பார்க்க அது சாத்தப்பட்டு இருப்பதை உணர்ந்து நிம்மதி பெருமூச்சு விட்டவன் மனைவியின் புறம் திரும்பினான்...

வெகு அருகில் தெரிந்த அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தவனின் உணர்வுகள் மெல்ல விழிக்க ஆரம்பித்தது... மென்மையாய் அவளின் இதழில் முத்திரையைப் பதித்தவன் மேலும் மேலும் அவளுள் மூழ்க எண்ணினான்... அதற்குத் தாராளமாய் வளைந்து கொடுத்த மனைவியைப் பார்த்தவனுக்கு அவளது மனம் புரிந்தது... அதில் தான் அழுத்தமாய்ச் சிம்மாசனமிட்டு அமர்ந்து இருப்பதும் புரிந்தது... ஆனால் அதையும் மீறி தான் யார் என்ற விசயம் அவளைக் குழப்பிக் கொண்டு இருக்கிறது என்பதை உணர்ந்தவன் அடுத்த நொடி அவளிடம் இருந்து விலகினான்...

"ராம் என்னைப் பிடிக்கலையா..." தூக்க கலக்கத்தில் உளறினாள் அவள்...

"உன்னைப் பிடிக்காமலாடி... நீ என் உயிர்டி..." என்றவன் வாஞ்சையுடன் அவளது தலையைக் கோதி கொடுத்தான்...

"அப்போ ஏன் விலகறீங்க...?" என்றவளுக்கு அவன் என்ன பதில் சொல்வது...

அது அவள் சொன்ன வார்த்தையால் தான் என்று எப்படிக் கூறுவது...? அது கொடுத்த வலியை எப்படி ஆற்றுவது...?

ஒன்றும் சொல்லாமல் அவளின் கையைப் பிடித்து ஆதரவாய் தட்டி கொடுத்தான்...

"என்னை வெறுத்துறாதீங்கோ ராம்..." என்றவளுக்கு மறுப்பாய் தலையசைக்க மட்டுமே முடிந்தது அவனால்... ஏனெனில் பேச முடியாதபடி உணர்ச்சிவசப்பட்டு இருந்தவன் கண்கள் கலங்கியது...

"ராம்..." ஏதோ பேச போனவள் வாய் மீது கை வைத்து தடுத்தவன்,

"பேசாம படுடி மாமி..." என்று அதட்டியவன் அவளின் தலையை மடியில் எடுத்து வைத்து இதமாய் வருடி விட்டான்... யோசனையில் சுளித்திருந்த புருவங்களை நீவி விட்டு அவள் மனதின் கலக்கத்தை விரட்டி அடித்தான்...

"ஹனி இனிமேல் நீ ஒழுங்கா சாப்பிடணும்... உனக்காக நான் காத்துட்டு இருக்கேன்ங்கிற நினைப்பு உன் மனசில் எப்பவும் இருக்கணும்... உனக்கு ஒண்ணுன்னா அடுத்த நொடி நான் உயிரை விட்டுருவேன்... அதை நீ நம்பணும்..."

"ம்... ம்..." என்றவள் அவனின் இடுப்பை கட்டி கொண்டு ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றாள்... ஆனால் அவன் பேசிய வார்த்தைகள் அனைத்தும் அவள் காதில் விழுந்து இதயத்தில் பத்திரமாகச் சேமித்து வைக்கப்பட்டதை அவளே அறியவில்லை...

உறங்கியவளை படுக்க வைத்துவிட்டு வெளியில் வந்தவன் மாமனார், மாமியாரிடம் விடைப்பெற்றுக் காரில் ஏறினான்...

வரும் போது இருந்த மனக்கலக்கம் போகும் போது அவனுக்கு இல்லை... காயமும் அவள் தான் மருந்தும் அவள் தான் என்பதை உணர்ந்தவன் மனம் நிறைந்து இருந்தது...

அடுத்த வந்த மூன்று நாட்களும் அமைதியாய்க் கழிந்தது சித்தார்த்துக்கு... ஆனால் அவனது மனமோ வேறு ஒன்றை எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருந்தது...

அவன் எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது... வழக்கம் போல் அவன் கடற்கரையில் இருந்த வீட்டில் தங்கி இருந்தான்... இப்போ கொஞ்ச நாட்களாகவே அவன் அங்குத் தான் தங்கி இருக்கிறான்...

சித்தார்த் அங்கு இருப்பதை வேலாயுதம் மூலம் அறிந்து கொண்ட சந்தோஷ் அவனையும் அழைத்துக் கொண்டு சித்தார்த்தை தேடி வந்தான்... ஆம் வேலாயுதத்தை வைத்து தான் சித்தார்த்தை பின் தொடர்ந்தான் சந்தோஷ்...

அவன் ஹரிணியை அடைய இருக்கும் ஒரே தடை இந்தச் சித்தார்த் தான்... இவனையும் கொன்றுவிட்டால் அவன்

அவனுடைய ஹனியுடன் நிம்மதியாய் வாழலாம்... அவனது மனம் பேராசை கொண்டது மாற்றானின் மனைவியைக் கவர்ந்து செல்வதற்கு...

அன்று அவனது சகோதரனை பார்த்த மாதிரி இவனும் சோபாவில் கண்களை மூடி சாய்ந்து இருக்க... சந்தோஷ் வேகமாய் அவனை நெருங்கினான்...

"வா சந்தோஷ்... இத்தனை நாளா உனக்காகத் தான் காத்துட்டு இருந்தேன்..." என்று சிரித்தபடி எழுந்த சித்தார்த்தை கண்டு சந்தோஷ் அதிர்ச்சி அடைந்தான்...

"வேலு... இவனை விடாதே... பிடிச்சு கட்டி போடு..." சந்தோஷ் வேலாயுதத்தைப் பார்த்துக் கத்தினான்...

வேலாயுதமும் அவன் சொன்னதை அட்சரம் பிசகாமல் அப்படியே செய்தான்... என்ன ஒன்று சித்தார்த்தை கட்டி போடுவதற்குப் பதிலாக அவன் சந்தோஷை பின்னால் இருந்து தாக்கி அவன் சுதாரிப்பதற்குள் நைலான் கயிற்றால் அவனது கை கால்களைக் கட்டி போட்டுவிட்டான்...

"துரோகி..." சந்தோஷ் அவனைக் கண்டு காறி உமிழ... அதைக் கண்டு சித்தார்த்தும் வேலாயுதமும் அர்த்தம் பொதிந்த பார்வையைப் பரிமாறியவர்கள் பின் வாய்விட்டுச் சிரிக்கத் துவங்கினர்...

அவர்களின் சிரிப்பில் அந்தக் கணம் சந்தோஷ் மரணப் பயம் என்றால் என்ன என்பதை உணர்ந்தான்...

நீயாவேன்...

## நான் : 21

"நம்பிக்கைத் துரோகி... என் அண்ணா கொடுக்கிற காசுல வாழ்ந்துட்டு இப்போ எனக்கே துரோகம் பண்ண நினைக்கிறியா...? இது மட்டும் என் அண்ணாவுக்குத் தெரிஞ்சது நீ செத்தேடா..." ஆத்திரத்தில் குமுறிய சந்தோஷை பார்த்து,

"உன் அண்ணனை விட சார் அதிகப் பணம் கொடுத்துட்டாரே... என்ன அப்படிப் பார்க்கிற... கைலாஷாவது தினமும் வாழ்றதுக்குத் தான் படியளந்தாரு... ஆனா சார் நான் வாழ்க்கை முழுவதும் வாழ தேவையான வசதியை செஞ்சு கொடுத்துட்டாரு... இப்போ நீயே சொல்லு நான் யாருக்கு விசுவாசமா இருப்பேன்னு..." என்று சிரித்த வேலாயுதம் சித்தார்த்தை பார்க்க...

சித்தார்த்தின் உணர்வற்ற முகத்தில் இருந்து அவனால் எதையும் அனுமானிக்க முடியவில்லை...

"டேய் வேலு... நானும் நீயும் சேர்ந்து தான்டா அவனோட அண்ணனை கொன்னது... அதுக்கு அவன் உன்னையும் சேர்த்து பழிவாங்காம விட மாட்டான்டா... நான் மாட்டினா நீயும் சேர்ந்து தான் மாட்டுவே..." என்று கத்தி புலம்பிய சந்தோஷை கண்டு மேலும் சிரிப்பு தான் வந்தது வேலுவுக்கு...

"எனக்கு எல்லாம் தெரியும் சார் சொல்லிட்டார்... என்னது நீயும் நானும் சேர்ந்து கொலை பண்ணுனோமா... இது என்ன புதுக் கதை... நீ கொலை பண்ணினே நான் அதைப் பணத்துக்காக மறைச்சேன்... அவ்வளவு தான்... கொலைக் குற்றவாளி நீ தான்... நான் இல்லை..."

வேலுவின் வார்த்தையில் சந்தோஷின் கோபம் எல்லாம் சித்தார்த்தின் மீது திரும்பியது...

"டேய் அன்னைக்கு முதன் முதல்ல உன்னை ஹோட்டல்ல பார்த்தேன் பாரு அப்போவே உன் அண்ணனை கொன்ன மாதிரி உன்னைப் போட்டு தள்ளி இருக்கணும்... அப்படிச்

செஞ்சி இருந்தா இப்போ நீ என் முன்னாடி இப்படி நின்னுக்கிட்டு இருந்திருக்க மாட்ட... என் ஹனிக்கும் எனக்கும் இடையில் நீயும் வந்திருக்க மாட்ட..." கோபத்துடன் கத்தியவன் அருகில் வேகமாய் வந்தான் சித்தார்த்...

அவ்வளவு நேரம் அமைதியாய் இருந்த அவனது பொறுமை காற்றில் பறந்தது... கீழே குனிந்து சந்தோஷின் சட்டையைக் கொத்தாகப் பற்றினான்...

"ஏண்டா என் சித்துவை கொன்ன... அவன் உனக்கு என்னடா பாவம் பண்ணினான்...?" கேட்கும் போதே அவனது விழிகள் இரண்டும் நெருப்புத் துண்டங்களாய்த் தகித்தது அவனது மனதின் வெம்மையைப் போல...

"என்ன பண்ணினானா... என் ஹனியை காதலிச்சது முதல் தப்பு... இரண்டாவது தப்பு அவளை மிரட்டுனது... அவள் அவனைக் காதலிக்கலைன்னா அவன் விட வேண்டியது தானே... பெரிய இவன் மாதிரி நாள் கெடு கொடுக்கிறான் முட்டாள்... எனக்கும் ஹனிக்கும் இடையில் யார் வந்தாலும் அவங்களை நான் உயிரோட விட மாட்டேன்..." என்றவன் கன்னத்தில் மாறி மாறி ஓங்கி அறைந்தான் சித்தார்த்...

"நீ யார்டா இதைச் சொல்றதுக்கு... அவள் வந்து உன் கிட்ட சொன்னாளா உன்னைக் காதலிக்கிறேன்னு... பின்ன எதுக்குடா அடுத்தவன் உயிரை எடுக்குற...? இப்போ நீ எனக்கும் என் மனைவிக்கும் இடையில் இடைஞ்சலா இருக்க... இப்போ நான் உன் உயிரை எடுக்கவா...?" என்று ஆங்காரமாய்க் கர்ஜித்தவனைக் கண்டு பயந்து போன வேலு ஓரடி பின்னுக்கு நகர்ந்தான்...

அதைக் கண்டு எல்லாம் சந்தோஷ் பயம் கொள்ளவில்லை... "யாருக்கு யாருடா மனைவி...? இடையில் நீ வராம இருந்திருந்தா இப்போ அவள் என் மனைவிடா... அப்படிப் பார்த்தா நீ தான் என் மனைவியை என் கிட்ட இருந்து பிரிச்சிட்ட..." என்றவன் முகத்தில் மீண்டும் ஒரு குத்துவிட்டான் சித்தார்த்...

உதடுகள் கிழிந்து இரத்தம் வந்த போதும் சந்தோஷ் நிறுத்தவில்லை... "நான் செய்த கொலையில் மாட்டிக்கக் கூடாதுன்னு தான் நான் அவசரமா அமெரிக்கா போனேன்... வந்து ஹனியை கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு நினைச்சு இருந்தேன்... ஆனால் இடையில் வந்த நீ ஹனியை கொத்திட்டு போக நினைச்சா நான் விட்டிருவேனா... அப்போ தான் செத்தவன் எப்படி மீண்டும் வந்தான்னு உன்னைப் பார்த்ததும் சந்தேகப்பட்டு உன்னைப் பத்தின எல்லாத் தகவல்களையும் திரட்ட ஆரம்பிச்சேன்... நான் நினைச்சது சரியா போச்சு... நீ வேற ஆள் நான் கொன்னது வேற ஆள்ன்னு... அது எப்படிடா அண்ணனும் தம்பியும் நான் காதலிச்ச பொண்ணையே தேடி வந்து காதலிக்கிறீங்க... ஊரு உலகத்துல வேற பொண்ணுங்களே உங்களுக்குக் கிடைக்கலையா..."

சந்தோஷின் வார்த்தைகள் சித்தார்த்தின் இதயத்தை முள்ளாய்த் தைத்தது... அவன் சொல்வதும் உண்மை தானே... கண்களை இறுக மூடி தன்னைச் சமன் செய்து கொண்டவன்,

"காதலிக்கிறேன் காதலிக்கிறேன்னு சொல்றியே... ஒரு நிமிசம் அவள் உன்னைக் காதலிக்கிறாளா இல்லையான்னு நீ யோசிக்க மாட்டியா முட்டாள்... அவள் என் அண்ணனை தான் காதலித்தாள் முட்டாள்... உன்னை இல்லை..."

இதைச் சொல்லும் போது அவனது மனம் எந்த மாதிரி வேதனையில் துடித்தது என்பது அவனுக்கு மட்டும் தான் தெரியும்... ஏனெனில் இப்போது அவனின் நிலையும் சந்தோஷின் நிலை போன்றே இருந்தது அவனின் மனைவியிடத்தில்... அது தான் கொடுமையிலும் கொடுமை...

"நீங்க ரெண்டு பேரும் இடையில் வராம இருந்திருந்தா ஹனி என்னைக் காதலிச்சு இருப்பாள்..." உறுதியுடன் கூறிய சந்தோஷை கண்டு கோபம் கோபமாய் வந்தது சித்தார்த்துக்கு...

"திரும்பத் திரும்ப என் மனைவியை ஹனின்னு சொல்லாதே... அது எனக்கு மட்டுமே உரிய பிரத்யேக வார்த்தை..." என்று சுட்டு விரல் நீட்டி அவனை எச்சரித்தான்...

"சார் இவனை விட்டா பேசிட்டே இருப்பான்... இங்கேயே இவனைப் போட்டு தள்ளிறவா...?" என்று கேட்டபடி முன்னால் வந்தான் வேலு...

"டேய் வேலைக்கார நாயே... என் அண்ணனுக்கு மட்டும் நீ செய்றது தெரிஞ்சது அவ்வளவு தான்..." என்று சந்தோஷ் சொல்லி முடிக்கும் முன் அவனது வாயை பெரிய பிளாஸ்திரி கொண்டு பேச முடியாதபடி மூடினான்...

"ம்... ம்..." என்று திமிறியபடி துள்ளியவனைப் பார்த்தபடி மண்டியிட்டு அமர்ந்திருந்த சித்தார்த் எழுந்தவன்,

"இங்கே வேண்டாம்... வேற எங்கேயாவது கொண்டு போய் முடி... அதே போல் என் அண்ணா உடலை எப்படி அடையாளம் தெரியாமல் ஆக்கினேயோ அது போல் இவனையும் ஆக்கிரு..." என்றவன் கண்ணில் கோபம், வெறுப்பு, குரோதம் எல்லாம் பளிச்சிட்டது...

ஆனால் அதையும் மீறி சிறிது வலி தென்பட்டது... ஆம் வலியே தான்... ஒரு உயிரை கொல்வது பாவம் என்று தெரிந்தும் அதைச் செய்ய வைத்த விதியை எண்ணி மனதுக்குள் சபித்தவன் அந்த வேதனை தாங்காமல் அவனது இதயம் வலித்தது... ஆனால் இது எல்லாம் யாருக்காக... அநியாயமாய் உயிரை விட்ட அவனது சகோதரனின் ஆன்மா சாந்தி அடைவதற்காகத் தானே... அதை நினைத்தவனுக்கு இப்போது வலி இல்லை... மாறாகப் பழிவாங்கும் வெறியே அதிகமாய் இருந்தது...

"சரி சார்..." என்று பணிவாகக் கூறிய வேலு சந்தோஷை அங்கு இருந்து அப்புறப்படுத்துவதில் குறியாய் இருந்தான்...

சந்தோஷின் கால்களின் கட்டை அவிழ்த்த வேலு அவனை எழும்பி நிற்க வைத்தவன் கைகளால் அவனை வாயில் புறம் தள்ளி கொண்டு போக உயிர் பயத்தில் அவனோடு செல்லாமல் முரண்டு பிடித்த சந்தோஷ் அவனது கைகளில் திமிறினான்...

"ஒழுங்கா வர மாட்ட..." என்று திமிறிய சந்தோஷின் முதுகில் ஓங்கி அடித்த வேலு அவனைத் தரதரவென்று இழுத்துச் சென்றான்...

சந்தோஷை காரில் ஏற்றி வேலு அவனை அழைத்துச் செல்லும் வரை பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த் தனது அலைப்பேசியை எடுத்து யாருக்கோ அழைத்தவன்,

"கிளம்பிட்டாங்க..." என்றான் மொட்டையாக... பின் அலைப்பேசியை அணைத்துச் சட்டைப் பையில் போட்டவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

எதிரே இருந்த கடற்கரை நோக்கி நடந்தவன் அங்கு இருந்த மணலில் சென்று அமர்ந்தான்... அவனது உள்ளம் அடுத்து வர போகின்ற செய்திக்காக ஆவலுடன் எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டு இருந்தது...

"சும்மா சும்மா அனத்தாம வா... இல்லை மவனே அப்படியே மொகரையைப் பேத்துருவேன்..." என்று சந்தோஷை கடிந்தபடி காரை ஓட்டி கொண்டு இருந்த வேலுவின் மனம் உல்லாசத்தில் மிதந்தது...

பின்னே இந்தக் காரியத்தை வெற்றிகரமாக முடித்தால் பல கோடி ரூபாய் அவனது வங்கி கணக்கில் ஏறிவிடும்... சொந்தமாய்ப் பங்களா மற்றும் இந்த அடியாள் வேலையை விட்டு விட்டுச் சொந்தமாய்த் தொழில் பண்ண போகிறான்... நாளை முதல் அவனது வாழ்க்கை முறையே மாறப் போகிறதே... அதற்கு அச்சாரமாகச் சில லட்ச ரூபாயை நேற்று தான் சித்தார்த்திடம் இருந்து அவன் முன் பணமாக வாங்கி இருந்தான்...

கைலாஷிடம் எப்போதுமே முதலாளி என்கிற அகங்காரம் இருக்கும்... செய்த வேலைக்குக் கூலியை வாங்கிக் கொண்டாயா அத்துடன் நம் உறவு முடிந்தது என்பது போல் அவன் இவனை எட்ட நிறுத்திவிடுவான்...

ஆனால் சித்தார்த் அவனை அழைத்து அன்போடு பேசியவன் அவனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்து கொடுத்தத்தோடு மட்டும் இல்லாமல் அவனது அடியாள் என்கிற அடையாளத்தை மாற்ற போகிறானே என்று மனதுக்குள் உற்சாகமாய் இருந்தான்... இங்குப் பணம் பாதாளம் வரை பாய்ந்தது... அது நம்பிக்கைத் துரோகத்தைச் செய்ய வைத்தது...

அந்த முட்டாளுக்கு அப்போது தெரியவில்லை... சித்தார்த் அவனை அடையாளம் தெரியாதபடி சிதைக்கப் போகிறான் என்று...

தன் அண்ணனை கொன்ற சந்தோஷை அழிக்க நினைக்கும் சித்தார்த் அதற்கு உடந்தையாய் இருந்த தன்னை மட்டும் எப்படி விட்டுவிடுவான் என்று அவன் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை... சித்தார்த் அள்ளி அள்ளி கொடுத்த பணம் அவனை மேலே சிந்திக்க விடவில்லை அது தான் உண்மையும் கூட...

அந்த உற்சாகத்தில் நான்கு வழிச்சாலையில் காரை திருப்பியவன் பின்னால் வேகமாய் வந்து கொண்டு இருந்த அந்த லாரியை கவனிக்கவில்லை... வேகமாய் வந்த லாரியின் நோக்கமே அவர்களின் கார் தான் என்பது போல் குறி பார்த்து சரியாய் காரின் மீது மோதி வெகு தூரம் அந்தக் காரை இழுத்துக் கொண்டு சென்று பின் அதை அம்போ என விட்டு விட்டுக் காற்றை விட வேகமாய் விரைந்து பறந்து சென்றது...

அதன் பின் அடுத்து அது சென்று நின்ற இடம் வட இந்தியாவின் ஏதோ ஒரு மூலையில் இருந்த குக்கிராமத்தில் தான்...

சித்தார்த்தை துடிக்கத் துடிக்கக் கொன்றவனும், அதற்கு உடந்தையாய் இருந்தவனும் இப்போது துடிக்கத் துடிக்க வலிக்க வலிக்கத் தங்கள் உயிரை விட்டனர் பரிதாபமாய்...

தூரத்தில் இருந்த கடலை வெறித்துக் கொண்டு இருந்த சித்தார்த்தின் அலைப்பேசி சிணுங்க கண்கள் பளபளக்க ஆர்வத்துடன் அதை எடுத்துக் காதில் வைத்தான்...

"முடிச்சாச்சு..." என்ற குரலில் சந்தோசத்துடன் அலைப்பேசியை அணைத்தான்...

அந்த ஒற்றை வார்த்தை அவனுக்குக் கொடுத்த நிம்மதி, மகிழ்ச்சியை வார்த்தையில் வடிக்க இயலாது... தனது சகோதரனின் கொலைக்குத் தான் நியாயம் தேடி தந்துவிட்டதாய் அவனது மனம் நிறைந்து இருந்தது...

இருள் சூழ்ந்த சுற்றுப்புறத்தை சுற்றி தன் கண்களை ஓட்டியவன், "சித்து உனக்கு இப்போ சந்தோசமாடா...? உன்னைக் கொன்னவங்களை நான் பழிக்கு பழி வாங்கிட்டேன்... உனக்குத் தெரியும் உன்னைக் கொன்னவன் யார்ன்னு... அவன் எதுக்காக உன்னைக் கொன்னான்னு... ஆனா எனக்காக என் நல்லதுக்காகத் தானே நீ அதை என் கிட்ட இருந்து மறச்சே... உன்னை விடவாடா எனக்கு என் நல்லது, என் சுகம் முக்கியம்... இது எல்லாத்தையும் விட எனக்கு நீ தான்டா முக்கியம்... சித்து நான் பேசுறது உனக்குக் கேட்குதாடா...?" தவிப்பாய் கேட்டவனைப் பார்த்துக் கொண்டு இருந்தது அந்த அரூபம்...

அவனது தவிப்பை கண்டு அது துடித்தது... தனது சகோதரனின் உணர்வுகளில் கலந்து தன்னை அவனுக்கு உணர்த்தலாமா என்று கூட அது நினைத்தது... ஆனால் அது சகோதரனின் வாழ்க்கையைப் பாதிக்கும் என்று அமைதி காத்தது...

ஒன்று மட்டும் உண்மை அன்று தான் துடிதுடித்து இறந்தற்கு உடன்பிறந்தவன் நியாயம் செய்து விட்டதை எண்ணி அது மகிழ்ந்தது... இனி தான் இங்கு இருக்க முடியாததை, தனது

பயணத்தைத் தடுத்து நிறுத்த முடியாததை அது உணர்ந்தது... ஆனாலும் சிறு சஞ்சலம் அதனுள்... அது இன்னமும் சரியாகாத தனது சகோதரனின் வாழ்க்கையை நினைத்து தான்...

அப்படி ஒரேடியாய் பாழாகத் தனது சகோதரன் விட மாட்டான் என்று எண்ணி தன்னைத் தேற்றிக் கொண்ட அந்த அரூபம் கடைசி முறையாகத் தன்னைத் தனது சகோதரனுக்கு உணர்த்த நினைத்தது...

பெரும் சுழல் போல் காற்றாய் தனது சகோதரனை சுற்றி சுழன்று அடித்துத் தன்னை உணர்த்திய அது பின்பு வானம் நோக்கி மேலே சென்றது...

ஒரு நொடியில் தன்னைச் சுழற்றி அடித்துச் செல்லும் காற்றை உணர்ந்த சித்தார்த் அது சென்று மறைந்த வான்வெளியை வெறித்தான்... இருளில் எங்குச் சென்றது என்பதை அறிய முடியாதவனாய் நட்சத்திர கூட்டங்களுக்கு இடையே சகோதரனின் தடத்தைத் தேடி தவித்தவன் பின் ஆயாசத்துடன் கண்களை மூடி கொண்டான்... அவனுக்குத் தெரியும் இனி சகோதரனின் ஆன்மா வேதனையில் துடிக்காது என்று...

மெல்ல எழுந்தவன் தனது காரை கிளப்பிக் கொண்டு வீடு நோக்கி பயணித்தான்... அவன் மனம் சந்தோசத்தில் நிம்மதியில் நிறைந்து இருந்தாலும் அதையும் மீறி உடன்பிறந்தவனின் இறப்பு தீரா வலியை கொடுத்தது... அந்த வலி அவன் ஆயுள் முழுமைக்கும் தொடரும்... அதை மாற்ற யாராலும் முடியாது...

நண்பனாய் இருந்த சகோதரனின் நினைவில் மூழ்கி இருந்தவன் எதிரில் வந்து கொண்டு இருந்த பேருந்தை கவனிக்க மறந்தான்... கடைசி வினாடியில் சுதாரித்துக் காரை வேறுபக்கம் அவன் திருப்ப அந்தப் பேருந்து அவனைக் கடந்து சென்றது...

தான் மட்டும் கொஞ்சம் சுதாரிக்காவிட்டால்...? நடக்க இருந்த விபத்தை எண்ணி மனதுக்குள் திகிலடைந்து சற்று

நேரம் அங்கேயே இருந்தவன் ஐந்து நிமிடம் கழித்தே மீண்டும் காரை எடுத்தான்...

அதே நேரம் ஏதோ கெட்ட கனவு கண்டு, "ராம்..." என்ற அலறலோடு எழுந்தாள் ஹரிணி...

அவளது சத்தத்தில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்த அவளது பெற்றோர்... "என்னடி...?" என்று பதறியபடி அவளிடம் வந்தனர்...

"அம்மா... நேக்கு பயமா இருக்கும்மா... எனக்கு ராமை உடனே பார்க்கணும் போலிருக்கு..." துண்டு துண்டாய் சொன்னவளின் நிலை கண்டு பத்மா அவள் அருகில் வந்து ஆறுதலாய் அணைத்துக் கொண்டார்...

கண்களில் கண்ணீர் வழிய உடல் நடுங்க இருந்த மகளின் நிலையே சொல்லாமல் சொல்லியது அவளது கணவனைப் பற்றி ஏதோ பயங்கரக் கனவு அவள் கண்டு இருக்கிறாள் என்று...

"அதெல்லாம் ஒண்ணும் ஆகி இருக்காது ஹரிணி... மாப்பிள்ள நன்னா தான் இருப்பார்..." என்று ஆறுதல் படுத்திய அன்னையின் வார்த்தைகள் எதுவும் அவளது காதில் விழவில்லை...

"அப்பா நேக்கு அவரைப் பார்க்கணும் போலிருக்கு... என்னை அங்கே கொண்டு போய் விடுறேளா...?" கெஞ்சிய ஹரிணியைக் கண்டு அதற்கு மேல் ரங்காச்சாரியால் சும்மா இருக்க முடியவில்லை...

"கிளம்பும்மா... போகலாம்..." என்க...

"ஏன்னா..." கணவரை தடுக்க முயன்றார் பத்மா...

கணவன் மனைவி பிரச்சினை இன்னும் சரியாகாத நிலையில் ஹரிணி சித்தார்த்தை பார்த்து விட்டுப் பின் இங்கே திரும்பி வருவதாக இருந்தால் நிச்சயம் அதில் மருமகனின் மனம் வேதனை கொள்ளும் என்று அந்தத் தாயுள்ளத்துக்கு நன்கு தெரியும்... ஏற்கெனவே பிரிவுத்

துயரில் தவிக்கும் மருமகனுக்கு இது ஆசை காட்டி மோசம் செய்வது போல் ஆகாதா...?

"அவள் வாழ்க்கையை அவள் பார்த்துக்குவா பத்து... இதில் நீ தலையிடாதே..." என்று திட்டவட்டமாக ரங்காச்சாரி சொல்ல... அதற்கு மேல் பத்மா வாயை திறக்கவில்லை...

பெற்றோரின் பேச்சில் கூட ஹரிணிக்குக் கவனம் இல்லை... அவளது கவனம் எல்லாம் அவளது கணவன் மேல் இருந்தது... அவளது மனம் 'ராம்... ராம்...' என்று அடித்துக் கொண்டது...

தெருமுனையில் இருந்த ஆட்டோவை ரங்காச்சாரி பிடித்துக் கொண்டு வர ஹரிணியும், அவரும் சித்தார்த் வீடு நோக்கி பயணமானார்கள்...

அவன் வீடு வந்ததும் தந்தை வருகிறாரா என்று கூடப் பார்க்காமல் ஓடிய ஹரிணி அழைப்பு மணியை ஒலிக்க விட்டு படபடப்புடன் காத்து இருந்தாள்... ரங்காச்சாரியும் மகளுடன் இணைந்து நின்றார்...

வேலையாள் வந்து கதவு திறந்தான்... அந்த அகால நேரத்தில் வந்து நின்ற சின்ன எஜமானியம்மாவை கண்டதும் முதலில் திகைத்தவன் பின்பு சந்தோசம் அடைந்து,

"வாங்கம்மா..." என்றான் வாயெல்லாம் பல்லாக...

அவன் வரவேற்றதை புறம் தள்ளியவள், "அவர் இருக்காரா...?"

"இப்பத்தான் வந்தாரும்மா..." அவன் சொல்லி முடிக்கும் முன் அவள் சிட்டாகப் பறந்து இருந்தாள் தங்கள் அறையை நோக்கி...

மகளின் வேகம் கண்டு மனதுக்குள் புன்னைகத்த ரங்காச்சாரி வேலை செய்பவனிடம், "கார்த்தால வர்றேன்னு சொல்லிருங்கோ..." என்றபடி சந்தோசமாகச்

சென்றார்... இனி மகளின் வாழ்க்கை சரியாகி விடும் என்ற நம்பிக்கை அவரது மனதில் ஒளிர்ந்தது...

அப்போது தான் படுக்கையில் விழுந்த சித்தார்த் அறைக்கதவு படபடவெனத் தட்டப்படுவதை உணர்ந்து யோசனையுடன் எழுந்தான்... வேலைக்காரர்கள் யாரும் இப்படித் தட்ட மாட்டார்கள்...

'ஒருவேளை அம்மாவுக்கு ஏதும்...' என்று நினைத்தவனின் நடையின் வேகம் கூடியது...

ஆனால் அவனது எண்ணத்திற்கு மாறாய் அறையின் முன் அவனது மனைவி நின்று இருந்தாள்...

'இவள் எங்கே இங்கே...?' யோசனையாய் பார்த்தவன்,

"ஹனி... மாமா அத்தைக்கு ஏதும்..." அவள் வந்ததன் நோக்கத்தை அவனாய் ஊகித்துக் கொண்டு கேட்க...

அவளோ அவனது வார்த்தைக்குப் பதில் அளிக்காமல் அவனை மேலும் கீழும் வேகமாய் ஆராய்ந்தாள்... பின்பு அவன் அருகில் வந்து அவனது முகத்தைத் தனது கரங்களில் தாங்கியவள்,

"உங்களுக்கு... உங்களுக்கு ஒண்ணும் ஆகலையே..." பரிதவிப்புடன் கேட்டவளை விசித்திரமாய்ப் பார்த்தவன் அப்போது தான் உணர்ந்தான் அவளை அறைக்கு வெளியில் நிறுத்தி பேசி கொண்டு இருக்கிறோம் என்று...

அவளைக் கை பிடித்து இழுத்து உள்ளே அழைத்தவன் அறைக் கதவை சாத்தி தாளிட்டான்... பின்பு மனைவியின் புறம் திரும்பியவன்,

"என்ன மாமி கனவு எதுவும் கண்டயா...? என்னை நல்லா பாருடி... நான் எப்படி இருக்கேன்...?" முன்னும் பின்னும் தன்னைத் திருப்பிக் காட்டியவனைக் கண்டு அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது... ஆனால் அதற்கு நேர்மாறாக அவளது இதழ்கள் புன்னகை சிந்தியது...

"ஆமான்னா கனவே தான்... உங்களுக்கு ஏதோ பயங்கர ஆபத்து ஏற்பட்ட மாதிரி... நீங்க... நீங்க..." அதற்கு மேல் தாங்க மாட்டாதவளாய் அவனை இறுக அணைத்து கொண்டாள்...

அப்போது தான் அவனுக்கும் அது உறைத்தது... சற்று முன்னர்த் தான் பெரும் ஆபத்தில் இருந்து தப்பித்து வந்தது... அதை அவள் உணர்ந்து இருக்கிறாள் என்றால்... அவள் மனதில் தான் எந்தளவுக்கு அழுத்தமாய்ப் பதிந்து இருக்கிறோம் என்று உணர்ந்தவனின் கைகள் மனைவியை ஆரத்தழுவி கொண்டது காதலாய்...

"அது எப்படிடி மாமி எனக்கு ஆபத்து ஏற்படுற போது எல்லாம் நீ உணர்ற... அந்தளவுக்கு என்னைக் காதலிக்கிறியா மாமி..." அவளது காதலின் அளவு புரிந்தாலும் அதை அவள் சொல்லி தான் கேட்க வேண்டும் என்று அவன் விரும்பினான்...

"அப்போ நான் கண்ட கனவு உண்மையா...?" அவனது அணைப்பில் இருந்து விலகி அவன் முகம் பார்த்து கேட்டவளின் முகத்தில் அச்சம் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"ஆமாம்..." என்றவன் தனக்கு நடக்க இருந்த விபத்தைப் பற்றிச் சொன்னான்...

"ராம்..." என்றவள் அவனின் இழப்பின் வேதனையை அந்தக் கணம் உணர்ந்தாள்... அவனில்லை எனில் அவள் ஏது...? அடுத்த நொடி ஆவேசம் வந்தவள் போல் அவனது முகம் முழுவதும் தனது முத்திரைகளைப் பதிக்க ஆரம்பித்தாள்...

வாய் வார்த்தையில் கேட்க விரும்பிய அவளது காதலை அவள் தனது செயல் மூலம் அவனுக்கு உணர்த்திக் கொண்டு இருந்தாள்...

அதில் சுகமாய் நனைந்து கொண்டு இருந்தவன் பின் சுதாரித்து அவளை விலக்கி நிறுத்தியவன் அவளின் கண்களை ஆழ பார்த்து,

"நமக்குள் இருக்கும் பிரச்சினை அப்படியே தான் இருக்கு ஹனி..." என்றவனை விழியகல பார்த்தவள் அடுத்தக் கணம் அவனது நெஞ்சில் சரண் புகுந்து இருந்தாள்...

"நீங்க சித்தார்த்தா இல்லை சைதன்யாவா யாரா வேணா இருந்துட்டு போங்கோ... நேக்கு கவலை இல்லை... ஆனா நீங்க என்னோட ராம் அது மட்டும் உண்மை... உங்களுக்கு ஒண்ணுன்னா நேக்கு ஜீவன் துடிக்கிறதே அது உண்மை... நான் உங்களைக் காதலிக்கிறது உண்மை... அன்னைக்கு நீங்க கேட்டேளே உங்க பேரு முக்கியமா இல்லை நீங்க முக்கியமான்னு... இப்போ சொல்றேன் நன்னா கேட்டுக்கோங்க... எனக்கு உங்களை வெளி உலகத்துக்கு அடையாளப்படுத்துற பேரு முக்கியம் இல்லை... உங்களை எனக்கு அடையாளப்படுத்துற உங்க மனசு தான் முக்கியம்... எனக்கு நீங்க மட்டும் தான் முக்கியம்..." என்றவள் இன்னும் இன்னும் அவனது நெஞ்சத்தில் முகம் புதைத்தாள்...

அதில் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து கொண்டு இருந்தான் அவன்... அவர்கள் காதல் மீது அவன் கொண்ட நம்பிக்கை பொய்த்து போகவில்லை... இதோ அவனது மனைவியான காதலி அவனது காதலை உணர்ந்து அவனிடமே திரும்ப வந்துவிட்டாளே... அதுவும் அவனை அடையாளப்படுத்தும் அவனது பெயர், முகவரி எதுவும் வேண்டாம் அவனது மனது மட்டும் போதும் என்று... இதை விட அவனுக்கு வேறு என்ன வேண்டும்...

அவளுக்காக அவள் மேல் அவன் கொண்ட காதலுக்காக அவன் தனது அடையாளத்தைத் தொலைத்ததற்கு அவனது மனைவி காதலை வாரி வாரி அள்ளி கொடுத்து நியாயம் செய்துவிட்டாளே... அவளுக்காக அவன் தன்னை மறைத்தது, தன் சுயத்தை இழந்தது சரியே என்று இப்போது அவனது மனதுக்குத் தோன்றியது...

காதலுக்காக எதை எதையோ இழந்தவர்கள் மத்தியில் காதலுக்காக அவன் தன் சுயத்தை இழந்தது பெரியதாய் தெரியவில்லை... பிறந்ததில் இருந்து துளி அன்புக்காக ஏங்கியவனுக்குக் கடலளவு அன்பை அள்ளி கொடுக்கும்

அவளுக்காக அவளுக்குப் பிடித்த சித்தார்த்தாய் தான் மாறியதில் தவறு ஏதும் இல்லை என்றே அவன் நினைத்தான்…

"நன்னா கேட்டுண்டேன்டி மாமி… நீ எனக்குத் தான்னு…" அவளின் காதில் சரசமாய்க் கூறியவனை ஏறிட்டு பார்த்தவளை கண்டு அவன் கண்சிமிட்டி சிரிக்க… அவனது சிரிப்பை கண்ணில் நிறைத்துக் கொண்டு நின்றவளின் கண்கள் நிறைந்தது விழிநீரால்…

"உங்களுக்கு என் மேல் கோபமே வராதா…?" என்றவளின் முகத்தைத் தன் கைகளில் தாங்கியவன்,

"உன் மேல நான் கோபப்பட்டா அது என் மேலேயே நான் கோபப்படுறது மாதிரி ஹனி… என் மேலே நான் கோபப்படுவேனா சொல்லு…" அப்போதும் மனம் சமாதானம் ஆகாமல் அவனைப் பார்த்தாள் அவள்…

"இருந்தாலும் நான் பேசியது கொஞ்சம் அதிகப்பிரசங்கித்தனம் தான்…" அவள் எதைச் சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டவன்,

"விடுடி…" என்றவனின் பெருந்தன்மையில் அவளது கண்கள் பனித்தது…

"ஆனாலும் உங்களுக்குப் பெரிய மனசுன்னா…" என்றவளின் முகம் தெளிவில்லாமல் இருக்க…

அவளது கலக்கத்தை விரட்டும் பொருட்டு அதற்கு அட்சாரமாய் அவளது இதழில் அழுத்தமாய்த் தனது முத்திரையை அவன் பதித்தான்… அவனது முத்தத்தில் தனக்குள் பாகாய் கரைந்தவள் அவன் கைகளில் மெழுகாய் உருகி வழிந்தாள்…

சட்டென்று அவளிடம் இருந்து அவன் விலக அவளோ தாபத்தில் விலக மறுக்க…

"இப்போ நான் தொட்டது, முத்தம் கொடுத்தது கம்பளிப்பூச்சி ஊர்ற மாதிரி அருவருப்பா இருந்ததா…?" திடுக்கிட்டு

அவனை நிமிர்ந்து பார்த்தவள் அவனது முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியில் நிம்மதி அடைந்தவளாய், இல்லை என்பது போல் தலையசைக்க...

"இப்போ புரியுதா ஐயாவோட பவர்..." என்று சிரித்தபடி அவளை அணைத்து கொண்டவன்,

"உன்னோட மனசில் நான் தான் இருக்கேன்னு எனக்கு எப்பவோ தெரியும் ஹனி..." என்றவன் அன்று தூக்க கலக்கத்தில் அவள் பேசியதை கூறினான்...

"நானும் என் நிலையைத் தெளிவாய் சொல்லி இருக்கணும்... அதனால் வந்த குழப்பம் தான் இது..." என்றவன், "தனு பத்தி நான் சொல்லிடறேன்..." அவன் வாய் மீது கை வைத்து தடுத்தவள்,

"எந்த விளக்கமும் வேண்டான்னா... நீங்க என்னோட ராம்... எனக்கு அது போதும்..." என்றவளை மறுத்து வலுக்கட்டாயமாய்க் கூற துவங்கினான்...

"இந்தியாவுக்கு வந்த என் தம்பி என்ன ஆனான்னு தானே கேட்ட... இங்கே வந்தவன் கொஞ்ச நாள் இங்கே இருந்துட்டு அப்புறம் அவன் நார்த் சைட் டூர் போனான்... அப்போ நேபாளத்தைப் பாதிச்ச நிலநடுக்கம் நம்ம நாட்டிலேயும் தன் பாதிப்பை காட்டியிருந்த சமயம் அது... அதில் அவன் சிக்கி..." என்ன முயன்றும் அவனால் தனக்குத் தானே சமாதி கட்டி கொள்ள முடியவில்லை...

அவளுக்காகச் சைதன்யாவாக இருந்து சித்தார்த்தாகப் பெயரளவில் அவன் மாறி இருந்தாலும் அவனும் உணர்வுகள் நிறைந்த மனிதன் அல்லவா... அவனுக்கு என்று மனம் இருக்கிறது அல்லவா...

"வேண்டாம்ன்னா விட்டுருங்கோ... நான் உங்களை நம்பறேன்..." அவனது துன்பம் கண்டு முகம் வாடும் அவளைக் கண்டு தனது முகபாவத்தை மாற்றியவன்,

"அதில் அவன் இறந்து போயிட்டான்... இதை யார் கிட்டேயும் நாங்க சொல்லைல... இது மாதிரி விசயங்களை வெறும்

ஊகங்கள் அடிப்படையில் உடனே வெளியிட முடியாது... ஏன்னா அவனோட உடலோ பொருளோ எதுவும் எங்களுக்குக் கிடைக்கலை... ஆனால் இனியும் இதை வெளியில் சொல்லாமல் இருக்க முடியாது... சொல்லணும் சொல்லித்தான் ஆகணும்..." இதைச் சொல்லும் போது அவனது கண்களில் தீவிரம் வந்தது...

"இது தெரியாம நானும் உங்களைப் போட்டு படுத்தி எடுத்துட்டேன்... சாரின்னா..." அவளின் வருத்தம் அவனை நிகழ்காலத்திற்கு அழைத்து வர...

அவளைத் தன் இரு கரங்களில் தூக்கியவன், "சாரி இப்படிச் சொல்ல கூடாதே மாமி..." என்று அவளின் மூக்கோடு மூக்கு வைத்து உரசியபடி குறும்பாய் கூறியவனைக் கண்டு அவளின் வருத்தம் விலகியது...

"வேறு எப்படிச் சொல்லணும்...? நேக்கு தெரியாதே..." விழிகளை அகல விரித்து வைத்து அப்பாவியாய் கேட்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"என்னடி மாமி அம்மா வீட்டுக்கு போனதுல நான் சொல்லி கொடுத்த பாடம் எல்லாம் மறந்து போச்சா..." என்றவனின் கைகள் அவளைக் கட்டிலில் கிடத்தியது...

"ம்... நேக்கு மறந்து போச்சுன்னா... கொஞ்சம் சொல்லித் தர்றேளா..." அவனைப் போல் குறும்பாய் கண்சிமிட்டி கேட்டவளின் அருகில் அமர்ந்தவன்,

"நீ எத்தனை தடவை மறந்தாலும் அதைச் சொல்லித்தரத் தான் நான் இருக்கேனே..." என்றவன் கர்மசிரத்தையாய் பாடம் சொல்லி கொடுக்க ஆரம்பித்தான் நல்ல கணவனாய்... அதை நல்ல பிள்ளையாய் கற்று கொண்டாள் அவனது காதல் மனைவி...

அடுத்த ஒரு வாரத்தில் இலண்டனில் நிரந்தரமாய்த் தங்குவதற்கான ஏற்பாட்டில் சித்தார்த் தீவிரமாய் இறங்கினான்... ஏற்கெனவே தேனிலவு போவதற்காக அவளுக்கு எடுத்த கடவுச்சீட்டு இப்போது உபயோகமாய்

இருந்தது... இனி வரும் காலம் அன்னை மனைவியுடன் இலண்டனில் வசிக்க முடிவு செய்தான் அவன்... அது அவனது காதல் மனைவிக்காக என்று சொல்ல தேவையில்லை...

போகும் முன் வேதாந்தத்தை அழைத்து, "அங்கிள் நான் இலண்டன் போய்ச் சேர்ந்த பிறகு தான் நீங்க இந்த நியூசை மீடியாவுக்குச் சொல்லணும்..." என்றவன் அவரிடம் உறுதி வாங்கிக் கொண்டு சென்றான்...

அதன் பின் ஹரிணியின் பெற்றோரை சென்று பார்த்தவன், "ரொம்ப நன்றி..." என்று கண்கள் கலங்க இரு கைகளையும் கூப்பினான்... அவன் தன் காதலுக்காகத் தன்னை மறைத்தாலும் அதற்கு அவர்கள் உறுதுணையாய் இல்லாவிட்டால் இன்று அவனது ஹனி அவனுக்கு ஏது...

"மாப்பிள்ளை நன்றி அது இதுன்னு பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிண்டு... நீங்களும் ஹரிணியும் சந்தோசமாய் இருந்தா அது போதும் எங்களுக்கு..." என்றவர்கள் கண்கள் கலங்க அவனுக்கு விடை கொடுத்தனர்...

அதே போல் தனது அத்தை வீட்டிற்குச் சென்றவன் அத்தையிடம், "தீபிக்கு என்னோட பிரெண்ட் கிரியை மாப்பிள்ளையா பார்த்து இருக்கேன்... அடுத்த வாரம் அவன் ஆஸ்திரேலியாவில் இருந்து வர்றான்... அவனே அவனோட அப்பா, அம்மா கூட வந்து நம்ம தீபியை பொண்ணு கேட்பான்... நீங்க தயங்காம அவனுக்குப் பொண்ணு கொடுக்கலாம்... ரொம்ப நல்ல பையன்..." என்றவன் தீபிகாவிடம்,

"நான் இலண்டன்ல செட்டிலாகப் போறதால இங்கே இருக்கிற என்னுடைய கம்பெனியை நீ பொறுப்பா பார்த்துக்கோ... கூடக் கிரியும் ஹெல்ப் பண்ணுவான்... நான் அவன் கிட்ட எல்லா விசயத்தையும் சொல்லி இருக்கேன்..." என்க...

ஏற்கெனவே தொழில் விசயம் தெரியும் ஆதலால் தீபிகா சம்மதமாய்த் தலையசைத்தாள்... விடைப்பெறும் விதமாய் எழுந்தவன் மறந்தும் உடல்நலம் இல்லாமல் படுத்த படுக்கையாய் இருக்கும் தனது மாமனை போய்ப் பார்க்கவில்லை... அந்தளவுக்கு அவனுக்கு அவர் மேல் கோபம் மறையாமல் இருந்தது...

வாயில் வரை வந்து வழியனுப்பிய தீபிகா, "சித்து... அவர் ரொம்ப நல்லவர்ன்னா எப்படி... உங்களை மாதிரியா...?" குறும்பாய் கேட்டு அவள் சிரிக்க... அவள் கூறியதன் அர்த்தம் புரிந்தவன் வாய்விட்டு சிரித்தவன்,

"என்னை விட ரொம்ப ரொம்ப நல்லவன் தீபி..." என்று அழுத்தி சொல்லியவன் அவளிடம் இருந்து விடைப்பெற்றான்... போகும் அவனது காரை பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் தீபிகா...

"எதுக்காக நாம லண்டன் போகணும்ன்னா... இங்கேயே இருப்போமே..." ஏனோ வெளிநாடு சென்று வாழ்வது ஹரிணிக்கு பிடிக்கவில்லை...

"மடிசார் மாமி உன்னை மாடர்ன் மாமியா மாத்த வேண்டாமா... அதுக்குத் தான்..." கிண்டலாய் சொன்னவனைக் கண்டு ‘பே’ என்று விழித்தாள் அவனது மனையாள்...

"மாடர்ன் ட்ரெஸா..." வேப்பங்காய்த் தின்றது போல் அவளது முகம் கோணியது...

"ஆமாம்..." என்று அவள் அருகில் வந்தவன் அவளது தோள்பட்டையின் கீழே கையைக் கொண்டு வந்து, "இதுக்குக் கீழே... அப்புறம்..." சட்டென்று அவளது கால் பக்கம் கையைக் கொண்டு சென்றவன் முட்டிக்கு மேலே அவனாய் ஒரு அளவை நிர்ணயித்து, "இதுக்கு மேலே..."

"மேலே..." அச்சத்துடன் அவனைப் பார்த்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்புப் பொங்கியது...

"அந்த மாதிரி ட்ரெஸ் போடுறது தான் மாடர்ன் ட்ரெஸ்..." என்றான் நமட்டு சிரிப்புடன்...

"ம்ஹூம் நான் மாட்டேன்..." வேகமாய்த் தலையை ஆட்டி மறுத்தவளை ரசனையுடன் பார்த்தவன்,

"ஓகே... நீ போடலைன்னாலும் எனக்கு ஓகே தான்டி மாமி..." என்றவனின் பேச்சில் இருந்த விசமம் அவனது கண்களிலும் வழிந்தது...

"ராம்..." அவனது விசமம் புரிந்து அவள் சிணுங்க...

"உன் ராம் தான்டி அதுக்கு என்ன...?" என்றவன் தனது பேச்சை நிறுத்தி அவளது பேச்சையும் நிறுத்தினான் தனது இதழ் கொண்டு...

சிறிது நேரம் கழித்து விடுவித்தவனின் நெஞ்சில் செல்லமாய்க் குத்தியவள், "நான் கேட்டதுக்குப் பதில் சொல்லலையே..."

"அம்மாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை ஹனி... இங்கேயே இருந்தா இறந்து போனவனையே நினைச்சு அழுதுட்டு இருப்பாங்க அதான்..." அவன் சொல்லும் முன்,

"புரியறதுன்னா... சாரி..." என்றவளை அணைத்துக் கொண்டான் தனது வேதனையைக் குறைக்கும் பொருட்டு...

இலண்டன் வந்து இரு நாட்களான நிலையில் அந்தச் செய்தியை வேதாந்தம் ஊடகங்களுக்கு அறிக்கையாக அறிவித்தார்... அதாவது அவர் நேரிடையாகத் தெரிவிக்காமல் மின்னஞ்சல் மூலமாகவும், ஃபேக்ஸ் மூலமாகவும் அதைத் தெரிவித்து இருந்தார்...

அதன் சாராம்சம் இது தான்...

1) ராம் இன்டஸ்ட்ரீஸின் முதலாளி ஆர். எஸ். ராம் என்று அழைக்கப்படும் சித்தார்த்ராம் இரு மாதங்களுக்கு முன் பீகார் சென்ற போது அங்கு நிகழ்ந்த நிலநிடுக்கத்தில் உயிரிழந்ததாக உறுதியான தகவல் ஆதாரத்துடன் அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது...

2) அதனால் அவரது சகோதரர் ஆர். எஸ். ராம் என்று அழைக்கப்படும் சைதன்யாராம் கடந்த இரு மாதங்களாக ராம் இன்டஸ்ட்ரீஸை நிர்வகித்தது போல் இனியும் தொடர்ந்து நிர்வகிப்பார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது... அதற்கு அவரது அன்னை ஒப்புதல் பத்திரம் அளித்து உள்ளதை சான்றுடன் அதில் எடுத்து காட்டி இருந்தது...

அதைத் தனது கணினியில் பார்த்துக் கொண்டு இருந்த சித்தார்த்தின் மனம் அவன் நிர்வாகப் பொறுப்பைக் கையில் எடுக்கும் போது நிகழ்ந்த நிகழ்வை நினைத்துப் பார்த்தது...

அன்று அவன் அன்னை அவனை நிர்வாகத்தைக் கையில் எடுக்கச் சொன்ன போது அவன் உறுதியாய் மறுத்தான்... அவனது அன்னை தொழில் இறங்குமுகம் கண்டுவிடும் என்று இறைஞ்ச அதன் பின்னரே அவன் ஒரு முடிவுக்கு வந்தான்...

அதாவது பெயரளவில் அவன் சித்தார்த்தாக இருந்த போதும் சட்டரீதியாய் அவன் சைதன்யாகவே இருக்க விரும்பினான்... ஏனெனில் பல வெளிநாட்டு நிறுவனங்களுடன் அவன் ஒப்பந்தம் போடும் போது இந்த ஆள்மாறாட்டம் சட்ட சிக்கலை ஏற்படுத்தும் என்க... அதை உணர்ந்த அமராவதி அவன் சைதன்யாகவே தொடர சம்மதம் கொடுத்தார்...

இதில் இருந்த ஒரே நல்ல விசயம் எதுவென்றால் சித்தார்த், சைதன்யா இருவருமே ஆர். எஸ். ராம் என்றே கையெழுத்து போட பழக்கி இருந்தார் ராஜாராம்... ஏனெனில் ஒருவர் மாற்றி ஒருவர் தொழில் நிர்வாகத்தைக் கவனிக்க அது வசதியாக இருக்கும் என்று... அதே போல் சின்னமகன் மீது எவ்வளவு தான் கோபம் இருந்த போதும் அவனுக்கும் சரிசமமாய்ச் சொத்துக்களையும் சரி, தொழிலையும் சரி அவன் பேரில் எழுதி வைத்திருந்தார்...

என்ன ஒன்று சித்தார்த் கையெழுத்து சிறிது சாய்வாக இருக்கும், சைதன்யாவின் கையெழுத்து அவனைப் போல்

அடங்காது நிமிர்வாய் இருக்கும்... அதுவும் உன்னிப்பாகப் பார்ப்பவர்களுக்கு மட்டுமே புரியும்... அதைத் தான் அன்று அவன் கையெழுத்து போடும் தயங்கி போடுவதைக் கண்டு உற்று கவனித்த வேதாந்தம் குழம்பி போய் நின்றிருந்தார்...

அதே போல் சைதன்யா பொறுப்பை ஏற்றதும் தனது அன்னை மற்றும் மாமாவிற்குத் தெரியாமல் தனது சகோதரனை தேட சொல்லி காவல்துறையில் இருந்த தன் நண்பனிடம் ஒரு புகாரும் அளித்துவிட்டான்... ஆனால் அந்தப் புகாருக்கு இன்று வரை எந்த உறுதியான தகவலும் கிடைக்கவில்லை...

அதையே சாதகமாக வைத்து சித்தார்த் பீகார் சென்றதற்கான ஆதாரத்தைப் போலியாகத் தயார் செய்து அதையும் இதையும் இணைத்து இரு மாதங்களுக்கு முன் அவன் இறந்து போயிருக்கலாம் என்ற அனுமானமாக இருந்தாலும் வலுவான தகவலின் அடிப்படையில் ஊடகங்களுக்குத் தெரிவித்து விட்டான்...

இனி எந்தக் கேள்வியும் யாரும் அவனிடம் நேரிடையாகக் கேட்க முடியாது... அப்படியே கேட்டாலும் அவனுக்குப் பதிலாய் பதில் சொல்ல அவனது வக்கீல் இருக்கிறார்... அதையும் மீறி கேள்வி எழுந்தாலும் அவனின் சகோதரனை அவர்களே தேடி கண்டுப்பிடித்துத் தரட்டும்...

"இன்னும் தூங்கலையான்னா...?" தூக்க கலக்கத்தில் கேள்வி கேட்ட மனைவியின் தலையை வருடி கொடுத்தவன்,

"கொஞ்சம் வேலை இருக்கு... நீ தூங்கு..." என்க... அவளோ அவன் அருகில் படுத்து அவனது இடுப்பை கட்டி கொண்டு உறங்க...

"சரியான இம்சைடி நீ..." என்றவன் மடிகணினியை அணைத்து தள்ளி வைத்துவிட்டு மனைவியை அணைத்தபடி படுத்தான்...

அவளை அடைவதற்காக என்ன என்ன போராட்டங்கள்... அந்தப் போராட்டங்களுக்குத் தகுதியானவள் தான் அவன் மனைவி என்ற எண்ணம் அவன் மனதை நிறைத்து அவனை நிம்மதி அடைய செய்தது... அதற்காக அவன் எத்தனை பொய் வேண்டுமானாலும் தன் வாழ்நாள் முழுவதும் கூறலாம் என்று எண்ணினான்...

அங்கே கைலாஷ் தனது சகோதரன் விபத்தில் இறந்ததை அறிந்து தேடி சென்று பார்த்தவன் மகனாய் வளர்த்த சந்தோஷின் நிலை கண்டு துடித்துப் போனான்... அவன் விபத்து திட்டமிட்ட சதி என்று காவல்துறை அதிகாரியிடம் அவன் புகார் அளிக்க... லட்சக்கணக்கான வாகனங்கள் செல்லும் அந்தச் சாலையில் எந்த வாகனம் அவர்களை அடித்துவிட்டுப் போனது என்று தெரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்ட காவல்துறை கைலாஷிடம், 'குற்றவாளிகளைத் தேடி கொண்டு இருக்கிறோம்...' என்று இன்றுவரை சமாளித்துக் கொண்டு இருக்கிறது...

இறுதி வரை கைலாஷ் சைதன்யாவை சந்தேகப்படவில்லை... ஏனெனில் அவனும் தன்னைப் போல் சகோதரனை இழந்து தவிக்கிறான் என்பதை உணர்ந்து அமைதி காத்தான்... தொழில் எதிரியாய் இருந்த போதும் கைலாஷ் கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான் போலும்...

அடுத்து வந்த நாட்களில் உண்மையான அன்பு என்றால் என்ன என்பதை முழுவதுமாய் உணர்த்தினாள் அவனது காதல் மனைவி... அவனும் தான் சைதன்யா என்பதை மறந்து சித்தார்த்தாய் மாறி இருந்தான்...

அவர்களது மகிழ்வான வாழ்க்கைக்குச் சாட்சியாக அவளது மணிவயிற்றில் அவனது வாரிசு வளர்ந்தது... அதைக் கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர்...

பத்து மாதங்கள் கழித்து அழகான ஆண் மகவு ஒன்றை பெற்று அவன் கையில் கொடுத்தாள் அவனது அன்பு மனையாள்...

இறந்து போன அவனது சகோதரனே திரும்பக் கிடைத்தது போல் அவன் இன்னமும் மகிழ்ந்து போனான்... அதை அமராவதியும் ஆமோதித்தார்...

மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்த ஹரிணி அவனிடம், "ஏன்னா இவனுக்கு உங்க தம்பி பேர் வச்சா என்ன...?" என்றவள் தனது மகனை நோக்கி, "சைதன்யாராம்..." என்று அழைக்க...

ஒரு நொடி திடுக்கிட்டு அவளை ஏறிட்டவன் பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "அதுக்கு என்ன தாராளமா வைக்கலாம் ஹனி..." என்றான் மென்மையாய் மகனின் பாதத்தை வருடியவாறு...

பின்பு, "தேங்க்ஸ்..." என்று மனைவியின் நெற்றியில் முத்தமிட்டு அவன் சொல்ல...

"எதுக்குன்னா..." வெள்ளை மனதுடன் அவனைக் கண்டு சிரித்தவளை காதலுடன் பார்த்தவன்...

"எல்லாத்துக்கும் தான்..." என்றவனைக் கண்டு புன்னகைத்தவள் தனது மகனின் அழுகை உணர்ந்து அவனுக்குப் பசியாற்ற...

சித்தார்த் அங்கு இருந்து நகர்ந்து பால்கனிக்கு வந்து நின்றான்... இருண்டு இருந்த வான்வெளியை வெறித்தவன் கண் முன்னால் அந்த நட்சத்திரம் கண்சிமிட்டி சிரித்தது...

"சித்து..." மெதுவே முணுமுணுத்தவன் அடையாளம் தெரிந்ததன் விளைவாய் பரவசமாய் அதைப் பார்த்தான்...

"உனக்கும் தேங்க்ஸ் சித்து..." என்றான் மனதார...

"என்னன்னா வானத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கேள்..." என்றபடி அங்கே வந்த ஹரிணியைத் தன் தோளில் சாய்த்து கொண்டவன்,

"அந்த நட்சத்திரம் அழகா இருக்குல்ல..." என்றான் தொலைவில் தெரிந்த அந்த நட்சத்திரத்தை காட்டி...

"எல்லாம் ஒண்ணு போலத்தானே இருக்கு... அது மட்டும் என்ன ஸ்பெசல்...?" அவளுக்கு ஒன்றும் பெரிதாய் அது தெரியவில்லை...

'உன்னை எனக்கு வரமாகக் கொடுத்த அந்த நட்சத்திரம் எனக்கு எப்பவுமே ஸ்பெசல் தான் ஹனி...' மனதுக்குள் கூறி கொண்டவன் மனைவியிடம் ஏதும் சொல்லாது அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்...

அவர்கள் இருவரும் இணைந்து இருப்பதைக் கண்டு தன் கனவு நிறைவேறிய சந்தோசத்தில் அந்த நட்சத்திரம் இன்னமும் அழகாய் பளிச் பளிச் என்று மின்னி ஜொலித்துத் தன் மகிழ்ச்சியைப் பிரகாசமாய் வெளிப்படுத்தியது...

நான் நீயானேன் உன் காதலுக்காக...

முற்றும் *_*